

மானுடம் சிறக்க உழைப்பது மகுடம் தானதுவாகி தழைப்பதும் மகுடம்

# மகுடம்

கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழ்

ஆசிரியர் : வி.மைக்கல் கோலின்

இதழ் - 13 | விலை ரூ.100 | ஜனவரி-மார்ச் 2021

## மருதூர்க் கொத்தன் சிறப்பிதழ்



“கூத்தும் குரவையும் கோலாட்டம் சீனடியும்
பக்தி வளர்க்கும் பள்ளிகளும், கோயில்களும்
தேவாரம் பைபிள் திருக்குர்ஆன் ஆகமங்கள்
நாவார ஓதுமிசை நாற்றிசையும் தேன் பொழிய
இந்து கிறிஸ்தவ இஸ்லாமிய மக்கள்
சிந்துகள் பாடிச் செந்தமிழை வாழ்விக்கும்
மங்காப் புகழ் பூத்த மாதரசி கல்முனையாள்!”

–மருதூர்க்கொத்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best compliments :



**Education** கல்வி

**Literature** இலக்கியம்

**Social work** சமூகப்பணி

**Empowerment** சமூகமேம்பாடு

MARUTHOOR KOTHTHAN V.M. ISMAIL FOUNDATION

social work education empowerment literature

VMIF

**MARUTHOOR KOTHTHAN**

**V.M. Ismail Foundation**

**Maruthamunai**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'பாதையில் கற்கள்
நெருக்கென்று பாய்ந்துடலை வாதைக் கிழுக்கின்ற
வம்புநிறை ஒற்றையடிப்
பாதையிலே எங்கள் பயணந் தொடர்கிறது.
சாணை பிடித்த ஊசிகளாய் முள்ளடர்ந்த கானகந்தான்
சிறாய்ப்பெடுக்கும் கவலை சிறிதுமின்றி
எங்களது கால்களை எட்டியெட்டிப் போடுகிறோம்
வேங்கைகள் சிங்கங்கள் யானைகள் குளுக்கடாக்கள்
ஆங்காரங் கொண்டு அலைகின்ற காட்டுவழி
நாங்கள் துணிந்து நடையாய் நடக்கின்றோம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்புகழ் கொண்ட தமிழ்






**பல்லவி**

எங்கள் தமிழ்மொழி - எங்கள் தமிழ்மொழி
என்றிசை பாடிடுவோம் - இன்பம்
பொங்கவே பாடிடுவோம்

**அனு பல்லவி**

பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு என்றே
வெல்லத் தமிழ் படிப்போம் - நாம்
உள்ள மடை திறப்போம்

**சரணம்**

பாண்டியன் தென்கடல் நீந்தி மகிழ்ந்தவள்
பாங்குடன் சேரனின் மலையில் தவழ்ந்தவள்
மாண்புடன் சோழனின் காவிரி ஆடி
விண்புகழ் கொண்டவளே

கம்பனின் நாவில் களிநட மாடி
காவியச் சிலம்பில் கலை வளங் கூடி
உம்பரும் போற்றிடும் வள்ளுவன் குறளால்
உலகினை வென்றவளே
மண்ணில் உயர் புகழ் கொண்டவளே

வண்டமிழ்ச் சீறா தேனினைப் பருகி
வளமார் தேம்பா வணியினில் மூழ்கி
மண்டிணி உலகின் மதத்தின ரெல்லாம்
மகிழ்ந்து வளர்ந்தவளே
மண்ணில் மழையென வந்தவளே.

பாரதி செய்த புதுமையில் விளைந்து
பண்புடன் புதுமைப் பித்தனில் மலர்ந்து
நூறாயிரம் நூறாயிரம் கலைஞர்
உணர்வில் கலந்தவளே - எங்கள்
உயிரென வந்தவளே

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN - 2279-1906

# மகுடம்

கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழ்

மானுடம் சிறக்க உழைப்பது மகுடம்
தானதுவாகி தழைப்பதும் மகுடம்

ஆரம்பம் - 2012 - ஜனவரி - மார்ச்

இதழ் - 13 ஜனவரி - மார்ச் 2021

ஆசிரியர் : **வி.மைக்கல் கொலின்**
E-mail: magudammichael@gmail.com

Layout by : Michael

கணணி வடிவமைப்பு : த. சங்கர் (வணசிங்கா பிரிண்டர்ஸ்)

உள் ஓவியங்கள் : மௌனேஸ்

**'மகுடம் பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்திற்காக
மட்டக்களப்பு வணசிங்கா அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்
ஹஜேந்தினி மைக்கல் கொலின்**

சகல விதமான தொடர்புகளுக்கும்

ஆசிரியர்
மகுடம்
இல.90, பார்வீதி,
மட்டக்களப்பு 30000
இலங்கை
Tel : 0774338878

**Contact**

EDITOR
MAGUDAM
90, Bar Road,
Batticaloa 30000
Sri Lanka.

ஆக்கங்களை திருத்தவும்,
கடிதங்களை சுருக்கவும்,
ஆசிரியருக்கு
அதிகாரம் உண்டு.

## தமிழ் - முஸ்லிம் உறவுப்பாலமாக மருதூர்க்கோத்தன்

மகுடம் கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழின் ஒன்பதாவது ஆண்டு மலராகக் கவிஞரும், எழுத்தாளரும், நாடக ஆசிரியருமான மருதூர்க் கொத்தன் அவர்களின் சிறப்பிதழை வெளியிடுவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

மருதூர்க்கொத்தன் என அழைக்கப்பட்ட வாப்பு மரைக்கார் இஸ்மாயில் கிழக்கிலங்கையில் மருதமுனை மண்ணில் ஐம்பது வருடங்களுக்கு மேலாக கல்வி கலை, இலக்கிய செயற்பாடுகளில் மிக ஆளுமை செலுத்திய ஒருவர். உலகத் தமிழ் இலக்கியப் பரப்பில் ஒரு படிமமாய் அதீதமாக கவனம் கொள்ளப்பட்டவர்.

1935ம் ஆண்டு ஜூன் மாதம் 6ம் திகதி அனுராதபுர மாவட்டத்தில் காளாவி (கலாவெவ) என்ற இடத்தில் திருகோணமலையைச் சேர்ந்த வாப்பு மரைக்கார் என்பவருக்கும் சம்மாந்துறையைச் சேர்ந்த உமறுதத்தா சின்னமுத்து என்பவருக்கும் மகனாகப் பிறந்தார்.

சிறிய வயதில் தனது தாயை இழந்த மருதூர்க்கொத்தன் தந்தையின் மூலம் மருதமுனை அழைத்து வரப்பட்டார். தனது இறுதிக் காலம்வரை மருதமுனை மண்ணின் கல்விக்கலை இலக்கியம், அறிவியல், ஆன்மீகம் ஆகிய துறைகளில் ஆதீக்கம் செலுத் தினார். கவிதை, நெடுங்கதை, காவியம், சிறுகதை, உருவகக்கதை, இலக்கிய விமர்சனம், நாடகம், இசைப்பாடல்கள், கட்டுரை என பல்துறைகளில் கால்பதித்த ஆளுமை.

1950களில் தனது நீலவான வீதியிலே என்ற கவிதையுடன் இலக்கிய உலகில் பிரவேசித்த மருதூர்க்கொத்தன் 1977ல் காவியத்தலைவன் என்ற தனது கவிதை நூலை வெளியிட்டார். 1985களில் இவரது மருதூர்க்கொத்தன் கதைகள் வெளிவருகிறது. இதில் வேலி என்ற சிறுகதை மிகப் பிரசித்தமானது.

அதனைத் தொடர்ந்து இத்தொகுப்பில் இடம்பெயராத கதைகளையும் சேர்த்து ஏன்? என்ற தலைப்பில் வெளிவந்த நூல் மிக முக்கியமான சிறுகதைத் தொகுப்பாகும்.

இவரது நூற்றுக்கு மேற்பட்ட பல படைப்புக்கள் இன்னும் நூலுருப் பெறாமல் உள்ளதும் குறிப்பிடத்தக்கது. அவைகள் வெளிவரும் பட்சத்தில் மருதூர்க்கொத்தனின் பல் பரிமாண ஆளுமை இன்னும் வெளிப்படலாம்.

மகுடம் மருதூர்க்கொத்தன் சிறப்பிதழை வெளியிடும் முயற்சியில் இறங்கிய வேளை எமக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அது அவரது அரசியல் நிலைப்பாட்டின் காரணமாகவும் இருக்கலாம்.

தமிழ்முஸ்லிம் ஒற்றுமை தொடர்பில் நல்லதொரு புரிந்துணர்வுடன் இயங்கிய மருதூர்க்கொத்தனின் அரசியல் நிலைப்பாடு காரணமாகவும் இச்சிறப்பிதழை வெளிக் கொணர்வதில் பல தடங்கல்களை நாம் எதிர் கொண்டோம். மகுடம் கால தாமதமாக இதுவும் ஒரு காரணமாகியது.கட்டுரைகளை பெறுவதிலும், ஆக்கங்களைத் தேடுவதிலும் பல சிரமங்கள் இருந்தன. ஆனாலும் முடிந்தவரை அவரது சகல பக்கங்களையும் வெளிக்கொணர்வதில் மகுடம் வெற்றி பெற்றுள்ளது.

மிக நீண்ட இடைவெளிக்கு பின்னரே மகுடம் வருகின்றது. மகுடம் இனி வருமா என ஆருடம் கூறியும், முகநூலில் எழுதியவர்களும் பலர். ஆனால் நாம் எவற்றுக்கும் பதில் சொல்ல விரும்பியதில்லை. செயற்பாடு என்பது மட்டுமே எமது பதிலாக அமையும் என்பதில் எமக்கு மாற்றுக்கருத்தில்லை.

தொடர்ந்து இயங்குதல் என்ற விதியே மகுடத்தின் குறிக்கோளாக இருந்தாலும் அண்மைக் காலத்தில் தேசிய பேரிடராக எழுந்த கொரோனா தாக்கமும் ஒரு காரணம். இதுவும் சில பல மாதங்களை மகுடம் வருகையில் விழுங்கியது உண்மை.

எல்லா தடைகளையும் தாண்டி மகுடம் வெளிவந்துள்ளது. இனி அது தனது வழமையான வருகையை உறுதிப்படுத்திக் கொள்ளும்.

ஒரு இதழின் வருகையின் தாமதம் என்பது கூட பல போலி இலக்கியவாதிகளின் முகத்திரைகளை அதற்றுவதற்காக அவர்களது உண்மையான முகங்களை அடையாளம் காண்பதற்கும் உதவியாகவே இருந்துள்ளது.

அடுத்த மகுடத்தில் சந்திக்கும்வரை
**மகுடம் வி.மைக்கல் கொலின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ


1. நீரென்ற அமுதை
நெடுநாட்கள் உண்ணாது
ஓர் முத்தம் இன்றி
எரியும் நெடுமூச்சு
விட்ட நிலத்தின் மேல்
சோவென்று மாரி
சொரிந்ததென நீ வந்தாய்!

2. பாலைவழிப் போக்கன்
பையில் இருந்த நீர்
முற்றும் முடிந்துவிடத்
தாகம் மிகவாகித்
தவித்திட்ட வேளையிலே
சின்னதொரு நீரூற்றுத்
தெரிந்ததென நீ வந்தாய்!

3. பனிப்பாறை மீது
வெறுங்கால் பயணியாய்
இற்றதொரு துண்டை
கிறுக்கிப் போர்த்த படி
நடை மெலிந்து உடலம்
சில்லிட்ட போதினிலே
சிறு நெருப்பாய் நீ வந்தாய்!

4. தின்னுதற்கு ஏதேனும்
இல்லாத நெடும் பசியால்
கண்களும் வற்றி
உடல் சோர்ந்து பட்டமர
அடியில் கிடக்கையிலே
காகம் நழுவவிட்ட
கனியாக நீ வந்தாய்!

5. மோகனப் புன்னகை
மேய்கின்ற தாமரையை
மோட்சத்து இனிமைகளின்
சாய லெனக்காட்டும்
சாணக்கியம் மிகுந்த
மோகனம் ஆனதனால்
மோகனா நீ எனக்கு!!!



• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகுடம்
கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழ்
இதழ் - 13 ஜனவரி - மார்ச் - 2021

## மருதூர்க்கொத்தன் படைப்புலகம்


» விண்புகழ் கொண்ட தமிழ் - மெல்லிசைப்பாடல் - 02
» நீ - கவிதை - 04
» தமிழ் தந்த புலவர்மணி - கவிதை - 06
» அழகிய முன்மாதிரி - நாடகம் - 19
» புலவர்மணி ஆ.மு.ஷரீபுத்தீன் ஒரு பல்துறைக் கலைஞர் - கட்டுரை - 30
» தமிழரோடு இணைந்து உரிமைகளை வெற்றெடுப்பதே வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் முன்னுள்ள பணி - அரசியல் கட்டுரை - 36
» திரு.வ.அ.தமிழுக்களித்த பூவரசம் பூ - விமர்சனக் கட்டுரை - 40
» வேலி - சிறுகதை - 54
» மருதூர்க்கொத்தனின் மெல்லிசைப்பாடல்கள் - மெல்லிசைப்பாடல்கள் - 64
» போர்க்கால சூழலில் புதிய படைப்புக்கள் வெளிவர வேண்டும் - நேர்காணல் - 66
» மருதூர்க்கொத்தன் கவிதைகள் - 74
» சிங்கள இலக்கியத்தின் விடிவெள்ளி மார்டின் விக்கிரமசிங்ஹ - கட்டுரை - 78


## கட்டுரைகள்


» காலத்தின் குரல்களாகின்ற மருதூர்க்கொத்தன் கவிதைகள் - கட்டுரை - பேரா.சி.யோகராசா - 09
» மருதூர்க்கொத்தன் கதைகள் - மனப்பதிவு - ராஜஜுநீகாந்தன் - 14
» மனத்திரையில் மருதூர்க்கொத்தன் - பகிர்வு - மௌலவி எம்.எஸ்.எம்.ஜலால்தீன் - 16
» மருதூர்க்கொத்தனின் காலத்தை வெல்லும் கதைகள் - கட்டுரை - கவிஞர் மு.சடாட்சரன் - 28
» நல்லிலக்கியம் எது நசிவிலக்கியம் எது? - கட்டுரை - புன்னகைவேந்தன் - 34
» மருதூர்க்கொத்தனின் சிறுகதைகளை முன்வைத்து ரசித்ததும் ரசிக்காததும் - கட்டுரை - அ.ச.பாய்வா - 44
» கொத்தன் தீர்க்க தரிசனம் கொண்ட ஒரு படைப்பாளி - மனப்பதிவு - காப்பியக்கோ. ஜின்னா ஷெரிப்புத்தீன் - 48
» படைப்பாளிகள் பார்வையில் மருதூர்க்கொத்தன் - 50
» மருதூர்க்கொத்தனின் வேலியும் இத்தாவும் - ஒரு பகுத்தறிவுப் பார்வை - ஆசுகவி அன்புடீன் - 60
» கடைசிநாள் கொத்தன் நினைவாக - மனப்பகிர்வு - உமா வரதராஜன் - 68
» கண்ணாக வேடமிட்டு மேடையில் நடித்த மருதூர்க்கொத்தன் எனும் வாப்பு மரைக்கார் இஸ்மாயில் - பகிர்வு - பேராசிரியர்.சி.மௌனகுரு - 71


## ஏனையவை


» அவரரவர் பார்வை - சிறுகதை - க.சட்டநாதன் - 81
» உடுவில் அரவிந்தனின் பாழ்வெளி - நூல் அறிமுகம் - இ. இராஜேஸ்கண்ணன் - 88
» க. பரணிதரனின் அல்வாய்ச் சண்டியன் - நூல் அறிமுகம் - தி.செல்வமனோகரன் - 91
» யாதுமாகி நண்பர்களின் கதை - ச.ராகவன் - 94
» உயிருதிர்காலத்தின் இசை - நூல்விமர்சனம் - அ.ச.பாய்வா - 98


## கவிதைகள்


» அஸ்தமனத்தின் பாடல் - கவிதை - புலோலியூர் வேல்நந்தன் - 35
» எஸ்.பி.பாலமுருகன் கவிதைகள் - 61
» மனிதன் ஒரு விசித்திரப் பிராணி - கவிதை - இ. ஜீவகாருண்யன் - 70
» தாமரைத்தீவான் கவிதைகள் - 73
» மரணத்தின் நிழல் - கவிதை - கோ.நாதன் - 93






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் தந்த புலவர்மணி

திருச்செந் தூர்ப்புராணத் தெய்வீகப் பாவமுதப்
பாரா யணத்தால் பயன்காணும் - ஆராமை
மிக்கரும் மக்களை மேதியினியில் கண்டபுகழ்
மிக்கரும் மண்டூரின் மணி

மண்டூராம் நன்பதியில் மேன்மை கொள் நன்குடியில்
வண்ணக்கர் சோமனாதர் மைந்தனே - என்னும்
திருவார்ந்த ஏகாம் பரப்பிள்ளை தந்தை
அருமை மகனென் றறி.

பத்தாவுக் கேற்ற பதிவிரதை வண்ணக்கர்
சித்தம் இனிய சிதம்பரப் பிள்ளையவர்
அன்பில் கலந்த அழகுசின்னத் தங்கத்தை
அன்னையாய்ப் பெற்றான் அவன்.

பிடியோடு களிறாடப் பிணையோடு கலையோடிப்
பிணைந்தாடு காத லாடப்
பறந்தோடு செம்மஞ்சள் பூவாடு கான்சேவல்
பெடையோடு சரச மாடப்
படையோடு வெண்நாரை பவளக்கால் சிறுகீச்சான்
பயிலினிய கல்வி யாட
பசுமேனிக் கிள்ளைகளும் பண்ணினிய நாகணவாய்ப்
பாட்டமும் மைய லாடப்
கொடியாடு பொன்னாக் குலையாடு பொற்கொன்றைக்
கலையாடு காவு மான்
கனியாடு மண்டூரின் காளைஏ காம்பரப்
பிள்ளைமயல் தானு மாடிப்
பிடியிடைப் பொன்முல்லைப் பூசின்னத் தங்கமகள்
பொற்புடன் புலவி யாடிப்
பெருகதிர் மதியமெனப் பேரெழிற் பெரியதம்பி
பிள்ளையமு தீன்றார் பூவே.

பண்டூராம் மண்டூரின் வெஸ்லிமிஉஷன் பள்ளியிலே
கண்டாக ஆரம்பக் கல்வியினை - நன்றாகக்
கற்றபின் ஆங்கிலத்தில் கல்முனையில் கற்கமனம்
பெற்றிருந்தும் கூடாதே போயிற்று.

கனக இரத்தினம் நற்தம்பாப் பிள்ளை
கனியாத சிற்றிளமைக் காலத்தே - இனிதாக
ஊட்டிய ஆரம்பக் கல்விக்கு நன்றியினைச்
சாற்றினான் சால்புதனைச் சாற்று.



கண்படு தென்னை கவின்படு நெல்வயல்கள்
தேன்படு சோலைச் செறிவளமும் - மீன்படு
வாவி குளமும் வளைந்தோடு மூங்கிலாறும்
பூவில் சிறந்த பதி.

வாளை குதிக்க வரிவரால் துள்ளிவிழக்
கோலம்செய் வாவி குளிர்விக்க - வேல்முருகன்
வள்ளிதெய் வானையுடன் வீற்றிருக்கும் மேன்மையதாய்
உள்ளங் கவர்ந்தோங்கும் ஊர்.

மயிலாடு ஈசனும் மலராடு தோப்பும்
ஒயிலாடு மானும் உலாவ - வயலாடு
நெற்கதிர்கள் சாய்ந்து நிலமகளை முத்தமிடும்
பொற்பதிக்கு மண்டூர் பெயர்.

பரந்துபடு மேய்ச்சல் பசுவெருமை மந்தை
நிரைந்துவளம் பூணும் நிலமாய் - சிறந்தழகு
சிந்தப் படுவானின் சீர்தலமாய் ஓங்குபுகழ்
வாய்ந்தோங்கு தில்லைவளர் மண்டூர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலோலியூர் சந்திர சேகரப் பேர்கொள்
பொலிதமிழ் ஆனதோர் சான்றோன் - நலந்தர
வந்தார் தமிழை மகிழ்வுடன் மண்டூரில்
தந்தார் மகிழ்ந்தார் தான்.

சூடா மனியும் திருச்செந்தூர்ப் பேர்புராணம்
பாடமும் பாரதப் பாக்கியமும் - கூடியதால்
தன்வீட்டுக் கூடத்துத் திண்ணையமர் பள்ளியிலே
உன்னிப் படித்தார் உவந்து.

சொல்வார்த்தை சித்தித் திறனுடைய தந்தையார்
செல்லமாய்ச் சொன்ன சிறுவார்த்தை - வல்வினையாய்
வந்தேற அன்னை வரித்தாள் சிவபதந்தான்
சிந்தை குலைந்தார் செகம்.

சிந்தை குலைந்து செயலற்றுக் குடும்பம்
நொந்து நிலைமறந்து நின்றதால் - வந்தமிர்த
சந்திர சேகர வாத்தியார் பாடமதும்
அந்தரத்தில் நின்றொழிந்த தாங்கு.

ஊரிலே தமிழ்க்கல்வி உற்றிடையில் நின்றொழிய
பேரினிய ஆங்கிலம் கல்முனையில் - சீர்பெருக
பெற்றுயர்ந்த வேளையிலே பொல்லாங்காய் வந்தநோய்
பற்றித் தடுத்ததே பார்.

வர்த்தக நோக்கமாய் வந்து கலந்திருந்த
சீமனத்தான் தம்பிமுத்துப் பிள்ளையெனப்-பேரினியன்
மட்டுவில் வாழ்மகா லிங்க சிவத்திடம்
இட்டனன் வாழ்வு இனிக்க.
நாவலர் சைவப் பிரகாச வித்தியா
காவியப் பாடக் கழகத்தில் - ஆவலுடன்
காவியமும் சிற்றேடும் கண்ணாம் இலக்கணமும்
மேவிப் படித்திட்டார் மேல்.

ஆரா அமுதம் அழகு தமிழினிய
சீரான் குமார சுவாமியெனப் - பேரினிய
வல்ல புலவர் மடியில் தவழ்ந்துதமிழ்
வல்லாமை கண்டுயர்ந்தார் வாழ்வில்.

பண்டிதன் செந்தமிழின் பாவலன் விஞ்ஞானக்
கண்டின் சுவைகண்ட கல்விமான் - எண்டிசையும்
போற்றும் மயில்வா கனனாரின் பார்வைநலம்
ஏற்றார் நிறைந்தார் உளம்.

காவியப் பாடசா லையிலே கற்கையிலே
பாவிகமாய் நட்புப் பலிதமாகி - பூவில்
கணபதிப் பிள்ளையுடன் அன்பை இறுதிவரை
பேணினான் பேர்தன்னைப் பேசு.

யோகர் சுவாமிகளின் உள்ளத்தில் பள்ளிகொளும்
போகம் அடையும் பெருமையதும் - யாகம்
புரிந்தோர்கள் தாமும் பெறமுடியாப் பேறு
வரித்தார் அடைந்தார் வளம்.

சங்கத்தா னைஇந்துக் கல்லூரி யில்தமிழ்
பொங்கும் மனமாய்ப் புகட்டுகையில் - இங்கிதம்
இல்லாதார் சாதி இழுக்கத்தை ஒப்பாது
தொல்லைகள் ஏற்றார் துணிந்து.

யாழ்ப்பாண மண்ணில் புரையோடிப் போயிருந்த
பாழான சாதிப் பரவணியை - ஆழ்ந்துமனம்
போராடித் தோற்றுப் பிரிவோதா யேசுவழி
சீரேற்றார் உள்ளம் திளைத்து.

தென்னாட்டில் வேதத்தை ஓதப் பசுமலை
என்னூரில் உள்ளதாம் கல்லூரி - சென்றடைந்து
ஈராண்டுக் கற்கை இயன்றங் கிருக்கையிலும்
போராட்டம் வந்ததப் போது.


அன்புவழி ஓதும் இயேசு மதத்தாரும்
துன்பமாம் சாதிமுறைத் தீட்டுக்கும் - அன்பராய்
உள்ளதும்: மேலை இசையில் தமிழ்ப்பாடல்
சொல்லலும் எதிர்த்தார் துணிந்து.

சுதந்திரத் தாகச் சுடர்பொங்கும் வேளை
அதிசேவை செய்த மிஷனரிகள் ஏகாதி
பத்தியத்தின் சார்பில் பரிவுமிகக் கொண்டதனால்
உத்தமர் நொந்தார் உளம்.

கதிரேசன் செட்டியார் என்ற தமிழகத்து
மேதைகள் நட்பும் மிகவாய்ந்து - மேதகமை
தானும் அடைந்து தமிழ்நாட்டில் நந்தமிழாம்
தேனைச் சொரிந்தார் தினம்.
கண்டார் மதுரையில் காணரிய தேனமுதக்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கண்டாம் விபுலாநந் தக்காந்த சக்தியினை
வேண்டாமே அந்நியம தான வழியென்று
பூண்டார்நற் சைவநெறி பூரித்து.

திருமலையில் மட்டுத் திருநகரில் உள்ளப்
பரிவுடன் ஆசிரியப் பனியில் - சிறந்தார்
வளர்த்தார் தமிழை, ஒழுக்கத்தை, கற்றார்
எழுப்பம் அடைந்தார் இகம்.
மும்மனிக் கோவை யெழில் மண்டூர் முருகனுக்கு
எம்மா அழகாய் அளித்திட்டார் - செம்மையுற
மண்டூர்ப் பதிகம் மனக்கினிய செந்தமிழில்
கண்டுரத் தந்தார் கலை.

கண்ணின் கீதை கனிந்தோடு நல்லமுதை
உண்ண முடிந்த அளவுக்கு - உண்டுயர்ந்து
உள்ளம் உணர்வு உயிருனில் தேக்கியருள்
வெள்ளத்தில் தோய்த்தகவி வேந்து.

கீதை அருள்வாக்குக் கோவையினைத் தேனினிய
சீதத் தமிழில் சிறைப்பிடித்து - வேதத்தின்
நாதத்தை நற்பொருளை நான்கடியாம் வெணடபாவில்
ஓதக் கொடுத்தான் உலகு.
முத்தமிழ் வித்தக மேன்மை விபுலாநந்தக்
சத்தியப் பாற்கடலில் தோய்ந்தெழுந்து - வித்தாண்மை
தானாகித் தமிழை, தமிழினிய பாவகையைத்
தேனாகத் தந்தானைத் துதி

சுன்னாகம் தந்தசீர் செந்தமிழின் பேர்புலவன்
அண்ணல் குமார சுவாமியது - பண்ணையிலே
வார்ப்படம் ஆனானை, வண்ணமெனப் பாசெய்து
பேர்ப்பட நின்றானைப் பேசு.

குருக்கள் மடத்துக் குலவுதமிழ்க் கோதைநற்
பேரினிய நல்லம்மா பேரழகை - ஆர
மணவினை செய்து மகிழ்ந்துநன் மக்கள்
குணங்களைப் பெற்றளித்த கோ!

கற்பதற் கென்றமைந்த கல்வியெலாம் கற்றாலும்
செற்றிபிகேற் என்றெதுவும் கைவசத்தில் - உற்றேறும்
வாய்ப்புகள் கால வசத்தால் இடைந்தாலும்
மாய்த்தெல்லாம் வென்றாரிம் மண்.

திருமலை மக்கள் காந்தி மகானை
ஒருமனதாய் ஒன்றிமகிழ் வுற்ற - வரவேற்பு
தந்த அமையம் தகுமொரு வாழ்த்துமடல்
தந்த மகானைத் துதி.

புலவர்க்கு வெண்பாப் புலியென்று சொன்னார்
புலவர் மணிபெரிய தம்பி - உலகில்
வருவார் வளம்மிக்க வெண்பாவால் வேதம்
தருவாரென் றெண்ணாத தால்.

• • •


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரா. செ. யோகராசா

# காலத்தின் குரல்களாகின்ற மருதூர்க்கொத்தன் கவிதைகள்



மருதூர்க்கொத்தன் நிறையக் கவிதைகள் எழுதியுள்ளார். எனினும், அவை நூலுருப்பெறாமை காரணமாக ஈழத்து நவீன கவிதை வரலாற்றில் அவரது பெயர் இடம்பெறவில்லை. சுதந்திரன், வீரகேசரி, தினகரன், மல்லிகை முதலானவற்றிலே அவை வெளி வந்திருப்பினும் கையெழுத்துப் பிரதிகளாகவே அவை அனைத்தும் பேணப்பட்டுள்ளன. பிரசுரமாக வெளிவந்த கவிதை நறுக்குகள் எங் குள்ளன என்றோ வெளிவராதன எவை என்றோ அறிய முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. இவற்றை ஆதாரமாக வைத்துக்கொண்டு ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியில் மருதூர்க்கொத்தனுக்குரிய இடம் பற்றி ஓரளவு இனங்காணும் முயற்சியே இங்கு இடம் பெறுகின்றது.

மேற்கூறியவாறு நோக்கும்போது, ஆச்சரியந்தரும் விடயம் யாதெனில் ஐம்பதுகளவிலேஅவரது கவிதையுலகப் பிரவேசம் நிகழ்ந்துள்ளனதென்பதே (1950ல் எழுதிய முதலாவது இலக்கிய முயற்சி என்று கவிஞரது குறிப்பு எழுதப்பட்டுள்ள அக் கவிதை "நிலவு" பற்றியது. அதன் ஆரம்பப் பகுதி இது,

நீல வான வீதியிலே
நீந்தும் வெள்ளை நிலவே வா - தினம்
நீந்தும் வெள்ளை நிலவே வா

பட்டுமணல்போல் வாருகலால் - நாம்
பரவிக்கோலம் இட்டிருக்கும்
முற்றம் என்னும் மெத்தையின்மேல்
மெல்ல அமர்ந்து மகிழ்ந்திட வா - பல
செல்லக் கதைகள் கதைத்திட வா

தொடர்ந்து வரும் கவிஞரது கற்பனை கள் ஏனைய கவிஞர்கள் பாடியுள்ள நிலவுக் கவிதை களிலிருந்து வித்தியாசமான தடத்திலே செல்கின்றதென்பதை மேலுள்ள பகுதியை விட பின்வரும் பகுதி சிறப்பாக வெளிப்படுத்து கின்றது:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கீரை கடைந்து வைத்திருக்கு - விரால்
மீனும் பொரித்துக் காத்திருக்கு
ஆரல் கறியும் சமைத்திருக்கு
அருந்த நீயும் ஓடிவா - எம்
விருந்தினர் அருமை நாடிவா
......................................................"

முற்கூறியவாறு கவிஞரது கவிதையுலகப் பிரவேசம் ஐம்பதுகளிலே நிகழ்ந்திருக்கிறது என்கின்றபோது அது ஈழத்துக்கவிதை வரலாற்றில் கவிஞருக்கு முக்கியமானதொரு இடத்தை வழங்குகின்றது என்பது கவனத்திற்குரியது. அதாவது முஸ்லீம் கவிஞர்களது நவீன கவிதையுலகப் பிரவேசம் ஐம்பதுகளளவில் நிகழ்ந்தது என்றும் அவ்விதத்திலே புரட்சிக்கமால், அண்ணல், யுவன் ஆகியோர் முதன்மையானவர்களென்றும் நினைவு கூரப்படும் நிலையிலே இப்போது அத்தகையோர் வரிசையில் மருதூர்க்கொத்தனும் இணைகின்றார் என்பதனை இங்கு நினைவுரை வேண்டியுள்ளது.

ஐம்பதுகளிலே மொழியுணர்ச்சிக்கவிதைப் போக்கு முக்கியம் பெற்றிருந்த காலமாகும். இராஜபாரதி, காசிஆனந்தன், ஆரையூர் அமரன், பாண்டியூரான் தொடக்கம் புரட்சிக்கமால், அண்ணல் வரை வெவ்வேறு நோக்கிலும் போக்கிலும் தமது தமிழ்ப்பற்றை வெளிப்படுத்திய சூழலில் மருதூர்க்கொத்தனது கவிதையொன்று பின்வருமாறு ஆரம்பிக்கின்றது.

**துவக்கு பணியை**

வீதி அளப்பதிலும் சாதி குழப்பலிலும்
வீரம் இருக்கவில்லை தம்பி - இங்கு
நாதி இழந்த இனம் நீதி பெறுவதற்கு
நாளை இருக்கு உனை நம்பி
......................................................
ஆழக் கடலினடி மூழ்கிக் கிடந்த முத்தை
சோளம் குவித்தவர்கள் முன்னே - இன்று
நீளக்கடல் கடந்தும் தோளிற் பலமிருந்தும்
ஆளக்கொடுத்ததுவும் என்னே
..............................................
மேடைமுழங்கியென்ன பீடு ஒழிந்திடுமோ
வாடைக் கொதுங்க ஒரு வீடு - கொடும்
காடைத் தனங்களுக்குப் பாடை அமைக்கவன்றே
ஏடா, துணிந்துடனே தேடு
(சுதந்திரன் 26- 4- 1959 )

எனினும் மேற்கூறிய கவிதைப்பகுதிகளுட்பட மொழியுணர்ச்சிப் போக்கினை அடியொற்றியெழுந்த கவிஞரது கவிதைகள் வெறும் உணர்ச்சிக் கொந்தளிப்பின் வெளிப்பாடாக அன்றி ஆக்க பூர்வமான முறையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. அறிவியல் நோக்கில் வெளிப்பட இ. முருகையனது மொழியுணர்ச்சி கவிதைப் போக்குடன் மருதூர்க்கொத்தனது மொழியுணர்ச்சிக் கவிதை போக்கு இன்னொரு வழியில் இணைந்து செல்கின்றது. என்றும் கூறத்தோன்றுகின்றது.

ஏறத்தாழ அறுபதுகளளவிலே முற்போக்குக் கவிதைப் போக்கு முனைப்புற்ற சூழலில் மருதூர்க் கொத்தனும் அப்போக்கினை வெளிப்படுத்தும் கவிதைகள் எழுத முற்படுகின்றார். இவ்விதத்திலே "தொழிலாளர் உலகம்" என்ற உபதலைப்பு இட்டு அவர் எழுதிய "சிறிய மகன் செகம் வெல்வான்" முக்கியமானதொரு கவிதையாகின்றது மருதூர்க்கொத்தனது கவித்திறனை புரிந்துகொள்ளும் நோக்குடன் முழுமையாகத் தரப்படுகின்றது.

தறியிலே மங்கமாயும்
தம்பிலெவ்வைக் காக்கா நீ
இறால்காய்ந்த கருவாடாய்
ஏன் வளைந்து போனாய்கா?
கீழ்வானில் சூரியனும்
கிளர்ந்தெழும்பும் வெள்ளணையில்
பழம்பாய் கிடந்த நீ பதறி எழுந்ததுமே
முகம் கழுவ மறந்திருப்பாய்
ஆனாலும் நெய்கின்ற நீ நெய்யும்
அகம் போக மறந்ததாய் ஆருமே சொன்னதில்லை
போனதுமே தறியின்மேல்
பொட்டணவே அமர்ந்திடுவாய்
பாய்புலியின் பாய்ச்சலுடன்
பகலெல்லாம் நெய்திடுவாய்

நீ நெய்த பிடவைகளால்
நாட்டிலுள்ள மாந்தரெல்லாம்
மானத்தைக் காக்கின்றார்
மாபெரிய தொண்டன் நீ
உன் குடிசை அம்மணமாய்
ஒழுக்கெடுத்துக் கிடப்பதனை
எண்ணியுமே பாராமல்
ஏன் நாளைக் கழிக்கின்றாய்?

ஒழுங்காய் அடுப்பெரிந்தால்
ஊர்நாய்கள் கூதலினால்
நலமிழந்து போகுமென்ற
நல்ல மனம் ஏன் கொண்டாய்?

"நான் பெற்ற பிள்ளைகளே
நாட்டுக்குப் பெரும்பாரம்
அவர்கள் பெறத் தொடங்கிவிட்டால்
அதை நாடு தாங்காது"
என்றெண்ணித் தானே
உன் குமர்கள் திருமணத்தை
எண்ணியுமே பாராமல்
ஓட்டுகிறாய் வாழ்நாளை?

உன்னுடைய முதலாளி
ஊரையெல்லாம் வாங்குகிறார்
பொன் பொருள்கள் தேடுவதில்
பெரும்புரட்சி பண்ணுகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு நூல் சப்ளை
செய்பவர்கள் ஆண்டவனைச்
சவாலுக்கு அழைத்திங்கு
சொர்க்கங்கள் கட்டுகிறார்

எல்லாம் அவர்தலையின்
"நஸீப்" என்றே காலத்தை
அல்லாடிக் கழிக்கின்றாய்
ஆனாலும் உன்மகனோ
பொல்லாத சமூகத்தைப்
புரட்டிவிட்டு அதனிடத்தே
நல்லதோர் அமைப்பை
நாட்டத் துடிக்கிறான்

தறியிலே மங்கமாயும்
தம்பிலெவ்வைக் காக்கா உன்
சிறிய மகன் நிசமாய் இச்
செகம் வெல்லப் போறான்கா! - 1975

பயணம் என்ற கவிதையையும் இவ்வேளை முழுமையாகக் கவனிக்க வேண்டிய தேவையுள்ளது. ஏனெனில் நீண்டபயணம் செய்யவேண்டிய உலகத் தொழிலாளர் குரல்களாக அக்கவிதை அமைந்திருப்பது ஈர்ப்பை ஏற்படுத்துகின்றது. யாப்போசையை பயன்படுத்தி வந்த கவிஞர் பேச்சோசையைத் திறம்படக் கையாள்கின்ற நிலைக்கு வந்திருப்பதும் இக் கவிதையூடாகப் புலப் படுகின்றது. இனி கவிதையைக் கவனிப்போம்



## பயணம்

பாதையிலே கற்கள்
நெருக்கென்று பாய்ந்துடலை
வாதைக் கிழுக்கின்ற
வம்பு நிறை ஒற்றையடிப் பாதையிலே
எங்கள் பயணந் தொடர்கிறது

சானை பிடித்த ஊசிகளாய்
முள்ளடர்ந்த கானகந்தான்
சிறாய்ப் பெருக்கும் கவலை சிறிதுமின்றி
எங்களது கால்களை
எட்டி எட்டிப் போடுகிறோம்

வேங்கைகள் சிங்கங்கள்
யானைகள் குளுக்கடாக்கள்
ஆங்காரங் கொண்டே அலைகின்ற
காட்டுவழி
நாங்கள் துணிந்து
நடையாய் நடக்கின்றோம்

நீங்கள் எமைப்பார்த்து
ஏனையா கவல்கின்றீர்
எங்களில் கழிவிரக்கம் உள்ளவர்போல்
நடிக்கின்றீர்
நாங்கள் பயணம் நடப்பதற்குப் பிறந்தவர்கள்

உங்கள் தொடைகள்
உதறல் எடுப்பதையும்
உங்கள் இதயங்கள்
ஓங்கி அடிப்பதையும்
எங்களால் காண இயல்கிறது
அதற்காக
நாங்கள் பயந்து
நடைதளரப்போவதில்லை

எங்களுக்கு முன்னே
எத்தனையோ பேர்போனார்
தங்கள் இரத்தம் தரை நனைக்கும்
படி சென்றார்
போனதுந்தான் போனார்கள்
போன வழி தென்பட்ட
பூங்காவில் தங்கிப் புளகித்து
சங்கீத நாற்காலி
மற்றும் விளையாட்டில்
மாட்டி விழிக்கின்றார்

மாட்டி விழி பிதுங்கும் மேதைகளை
அன்றோ நீர் காட்டி
எமைப்பார்த்துக் கலகலத்துச்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சிரிக்கின்றீர்
நாங்கள் அதையும் நன்கறிவோம்
நண்பர்களே!
நாங்கள் அதையும் நன்கறிந்த பின்னேதான்
காட்டு இருளிடையே கண்சிமிட்டும்
மின்மினியின் கூட்டு வெளிச்சத்தில்
குறிபார்த்துக் குதிகொண்டு
நீட்டு மரங்கள்
நெருங்கி இடர் செய்யும்
காட்டு வழியே
கடுகி நடக்கின்றோம்
(மல்லிகை, 1975)

அன்றாட அனுபவங்களை வெளிப்படுத்தும் பாங்கிலான கவிதைகளும் மருதூர்க்கொத்தனால் எழுதப் பட்டுள்ளன. கந்தோர் சிற்றூண்டிச்சாலையில் நடைபெற்ற கைகலப்பு பற்றிய "காதில் விழுந்த கனல்" என்ற நெடுங் கவிதை இவ்விதத்தில் கவனிக்கப்படத்தக்கது.

எங்களது கந்தோர்ச்
சிற்றுண்டிச் சாலைக் கதவுகள்
விரியத் திறந்தே உள்ளன.
கதவுகள் விரியத் திறந்திருப்பது
வருகை தருவோர் வசதிக்காகவே
இங்குள ஊழியர்
தாகமும் பசியும்
தணிக்கவே
உணவுச் சாலையும் உளது
என்பது உண்மையே

என்று தொடங்கும் அக்கவிதை ஏழை வாத்தியார் ஒருவருக்கும் கிளாக்கர் ஒருவருக்குமிடையில் ஏற்பட்ட சண்டை பற்றியும் அது காரணமாக சீட்டுக்கிழிக்கப்பட்ட வேலைக்காரச் சிறுவன் பற்றியும் அவனது தொழில் தனக்குக் கிடைத்தமை பற்றியும் அங்கு ஏற்பட்ட அனுப வங்கள் பற்றியும் விரிவாகப் பேசுகின்றது. இஸ்லாமியத் தத்துவங்களும் எளிமையான முறையிலே அவரால் எழுதப்பட்டுள்ளன

ஈழத்துக் கவிதை மரபிலே வாழ்த்துரை, இரங்கலுரை கவிதைகளுக்கும் இடமுள்ளன. மருதூர்க்கொத்தனும் புலவர் மணி பெரியதம்பிபிள்ளை, புலவர்மணி ஷரிபுத்தீன், சுவாமி விபுலானந்தர், நெல்சன் மண்டேலா முதலானோர் பற்றி யெல்லாம் எழுதியிருக்கின்றார். கவியரங்கக் கவிதைகளும் எழுதியிருக்கின்றார் மெல்லிசைப் பாடல்களும் இயற்றியிருக் கின்றார். விரிவஞ்சி முன்னவற்றிற்கு எடுத்துக்காட்டுக்கள் தருவதைத் தவிர்த்து மெல்லிசைப் பாடல்கள் பற்றி மட்டும் ஒரு உதாரணம் கவனிப்போம்

**விண் புகழ் கொண்ட தமிழ்**

பல்லவி
எங்கள் தமிழ்மொழி - எங்கள் தமிழ்மொழி
என்றிசை பாடிடுவோம் - இன்பம்
பொங்கவே பாடிடுவோம்

அனு பல்லவி
பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு என்றே
வெல்லத் தமிழ் படிப்போம் - நாம்
உள்ள மடை திறப்போம்

சரணம்
பாண்டியன் தென்கடல் நீந்தி மகிழ்ந்தவள்
பாங்குடன் சேரனின் மலையில் தவழ்ந்தவள்
மாண்புடன் சோழனின் காவிரி ஆடி
விண்புகழ் கொண்டவளே


கம்பனின் நாவில் களிநட மாடி
காவியச் சிலம்பில் கலை வளங் கூடி
உம்பரும் போற்றிடும் வள்ளுவன் குறளால்
உலகினை வென்றவளே
மண்ணில் உயர் புகழ் கொண்டவளே

வண்டமிழ்ச் சீறா தேனினைப் பருகி
வளமார் தேம்பா வணியினில் மூழ்கி
மண்டிணி உலகின் மதத்தின ரெல்லாம்
மகிழ்ந்து வளர்ந்தவளே
மண்ணில் மழையென வந்தவளே.

பாரதி செய்த புதுமையில் விளைந்து
பண்புடன் புதுமைப் பித்தனில் மலர்ந்து
நூறாயிரம் நூறாயிரம் கலைஞர்
உணர்வில் கலந்தவளே - எங்கள்
உயிரென வந்தவளே
..............................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழிலக்கிய மரபுகளை நன்கறிந்தவரான மருதூர்க்கொத்தன் தனது கவியாற்றலை முற்றிலும் இன்னொரு புதிய முறையிலும் வெளிப்படுத்தியிருக்கின்றார். ஒரு பொருள் மீது பப்பத்துப் பாடல்கள் பாடும் தமிழிலக்கிய மரபொன்றுள்ளது. ஐங்குறுநூறு என்ற சங்க இலக்கிய நூல் அம் மரபைக் கொண்டது (வேட்கைப்பத்து, என்றவாறு எழுந்த பாடல்கள் அத்தகையன.) பல்லவர்கால பகுதி இலக்கிய மரபுவழியில் மாணிக்கவாசகரும் அவ்வாறு (பிடித்த பத்து, உயிருண்ணிப் பத்து, குழைத்த பத்து என்றவாறு) பாடியிருக்கின்றார். நவீன கவிஞர்கள் சிலரும் இம்மரபைப் பின்பற்றியுள்ளனர். அந்தவிதத்தில் புதுமையான முறையில் இம் மரபைப் பின்பற்றிய ஈழத்து கவிஞர் மருதூர்க் கொத்தன் மட்டுமே ஆகலாம் “நபிப் பத்து” “இறைப்பத்து”, “சூட்சுமப்பத்து” (ஆன்மிக நோக்கு) “ஊர்ப்பத்து” (சம்மாந் துறை முதலான பத்து ஊர்கள்) “மேலாகப்பத்து” (படைப் பாளர்கள் மீதான மோகம்) “போர்ப்பத்து”, “மடமைப்பத்து”, என்ற தலைப்பு களிலே அவர் பாடியிருக்கின்றார். முதலிரு பத்துக்களும் தவிர ஏனையவை புதிய உள்ளடக்கம் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது. போர்ப்பத்து பாடல்களில் ஒன்று மட்டும் இங்கே தரப்படுகின்றது:



வீ. ஆனந்தன்

**போர்ப்பத்து - 6**

இந்துவாய்ப் பிறந்தாலும் இஸ்லாம்மத பாடத்தை
எழுதியதில் சித்தி கண்டோன்
இஸ்லாமிய மக்கள் தம்மோடு உறவாடி
அவர் மனம் வாழ்ந்த அன்பன்
செந்தமிழில் நல்ல இலக்கியம் செய்வோரைச்
சிரம் தாழ்த்தி வணங்கும் சீலன்
சித்தம் முழுவதும் இலக்கியச் சுவை தனைச்
சேமித்து வாழ்ந்த ரசிகன்
சந்தமும் இன உறவைச் சாதிக்கும் நற்பணியில்
சதானந்தம் கண்டு வாழ்ந்தோன்
அவன் பயணம் செய்வண்டி
அமர்க்களம் ஒன்றினிடையே
அகப்பட்ட கொடிய வேளை
பந்தமுடன் ஓர் சிறுமி உயிர் காக்கத் தன்னுயிரைப்
பரிவுடனே கொடுத்து மாண்டான்
பண்பான மக்களையும் பலி கொள்ளும் போரோயப்
பாடுவாய் மோகனா நீ

(இக்கவிதை, கிழக்கிலே நன்கறியப்பட்ட கவிஞரும் விமர்சகருமான வீ. ஆனந்தன் பற்றியது) தொகுத்துக் கூறின், மருதூர்க்கொத்தன் கவிதைகளை

மொழி உணர்ச்சி
முற்போக்கு,
தேசியம்,
தமிழ்
அன்றாட அனுபவம்,
இஸ்லாமியத்தத்துவம் என்றவாறும்
யாப்போசை
பேச்சோசை என்றவாறும்
மரபுக்கவிதை வடிவம்
புதுக்கவிதை வடிவம் என்றவாறும்
கவியரங்கக் கவிதை

மெல்லிசைப் பாடல் என்ற வாறும் இனங்காண முடிகின்றது. இவ்விதத்தில் மருதூர்க் கொத்தன் கவிதைகள் காலத்தின் பிரதிபலிப்பாக - காலத்தின் குரல்களாக வெளிப்படுகின்றன என்று கூறத்தோன்றுகிறது

இறுதியாக ஒன்று: தமிழ் இலக்கிய கவிதை மரபுகளையும் சொற்களையும் அதிகளவில் பயன்படுத்தும் முஸ்லீம் நவீன கவிஞர்களுள் முதன்மை இடம்பெறுவர் மருதூர்க்கொத்தன் என்பதிலும் தவறில்லை தமது சிறுகதைகளிலே பழந் தமிழ்ச்சொற்களைக் அதிகமாகக் கையாண்டவர் (உதாரணம்: “ஒளி” சிறுகதையின் ஆரம்பமும் முடிவும் கடினமான பழந் தமிழ்ச்சொற்களிலமைந்துள்ளன. சிறுகதை ஒன்றின் தலைப்பு “ஆற்றுப்படை”) கவிதையைப் பொறுத்தவரையிலே கவிதை வடிவ மரபுகளையும் இலக்கிய வடிவ மரபுகளையும் பின்பற்றியிருப்பதை அவதானிக்க முடிகின்றது. எனவே மருதூர்க்கொத்தனைத் தமிழ்ப்பற்று மிகுந்த படைப்பாளியாக இனங்காணமுடிகின்றது!

• • •


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜ ஸ்ரீகாந்தன்

# மருதூர்க்கொத்தன் கதைகள்

## படைப்பாளியின் பார்வையில் ஆக்க இலக்கிய கர்த்தாவின் படைப்பு

"இலக்கியம் மக்களுக்காக,
அதுவும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக
எழுதப்படவேண்டும்
என்று விரும்பியவன்....."
மருதூர்க் கொத்தன்



இவருடைய முதலாவது சிறுகதை தொகுதியை இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம் தனது முதலாவது வெளியீடாகக் கொணர்ந்துள்ளது. "மருதூர்க் கொத்தன் கதைகள்" என்ற இச் சிறு கதைத்தொகுப்பில் கதை நிரலுக்கு முன்னிருக்கும் 'அவனது கதை' என்ற கவிதையோட்டமான சுயசரிதைக் குறுஞ்சுருக்கம் உட்பட பன்னிரண்டு கதைகள் உள்ளன. 1961ம் ஆண்டுமுதல் 1978ம் ஆண்டுவரை விரகேசரி, தினகரன் ஆகிய பத்திரிகைகளிலும் தாமரை, மல்லிகை, பாடும் மீன், புதுமை இலக்கியம் ஆகிய சஞ்சிகைகளிலும் வெவ்வேறு காலப்பகுதிகளில் வெளிவந்த பதினொரு சிறுகதைகளை தனக்குப் பிடித்த கதை நிரலில் தொகுத்து வெளியிட்டுள்ளார் மருதூர்க் கொத்தன்.

அரும்பாகி, மொட்டாகி, இதழ்விரித்து மணம் பரப்பும் பூவாகி, காயாகு முன்னரே கனியாகுவோர் அவசரக் கோலத்தில் புத்தகம்போடும் இக்காலத்தில் நின்று, நிதானித்து அனுபவ முதிர்ச்சிபெற்று ஆரோக்கியமான, நிறைமாதக் குழந்தையொன்றை இலக்கிய உலகிற்களித்துள்ளார் மருதூர்க் கொத்தன்.

இச்சிறுகதைத் தொகுப்பில் முதலாவதாகவுள்ள சிறுகதை "வெட்டுமுகம்". மட்டக்களப்பின் வளமிக்க மண்ணின் பகைப்புலத்தில் அம் மண்ணின் மைந்தர்களின் வாழ்க்கைச் செல்நெறி அழகாகப் படம்பிடித்துக் காட்டப் படுகின்றது. நோம்பு மாதத்தில் அநுராதபுரத்துக் கட்டுகெலியா விலிருந்து மட்டக்களப்பிக்கு வந்த பெண்ணுக்கிரங்கி 400 ரூபாய்ச் சம்பள காரன் தனது உண்டியலை உடைத்து புத்தக இடுவலுக்குள்ளிருந்த என்வலப்பைத் தேடியெடுத்து சட்டைப் பைக்குள்ளிருந்த என்வலப்பைக் கொட்டி 49 ரூபா 60 சதத்தினை எடுக்கிறான்.

பூரண தொகையாக இல்லாத அதனை அப்படியே அவர்களுக்குக் கொடுக்க அந்தச் சின்னச் சம்பளக்காரனின் பெரிய இதயம் இடங்கொடுக்கவில்லை. ஐம்பது ரூபா வாக்கிக் கொடுக்க மனைவியிடம் 40 சதம் கேட்கிறான். வாழ்க்கையின் ஒவ்வொரு மூலக்கூற்றையும் ஒவ்வோர் அணுவையும் நுட்பமாக அவதானிக்கும் படைப்பாளியின் திறமையின் முத்திரை இங்கு ஆழமாகப் பதிகிறது.

மார்க்க ஒழுக்கம் நிரம்பிய அஹ்மத் 'ஹஜ்' செய்வதற்கென்ற ஹாஜத்துக்காக பலவருடங்களாக உழைத்துச் சேமித்த தொகையை அண்டை வீட்டாருக்குக் கொடுக்கத் தீர்மானிக்கிரார். "அழகிய இதயங்கள்" என்ற கதையில் தொடர்ந்தாற் போல் நாலைந்து நாட்களாக பட்டினி கிடந்த அண்டை வீட்டார் தெருவில் செத்துக்கிடந்த ஆட்டை எடுத்து வந்து அதை வெட்டி சமைத்து தங்கள் பசிக்கும் வயிறுகளின்கொதிப்பை ஆற்றியிருப்பதை அறிந்தே இந்த முடிவை எடுக்கிறார்.

அஹ்மத் பின் அஷ்காப் 'ஹஜ்' செய்வதற்கென சிறுகச் சிறுகச் சேர்த்த பணம் அடுத்தவீட்டாரின் வறுமையைப் போக்குமானால் ஏழுமுறை 'ஹஜ்' செய்த தவாப் தமக்குக் கிடைக்குமென்று மனைவியிடம் கூறுகிறார். இக்கதையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> “கொப்பரைக்கயும் சாம்பலும், கசிப்பு வெறியில் நிலத்தில் ஓலைப்பாயில் உழலுவதாற் படியும் பழுதியும், வியர்வை நெடியும்மாறாத அந்த உடலை அருவருத்து ஒதுக்காது எட்டுப் பிள்ளைகளுக்குத் தாயானவள் என்பதை நினைக்கும் போதெல்லாம் அவனுக்குப் புல்லரிப்பு எடுக்கும். ஆராத காதலுடன் அந்த அழுக்குடலை ஆரத்தழுவும் சோமாவை இழப்பதுபற்றி அவன் சிந்தித்ததே கிடையாது”

மிஷ்கின பண்ணையாரின் கஞ்சத்தனமும் நன்கு வடிக்கப்பட்டுள்ளது. “சங்கிலித் தொடர்கள் அறுக்கின்றன” என்ற கதையில் பதவி வந்ததும் கொம்பு முளைத்துவிட்ட சேமன் இப்றாகிம் தனது குழந்தைகளுக்கு அன்புமிக்க தந்தையாகவும் அதேபோது போலக்கௌரவ வெறியனாகவும் சித்திரிக்கப் பட்டுள்ளான். “ஒங்கள வெல்லவைக்க என்ர காக்காபட்ட பாட்டை மறந்திற்றியள். அவர்ர வண்டில்ல மஞ்சள் கொடிகட்டி சனத்தை ஏற்றிப்பறிச்சார். மருமகப் பொடியன் பத்துத்தரம் கள்ளத்துண்டு போட்டானெண்டு பெருமையாகப் பீத்தியடிச் சியளே! ஆக ஐஞ்சு துண்டால தானே வெண்டீங்க” என்று மனைவி ஆசுறா உம்மா கேட்கிறாள். எமது நாட்டின் கிராம சபைத் தேர்தலில் கூட எவ்வளவு தில்லு முல்லுகள்!

1975ம் ஆண்டில் கொத்தன் எழுதிய ‘சாதிகள் இரண்டே’ என்ற சிறுகதை இத்தொகுப் பிற்கே மணிமகுடம் போன்றது. அப்புஹாமி முதலாளி தனது காரியத்தைச் சாதிக்க கிலுட்டு பாஸை கருவியாக உபயோகிக்க முயல்கிறார். கிலுட்டு பாஸின் - அந்த அழுக்கு பாஸின் மனைவி சோமாவோ அழகுமிக்கவள். தன்னை நம்பி மாத்தளையிலிருந்து மருதன் கடவளைக்கு வந்தவள் எள்பதை எண்ணி கிலுட்டு பாஸ் மெய்மறந்து போகிறான். “கொப்பரைக்கயும் சாம்பலும், கசிப்பு வெறியில் நிலத்தில் ஓலைப்பாயில் உழலுவதாற் படியும் பழுதியும், வியர்வை நெடியும்மாறாத அந்த உடலை அருவருத்து ஒதுக்காது எட்டுப் பிள்ளை களுக்குத் தாயானவள் என்பதை நினைக்கும் போதெல்லாம் அவனுக்குப் புல்லரிப்பு எடுக்கும் ஆராத காதலுடன் அந்த அழுக்குடலை ஆரத்தழுவும் சோமாவை இழப்பதுபற்றி அவன் சிந்தித்ததே கிடையாது.” கிலுட்டு பாஸும் அவனுடைய காதற் கிழத்திசோமாவும் எமது கண்முன் உருப்பெற்றுத் தெரிகிறாள்.

யாரைத்துவம்ஷம் செய்யச்சொல்லி அப்புஹாமி முதலாளி கிலுட்டு பாஸை அனுப்புகிறாரோ அவர்கள் தனது உயிரனைய சோமாவிற்கு உயிரளிக்க உதவுவதைக் கண்டு மனந்தெளிகிறான். கிலுட்டுபாஸ் “கந்தையா, இந்த உலகத்தில் இரண்டுசாதிகள் தான் எண டெத்த இப்ப கண்ணாரக் கண்டிட்டன். ஒண்று பணக்கார சாதி, மற்றது என்னையும், உன்னை யும் கரீமையும் போன்ற ஏழை சாதி”

மருதூர்க் கொத்தன் தனது சுயசரிதைக் குறுஞ் சுருக்கத்தில் கோடிட்ட “வர்க்ககுணாம் சத்தை இனங்காட்டவும் கூர்மைப் படுத்தவும் முயன்றான்....” என்ற கூற்று இக்கதை மூலம் முறுக்கேற்றிய உருக்காக நிரூபணம் பெறுகிறது. “கோடாரிகள் கூராகின்றன” ஆகிய கதைகளில் முறையே முதலாளி தங்கமரிக்கார், முதலாளி முத்து மரிக்கார் போன்றவர்கள் தோலுரித்துக் காட்டப்படுகிறார்கள்.? என்ற கதையில் மஃதூர் மரைக்கார் மாமியின் சொத்துக்களை தான் உடனே பெற்றுக் கொள்ளும் பேராசையால் தன்ளாத வயதிலுள்ள அவளை மக்காவிற்கு அனுப்புகிறான்.

“ஆற்றுப்படை” கதாநாயகன் முஹாதலி - கள்ள எலி தனது இயல்பை மாற்றி நல்லவனாக முயலும் போது அவன் வாழும் சமூகம் அவனுக்கு சவாலாகிறது. அவனை பழைய சேற்றினுள்லேயே தள்ளுகிறது.

“மூக்குத்தி” ஏழை முஸ்லிம் பெண் களின் அவலங்ளை, வறுமையிலும் செம்மை நிலையினையே விரும்பும் நபீஸாபோன்ற நிதான சிந்தனைப்போக்குள்ள மக்களின் வாழ்க்கையை எமது நினைவுத் திரைகளில் நிழற்படமாக்குகிறது.

“வேலி” - தினகரன் பரிசோதனைக் கழகத்திற்கு 1962ம் ஆண்டில் எழுதப்பட்ட சிறுகதை மருதூர்க் கொத்தனுக்கு இப் பரிசோதனை அதிவிசேச சித்திக்குரிய புள்ளிகளை குரையோடாமற் தந்துள்ளது.

இறுதியிற் கவிந்துள்ள “இருள்” ஏழைப் பெண் சுலைகாவின் வைரம் பாய்ந்த மனவுறுதியை, பெண்ணடிமைத்தனத்தை உதறித்தள்ளும் மனோதிடத்தை ரேபயும் பூசிய கடிகாரமுள்ளாக துலாம்பரமாக்குகிறது. ஆனால், இச்சிறுகதையின் இறுதிப் பந்திகளி ரண்டில் வரும் விரச -ஆபாச வசனங்கள் ஒண்றிரண்டு மட்டக்களப்பின் குத்தரிசிச் சோற்றில் கற்களாக உறுத்துகின்றன.

இச்சிறுகதைத் தொகுப்பில் மருதூர்க் கொத்தனின் மொழியருவி கவிதையின் குளிர்மையுடன் “மௌனமாகச்” சலசலத்துப் பாய்கிறது. கீழைத் தமிழின் கிராமியச் சொற்கள் கைதேர்ந்த சிறுமியின் கலைநேர்த்தி யுடன் இலக்கியமாக ஜனித்துள்ளன. தி.மு.க. தமிழ்வாடை, சொற்சிலம்பங்கள் ஆங்காங்கு தலை நீட்டினாலும் அவைகூட கதைகளின் இறுக்கத்தைத் தளர்த்தவில்லை. தரம் வாய்ந்த இலக்கியச் சுவைஞர்களின் நீண்ட கால ஆசையை நிறைவுசெய்துள்ளது இச்சிறுகதைத் தொகுப்பு.

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌலவி. எம்.எஸ்.எம்.ஜலால்தீன்

# மனத்திரையில் மருதூர்க்கொத்தன்

மருதமுனை மண்ணின் கல்வி, இலக்கியப் பதிவேட்டில் ஐந்து தாசாப்தங்கள் கொலு வீற்றிருந்த மருதூர்க் கொத்தன் எம்மைவிட்டுப் பிரிந்து பலஆண்டுகள் கடந்துவிட்டன. 20.04.2004ல் "மர்ஹூமாக" வானுயர்ந்த அந்த மாமனிதன் தன் குடும்பத்தை, இலக்கியத்தை, நண்பர்களை மட்டும் நேசிக்கவில்லை. மிக மேலாக, இந்த மண்ணை, இதன் மக்களை நேசித்தான். தன் இலக்கிய கள மேட்டாகவும் கல்விப் பணியின் கலவையாகவும் மருதமுனையையே தன் செயற்பாடுகளில் உரமிட்டான். எனினும் கல்முனை வாழ் தமிழ் இலக்கிய நெஞ்சங்களும், சாய்ந்த மருது அன்புள்ளங்களும், கொழும்புவாழ் தமிழ் உணர்வுகளும் அவனை ஆகர்ஷித்து அவன் மரணத்தின் வடுக்களை, அது ஏற்படுத்திய நிரந்தர இடைவெளியை, மன ஆற்றாமையை பல நிகழ்வுகளில் மிக அழுத்தமாக பரிமாறிக் கொண்டன.

கொத்தனின் அந்த இறுதி மூச்சின் சுவாசத்தை அவர் அருகிலிருந்து கண்கள் கலங்க மனதை கல்லாக்கி பார்த்துக் கொண்டிருந்தேன். சில நிமிடங்களில் கடைசிப்படுக்கையில் கொத்தனைக் கண்ட போது ஒரு சரித்திரம் சரிந்து கிடக்கிறது என்று நினைத்தேன். அந்த சரித்திர நாயகனை அவனின் சாதனைகளை, இலக்கிய படைப்புக்களை இனங்கண்டு கொள்ள இந்த சமூகத்துக்கு இன்னும் பல வருடங்கள் எடுக்கலாம்.

கல்வி, கலை, இலக்கியம், அரசியல், ஆன்மீகம், வரலாறு, மொழி போன்ற பாற் கடல்களை அறிவு, படிப்பு என்னும் மத்துக் களால் கடைந்து கடைந்து அமிர்தம் எடுத்தவரே கொத்தன். அந்த மாமனிதனின் உக்கிரமான உழைப்பையும் அறிவு, இலக்கியத்தின் பால் அவர் கொண்டிருந்த





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாயக் காதலையும் நான் ஆர்வத்தோடு ஆராதிக்கிறேன். நான் ஒரு படைப்பிலக்கிய (*Creative Literature*) வாதியல்ல. ஆய்விலக்கிய (*Reserch Literature*) வாதி என்று கூறலாமா? என்பதும் எனக்குள்ளேயே இன்னும் தெளிவில்லை. இலக்கியம் படைத்தவன்தான் இலக்கியவாதி என்றில்லை. இலக்கியம் படிப்பவன்கூட இலக்கியவாதிதான். படைப்பின் பெரும் பகுதி படிப்போடு சம்மந்தப்பட்டுள்ளது. உணரப் படும்போதுதான் ஒரு படைப்புக்கு உன்னதம் கிடைக்கிறது. அதனால்தான் சில நேரங்களில் 'கம்பனைவிட டி.கே. சியை நேசிக்க முடிகிறது' என்று யாரோ எழுதியது என் நினைவுக்கு வருகிறது. அந்தளவில் எனக்குள் மனத்திருப்தி கொண்டவனாக மருதூர்க் கொத்தனின் வாழ்வில் சில அத்தியாயங்களை மனத்திரையில் இருந்து (தெளிவான தகவல்களோடு) முன்வைக்கின்றேன்.

கொத்தனின் இத்தரை மலர்வு 1935ம் ஆண்டு ஜூன் மாதம் 06ந் திகதி அனுராதபுர மாவட்டத்தில் காளாவி (கலாவெவ) என்ற கிராமத்தில் நடந்தது. திருகோண மலையைச் சேர்ந்த வாப்பு மரைக்கார் என்பவருக்கும் சம்மாந்துறையைச் சேர்ந்த உமறு கத்தா சின்ன முத்து என்ற பெண்மணிக்கும் மகனாகப் பிறந்த மருதூர்க்கொத்தன் அவர்கள் வாப்பு மரைக்கார் இஸ்மாயில் (வீ.எம். இஸ்மாயில்) என்ற முழுப் பெயரில் பதிவுசெய்யப் பட்டார். சிறிய வயதில் தனது அன்புத் தாயை இழந்த இஸ்மாயில் அவர்கள் திருகோணமலையில் தனது மாமி வீட்டில் சில காலம் வளர்ந்து வந்தார். தனது தந்தை மருதமுனையில் மறுமணம் செய்துகொண்டதால், மாமி வீட்டிலிருந்து பிரிந்து மருதமுனைக்கு தந்தையால் கொண்டுவரப்பட்டு, தனது சிற்றன்னையின் அன்பு வளர்ப்பிலேயே வளர்ந்து கல்வியும், ஒழுக்கமும், இலக்கியமும், பண்பும், பாசமும் உடையவராக மருதமுனை வரலாற்றில் தடம் பதித்தார்.

மருதமுனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை (தற்போதைய அல்-மனார் மத்திய கல்லூரி)யில் கல்வி பயின்ற வி.எம். இஸ்மாயிலுக்கு இப் பிரதேசத்தின் துறைபோர்ந்த ஆசிரியர்களாக விளங்கிய வைரமுத்து, புலவர்மணி ஆ.மு. ஷெரிபுதீன் போன்றவர்களிடம் கல்வி கற்கக் கிடைத்தமை அவரது இலக்கிய, மொழிச் செழுமைக்கும், ஆன்மீக பக்குவத்துக்கும் உரமூட்டியது. பாடசாலைக் காலத்திலேயே கட்டுரை, கவிதை, நாடகம், சித்திரம் போன்ற துறைகளில் தனது திறமையை வெளிப் படுத்திய கொத்தனின் எதிர்கால இலக்கிய, கல்விச் செழுமை முத்திரை பதிக்க ஆரம்பித்தது. அப்போதிருந்த கல்விச் சூழலுக்கேற்ப உயர்ந்த கல்விப் பரீட்சையாக கருதப்பட்ட சிரேஷ்ட தராதரம் பரீட்சையில் சித்தி பெற்று அட்டாளைச்சேனை, பலாலி போன்ற இடங்களில் இருந்த ஆசிரிய கலாசாலைகளில் புகுந்து, கல்வி கற்று பயிற்றப் பட்ட ஆசிரியராக வெளிவந்து 1956ல் தமிழ்த்துறை ஆசிரியராக புல்மோட்டை அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் முதல் நியமனம் பெற்றார். அதன் பின் இலங்கையின் சுமார் 16க்கு மேற்பட்ட பாடசாலைகளில் உதவி ஆசிரியராகவும், தலைமை ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றியுள்ளார். இவற்றில் மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் கடமையாற்றிய காலம், கொத்தனின் கல்வி வரலாற்றில் சாதனை மிகு காலம் என்று கூறலாம். ஷம்ஸ் மத்திய கல்லூரியின் இன்றிருக்கும் எழில் தோற்றத்துக்கும், அதன் கல்வி உயர்வுக்கும் வித்திட்ட மருதூர்க் கொத்தனின் பணிகளில் சில :

1. சம்சுல் இல்ம் மகா வித்தியாலயத்தின் கல்வித் தரத்தை மேம்படுத்தியதோடு, அதன் பெயரை சம்ஸ் மத்திய கல்லூரி என்று மாற்றம் பெறச் செய்தார்.
2. அரசாங்க பொது பரீட்சைகள் இக் கல்லூரி மண்டபத் திலும் நடக்க வழி செய்தார்.
3. ஒரு மாடிக் கட்டிடத்தை மட்டும் கொண்டிருந்த இக் கல்லூரியில் பல மாடிக் கட்டிடங்கள் தோன்றச் செய்தார்.
4. சம்ஸ் ஒன்றுகூடல் மண்டபத்தை (*Assembly Hall*) நிறுவச் செய்தார்.
5. மூன்றுமாடி விஞ்ஞான கூடத்தின் முதற் கட்டிடம் முடிவுற வழிசெய்தார்.
6. சம்ஸ் சிறுவர் பூங்கா ஒன்றை நிறுவினார்.
7. கனேடிய உலக பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் உதவியுடன் பாடசாலைக் கல்வியை முடித்து வெளி யேறியோருக்காக அச்சுக் கோர்ப்புப் பயிற்சிநெறி பயிலும் நிலையம் ஒன்றை ஸ்தாபித்தார்.
8. கல்லூரியின் 35 ஆண்டு நினைவு மலரை "எழுவான்" என்ற பெயரில் வெளியிட்டார்.

மிகக் குறுகிய 5 ஆண்டுகளுக்குள் இத்தனை செயற்பாடுகளையும் புரிந்தது ஒரு வரலாற்றுச் சாதனை என்றே கூறப்படுகின்றது. (ஏ.எம்.ஏ.சமது) - மருதூர்க் கொத்தன் நினைவை வாழ்தல் 2004)

### கொத்தனின் இலக்கியச் சாதனைகளில் சில

- "மருதம்" கையெழுத்துச் சஞ்சிகையை வெளியிட்டமை.
- அதில் "சுந்தரி", "சலவைக்காரி" ஆகிய கதைகளை எழுதல்.
- ஆசிரியப் பயிற்சியை முடித்துக்கொண்டபின் 1956ல் புல்மோட்டை அ.மு.க. பாடசாலையில் ஆசிரியராய்க் கடமையேற்றல். இக் காலப் பகுதியில் அநேக நாடகங் களை எழுதி நெறிப்படுத்தி மேடையேற்றியதுடன் நடிக்கவும் செய்தல்.
- 1961ல் கல்முனை எழுத்தாளர் சங்கம் உதயமானபோது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைச்செயலாளராகச் செயற்பட்டமை. பின் செயலாளராகவும் மாறியமை. இக்காலவேளையில் நீலாவணனால் தூண்டப்பட்டு "இருள்" கதையை எழுதுதல்.

- இளங்கீரனின் "மரகதம்" என்ற சஞ்சிகைக்காக "இருள்" என்ற கதை அச்சாகியது. எனினும் மரகதம் வெளிவராமலேயே தனது காலத்தை முடித்துக் கொண்டது.
- "கருமுகில்" 1962ல் தினகரனில் வெளிவந்து அச்சில் வந்த முதல் கதை என அறிமுகமாகியது. இதே ஆண்டில் தினகரன் நடத்திய இலக்கியப் பரிசோதனைக் களத்தில் "வேலி" என்ற சிறுகதை எழுதப்பட்டது.
- இறுதியாக எழுதப்பட்ட "கவசம்" என்ற சிறுகதை மரணிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முதல் தினகரனில் வெளியாகியது.
- 150 இற்கும் மேற்பட்ட கவிதைகள் எழுதியமை.
30 இற்கும் மேற்பட்ட கட்டுரைகள் எழுதியமை.
சூட்சுமப்பத்து - 10
மோகப்பத்து - 10
பாவப்பத்து - 10
பெரியார்ப்பத்து - 10
நபிப்பத்து - 10 ஆகிய தலைப்புக்களில் 50 கவிதைகள் எழுதியமை.

- **வெளியீடுகள்**

- மருதூர்க் கொத்தன் கதைகள் - 1985ல்
- "அபூஹபீனா" என்ற புனைப் பெயரில் "காவியத் தலைவன்" என்ற கவிதைத் தொகுதி.

- **பெற்ற விருதுகள்:**

1. 1993ல் முஸ்லிம் கலாச்சார அமைச்சினால் "வாழ்வோரை வாழ்த்துவோம்" என்ற அம்சத்துள் "தாஜுல் அதீப்" (இலக்கிய வேந்தர்) என்ற விருது அளிக்கப்பட்டது.
2. 1999-05-22ல் இலங்கையில் கலைத்துறையின் மேம்பாட்டிற்கு ஆற்றிய மேலான சேவையைப் பாராட்டும் வண்ணம் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் "கலாபூஷணம்" விருது வழங்கப்பட்டது.
3. 1999-10-17ல் வடக்கு கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப்பட்ட தமிழ் இலக்கிய விழாவில் ஆளுனர் விருது வழங்கப்பட்டது.
4. 42002ல் இலங்கைக் கலைக் கழகத்தினால் தமிழ் இலக்கியத் துறையில் காத்திரமான பங்களிப்புச் செய்தமைக்காக விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள்.
5. 1999ல் தமிழ் நாட்டில் நடைபெற்ற 6வது உலக இஸ்லாமிய இலக்கிய மகாநாட்டில் ஆய்வுக் கட்டுரை படிக்க அழைப்பு விடுக்கப்பட்டதுடன் அந்த மகாநாட்டு மலரில் இவர்களுடைய கவிதையும் இடம் பெற்றது.
6. 2002ல் இலங்கையில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மகாநாட்டில் கௌரவப் பத்திரமும், விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள்.


• • •

# மலர்விழந்த வாழ்வு

மொட்டுக்கள்
பூக்க வைக்கப்படும்
காலம் ஒன்றிடம்
மலர்விழந்து
தவிக்கிறது
வாழ்வு
பூத்திருந்த
காலம் பற்றிய
நினைவுகளில்
தேனிழந்துபோன
வண்டுகளாய்
சுற்றித்திரிகிறது

மனம்
இலை உதிர்த்த
காலம்
மீண்டும்
துளிர்ப்பிழந்துபோக
வெக்கை
ஆட்சியில்
பட்டுக்
கொண்டிருக்கிறது
சோலை.

புலோலியூர் வேல்நந்தன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழகிய முன்மாதிரி

மருதூர்க் கொத்தன்,
வாப்பு மரைக்கார் முஹம்மது இஸ்மாயில்

**நாடக மாந்தர்:**
1. ஹஸ்ரத் அஹ்மத் இப்னு அஷ்காப்.
2. அவர் மனைவி இஸ்ஸத்.
3. ஷேக் இப்னு ஹஸன். (தனவந்தர்)
4. அபூ அப்துல்லா - அடுத்த வீட்டுக் காரர்.
5. சிறுவன் : ஹஸ்ரத் அஹ்மதின் மகன். (துணைப் பாத்திரம்)

வானொலி நாடகம்
நேரம் : 30 நிமிடம்

**(திமிஷ்க் நகரில் ஹஸ்ரத் அஹ்மத் இப்னு அஷ்காப் அவர்களின் இல்லம் அஹ்மத் அவர்கள் வெள்ளி நாணயங்களை எண்ணிக் கொண்டிருக்கிறார். நாணயங்கள் மீது நாணயங்கள் விழுகின்ற ஓசை சன்னமாக ஒலிக்கவேண்டும்)**

**அஹ்மத் :** தொள்ளாயிரத்துக் தொண்ணூற்றைந்து, தொண்ணூற்றாறு, தொண்ணூற்றேழு, தொண்ணூற் றெட்டு, தொண்ணூற்றொன்பது, ஆயிரம், ஆயிரத்தொன்று (உற்சாகத்துடன்) ஓ.... ஆயிரத்தொரு தினார்கள், ஆயிரத்தொரு தினார்கள். தேனீ தேன் சேர்ப்பது போல நான் சேர்ந்த வெள்ளி நிதியம் அல்லாஹ் இந்த ஏழையின் கனவை நனவாக்கிய நஹ்மானே! என் ஆன்மீகப்பசிக்கு அமுதம் வார்த்து விட்ட சர்வலோக ரட்சகனே! உனக்கு நன்றி சொல்ல எத்தனை நா வேண்டும். எனக்கு நீ தந்திருப்பதோ ஒரே ஒரு நா மாத்திரந்தானே! இஸ்ஸத் இஸ்ஸத் என் இனியவளே மகிழ்வில் கலந்து கொள்ள இல்லாமல் நீ எங்கே போய் விட்டாய்? (நாணயங்களை பையில் ஓசையெழுப்ப அள்ளிக் கட்டுதல். மனைவி வெளியிலிருந்து வருகிறாள். அவள் குரல் தூரத்திலிருந்து ஒலித்தல்)

**இஸ்ஸத் :** வெயில் உடம்பைச் சுட்டெரித்து விட்டது ம்.... ஈத்தந்தோப்பு என்ன கிட்டவா இருக்குது? தோப்புச் சுனையில் தண்ணீர் எடுப்பதற்காக நான்கு கூப்பிடு தூரத்திக்கல்லவா போக வேண்டியிருக்குது. எல்லாம் நம்முடைய தலையெழுத்து. எனது கையைக் காலை ஆற்ற ஆரிருக்கிறா? தண்ணீர் அள்ளுவதென்றால் என்ன, விறகு தேடுவதென்றால் என்ன, நானே ஆலாய்ப் பறக்க வேண்டியிருக்கிறது. பிள்ளைப் பாக்கியத்தைத் தந்த ஆண்டவன் நேரகாலத்தோடு தந்தானா?

**அஹ்மத் :** இஸ்ஸத், அல்லாஹ்வின் திருவுளத்தை அறிய மாட்டாதவள் போல் பேசுகிறாயே! யாரையும் நம்பி வாழ எவரையும் அவன் படைக்கவில்லை. அவரவர் கருமங்களை அவரவர் தான் ஆற்ற வேண்டும். எந்த ஜீவராசியாவது ஒன்றில் தங்கி ஒன்று வாழ்கிறதா? இல்லையே, அதுதான் இயற் கையின் நியதி. இறை சம்மதமும் அதுதான்.

**இஸ்ஸத் :** நீங்கள் இப்படித்தான் கூறுவீர்கள் நானோ சாதாரணமானவள், என்துன்பம் எனக்குத்தான் தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அஹ்மத் :** எதையும் துன்பமாக்கிக் கொள்வதும், இன்பமாக்கிக் கொள்வதும் அவரவர் மனப் பாங்கைப் பொறுத்தது.

**இஸ்ஸத் :** என்ன இது? ரொட்டியும் ஈத்தம்பழங்களும் வைத்தது வைத்தபடியே இருக்கின்றனவே. ஏன் இன்னும் சாப்பிடவில்லை?

**அஹ்மத் :** (மகிழ்ச்சிச் சிரிப்புடன்) இவற்றை யெல்லாம் விடப் பெரிய பேரின்ப உணவை அல்லவா அல்லாஹ் எனக்குத் தந்துவிட்டான். அந்த உணவின் ஊட்டத்தால் உளமும் உடலும் அடைந்திருக்கின்ற தெம்பைப் பார். போரானந்தப் பெருங்கடலில் செம்மாந்து கிடக்கும் என் இன்ப உணர்வில் நீயுங் கலந்து கொள்ள வேண்டாமா? முதலில் கொஞ்சம் குளிர்ந்த ஜலம் கொண்டு வா.

**இஸ்ஸத் :** (போய்க் கொண்டே பேசுவதற்கடையாளமாய் குரல் உயர்ந்து பின் தணிந்து ஒலித்தல்) அதென்ன பேரின்பமோ? பெருங்கடலோ?

**அஹ்மத் :** பேரின்பமே தான் சர்வலோக ரட்சகனின் பேரருள்மாரி என் மீது பொழிந்து விட்டது. இஸ்ஸத் பொழிந்து விட்டது.

**இஸ்ஸத் :** இந்தாங்க தண்ணீர், விபரம் சொல்லாமல் பேரின்பம் பேரின்பம் என்றால் என்ன அர்த்தம்?

**அஹ்மத் :** இஸ்லாத்தின் இறுதிக் கடமையான ஹஜ்ஜை நிறைவேற்றும் பாக்கியம் கிட்டுமா? என்ற எமது இதயதாகம் இறைவனின் உதவியால் நிறைவேறப் போகிறது. இஸ்ஸத், அல்லாஹ் வின் வீடாகிய க.:பாவைத் தரிசித்துத் தபாவு செய்கின்ற அருப்பேறு சித்திக்கப் போகிறது. அறபாவையும், மீனாவையும் முஸ்தலிப் பாவையும் மற்றுமுள்ள புனிதத் தலங்களையும் தரிசிக்கும் பாக்கியம் கிடைக்கப் போகிறது. அத்தலங்களில் வைத்து படைப்பினங்களில் எல்லாம் உயர்ந்த படைப்பான மனிதனாகப் படைத்துப் பரிபாலிக்கும் நாயனுக்கு உள்ளமுருக நன்றி செலுத்தும் நல்வாய்ப்பு நெருங்கிக் கொன்டிருக்கிறது.

**இஸ்ஸத்:** என்னைக் கரம்பிடித்த இந்த முப்பது வருடங் களாகப் பாடிக் கொண்டிருக்கிற பல்லவி தானே இது? நாமிருவரும் மக்கா சென்று இறுதிக் கடமை ஹ்ஜ்ஜை நிறைவேற்ற வேண்டுமென்று நீங்கள் சொல்லாத நாளுமுண்டா? (பெருமூச்சு) ம்.... வாய்ச் சொல்லுக்கென்ன தரித்திரியம். இஸ்லாம் மார்க்கம் தான் திட்டவட்டமாகக் கூறி விட்டதே. மடியில் கனமும் சரீர பலமும் உள்ளவர் களுக்குத்தான் ஹஜ்ஜு கடமையென்று. அன்றாட சீவனத்திற்கே திண்டாடும் நம்போன்ற பஞ்சப் பிறவிகளுக்கு இது ஒன்றும் கட்டாய மில்லை.

**அஹ்மத் :** பேஷ் ! பேஷ் ! கையிலே கனமில்லாதவரையும் ஹஜ்ஜு கடமையில்லைத்தான். இப்போது தான் நமது கையிலும் கனத்தைத் தந்து தலையிலும் சுமையைச் சுமத்தியும் விட்டானே அந்த வல்ல பெரிய நாயன் !

**இஸ்ஸத் :** (பரபரப்புடன்) புதிர் போடாமல் விஷயத்தைச் சொல்லுங்கள்.

**அஹ்மத் :** (சரசமாக) என் செல்லக்கிளியே ! என்ன ஆர்வம் ! என்ன அவசரம் ! அட, கன்னம் சூடக் கன்றிச் சிவக்கிறதே...! முகம் ஈத்தம் பழக்குலையாக மதர்க்கிறதே !

**இஸ்ஸத் :** (சிணுங்கிக் கொண்டு) போதும் சந்துக்கிலே போகிற வயதிலேயும் சரசத்துக்கு குறை வில்லை. (சற்றுக் கடுமையுடன்) எனக்கினிக் கோபம் வரும் விளையாடாமல் விஷயத்தைச் சொல்லுங்கள். இல் லையென்றால் போக விடுங்கள் எனக்கு உள்ளே வேலையிருக்கிறது.

**அஹ்மத் :** ஐய.... கோபம் வருமாமே கோபம்! (குழைந்து) அடியம்மா..! கோபித்து விடாதே.. உன் கோபத்தை இந்தக் கிழம் தாங்காது. நீ கோபித்துக் கொண்டால் என் வயிற்றுக்கு ஆபத்தாகி விடும். இதோ... இந்தப் பையைப் பிடித்து, இதிலிருக்கும் நாணயங்களை எண்ணிப் பார். ஆயிரத்தி ஒரு தினார்கள் இருக்கும்.

**இஸ்ஸத் :** என்னங்க! ஆயிரத்தியொரு தீனார்களா? நம் சீவியத்தில் ஒருதரமாவது இவ்வளவு பணத்தை நாம் எண்ணிப் பார்த்ததேயில்லையே!

**அஹ்மத் :** இப்போது எண்ணிப்பார்த்து அந்தக் குறையைத் தீர்க்க வேண்டியது தானே ம்.... எண்ணிப்பார்.

**இஸ்ஸத் :** நீங்கள் தானே சொல்லிவிட்டீர்கள்: ஆயிரத்தி யொரு தினார்களென்று பிறகு.... நான் ஏன் எண்ணிப் பார்க்க வேண்டும். உங்கள் வாயிலிருந்து என்றேனும் விளையாட்டுக்காவது பொய் வந்ததுண்டா? (குழைவாக) ஏங்க... ஏதுங்க? இவ்வளவு பணமும் எப்படிக் கிடைத்தது என்று சொல்லுங்களேன்.

**அஹ்மத் :** அல்லாவின் நாட்டமின்றி எதுதான் நடக்கும்? அவன் கருணையாற் கிடைத்த அருஞ் செல்வந்தான் இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இஸ்ஸத் :** அவனது நாட்டமிருந்தாலும் நமது தேட்டமில்லாமல் எதுவும் நடக்காது காலையும், மாலையும் எண்ணும் எழுத்தும் குர்ஆனும்,ஹதீதும், பிக்ஹும் சொல்லிக் கொடுக்கிறீர்கள். இதைத் தவிர நீங்கள் வேறெந்த வேலையும் செய்வதில்லையே! அதனால் கிடைக்கும் சில்லறைகளை வைத்துக் கொண்டு பகலுண்டால் இரவில் பட்டினி, இரவுண்டால் பகல் பட்டினி, இப்படித்தானே நம் காலங் கழிகிறது. இந்த இலட்சணத்தில்.....!

**அஹ்மத் :** முடிந்த போது... அந்தச் சில்லறைகளில் ஒன்றையோ இரண்டையோ எடுத்து ஒரு பையில் போட்டு சேமித்து வந்தேன்.

**இஸ்ஸத் :** இந்தக் குடிசையில் எனக்குத் தெரியாமல்... இப்படியொரு காரியம் நடந்து வந்ததா? ஆச்சரிய மாயிருக்கிறதே...!

**அஹ்மத் :** இஸ்ஸத் ! உன் கேள்வியில் தொக்கி நிற்கும் குத்தல் எனக்கு விளங்குகின்றது. ஒரு நல்ல குடும்பத்தில் மனைவிக்குத் தெரியாத ஒரு இரகசியம் கணவரிடம் இருக்கக் கூடாதுதான். (சோகமாக) ம்... என்ன செய்வது...? நாமோ பஞ்சப்பட்டவர்கள். பசிக்கொடுமை தாங்காது மக்கள் அழுதால்... சில்லறைகளை வைத்துக் கொண்டிருக்க எந்தத் தாயின் மனமாவது இடந்தருமா? பெற்ற மனம் பித்தென்பது பொய்யல்லவே...? அதனால்.... த்தான்.

**இஸ்ஸத் :** (விம்மிக் கொண்டு) புரியுதுங்க... ஏன் இதை இவ்வளவு ரகசியமாகச் சொன்னீர்கள் என்பது இந்தப் பேதைக்கு இப்போதுதான் புரியுதுங்க. (பெருமூச்சு) அல்லா வறுமையைத் தந்து நம்மை எப்படியெல்லாம் சோதிக்கிறான்.

**அஹ்மத் :-** இஸ்ஸத்! காரணமின்றி அவன் எதையும் செய்ய மாட்டான்.

## அங்கம் - 02

**(திமிஷ்த் நகரில் ஷேக் இப்னு ஹஸனின் வீடு)**

**அஹ்மத் :** அஸ்ஸலாமு அலைக்கும் ஷேக் சாஹிப் !!

**சேஷிக் :-** வஅலைக்கு முஸ்ஸலாம் ஹஷ்மத்துல்லாஹி வபறகாத்துஹு. அடடே! யார்? இந்த திமிஷ்க் நகரின் புகழோங்க வந்த ஞானக்கடல் ஹஸ்ரத், அஹ்மத், இப்னு, அஷ்காப் அவர்களா? வரவேண்டும்! வரவேண்டும்! தங்கத் திருப்பாதங்கள் இந்த இல்லத்தில் பட இவ்வேழை எவ்வளவோ தவம் செய்திருக்க வேண்டும். ஆ..... ஏன் நிற்கிறீர்கள்? இந்தக் கம்பளத்தில் அமருங்கள்.

**அஹ்மத் :** ஷேக் சாஹிப்! ஏன் இப்படியெல்லாம் பேசி என்னை அவமானப்படுத்துகிறீர்கள்.

**ஷேக் :** அஸ்த..பிருல்லாஹ் அவமானமா? அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். இறைவனின் திருவேதமும் றசூல்லாவின் அழகிய முன்மாதிரிகளும், உங்களைப் போன்ற இறைநேசச் செல்வர்களினாலன்றோ பாதுகாக்கப் படுகின்றன. எதிர்கால சமுதாயத்தை வழி நடாத்தவிருக்கும் மாணவச் செல்வங்களைச் சரியானபடி உருவாக்குவதற்காக, அற்பமான கூலியை மனமார ஏற்றுக் கொண்டு உழைத்துழைத்து சந்தனக் கட்டையாகத் தேய்ந்து கொண்டிருக்கும் உங்களை வெறும் வார்த்தைகளாலாவது புகழக் கூடாதா?

**அஹ்மத் :** ஒருவனை அழிப்பதற்கு வேறு எதுவும் வேண்டாம். அவனை நேருக்கு நேர் புகழ்ந்து விட்டாற் போதும். அவன் அழிந்து போவான்.

**ஷேக் :** சாதாரணமானவர்கள் விஷயத்தில் அது சரியாகவிருக்கலாம். ஆழமானவர்கள் புகழ் மொழியால் தறிகெட்டுப் போக மாட்டார்கள். உங்களை உரியபடி புகழ்வதற்கு வார்த்தைகள் இல்லையே என்று தான் நான் கவலைப் படுகிறேன். ம்.... தன்னடக்கம் பெரியவர்களுக்கு அணிகலன் எனறு சும்மாவா சொன்னார்கள் ஆ...! நிற்கிறீர்களே! அமருங்கள்! ஹஸ்ரத்!

**அஹ்மத் :** ஆ....! என்ன இது? விடுங்கள் தோழா. நான் அமருகிறேன்.

**ஷேக் :** ஒரு வார்த்தை சொல்லியனுப்பியிருந்தால் நானே உங்கள் காலடிக்கு வந்திருக்க மாட்டேனா?

**அஹ்மத் :** (சிரிப்பு) இதென்ன பேச்சு என் உடம்பிலே தெம்பும் திராணியும் இருக்கும் வரைக்கும் என் கருமங்களுக்காக நானே நடந்து செல்லக் கடமைப்பட்டவன்.

**ஷேக் :** (ஆவலுடன்) அவ்வளவுக்கு முக்கியமான கருமமென்ன ஹஸ்ரத்?

**அஹ்மத் :** முக்கியமில்லாமலா உங்களைத் தேடி வந்தேன். இம்முறை ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்று வதற்காக மக்கா செல்லலாமென்றிருக்கிறேன்.

**ஷேக் :** (ஆச்சரியமாக) என்ன? ஹஜ்ஜுக்கா? மக்காவுக்கு நீங்கள் போகவா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அஹ்மத் :** ஏன்? நான் மக்காவுக்குப் போகக்கூடாதா? ஹஜ்ஜுச் செய்யக் கூடாதா?

**ஷேக் :** (பதற்றத்துடன்) ஆ.....ய்!! அந்தக் கருத்தில் நான் சொல்லவில்லை. கடும் செலவாகுமே? அதுதான் பார்த்தேன். தயவு செய்து தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள்.

**அஹ்மத் :** நீங்கள் ஆச்சரியமடைந்ததில் நிரம்பவும் நியாயமிருக்கிறது. எனவே அதை நான் தப்பாக எடுத்துக் கொள்ளமாட்டேன். மக்காவுக்குப் போய் வர உத்தேவமாக எவ்வளவு செலவாகும் ஷேக்?

**ஷேக் :** ம்.... இம்முறை... நமது ஷாம் தேசம் போலவே அரவு நாடும் கடும் வரட்சியால் பாதிக்கப் பட்டிருப்பதாகவும் அதனால் இங்கு போலவே அங்கும் தானிய விளைச்சல் தடைப் பட்டிருப்பதாகவும் தகவல் கிடைத்திருக்கிறது. மிஸ்றிலும் யூனானிலும் இருந்துதான் அங்கும் தானியம் வர வேண்டியிருக்கிறதாம். விலைவாசியும் இங்கு போல்தான் அங்கும் இரட்டை மடங்காம் இனி ஹஜ்ஜுக் காலமென்றால் கேட்கவா வேண்டும்? விலை எக்கச் சக்கமாக இருக்கும்.

**அஹ்மத் :** உத்தேசமாக ஒருவருக்கு எவ்வளவு செலவேற் படலாம்?

**ஷேக் :** ஐந்து.... ம்... ஆயிரந்தீனார்! ஓம் ஆயிரந்தி னாருக்கு மேலே தான் பிடிக்கும் ஆயிரம் இருந்தால் ஒருவாறு சமாளிக்கலாம்.

**அஹ்மத் :** பலவருடங்களாகச் சிறுகச் சிறுகச் சேமித்த வகையில் ஆயிரந் தினார்கள் தேறியுள்ளன. நீண்ட நாளைய ஹாஜத், நானும் மனைவி யுமாகச் செல்ல வேண்டுமென்று தான் கனவு கண்டு கொண்டிருந்தோம் ம்.. என்ன செய்வது? இன்ஷா அல்லாஹ் அல்லா நாடாமலா விடப் போகிறான். பொறுத்ததோடு இன்னும் சில வருடங்கள் பொறுத்திருக்க வேண்டியது தான் நம்பினார் கெடுவதில்லை.

**ஷேக் :** ஆங்ஹா, ஹஸ்ரத், அந்த முடிவிற்கு வராதீர்கள், உங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால் நான் வேண்டிய எல்லா உதவிகளையும் செய்கிறேன். இந்த வருடம் நீங்கள் இருவருமே போய் வாருங்கள்.

**அஹ்மத் :** உங்கள் நல்லெண்ணத்துக்கு என் நன்றி உங்கள் உதவியை நான் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

**ஷேக் :** இப்படிச் சொல்லி விட்டீர்களே ஹஸ்ரத் கிடைத்த வாய்ப்பை வீணாக்காது இம்முறை நீங்களாவது போய் வாருங்கள் வேறெந்த வகையில் நான் உங்களுக்குதவலாம்?

**அஹ்மத் :-** சரி உங்கள் யோசனைப்படியே செய்வோம். நான் தனியாளாவே போகிறேன் நீங்கள் எனக் கொரு ஒட்டகத்தைத் தந்துதவ வேண்டும். இதற்குரிய நியாயமான வாடகையைத் தந்து விடுவேன். அத்தோடு இம்முறை யார் யார் இங்கிருந்து போகிறார்கள் என்ற விபரத்தையும் தந்தால் உதவியாக விருக்கும்.

**ஷேக் :** அதற்கென்ன, செய்தாற் போகிறது. ஏற்கனவே நூற்றுக்கு மேற்பட்டவர்கள் என்னிடம் ஒட்டகைக்கு ஏற்பாடு செய்து விட்டார்கள். அவர்களோடு நீங்களும் போகலாம். திமிஷ்க்கிலிருந்து மக்காவுக்கான கரவன் பாதையில் நன்கு பழக்கப்பட்ட ஒட்டகம் ஒன்றைத் தருகிறேன். சரிதானே? ஆனால்... எனக்கு நீங்கள் ஒரு உதவி செய்தாக வேண்டும். செய்வீர்களா?

**அஹ்மத் :** நான் உங்களுக்குதவுவதா? நீங்கள் எதிர்பார்க்கும் உதவி என்னுடைய சக்திக்குட்பட்டதென்றால்.... (உற்சாகமாக) செய்வீர்கள் இப்போதும் எனக்கு உங்களால் இலகுவாகச் செய்யக் கூடியது தான் அது என்னுடைய ஒட்டகைக்கு வாடகை எதுவும் நீங்கள் தரக்கூடாது. தந்தாலும் நான் அதை வாங்க மாட்டேன் இதுதான் அந்த உதவி.

**அஹ்மத் :-** அப்படியா சங்கதி? உங்களது ஒட்டகையைப் பெற்றுக் கொள்ள நானுந் தயாரில்லை. நான் வருகிறேன்.

**ஷேக் :** ஹஸ்ரத் நில்லுங்கள் போகாதீர்கள்! தயவு செய்து நில்லுங்கள்!

**அஹ்மத் :** (சற்றுத் தொலைவிலிருந்து குரல் வருதல்) நிற்கிறேன் நின்று ஆகப் போவது என்ன?

**ஷேக் :** சரியான பிடிவாதக்காரர்கள் தான் நீங்கள் சரி உங்கள் விருப்பப்படியே வாடகையைத் தந்து விடுங்கள் சந்தோசந்தானே.

**அஹ்மத் :** (குரல் அண்மையில்) மாஷா அல்லாஹ் ரொம்ப சந்தோஷம்.

**இருவரும் :** (மகிழ்ந்து பலமாகச் சிரித்தல்).



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அங்கம் - 03

(ஹஸ்ரத் அஹ்மத் அவர்களின் வீடு, மனைவியும் அவரும் உரையாடுதல்).

**அஹ்மத் :** திமிஷ்க்கிலிருந்து இம்முறை அதிகம் பேர் ஹஜ்ஜுக்குப் போகின்றனர் அதனால் ஒட்டகை பிடிப்பது பெரும்பாடாகி விட்டது. பலரைப் போய்ச் சந்திக்க வேண்டியதாயிற்று கால் நடையாகவே.

**இஸ்ஸத் :** (பதறிக் கொண்டு) கால் நடையாகவா? ஐயையோ! என்னால் முடியாது உங்கள் உடம்பும் அதைத் தாங்காது வழியில் ஏதும் நேர்ந்து விட்டால் பிள்ளைகளின் கதி என்னாவதகும்.?

**அஹ்மத் :** படைத்தவன் இருக்கிறான் ஆனாலும்....! பதறாதே கால் நடையாகப் பிரயாணம் செய்வதற்குரிய காலங் கடந்து விட்டது. ஏலவே தொடங்காதது மடத்தனமாகப் போய் விட்டது. அல்லாஹ்வின் உதவி யால் ஒரு ஒட்டகத்துக்கு ஏற்பாடு செய்து விட்டேன்.

**இஸ்ஸத் :** இப்பொழுது தான் என் நெஞ்சுக்கு ஆறுதலாக இருக்கிறது.

**அஹ்மத் :** இஸ்ஸத் ! இம்முறை அரேபியாவிலும் கடும் பஞ்சமாம். விலைவாசி செலவினங்களும் இரட்டை மடங்காகி விட்டதாம். நம்மிடமிருந்து தினார்களும் ஒருவருடைய செலவுக்கே போதுமானதாக இல்லை.... அதனால்....!

**இஸ்ஸத் :-** அதனால்.......?

**அஹ்மத் :** இம்முறை நான் மாத்திரமே போகலாமென முடிவு செய்து விட்டேன்.

**இஸ்ஸத் :** (வெறுப்பாக) முடிவு செய்தாகி விட்டதல்லவா? பிறகேன் எனில் இன்னொரு முறையாம் இன்னொரு முறை இவ்வளவிற்குமே எத்தனை வருஷங்கள்...! இன்னொரு முறை நமக்கு வரப்போகிறது?

**அஹ்மத் :** ஆம்! வர வெகு காலமெடுக்கலாம்.....!

**இஸ்ஸத் :** அப்ப மௌத்திலா? என்னவென்றாலும் ஆண்கள் சுய நலக்காரர்கள்.

**அஹ்மத் :** (வருத்தத்துடன்) எனது இந்த சுயநலத்ததை அங்கிகரிக்க உமக்கு மனமில்லையா! இஸ்ஸாத்?

**இஸ்ஸாத் :** (பதறிக்கொண்டு) ஆ....! இதென்ன பேச்சு? இன்னொருதரம் இக்கதையைக் கேட்காதீர்கள். (விம்மியழுதல்) இந்தாங்க என் தகாத வார்த் தைக்கு அல்லாவுக்காக மனம் பொறுத்துக்குங்க. (விம்மல்) ஏங்க ! இந்த இம்முறை நீங்களே போயிற்று, வாங்க நீங்க எனக்காக பிரார்த்திக்கப் போகிறீங்க. ஆகவே நீங்க போனா நான் போனமாதிரி தானே? இல்லியா?

**அஹ்மத் :** அல்லாஹ் வறுமையைத் தந்து நம்மை இப்படியெல்லாம் சோதிக்கிறார் இஸ்ஸத், என் இனியவளே ஒரு மனிதனுக்கு இப்படியல் லவா வாய்க்க வேண்டும்...! இப்படியல்லலவா வாழ்க்கைத் துணை வாய்க்க வேண்டும்.

**இஸ்ஸத் :** (அணுகிக் கொண்டு) போங்கள் எப்போதும் இதே பல்லவி தான்.

**அஹ்மத் :** பாடவேண்டிய பல்லவி தானே எங்கே உன் சம்மதத்துக்கறிகுறியாக ஒரு தரம் சிரி பார்ப்போம்.

**இஸ்ஸத் :-** போங்க......!

**அஹ்மத் :-** ம்.....!

**இருவரும்:** (சிரித்தல்)

**அஹ்மத் :** ஷேக் இப்னா ஹஸன் அவரது செலவில் உன்னையும் அழைத்துச் செல்லுமாறு கேட்டுக் கொண்டாங்க.

**இஸ்ஸத் :** அதற்கு நீங்க உடன்பட்டிருக்க மாட்டீங்க உடன் பட்டிருக்கவும் கூடாது.

**அஹ்மத் :** ஆமாம்! அது மட்டுமல்ல... வாடகையில்லாமல் ஒட்டகையைத் தரவும் முன் வந்தார் அந்த நல்ல மனிதர்.

**இஸ்ஸத் :** அதையும் மறுத்து விட்டீர்கள் என்னை அவர் செலவில் அனுப்புவது என்பதை மறுத்தது முற்றுஞ் சரியே. ஒட்டகை விஷயத்தை....!

**அஹ்மத் :** (கடுமையுடன்) நான் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டுமென்ன?

**இஸ்ஸத் :** (கூடிய தொனியில்) ஏற்றுக் கொண்டிருந்தால்... என்ன? செலவில் சிறிது மிச்சமாகும் குழந்தை களின் எதிர்காலத்திற்காக சேமித்து வைக்கலாம்!

**அஹ்மத் :** (ஏளனச் சிரிப்பு) அடி பேதைப் பெண்ணே! என்ன அற்பமான புத்தி உனக்கு. நம் குழந்தை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

களின் எதிர் காலத்திற்கு உத்தரவாதம், இந்த நாணயங்களல்ல. அல்லாஹ்வின் கருனை ஒன்றுதான் அனைவருக்கும் உத்தரவாதம்.

**இஸ்ஸத் :** அல்லாஹ்வை நம்புங்கள் ஒட்டகத்தையும் கட்டி வையுங்கள், என்று எம் பெருமானாரும் கூறியுள்ளாாகள் நாம் ஏதும் சேமிக்காத வரையில் நம் பிள்ளைகளின் எதிர்காலம் சிறக்காது.

**அஹ்மத் :** (அலட்சியமாக) சேமிக்காத வரையில் (சிரிப்பு) சேமிக்கத்தான் வேண்டும். அது தான் முக்கிய காரியமாக இல்லையே! அவன் நாடினால் பார்ப்போம். அவனையே நம்புவோம். அல்லாஹ் என்னை எப்போதுமே என் சொந்தக் காலிலேயே நிற்க விடு.

(மகன் சிறியவன் அழுது கொண்டு வருதல் இஸ்ஸத் பதறிப் போகிறாள். சிறுவனின் அழுகையும் விசும்பலும் தொடர்கிறது)

**இஸ்ஸத் :-** என் ராசா! என் செல்லமே! என் கண்ணு! உனக்கென்னடா நடந்தது? ஆ....! இங்க பாருங்க பிள்ளையின் கண்கள் சிவந்து முகம் வீங்கி...! ஐயோ...! என் பிள்ளைக்கு என்ன நடந்தது? உன்னை யார் அடித்தார்கள்? அவர்களது கை நாசமாப் போக.!

**சிறுவன் :-** அது.... வந்து.... வந்து.... எனக்கு... எனக்கு (விம்மலும் அழுகையும் தொடர்தல்)

**இஸ்ஸத் :** சொல்லு மகனே. என் தங்கமே! யார் என்ன செய்தார்கள்? அல்லாஹ் இந்தப் பச்சப் பாலகனை இப்படி ஆக்கினை பண்ணியிருக்கிறார்களே. இந்தாங்க! நீங்க கல்லாக நிக்கிறீங்களே! குழந்தைக்கிட்ட என்னெண்டு கேளுங்க.. என் பெத்த வயிறு பத்தியெரியுது.

**அஹ்மத் :** மகன் என்ன நடந்தது? ராசாயில்ல... அழாமச் சொல்லுங்க.

**சிறுவன்:** அது வந்து அடுத்த வீட்டுக் காரங்க... வந்து... இறைச்சி.. இறைச்சி... ஆக்கிக் கும்பமா... வைச்சிச் சாப்பிடறாங்க. அது... (விம்மல் அழுகை)

**இஸ்ஸத் :** சொல்லுடா ராசா. உனக்கு ஆரு அடிச்சாங்க? அவர்கள் நாசமாப் போக அவர்களுடைய கை அழுகிப் போக.

**அஹ்மத் :** (கடுமையாக) பேசாமலிரு நீயும் உன்வாயும் சொல்லுங்க மகன் நடந்ததைச் சொல்லுங்க.

**சிறுவன் :-** நான் பாத்துக்கிட்டு நிண்டன்.. எனக்கு.. எனக்கு.. அவங்க... இறைச்சி... தரல்ல (அழுகை).

**இஸ்ஸத் :-** (ஆத்திரமாக) என்ன! படுபாவிகளே! வாய் பார்த்த சிறுவனுக்கு ஒரு துண்டு மாமிசம் கொடுக்க மனமில்லாத கல் நெஞ்சர்களா நீங்கள்? நீங்களும் மனிதர்களா? இஸ்ஸத்! இப்படிப்பட்ட கல் நெஞ்சாகள் நம்மயலில் குடியிருக்கிறார்களே! ஐயோ! இவர்களுக் கயலில் நாம் குடியிருக்கிறோமே! இருங்கள் அந்த அற்பங்களைப் போய் விசாரித்து விட்டு வருகிறேன்.

## அங்கம் - 04

**இடம்:** அயல் வீடு வீட்டுக்காரர் அபூ அப்துல்லாவும் ஹஸ்ரத் அஹ்மத் இப்னு அஷ்காபும் உரையாடுதல்)

**அஹ்மத் :** (ஆத்திரமும் கிண்டலும் கலந்த தொனியில்) ஓ.....! போசணம் முடிந்து விட்டதோ.....? அடித்தொண்டை வரை அள்ளி விழுங்கிய ஆயாசம் தீர்க்கப்படுகின்றதோ! ரொம்ப அழகு...! ரொம்ப அழகு!

**அபூ :-** (மரியாதையும் ஆச்சரியமும் கலந்த தொனியில்) யார்? ஹஸ்ரத் அஹ்மத் இப்னு அஷ்காப் அவர்களா? ஹஸ்ரத்! என்ன இந்த அதியா, குதியா வேளையில்? சேதி அனுப்பியிருந்தால் நானே உங்கள் காலடிக்கு வந்திருப்பேன் ! வாருங்கள் ஹஸ்ரத் வந்து அமருங்கள். ஆ....! இருக்கும் தடுக்கில் அழுக்கு இந்த வீட்டில் யார் இருக்கிறார்கள் இதையெல்லாம் கவனிக் இருக்கிற ஓரிரு பொருட்களையாவது சுத்தமாக வைத்திருக்க முடியாத முண்டங்கள் பிள்ளை! இந்த ஈத்தும் தருக்கை சுத்தப்படுத்து! உம்! விரைவாக!

**அஹ்மத் :** இங்கே அமர்ந்திருந்து உல்லாசப் பொழுது போக்க நான் வரவில்லை.

**அபூ :** ஹஸ்ரத் ஆத்திரமாக இருக்கிறீர்களே? நீங்கள் இப்படி ஆத்திரப்பட்டதை நான் ஒரு நாளும் கண்டதில்லையே!

**அஹ்மத் :** இப்போது காண்கிறீர்தானே.. ஆத்திரம் மாத்திரமல்ல அடங்காத சினமும் கொண்டிருக்கிறேன். இதற்குக் காரணம் யார் தெரியுமா?

**அபூ :** யார் காரணம்? ஹஸ்ரத் என்ன பேசுகிறீர்கள்?

**அஹ்மத் :** காரண கர்த்தா நீர் தான்.

**அபூ :** ஹஸ்ரத் அவர்களே! ஆத்திரம் உங்கள் அறிவை மயக்குகின்றது உங்களது தகுதிக்கும் பெருமைக்கும் அப்பாற் செல்கின்றீர்கள். ஏற்கனவே புண்ணாகிப் போயிருக்கும் என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சில் வார்த்தை என்னும் நெருப்பு தணலை அள்ளிக் கொட்டாதீர்கள் அதோ! அந்தப் பாயில்! உயிர் இருந்தும் பிணமாகக் கிடக் கின்ற இந்த உருவத்தைப் பாருங்கள். உயிருள்ள அந்த எலும்புக்கூடு மாதக்கணக்காக உயிருக்காகப் போராடிக் கொண்டேயிருக்கிறது அது வேறு எதுவுமல்ல. என் மனைவியின் சடலந்தான். உள்ளது உரியது எல்லாம் செலவு செய்தாயிற்று இனி மேல் விற்பதற்கு இவ்வீட்டில் ஒரு சட்டிதானும் கிடையாது. அவளது நோயைத் தவிர, அது தந்த கொடிய வறுமையைத் தவிர எங்களிடம் வேறு எதவுமேயில்லை. நானும் என் குழந்தை குட்டிகளும் நாட்கணக்காக ஏன் வாரக் கணக்காக பட்டினி கிடந்திருக்கிறோம்.

**அஹ்மத் :** உமக்கு ஏற்பட்டிருக்கிற இன்னலுக்காக உண்மையிலேயே வருந்துகின்றேன். வாரக் கணக்கில் பட்டினி கிடந்த பிறகு: இன்று ஏதோ கிடைத்து அதைச் சமைத்து உண்டிருக் கிறீர்தானே? அந்த உணவில் ஒரு பிடியை வாய் பார்த்து பெருமூச்சு விட்ட சிறுவனுக்குக் கொடுக்க உமக்கு மனம் வரவில்லையே? என்ன நியாயத்தாலும் இத் தவறை நீர் சரியாக்க முடியாது.

**அபூ :** ஆமாம்! இன்று நாங்கள் உண்டோம் அதுவும் மாமிசம் உண்டோம் வயிறு இனிக் கொள்ளாது என்ற வரைக்கும் உண்டோம். இது உண்மை இதற்கு மேலும் உண்ண முடியவில்லையே, நமது ஒட்டகங்களைப் போல் இன்னும் பல நாட்களுக்குப் போதுமான மட்டிற்கு உண்டு நிரப்பிக்கொள்ள முடியவில்லையே, என்று தான் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். இதுவும் உண்மை.

**அஹ்மத் :** (ஆவேசமாக) இவ்வளவு உண்ட நீர் சூப்பிக் கழித்த ஒரு எலும்புத் துண்டைக் தானும் ஏன் அந்தச் சிறுவனுக்குக் கொடுக்கவில்லை?

**அபூ :** (உருக்கமாக) ஹஸ்ரத் அவர்களே! இறை நேசச் செம்மலே! நான் ஒரு முஸ்லிம் தான் வள்ளல் நபியின் வழியை வாஞ்சையோடு பின்பற்றுகிறவன் தான் வாய்பார்த்த குழந்தைக்கு ஒரு துண்டு இறைச்சியை எடுத்துக் கொடுக்க முடியாத கயவனில்லை நான் இருந்தும் அச் சந்தர்ப்பத்தில் என் மனதைக் கல்லாக் கிக் கொண்டேன். கடிய பாறையாக்கிக் கொண்டேன். நான் காரணமா? அஸ்தஹ் பிருல்லாஹ்......! என்ன இது? என்ன வாதம்?

**அஹ்மத் :** பேஷ்! பேஷ்! நல்ல நடிப்பு....! நல்ல நடிப்பு...! நல்ல நடிப்பு...! (பெருமூச்சுவிட்டு ஆசுவாசம்)

நண்பரே காக்கை குருவிகளை நீர் பார்த்ததில் லையா? கிடைத்த சிறு உணவையும் இனத்தோடு பங்கிட்டு அவை உண்ணுகின்ற அழகை நீர் நோக்கியதில்லையா? மாமிசம் சமைத்து வயிறுநிறைய உண்டீராமே? வாய் பார்த்து நின்று ஏங்கிய சிறுவனுக்கு ஒரு துண்டைக் கொடுக்க மனமில்லாது போய் விட்டதே. ஒரு சிறுவனின் ஹம்மாறாவைத் தூண்டி விட்டு அவனை வேதனைப்பட வைத்த நீர் ஒரு மனிதர்தானா? சொல் அபூ அப்துல்லா, சொல்!!

**அபூ :** ஹஸ்ரத் நீங்கள் விபரமறிந்தால் இப்படி பேச மாட்டீர்கள்.

**அஹ்மத் :** வெள்ளையுள்ளம் படைத்த பச்சிளம் பாலகனின் வாக்கு மூலத்தை விட வேறு என்ன விபரம் வேண்டியிருக்கிறது? ஈந்து தரம் சிவந்த ஏந்தல் நபியின் உம்மத்துகள் செய்யக் கூடிய கருமமா இது? யா அல்லாஹ் வாய் பார்த்து பெருமூச்சு விட்ட குழந்தைக்கு ஒரு கவளம் கொருக்க மனமில்லாத ஈனர்களுக்குப் பக்கத்திலே என்னைக் குடியிருக்க வைத்து விட்டாயே! நான் என்ன பாவம் செய்தேன்? நான் என்ன பாவம் செய்தேன்? ஓ.....! என் அயலவரே நீர் ஒரு மனிதரா? இல்லை மனிதப் பதர்! மனிதப் பதர்!

**அபூ :** (ஏளனச் சிரிப்பு) வறுமை! வறுமை! வறுமை யின் தலையில் பழியைப் போட்டு உன் பக்கீர் தனத்தை மறைக்க முயலாதீர் மூன்று நாட்கள் பட்டினி நோன்பு நோற்ற நிலையில், நோன்பு திறக்க பின் உண்பதற்காக வைத் திருந்த ரொட்டிகளை, பசியென்று வந்தவனுக்குப் புசிக்கக் கொடுத்து விட்டு பச்சைத் தண்ணீரால் நோன்பு துறந்த பாத்திமா நாயகியின் வரலாற்றை நீர் படிக்கவில்லையா? இஸ்லாத் தின் ஓ வியமாகத் திகழ்ந்த அந்த உத்தமியின் வழி வந்தவனல்லவா நீ? வறுமையாம் வறுமை ஓ....!

**அபூ :** அதைத் தவிர எனக்கு வேறு வழியிருக்க வில்லை! வேறு வழியிருக்கவில்லை! (அழுகை)

**அக்மத் :** (சற்றுத் தணிந்து) நண்பரே! ஏன் அழுகிறீர்? அழாமல் விஷயத்தைச் சொல்லும்

**அபூ :** சொல்ல முடியவில்லையே ஹஸ்ரத் சொல்ல நா கூசுகிறது வேண்டாம்....! வேண்டாம்.....! எனது சிறுமை என்னோடு அமையட்டும். நீங்கள் போய் விடுங்கள் தயவு செய்து போய் விடுங்கள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**அஹ்மத் :** (சற்றுக் கடுமையாக) என்ன நாடகமாடுகிறீர். உமது செயலுக்குரிய கூலியை இறைவனி டமிருந்து பெற்றுக் கொள்ளத்தான் போகிறீர் நான் வருகிறேன்.

**அபூ :** நில்லுங்கள்! போக வேண்டாம்! சொல்லி விடுகிறேன். அதைக் கேட்டு விட்டுப் போங்கள். நாங்கள் உண்ட மாமிசம் உங்கள் மகனுக்குக் கொடுக்க முடியாது! விலக்கப்பட்டது! ஹறாமானது.

**அஹ்மத் :** (சிரிப்பு) என் மகனுக்கு ஹறாமானது. உமக்கு மாத்திரம் எவ்வாற ஹலால... முடியும்?

**அபூ :** நீங்கள் வழக்கத்திற்கு மாறாக ஆத்திரப் படுகிறீர்கள் ஆத்திரம் உங்கள் அறிவை மயக்குகிறது. செத்த ஆட்டின் பிணமொன்று குப்பை மேட்டில் கிடந்தது. இறைவனின் திருவுளம் அது என் கண்ணிற் பட்டது எங்களது நற்காலம் போலும், நாய், நரி, காக்கை கண்ணிற் படவில்லை. அதைக் கொண்டு வந்து அதன் மாமிசத்தை உப்பூற்றி வேக வைத்து எங்கள் பசியைத் தீர்த்துக் கொண்டோம். ஹலாலான ஒரு பிடி உணவுக்குத் தானும் வக்கில்லாத நிலையில் பட்டினிக் கொடுமையால் துடிதுடிக்கும் என் பிள்ளைகளின் பரிதாபத்தை சகிக்க முடியாமல் செய்யத் தகாத இக் காரியத்தை நான் செய்தேன். (அழுகை) இப்போது சொல் லுங்கள், ஹஸ்ரத்! அந்த மாமிசத்தை உங்கள் பிள்ளைக்குக் கொடுத்து நான் பாவியாக வேண்டுமா? சொல்லுங்கள்.

**அஹ்மத் :** ஓ....! இறைவா! அது என்ன கொடுமை? இது என்ன சோதனையா? யா அல்லாஹ்....! இதுவும் உன் திருவுளமோ? ஓ....! என் இனிய நண்பனே என்னை மன்னித்து விடும், விபரம் புரியாத நிலையில் ஆத்திரத்தில் அறிவிழந்து உம் மனதைப் புண்ணாக்கி விட்டேன். நண்பரே! என்னை மன்னித்து விடும், பேசத் தகாத விதமாகப் பேசி விட்ட என்னை மன்னித்து விடும்.

**அபூ :** (நா தழுதழுக்க) மன்னிக்குமளவுக்கு நீங்கள் எனக்கு ஒன்றும் செய்து விட வில்லையே?

**அஹ்மத் :** தீர விசாரியாமல் உம்மைத் திட்டினேன் அல்லவா? அது குற்றமில்லாமல் வேறென்ன?

**அபூ :** அதைக் குற்றமாக நான் கொள்ளவில்லையே ஆனாலும் உங்கள் திருப்திக்காக உங்கள் விருப்பப் படி உங்களை மன்னிக்கிறேன்.

**அஹ்மத் :** நன்றி நண்பரே! நன்றி யா........! அல்லாஹ் நீ என்னை மன்னிப்பாயா எனது அண்டை வீட்டில் நடந்த இந்த அனர்த்தங்களை அறியாத பாவியாக நான் அயலில் இருந்திருக் கிறேனே! உமது தூதரின் திரு வசனங்களுக்கும் அழகிய முன் மாதிரிகளுக்கும் மாறாக அண்டை யிலிருந்து உண்டு சுகித்திருக்கிறேனே!

## அங்கம் - 05

**(அஹ்மத் பின் அஷ்காபின் வீடு அஹமத் அவர்களும் அவரின் மனைவியும் உரையாடிக் கொண்டிருக்கின்றனர்)**

**அஹ்மத் :** (விம்மி விம்மி அழுது கொண்டிருக்கின்றார்) காலன் நபிய்யு ஸல்லல்லாஹ் அலைஹிவஸ ல்லம், அல்தாறு கல்லத்தாற்....! அல்தாறு கல்லத்தாற்.....! அல்தாறு கல்லத்தாற்....! (அழுகை)

**இஸ்ஸத் :** என்னங்க இது? அயல் வீட்டிலிருந்து வந்த நேரத்திலிருந்து அழுது கொண்டே இருக்கிறீர்கள்? ஏதேதோ புலம்பிக் கொண்டே இருக்கிறீகள் என்ன நடந்தது?

**அஹ்மத் :** இங்கிருந்து போன போது எவ்வளவு ஆத்திரத்தோடும் ஆக்ரோஷத்துடனும் போனேன். அந்த மனிதனை வார்த்தைகளால் கழுந்தேன்...! ஐயையோ.....! என்ன கொடுமை...! வாழ்க்கை கொடிது...! வறுமை மிகக் கொடிது...! யா அல்லாஹ்! உன் அடியாரை இதற்கு மேலும் சோதிக்காதே எங்களால் எந்தச் சுமையைத் தாங்க முடியாதோ? அந்தச் சுமையை எங்கள் மீது சுமத்தாதே!

**இஸ்ஸத் :** அர்த்தமில்லாமல் புலம்பாமல் விஷயத்தை என்னவென்று சொல்லுங்கள்..?

**அஹ்மத் :** என்ன சொன்னாய்? அர்த்தமில்லாமல் புலம்புகிறேனா? (வேதனைச் சிரிப்பு) அர்த்தத் தோடு தான் புலம்புகிறேன். இஸ்ஸத்! அர்த்தத்தோடு தான் புலம்புகிறேன். அல்தாறு கல்லத்தார் உன் வீட்டைக் கவனிப் பதற்கு முன் அடுத்த வீட்டைக் கவனி என்பது பெருமானாரின் திருவாக்கு நம் அடுத்த வீட்டில் என்ன நடக்கிறதென்பதைத் தெரியாமல் நாம் நடந்திருக்கிறோம்.

**இஸ்ஸத் :** நமது கஷ்டங்களும் நமக்கிருக்கின்ற சுமைகளும் கொஞ்ச நஞ்சமா? பகலுண்டால் இரவில்லை. இரவுண்டால் பகலில்லை, என்று அல்லல் பட்டுக் கொண்டிருக்கின்ற நமது லட்சணத்தில் அடுத்த வீட்டை நாம் எப்படிக் கவனிப்பது?

**அஹ்மத் :** நாளுக்கொரு வேளையாவது ஏதோ உண்டு கொண்டிருக்கிறோமே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இஸ்ஸத் :** ஏங்க? அதுவும் செய்யக் கூடாது என்கிறீர்களா?

**அஹ்மத் :** அடி மடைச்சி! என்ன உன் பேச்சு? இதோ நான் சொல்வதைக் கவனி அவர்கள் உண்ட மா மிசத்தை உன் மகனுக்குக் கொடுக்க வில்லையென்று தானே அவர் இங்கு வந்து முறையிட்டான்....?

**இஸ்ஸத் :** ஆமாம் ...! அவர்கள் கல் நெஞ்சுக்காரர்கள்.

**அஹ்மத் :** பொறு கண்ணால் காண்பதும் பொய். காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய். நீயும் நானும் நம் மகனும் நினைத்தது போல அவர்கள் உண்டது மாமிசமல்ல.

**இஸ்ஸத் :** பின்ன என்ன?

**அஹ்மத் :-** பின்ன என்ன? (விரக்திச் சிரிப்பு) பிணத்தைத் தின்றார்கள், இஸ்ஸத், பிணத்தை தின்றார்கள் செத்துப் போன ஆட்டின் பிணத்தை உப்பிட்டு அவித்து உண்டிருக்கிறார்கள்.

**இஸ்ஸத் :** (ஓங்காளம் எடுத்தல்)

**அஹ்மத் :** பார்...! கேட்டதுமே உனக்கு ஓங்காளம் எடுக்கிறது...........!!!

**இஸ்ஸத் :** (ஓங்களித்தல்) ஐயோ, குடலைப் புரட்டிக் கொண்டு வருகிறது.

**அஹ்மத் :** நம் பிள்ளைக்கு ஏன் அவர்கள் கொடுக்கவில்லை என்பது இப்போது புரிகின்றதா?

**இஸ்ஸத் :** அவர்களுக்கு என்ன கேடு வந்தது? ஏனிந்த ஹறாமான காரியத்தைச் செய்ய வேண்டும்?

**அஹ்மத் :** அதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியிருக் கவில்லை. அவ் வீட்டுக்காரி மாதக் கணக்காக நோய்ப் பட்டுக் கிடக்கிறாள். உள்ளது உரியதையெல்லாம் செலவழித்து விட்டார்கள். தொழிலில்லை. வறுமையின் எல்லைக் கோட்டிற்குப் போய் விட்டார்கள்.

**இஸ்ஸத் :** எவரிடமாவது உதவி கேட்டிருக்கலாமே கடன் தனிசு பட்டிருக்கலாமே!

**அஹ்மத் :** விடு உன் விழல் வாதத்தை அவர்கள் பிறரிடம் உதவி கேட்கவில்லை. கடன் பட வில்லை, என்ற முடிவுக்கு நாம் எப்படி வரமுடியும்? கடன் படுவதற்கும் ஓர் எல்லையிருக்குமல்லவா? வாங்கிய கடனே தலைக்கு மேல் என்றால் பட்ட கடனை அடைக்க வழியில்லாமல் போனால் எந்த மடையன் மேலும் கடன் கொடுப்பான்?

**இஸ்ஸத் :** (சலசலப்புடன்) ஐயோ! என்ன பரிதாபம் இது? யா அல்லாஹ்! என்ன கொடுமை இது....?

**அஹ்மத் :** (நிதானமான உறுதியான குரலில்) இஸ்ஸத் நானிப்போது ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். என் மனமறிந்து நடக்கின்ற இனியவளே. என் வாழ்வு தாழ்வுகளையெல்லாம் சமபங்கு கொள்கின்ற உற்ற துணைவியே! எனது இந்த முடிவுக்கு நீ ஒத்துப் போக வேண்டும் செய்வாயா?

**இஸ்ஸத் :** என்ன கேள்வியிது? முடிந்த வரை ஒத்துப் போகிறேன்.

**அஹ்மத் :** இஸ்ஸத்! நம்மிடமிருக்கும் தினார்களை நமது அண்டை வீட்டாருக்கு அன்பளிப்புச் செய்து விடத் தீர்மானித்து விட்டேன்.

**இஸ்ஸத் :** ஆ.....! வேண்டாம்! வேண்டவே வேண்டாம்! வருடக் கணக்காகச் சேமித்த பணத்தை ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்கென்று சேகரித்த பணம் அதைப் போய்......?

இறுதிக் கடனை நிறைவேற்றும் வாய்ப்பு..! இந்த நற்பேறுக்காக நாம் வருடக் கணக்காக ஏங் கிக் கிடந்திருக்கிறோம்.

**அஹ்மத் :** (ஆத்திரத்துடன்) பொத்து வாயை.....! நீ தடுத்தாலும் நான் அதைப் பொருட்படுத்தப் போவதில்லை என்பதை ஏற்கனவே சொல்லி விட்டேன் அல்லவா? பிறகென்ன விழல் கதை கதைக்கிறாய்?

**இஸ்ஸத் :-** சரிங்க, உங்க விருப்பப்படியே செய்யுங்க.

**அஹ்மத் :-** என் விருப்பம் (வெறிச் சிரிப்பு) என் விருப்ப மல்ல இது இறைவனின் விருப்பம் யா அல்லாஹ் என் அண்டை வீட்டார் தெரிந்தோ தெரியாமலோ செய்த பிழைகளை மன்னித் தருள். அவர்களது இன்னலை நீக்கி மகிழ்ச்சி கரமான வாழ்க்கையைக் கொடு. உன் தூ தரின் வாக்கைப் புறக்கணித்து அண்டை வீட் டாரைப் பாராது வாழ்ந்த என் தவறை மன்னித்தருள். அல்தாறு கல்லத்தாறு....! உன் வீட்டைக் கவனிக்குமுன் அண்டை வீட்டைக் கவனி...! இஸ்ஸத், எடு அந்தப் பண முடிப்பை.

முற்றும்

• • •


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் மு. சடாட்சரன்



குமரன் போன்ற சிறு சஞ்சிகைகள் பொதுவுடமைக் கருத்துக்களை முற்றுமுழுதாகவே பிரசாரம் செய்துவந்தன. அவ்விதம் பிரசார வாடையை முழுமையாய்க் கொண்ட ஆக்கங்களை சிலர் படைத்துக் கொண்டிருந்தனர். அவர்களில் இருந்து விடுபட்டு வேறொரு பிரசாரம் மேலோங்காத, முற்போக்குச் சிந்தனைகள் இழையோடுகின்ற கலைப்படைப்பாக எழுத்தாக்கங்களை உருவாக்கினர். அவர்களில் ஒருவராகவும் மருதூர்க் கொத்தன் விளங்குகிறார் என்பதை எவரும் மறுக்க முடியாது.

# மருதூர்க்கொத்தனின் காலத்தை வெல்லும் கதைகள்

ஈழத்து சிறுகதை உலகில் குறிப்பிடத்தக்க முக்கியமானவர் மருதூர்க் கொத்தன். இவரின் 'மருதூர்க் கொத்தன் கதைகள்' என்னும் சிறுகதைத் தொகுதி இஸ்லாமிய நூல் வெளியிட்டுப் பணியகத்தின் முதலாவது பிரசுரமாக 1985ல் வெளிவந்தது. அத்தொகுதியில் 61லிருந்து 60 வரை வெளிவந்த பதினொரு சிறுகதைகள் உள்ளன. இதுவரை அவர் பல பத்திரிகைகளிலும் தொடர்ந்து எழுதியுள்ளார். மருதூர்க் கொத்தன் கதைகள் பற்றி மொத்தமாகக் கூறுவதற்கு கையில் கிடைத்த 'வெட்டுமுகம்' தொடக்கம் 'இருள்' வரையுமான பதினொரு கதைகளையும் 1998 மேயில் 'களம்' என்னும் சிற்றிலக்கிய ஏட்டில் வெளிவந்த 'மரையாம் மொக்கு' என்னும் கதையையும் சேர்த்து பன்னிரண்டு கதைகளை என்பார்வைக்கு எடுத்துள்ளேன். ஒரு எழுத்தாளனைப் பற்றிக் கூறுவதற்கு இக்கதைகள் போதுமானவைதான்.

கவிஞர் நீலாவணனால் சிறுகதை எழுதுமாறு தூண்டப்பட்ட மருதூர்க் கொத்தன் அறுபதுகளில் சிறுகதைகள் எழுதத் தொடங்கி இதுவரை பல சிறந்த சிறுகதைகளைத் தந்துள்ளார். காலத்தைப் பிரதிபலிக்கும் கலைப்படைப்பாக எழுதுபவரே எழுத்தாளர் என்பதற்கமைய இவரின் கதைகள் அவ்வக்கால சிந்தனைப் போக்குகளையும் பிரதிபலிக்கத் தவறவில்லை என்றே கூற வேண்டும்.

மருதூர்க் 'கொத்தன் கதைகள்' என்னும் நூலுக்கு அணிந்துரை வழங்கிய எழுத்தாளர் அ. ஸ. அப்துஸ்ஸமது இவ்வாறு கூறுகிறார். "1956க்குப் பிறகு ஈழத்துச் சிறுகதைகளில் பிரக்ஞை பூர்வமான கதை வடிவங்கள் தோன்றி, கருத்தோற்றம், இலக்கிய உணர்வு சமுதாயத் தாக்கம் என்பவற்றைப் பிரதிபலிக்கின்றன. 1970க்குப் பின் இப் பிரதிபலிப்பு வேலும் இறுக்கமடைந்து சமூகவாதக் கருத்தேற்றம் பெற்று சமத்துவயுகத்தை நோக்கி வீறுநடை பயில்கின்றன. இவற்றை மருதூர்க்கொத்தன் கதைகள் நிருபிக்கின்றன. இக் கூற்று ஏற்றுக்கொள்ளத்தக்கதே.

எழுபதுகளில் நம்நாட்டில் பொது உடமைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்கள் மேலோங்கி வளர்ந்து வந்தது. பல எழுத்தாளர்களும் முற்போக்குக் கருத்துக்களை முன்வைக்கும் படைப்புக்களை எழுதுவதில் ஆர்வம் காட்டினர். அக்காலத்தில் 'குமரன்' போன்ற சிறு சஞ்சிகைகள் பொதுவுடமைக் கருத்துக்களை முற்றுமுழுதாகவே பிரசாரம் செய்துவந்தன. அவ்விதம் பிரசார வாடையை முழுமையாய்க் கொண்ட ஆக்கங்களை சிலர் படைத்துக் கொண்டிருந்தனர். அவர்களில் இருந்து விடுபட்டு வேறொரு பிரசாரம் மேலோங்காத, முற்போக்குச் சிந்தனைகள் இழையோடுகின்ற கலைப்படைப்பாக எழுத்தாக்கங்களை உருவாக்கினர். அவர்களில் ஒருவராகவும் மருதூர்க் கொத்தன் விளங்குகிறார் என்பதை எவரும் மறுக்க முடியாது. சாதிகள் இரண்டே என்னும் சிறுகதை இதற்கு ஓர் உதாரணமாகும்.

பணக்காரச் சிங்கள முதலாளி ஒருவர், குடியேற்றக் கிராமத்தில் வாழும் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக நிலம் என்ற போர்வையில் துவேசத்தைத் தூண்டி அவர்களைத் துரத்தி விட முனைவதையும், மூன்று இனத்திலுமுள்ள உழைக்கம் வர்க்கத்தினர் வாழ்க்கை முறையிலே பின்னிப் பிணைந்து ஒருவரின் துயரில் ஒருவர் பங்கு கொண்டு உறவுகலந்து வாழ்கின்ற முறையையும் இறதியில் அவர்களிடையே கலகத்தை உண்டுபண்ணும் சக்தியை உணர்ந்துகொள்கின்றனர் என்பதையும் சாதிகள் இரண்டே என்னும் சிறுகதை வலியுறுத்துகின்றது.

"கந்தையா இந்த உலகத்திலே ரெண்டு சாதிகள் தான் எண்டத்த இப்ப கண்ணாரக் கண்டிட்டன் ஒன்று பணக்காரச் சாதி, மற்றது என்னையும் உன்னையும், கரீமையும் போன்ற ஏழைச் சாதி" என்று கிலுட்டு பாஸ்' கரிபடிந்த சாரத்தால் கண்களைத் துடைத்துவிட்டான் கதை முடிவடையும் போது நாமும் ஆறுதல் அடைகிறோம் இக்கதை 1975ல் வெளிவந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

மற்றொரு முக்கிய கதையாக "வெட்டு முகம்" குறிப்பிடத்தக்கதாகும். இக்கதை ஒரு முஸ்லிம் கிராம வாழ்க்கையை தெட்டத் தெளிவாகப் படம் பிடித்துள்ளது. இதில் வரும் உரையாடல்கள் யதார்த்தப்பாங்கானவை. முஸ்லிம்களின் ஐந்து கடமைகளில் ஒன்றான சக்காத்துக் கொடுக்கும் நடைமுறையில் உள்ள சீர்கேடுகளை அம்பலமாக்குகின்றது இக்கதை.

"ஆசியார்ர ஊட்ட ஒருசிலின் கிடைச்சிச்சு. அத வாங்கிற்று மரைக்கார் ஊட்ட போனா தலைவாசல் பூட்டிக்கெடக்கு குடுத்து முடிச்சிட்டாங்களாம்."

"சதக்கா, சக்காத்தா குடுக்காங்க சும்மா ஒலகத்து ஒப்புனக்கி காட்டாப்புக் காட்டுறாங்க."

"நம்மட ஹக்க அல்லா ஹுத்தாலா அவியளிட்டக் குடுத்திருக்கான் எண்டுதான் நாம போறம் நீயென்ன தந்துவெச்சத?" எண்டு நம்மட்டக் கேக்கிறாங்க.

"காத்தான்குடி ராச்சியமிருந்து வந்தங்கா புள்ள பஸ்ஸுக்குப் கூலி கூடக் கிடைக்கல்ல. என்ற உரையாடல் இயற்கையானவையாக உள்ளன.




"பிச்சைக்காரப் பட்டாளத்தை உருவாக்க ஏழைவரி விதிக்கப்படவில்லை. ஏழைவரி வாங்குவோரும் காலக் கிரமத்தில் ஏழைவரி வாங்குவோராக மாற வேண்டும் என்ற கருத்தை விளக்கும் கலைப்படைப்பே 'வெட்டுமுகம்' என்றால் மிகையில்லை.

1978ல் வெளிவந்த 'சங்கிலித் தொடர்கள் அறுகின்றன' கதை ஒரு அலங்காரமான படைப்பாகக்கொள்ளலாம். இதில் மண்வாசனை துலாம்பரமாகப் பளிச்சிடுகின்றதைக் காணலாம் பண்டைய முஸ்லிம் மக்களின் வாழ்க்கை முறையில் உள்ள அழகியல் அம்சங்களும் சம்பிரதாங்களும் இக்கதையில் சித்தரிக்கப்படுகின்றன.

1962ல் வெளிவந்த வேலி என்னும் சிறுகதையும் மிகச்சிறந்த கதையாகவே கொள்ள வேண்டும். பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்பதற்கொப்ப இத்தா கடைப்பிடிப்பதில் உள்ள சிறிய குறை ஒன்றைச் சுட்டிக்காட்டி சிந்திக்கத் தூண்டுகின்றது இக்கதை. இக்கதை நனவோடை உத்தியில் எழுதப்பட்ட சொற்சித்திரமாகவே அமைந்துள்ளது எனலாம்.

1998 மேயில் வெளிவந்தத' மரையாம் மொக்கு' என்னும் சிறுகதையும் காலத்தை வெல்லும் சிறுகதையாக போர்க்கால அவலங்களைத் துல்லியமாகப் படம் பிடித்துள்ளது. அதில் வரும் காத்தமுத்து பாத்திரம் ஜீவத் துடிப்புள்ளதாகும்.

பொதுவாக மருதூர்க் கொத்தன் நமக்குக் கிடைத்த ஒரு சிகரமே. அவரது கதைகளில் சுவாரசியமான சித்தரிப்புகள், வருணனைத் தொடர்கள் நிரம்பி வழிகின்றன. அவரின் சொந்தச் சூழல் சித்திரமாக்கப்பட்டுள்ளன. இலாவகமான மொழி நடை கவர்ச்சியூட்டுகின்றது. படிக்கும் போது இன்பம் பயக்கும் கவிதைப் பாங்குகள் விரவிக்கிடக்கின்றன அவர் படைக்கின்ற பாத்திரங்கள் சமூகத்தில் நடமாடுபவர்களாக நம்மோடு கலந்து கொள்கின்றனர். சமூகயதார்த்தப் பண்பு நிறைந்த படைப்புகளே அதிகமாக விளங்குகின்றன.


ஆகவே 'வெட்டுமுகம்' 'சாதிகள் இரண்டே 'வேலி' 'மரையாம்மொக்கு' என்னும் சிறுகதைகள் காலத்தை வென்ற கதைகளாக மிளிரும் என்பதில் சந்தேகமில்லை.

• • •


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலவர்மணி ஆ.மு. ஷரீபுத்தீன் ஒரு பல்துறைக் கலைஞர்

- மருதூர்க்கொத்தன்



"வெண்பாவில் என்னை நீ
வென்றாய் ஷரிபுத்தீன்
நண்பாவென் நாம
முனக்களித்தேன் - பண்பாளா
வாழி அறபுத்தமி
ழுள்ளவும் வாழி நீ
வாழி நம
தன்பு மலர்ந்து !"

இது, புலவர் மணி ஏ. பெரியதம்பிப் பிள்ளை யவர்கள், ஆ. மு. ஷரிபுத்தீனுக்கு வழங்கிய சாற்றுக்கவி: வாழ்த்துக்கவி: பட்டமளித்த பட்டயம். ஆ. மு. ஷரிபுத்தீன் அவர்களால் எழுதப்பட்டு, அரசு வெளியீடாக வெளிவந்த 'நபி மொழி நாற்பது' நூலுக்காக வழங்கப்பட்ட கல்வெட்டுக் கவிதை வெண்பாவுக்கொரு புலவர்மணி என்று தமிழறிந்தவர்களால் பாராட்டப்பட்டவர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையவர்கள். 'நபி மொழி நாற்பது' வெண்பாக்கள் புலவர் மணியின் இலக்கிய ரசனைமிக்க உள்ளத்தில் மலரம்பாகவும் இளந் தென்றலாகவும் பாய்ந்து அவரை மெய்மறக்கச் செய்தது. அந்த மெய் மறப்பில் தன்வசம் இழந்து, பெருந்தன்மையோடு தமிழுலகம் தமக்களித்த பட்டத்தைத் தன் நண்பனுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கும் ஆற்றலாக அமைந்துவிட்டது.

கிழக்கிலங்கை கண்ட கலை இலக்கியக் கொடிமுடியானவர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அவர்கள். விபுலாநந்தரின் வாரிசாக மதித்துப் போற்றப்பட்ட வர் புலவர்மணி, இலக்கிய கலாநிதி ஏ. பெரிய தம்பிப்பிள்ளை அவர்கள். தக்கார் வழிகாட்டலும், தகைமிக்கார் ஆசியும் நட்பும் எல்லார்க்கும் வாய்ந்து விடுவதில்லை. அப்படியொரு பெரும் பாக்கியம் பெற்றவர்தான், மூதறிஞர், புலவர் மணி ஆ. மு. ஷரிபுத்தீன் அவர்கள். கே. எஸ். வைரமுத்து அவர்களின் மனம் நிறைந்த முதல் மாணாக்கனாக, உருவாக்கப்பட்ட பெரும் பேற்றைத் தன் பாடசாலை வாழ்க்கையினூடாக ஷரிபுத்தீன் பெற்றார். மேலும் ஒரு பெருங்கொடை விபுலானந்தப் பெரு வளமாக அவர்க்கு வாய்த்தது. சுவாமி விபுலானந்தர் அவர்கள்: இலக்கியப்பணி, இசைப்பணி, நாடகப் பணி, ஆய்வுப் பணி, சமயப்பணி, கல்விப்பணியென்று விரிந்த தளத்தில் நின்று தன்னை அர்ப்பணம் செய்து மகிழ்ந்தவர். அதே சமயம் புலவர் மரபையும் பண்டித மரபையும் வாழையடி வாழையாக நிலைக்கத்தக்கதாக வளர்த்தெடுக்கவும் பணியாற்றினார். அதன் பேறுகளில் ஒருவர் தான் புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன்.

விபுலானந்த வள்ளல் கல்முனை லீஸ் உயர்தர பாடசாலையில் வளர்ந்த மாணவர்களுக்காக நடாத்திய தமிழ் வகுப்பில் சேர்ந்து யாப்பும், அணியும் வட மொழி இலக்கணமும் கற்கும் வாய்ப்பு ஷரிபுத்தீனுக்குக் கிடைத்தது. விபுலானந்தத் தமிழ்கடலில் மூழ்கி கற்கக் கிடைத்த வாய்ப்பானது எனக்குக் கிடைத்த அருட் கொடையாகும் என்று புலவர் ஷரிபுத்தீன் அவர்கள் மனம் அளைந்த மகிழ் மொழியாகச் சொல்லிப் பூரிப்பார்.

"வெண்பாவில் என்னவென்றால்" புலவர் மணி பெரிய தம்பிப் புலவர் அவர்கள் பெருந்தன்மையுடன் வாக்குமூலம் கொடுத்தார்கள். 'வெற்றி' என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Public Library
Jaffna

அவையடக்கமாகவே கொள்ள வேண்டும். புலவர் மணி பெரிய தம்பிப் பிள்ளைக்குச் சமதையாவர் ஷரிபுத்தீன் என்பதே சரியானதாகும். தனி முத்திரை பதித்தவர்கள் ஒருவரை யொருவர் வெல்வதில்லை. ஒருவருக் கொருவர் சமதையாகத் தலை நிமிர்ந்து நிற்பவர்கள்.

**வெண்பாவில் தனியொரு பாணி வகுத்தவர்**

வெண்பாவில் புகழேந்தி பதித்தது தனி முத்திரை புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை சாதித்ததும் அத்தகைய ஒரு சாதனையே. வெண்பா வில் தனக்கென்றொரு பாணி வகுத்துத் தலை நிமிர்ந்து நின்றார். அதே விதமான ஒரு சாதனையைப் புரிந்தவர் தான் புலவர் மணி ஆ.மு.ஷரிபுத்தீனும். ஷரிபுத்தீனின் பாணியும் அவருக்கென்ற அமைந்த ஒரு தனிப்பாணி. தமிழ் வெண்பா வரலாற்றில், புகழேந்தியும், பெரியதம்பிப்பிள்ளையும், ஷரிபுத்தீனும் ஒன்றுக்கொன்று சமதையான ஆயுதக் குறிகள் அடுப்புக்கற்கள்,



புலவர் மணிகள் இருவருக்கு மிடையே இன்னொரு ஒப்புமை இருக்கிறது. புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை அவர்கள், கண்ணனின் கீதா உபதேசத்தை வெண்பாவுக்குள் கொண்டு வந்த சாதனையாளர். புலவர்மணி ஷரிபுத்தீன் அவர்கள், நபி பெருமானாரின் ஹதீஸ்களை ' நபிமொழி நாற்பது' நபிமொழி நாற்பது என்றிரு நூல்கள் வாயிலாக வெண்பாமூலம் வெளிப்படுத்திய சாதனையாளர். இவர்களது வெண்பாக்களும், ஏனைய பாவகை ஆக்கங்களும் ஒப்புநோக்கி ஆராயப்பட வேண்டியவையாகும். இலக்கிய ஆய்வாளர்கள் அதைச் செய்ய வேண்டும். புலவர் மணி ஷரிபுத்தீன் இயற்றிய மற்றொரு வெண்டா நூல் 'முதுமொழி வெண்பாவாகும்' நபி மொழியை வெண்பா வாக்கியே பயிலப்பட்டுவரும், முது மொழிகளின் அறவுரைக் கருத்துக்களைக் கருப் பொருளாகக் கொண்டு அமைந்ததே முது மொழி வெண்பா மாலை.

> “விபுலானந்த வள்ளல் கல்முனை லீஸ் உயர்தர பாடசாலையில் வளர்ந்த மாணவர்களுக்காக நடாத்திய தமிழ் வகுப்பில் சேர்ந்து யாப்பும், அணியும் வடமொழி இலக்கணமும் கற்கும் வாய்ப்பு ஷரிபுத்தீனுக்குக் கிடைத்தது.”

“உப்பில்லாக் கஞ்சியினை
உண்ணும் அறுசுவை போல்
தப்பிய கந்தை பீதாம்பரம் போல்
ஒப்பும் பனையோலைப் பாயில்
படுத்துறங்கும் வாழ்வார்
மனம் கொண்டது மாளிகை”

முதுமொழி வெண்பாவின் இரண்டாவது வெண்பா இது. படிப்போர் இலகுவில் பொருள் காணத் தக்கதாக, அசைகளை இடம் மாற்றி சந்தி புணர்ப் புகளைப் பிரித்து எழுதியிருக்கிறேன்.

புலவர்மணி ஷரிபுத்தீன் வெண்பா வேங்கையை அடக்கி ஆண்டது போலவே, விருத்தப்பாச்சிங்கத்தையும், கட்டியாண்டு வெற்றிகண்டும் இருக்கிறார்.

“இந்நூலின் பல்வேறு சந்தங்களில் தமது கவிதைகளைத் தந்திருக்கிறார் பெரும்புலவர். சில கவிதைகள் ஓசை நயத்தாலும் ஒன்றிய உவமை நயத்தா லும் யுத்தகளத்தை வருணிப்பது போன்றே கம்பன் கவியாகச் சுவைக் கின்றன. இவ்வாறு சூறாவளிப் படைப் போருக்கான அணிந்துரையில் மூத்த பத்திரிகையாளரும் எழுத்தாளருமான திருவாளர் எஸ். டி. சிவநாயகம் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். துள்ளிப் பாய்ந்து, தெறித்தோடுகின்ற சொற்புணர்ப்பாக இனிய சந்தவின்பம் நிறைந்த பாக்களாக, உணர்ச்சிப் பலிதத்தை விநியோகம் செய்ப வையாக அமைந்த கவிதைகளின் தேரோட்டமே சூறாவளிப் படைப் போராகும்.

“மாடி வீட்டில்
மகிழ்வோ டிருந்தவர்கள்
மண்ணின் குடிசையில்
வாழ்க்கை நடத்தியோர்
கோடி மங்கா(து)
உடுத்தி மகிழ்ந்தவர்
கோவணத்தோடு
கூதல் பொறுத்தவர்
வாடிக் கஞ்சி
அருந்தி இருந்தவர்
வகையாம் உண்டிகள்
உண்டு மகிழ்ந்தவர்
கூடி ஒன்றெனக்
காண இயற்றிய
கொடிய மாருதன்
கொடுமை குறிக்கவோ ?”

வகை மாதிரிக்கு இந்த சந்த விருத்தம் போதும். இதில் மெல்லியதாக ஓடும் நகைச்சுவையும் இனிக்கிறது. புயல் படைத்த சமத்துவம் தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Public Library
Jaffna

**உரையாக்கப் பணி**

புலவர்மணியின் இன்னொரு கவின் முகம் அவரது உரையாக்கங்களாகும்! 'சீதா' பாதை போந்த படல் உரை என்பன மிகச் சிறப்பாயமைந்தவை, அனைத்துலக இஸ்லாமிய தமிழிலக்கிய ஆராச்சி மாநாட்டு அமைப்பு புலவர் நாயகம் செய்யிது அப்துல் காதிர் நெய்னார் லெப்பை ஆலிம் புலவர் ( சேகனாப் புலவர் ) இயற்றிய பாரகாவியமான 'புகுஷ்ஷாமு'க்கு உரைகாண விரும்பிய போது அமையத்தினர் கண்களுக்குப் பட்டவர் நம் புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்கள்தான். புலவர் மணியால் செய்யப்பட்ட புதுகுஷ்ஷாம் உரை நான்கு பாகங்களாக மேற்படி நிறுவனத்தினரால் நூலாக வெளியிடப்பட்டது. இலங்கைக் கல்வித் திணைக்களம் க. பொ. த. (சா/த ) வகுப்பு தமிழ் (ஆ) பாடத்திட்டத்தில் புதுகுஷ்ஷாம் காவியத்தை வசனமாக்கிச் சேர்க்க முனைந்தபோது புலவர் மணி ஷரிபுத்தீனைக் கொண்டே மேற்படி பணியை நிறைவேற்றியது.

புலவர் மணி, இசைப்பாடல் எழுதுவதிலும் வல்லமை வாய்க்கப் பெற்றவர். பாடசாலை வைபவங்கள், மற்றும்பொது வைபவங்களுக்காகவும், அவரது மேடை நாடகங்களுக்காகவும், வானொலிப் பாடல்களுக்காவும் ராகம் தாளம் தவறாத இசைப்பாடல்களை நிறைய எழுதியுள்ளார். அவை இசையினிமையும் அழகும் எளிமையும் பொருட் செறிவும் மிக்கவை. சங்கீத பூஷணம் ஏ. எம் அக்பர் வானொலியில் பாடிய பெரும்பாலான சாஸ்திரிய சங்கீதப் பாடல்கள் புலவர் மணியால் எழுதப்பட்டவையாகும்.

"நம்ம தாதா தந்தமுகம் காணுவோர்
நாம் மகிழ்வு பூணுவோம்
நல்வரவு கூறுவோம் "

இது சேர்ராசிக் பரீத் அவர்களை மருதமுனையில் வரவேற்றபோது இசைக்கப்பட்ட வரவேற்புப் பாடலின் பல்லவியாகும். அவற்றை அவர் சேகரித்து வைக்காததும் பாடியவர்கள் மனப்பாடம் மறந்ததும் தமிழிசைத் துறைக்கு நேர்ந்த பேரிழப்பாகும். பாடசாலையின் தேவைக்காக இலக்கியத்தரம் மிக்க மேடை நாடகங்களையும் எழுதி



> "'நபி மொழி நாற்பது' வெண்பாக்கள் புலவர்மணியின் இலக்கிய ரசனைமிக்க உள்ளத்தில் மலரம்பாகவும் இளந்தென்றலாகவும் பாய்ந்து அவரை மெய்மறக்கச் செய்தது. அந்த மெய்மறப்பில் தன்வசம் இழந்து, பெருந்தன்மையோடு தமிழுலகம் தமக்களித்த பட்டத்தைத் தன் நண்பனுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கும் ஆற்றலாக அமைந்துவிட்டது."

நெறிப்படுத்தியுமுள்ளார். என்பதும் பலருக்குப் புதிய விஷயமாகும். அவரது நாடகங்கள் இலக்கியச் சுவையும், மரபுசார்ந்த அரங்கியல் நுட்பங்களும் கொண்டவை. அவற்றின் பிரதிகளும் அவர் கைவசமில்லை.

**மரபுசார் ஓவியக்கலையில் சிறந்த தேர்ச்சி பெற்றவர்.**

ஓவியம் வரைவதிலும், எழுத்தணிக் கலையிலும் அவர் வல்லவர். மரவு சார்ந்த ஓவியக் கலையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர். கோட்டுச் சித்திரக்கலையில் கணிசமான வெற்றிகண்டவர் சுகாதாரப் பழக்கங்கள் பழமொழிகள், அறிவு சார்ந்த போதனைகளைக் கோட்டுச் சித்திரப் படங்களாக உயிரோவியங்களாக வரைந்து பாடசாலைச் சுவரெல்லாம் தொங்க விடுவார். தத்ரூப ஓவியப் பாணியிலமைந்தவை அவரது ஓவியங்கள். அதே நேரம் கைவினையிலும் வல்லவராகத் திகழ்ந்தார். கலை நுட்பம் வாய்ந்ததும், பயன்பாடுமிக்கதுமான கைவினைப் பொருட்களைச் செய்து காட்டி மாணவர்களை ஊக்கப்படுத்தினார். கவின்கலை, பயன்கலை இரண்டும் அவர் கைவிரல்களின் நளினத்தில் உயிர்பெற்றன.

**கிராமிய இலக்கியசாலைக்கு அரும் பணியாற்றினார்.**

அவரது மேடைப் பேச்சு தனியான ஆவர்த்தன சுருதி கொண்டது. தமிழின் இனிமையைத் தத்ரூபமாக வெளிப்படுத்துவது சொற்களை பொருள் தெளிவு புலப்பட அட்சர சுத்தமாக உச்சரித்துப் பேசுவதுதான் அவரது பாணி. உரக்க மொழிந்து நாடக பாணியிலான அபி நய ஆலாபனை அதில் இருக்காது. தம்புராவின் சுருதி சத்தமான இசைவெள்ளம் போல அவர் பேச்சு ஒரே சீராக அமையும். சபை மௌனித்து ஆர்வமுடன் செவிமடுத்து அடங்கி அமைதிகாணும். தமிழின் தனிச் சிறப்பு மௌழகர ஒலியாகும். அந்த ஒலியை அதற்கே உரிய இனிய சுருதியில், உச்சரிப்பதில் அவருக்கு அவரே நிகராக அமைந்தார்.

கிராமிய இலக்கியக் கலைக்கு அவராற்றிய தொண்டு இங்கு பேசப்பட வேண்டியதொன்றாகும். இக்கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிராமிய இலக்கியம் சர்வகலாசாலை மட்டத்திலும் ஆராயப்படும் ஒரு துறையாக மலர்ந்த விட்டது. இத்துறையில் புலவர் மணி ஷரிபுத்தீனுக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. 1927ம் ஆண்டு புலவர் மணி அவர்கள் உதவியாசிரியராகப் பணியாற்றத் தொடங்கிய காலத்திலேயே இப்பணி ஆரம்பமாகி விட்டது.

புலவர் மணி ஷரிபுத்தீன் அதிபாராக அமைந்த காலம், நான் சிரேஷ்ட வகுப்பு மாணவனாகக் கல்வி பயின்ற வேளை. கலை இலக்கிய ஆர்வமுள்ள என் போன்ற மாணவர்களைக் கருவிகளாகக் கொண்டு கிராமிய இலக்கியத் துறையை வெளிக்கொணர முயன்றார்.

கிராமிய இலக்கியப் பாடல்களை அவற்றைப் பாடம் பண்ணியிருந்த மூத்த தலை முறையினரை அணுகித் தொகுத்தெடுத்தார். அவற்றின் பொருளழகிலும், சொல்லழகிலும் உவமை உருவக அணி நலன்களிலும், அந்தவின்பத்திலும் மனமிழந்து அவற்றைக் கதைகளாகவும், வாதுக் கவிகளாகவும் காதல் மொழியாடலாகவும் வடிவமைத்தார். மாணவர் மன்றங்களிலும் பெற்றார் தின விழாக் கலையரங்குகளிலும் அரங்கேற்றினார்.

செவி நுகர் கவினாக மாத்திரமாகவே பாடப்பட்டு வந்த நாட்டுக்கவியை, ஆண்கலை பெண் கலையாக ஒப்பனையுடன் தாளலய நாடகப் பாங்கில் மேடையில் கண்ட மக்கள் மெய்மறந்தனர்.

மட்டக்களப்பு நாட்டுக் கவிதையைத் தொகுத்து, பாட்டிடை இட்ட உரையாக விளக்கக் குறிப்புகளும் எழுதி ஒலிப்பதிவு செய்தார். நாட்டுக்கவியை ஒலித்தட்டில் பதித்த முதலாவது கலைஞன் புலவர் மணி ஆ. மு. ஷரிபுத்தீனேயாவார்.

“மட்டக்களப்பு நாட்டுக் கவிதையைத் தொகுத்து, பாட்டிடை இட்ட உரையாக விளக்கக் குறிப்புகளும் எழுதி ஒலிப்பதிவு செய்தார். நாட்டுக்கவியை ஒலித்தட்டில் பதித்த முதலாவது கலைஞன் புலவர் மணி ஆ. மு. ஷரிபுத்தீனேயாவார்.”

1915ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கை வானொலி அதன் கலையகத்தில் ஒலிப்பதிவு செய்தது. ஒலிபரப்பியது. ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர் அல்-ஹாஜ் எம். வை. எம். முஸ்லிம் அதைப்பாடினார்.

‘கனிந்த காதல்’ மட்டக்களப்பு நாட்டுப்பாடல் கதைப்பாணியில் அமைந்த ஆராய்ச்சிப் பாங்கும் கொண்ட புலவர் மணியால் செய்யப்பட்ட நூலாகும். துறை, திணை வகுத்த, சங்க நூலாகும். துறை, திணை வகுத்து சங்க அகத்துறைச் செய்யுட்களோடு ஒப்புமை கண்டு எழுதிய நூலே அது.

கம்பனின் கவிதையோடு கூட நாட்டுப்பாடலை ஒப்பு நோக்கி அவர் கண்ட முடிவு மிகச் சிறப்பானது.

“வெய்யோனொளி தன்மேனியில்
வரி சோதியில் மனநய
பொய்யோ வெனும் கிடையாளொடும்
இளையானொடும் போனான்
மையோமரகதமோ
மனுக்கடலோ மழை முகிலோ
ஐயோவிவன் அழகென்பதோர்
அழியா வழகுடையான்.

இது கம்ப வர்ணனை. ராமனின் கரியமேனியின் அழைகைக் கம்பர் இவ்வாறு பாடினார். நமது எழுத்தறியா பெயர் தெரியாத மட்டக்களப்பு முஸ்லிம் கவிதை,

கறுக்காப் பழம்போல,
கருங்காலிச் சிமிழ் போல
அலையடித்த மணல் போல
அழகுதுரை மேனி நிறம்”

என்று வருணித்துப் பாடியுள்ளார். இந்த ஒப்புமை காணுமாற்றல் புலவர்மணிக்கே கை வந்த கலையாயிற்று. இப்படி கலையிலக்கியத்தில் எண்முகம் கொண்ட ஏறு நடைக்காவிய நாயகன் ஆ. மு. ஷரீபுத்தீன் நூற்றாண்டு விழாவும் கண்டு மேலும் வாழ்ந்து தமிழ்த் தொண்டு செய்ய இறைவன் அருள்பாலிக்கட்டும்.

• • •



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

- புன்னகைவேந்தன் -

அகில இலங்கைத் தமிழ்த்தின விழா (1973 கல்முனை) சிறப்பு மலரில் இடம் பெற்ற மருதூர்க் கொத்தனின் கவிதையினால் ஆழமாக ஈர்க்கப்பட்ட நான் அந்தக் கவிதையின் சிறப்புக்கருதி அதன் ஈற்றடிகளை இக்கட்டுரையின் தோற்றுவாயாகத் தந்து ஆரம்பிக்கின்றேன்.

"கூத்தும் குரவையும் கோலாட்டம் சீனடியும்
பக்தி வளர்க்கும் பள்ளிகளும் கோயில்களும்
தேவாரம் பைபிள் திருக்குர்ஆன் ஆகமங்கள்
நாவார ஓதுமிசை நாற்றிசையும் தேன்பொழிய
இந்து கிறிஸ்தவ இஸ்லாமிய மக்கள்
சிந்துகள் பாடிச் செந்தமிழை வாழ்விக்கும்
மங்காப் புகழ்பூத்த மாதரசி கல்முனையாள்."

யாப்பமைதி ஜொலிக்கும் இக்கவிதையில் விரவி நிற்கும் எதுகை, மோனை, சந்தம் சீர் என்பவற்றினால் விரிக்குவரி ஒத்திசைப்பண்புகள் மேலோங்கி நிற்கின்றன. மேலும் அதன் நிழலாட்டம் இயல்பாகவே இங்கிதமான சங்கீத நாதத்தையும், ஓசை நளினங்களையும் ராக பாவங்களையும் மனதில் நிலை கொள்ளச் செய்து விடுகின்றன. எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என்ற வேறுபட்ட நிலைகளினால் மேலும் மனதுக்கு சுருதி சேர்ப்பதோடு பரவசத்தையும் புதிய பரிமாணத்தையும் பிரவாகமாக்கி நயம் பெறுகின்றன.

கொத்தனின் பேராற்றலையும் சிறப்பையும் ஆழமாக நோக்க வேண்டுமானால் அவரின் திறனைப்பட்டை தீட்டிப் பார்க்க வேண்டுமென்றால் கல்முனை தமிழ் எழுத்தாளர் சங்கம் பற்றி விரிவாகத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

காலஞ்சென்ற கவிஞர் நீலாவணன், மருதூர்க் கொத்தன், மு. சடாட்சரன், ஜீவாஜீவரெத்தினம், பாண்டியூரன், சி. பி. சத்தியநாதன், செய்யிது ஹசன் மௌலானா, சசி எம் ஏ. நு. ஃமான், மருதூர்க்கனி, பஸீல் காரியப்பர், அன்பு முகைதீன், சி. கனகசூரியம், முத்துமீரான் போன்ற எழுத்தாளர்களினால் அச்சங்கம் இயங்கி வந்தது.


நீலாவணன் தலைவராக இருந்த வேளை மருதூர்க்கொத்தன் செயலாளராகச் செயற்பட்டார். அத் தருணம் எழுத்தாளர் இலங்கையர்கோன் அவர்கட்கு விழாவெடுத்து கௌரவிக்கப்பட்டது. சிறுகதைப் போட்டி நடாத்தப்பட்டு சிறந்த பரிசுகளும் வழங்கப்பட்டன.

நீலாவணனுக்குப் பின் தலைமைப் பதவியை ஏற்ற கொத்தனின் காலத்தில் கல்முனை எழுத்தாளர் சங்கம் புதிய உத்வேகத்தையும், புதிய நிலைப்பாட்டையும். புதிய வீச்சையும் கொண்டிருந்தது. அத்தருணம் புதிய தலைமுறை எழுத்தாளர்களும் இலக்கியப் பரப்பினுள் அடியெடுத்து வைத்தனர்.

அந்தக் காலம் நிறைவான கவிதைகளையும் கதைகளையும் வெளிக்கொணர்வதில் முக்கியமான இடத்தை பெற்றிருந்தது எனலாம். ஒவ்வொரு ஞாயிறு தினமும் இலக்கியச் சந்திப்புக்கள், கவி அரங்குகள், கையெழுத்து மாசிகை வெளியீடுகள், விமர்சன அரங்குகள், நூல் வெளியீட்டு விழாக்கள் என்பன தங்கு தடையின்றி நடைபெற்ற பொற்காலமாகும். இலக்கியப் பெரியார்கள் - ஆசான்கள் வரவழைக்கப்பட்டதோடு உரை அரங்குகளும் ஏற்பாடு செய்யப்பட்டன.

1967 ஆம் ஆண்டு கவிஞர் நீலாவணனை கௌரவ ஆசிரியராகக் கொண்டு கலை இலக்கியத் திங்கள் ஏடாக "பாடும்மீன்" வெளிவந்தது. இந்த 'பாடும் மீன்' சஞ்சிகையை நல்ல முறையில் உருவாக்கி வெளிக்கொணர்வதில் நீலாவணனுடன் இணைந்து மருதூர்க்கொத்தனும் செயல் பட்டவர் என்பதை நாம் எளிதில் மறந்து விட முடியாது. ஆயினும் "உதயம்" "பாரதி" மரகதம் போன்று "பாடும் மீன்" ஏடும் அற்ப ஆயுளில் மடிந்து போயிற்று. இது இலக்கிய உலகுக்கு நிகழ்ந்த மாபெரும் சோதனையாகும். பாரிய இழப்பென்றும் இதனைக் குறிப்பிடலாம்.

வர்க்க வேறுபாட்டை, நிலமான்யத்தை சமூக விஞ்ஞான ரீதியில் அணுகி அவற்றை வேரறுத்து விட அவாவி



# நல்லிலக்கியம் நசிவிலக்கியம் எது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கும் மருதூர்க் கொத்தனின் கலையுள்ளத்தின் துடிப்பு, அவரின் சிருஷ்டிகளில் பிரதிபலிப்பதை அவதானிக்கலாம். பயனுள்ள சமூக மாறுதல்களை வேண்டிநிற்கும் இலக்கியங்களை சிருஷ்டிப்பதையே தனது ஆத்ம கடமையாக எண்ணி இயங்கி வரும் அவரின் வேகமும் தாகமும் சமூகத்தில் இறுகிப்போயிருக்கும் அவலங்களையும் அலங்கோலங்களையும் துணிச்சலுடன் அம்பலப்படுத்திக் காட்டுகின்றன. இலங்கை வானொலிக் கவிதைகளும் குறிப்பாக "சேவல் கூவுகிறது" கவிதையும் ஈட்டி முனைக்கு நிகரானவையாக அமைந்துள்ளன.

சமூகக் கொடுமைகளுக்கு எதிராக - அநியாயங்களுக்கு எதிராக வர்க்க முரண்பாடுகளுக்கு சவாலாக தனது எழுத்தை - சிந்தனையை மொத்தம் சேர்த்து வெற்றி கண்டார் என்ற பெருமையும் இவருக்குண்டு.

இலக்கியத்தை வெறும் பொழுது போக்காகவோ - அல்லது பணம் ஈட்டுதற்காகவோ பயன்படுத்தாமல் சமூகமேம்பாட்டுக்காக - மனித குலத்தில் உன்ன தங்களுக்காக பயன்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளை ஆதார சுருதியாகக் கொண்ட கொத்தன் புதுக்கவிதையின் போக்கையும் அதனால் ஏற்படத்தக்க நாசத்தையும் - மரபு வழிவந்த கவிதைகளிலிருந்து புதுக்கவிதைகள் எவ்விதமாக மாறுபட்டு வலுவிழந்து வெறும் சக்கையாகப் பிரசவிக்கப் படுகின்றன என்பதில் உறுதி பூண்டவராக இருக்கின்றார்.

'கவிதைகளில் ஓசைநயம், சொல்நயம், கருத்துக் களை வெளிப்படுத்தும் பாங்கு என்பன மிக அவசியமானவை என்னும் துலாம்பரமான கோட்பாட்டைக் கொத்தன் கொண்டிருக்கிறார்.

மக்களே மாநிலத்தின் மாணிக்கக் குவியல்கள் என்ற இலட்சிய வேட்கையுடன் இலக்கியத்தை ஆலிங்கனம் செய்யும் கொத்தன் அவர்கள், நல்லிலக்கியம்-நசிவிலக்கியம் என்று பிரித்தறியும் ஆளுமைத் திறனை வாசகர்களிடையே அதிகமதிகம் வளரச்செய்துள்ளார். அதன் பெறுபேறாக நல்லவைகளைத் தேடிப் படிக்கும் பரம்பரை ஒன்று இங்கு மொட்டவிழ்ந்துள்ளதனை நாம் ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும்.

'பாவம் நரிகள்' கொத்தனின் அற்புதமான நாடகமாகும். அவரின் நெறியாள்கை அனைவருக்குமே பிரமிப்பையூட்டியதெனலாம். மிருகங்களை கதாபாத்தி ரமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த நாடகம் - அவரின் நாடகத் தேர்ச்சிக்கு ஒரு முத்திரையாகும்.

மருதமுனை சம்சுல் இல்ம் மகா வித்தியாலய அதிபராகப்பணி செய்த கொத்தன் வீ. எம். இஸ்மாயில் - இலக்கிய வாதியாக மட்டும் செயற்படவில்லை. சிறந்த ஓவியராகவும் புவியியல் சரித்திரம் போன்ற பாடங்களைப் போதிப்பதில் நல்ல வித்துவம் மிக்கவராகவும் விளங்கியவர் - நல்ல விமர்சகராகவும் பிரகாசித்து வந்தவர்.

அவரின் கவிதைகள், கதைகள், நாடகங்கள், உருவகக் கதைகள் சிந்தனையைத் தூண்டுவதோடு மட்டும் மட்டுப்படாது புதிய சமுதாயத்தின் நிர்மாணத்துக்கான - எழுச்சிக்கான அடி நாதமாகவும் பிரகாசித்துள்ளன.

அடக்கமான சுபாவங்களினாலும் எளிமையான கோலத்தினாலும் அனைவராலும் மதிக்கப்படுகின்ற கொத்தனுக்கு அவரின் இலக்கிய சேவையை மெச்சி இலங்கை அரசாங்கத்தின் முஸ்லிம் சமய, கலாசார இராஜாங்க அமைச்சினால் "தாஜுல் அதீப்" விருது வழங்கப் பட்டமை முற்றிலும் பொருத்தமானதாகவே அமைந்துள்ளது. இலக்கிய நெஞ்சங்களும் இதனால் புளகாங்கிதம் அடைகின்றன.

• • •

# அஸ்தமனத்தின் பாடல்

**புலோலியூர் வேல்நந்தன்**



பூமரக்காடுகளின்
கனவிழந்துபோன
துளிர்ப்பில்
மொட்டுகளிலேயே
கருக்கிப் போகும்
நம்பிக்கைகள்
ஊன்றுகோல்
தந்துவிட்டுப் போன
காலத்திடமே
சான்றிதழ் தேடி
அலைகிறது மனம்

விருப்பங்களை
வரையத்தொடங்கிய
தூரிகை முறிந்துபோய்
முடிவுறா ஓவியமாய்
போனதெம் வாழ்வு
எம் கண்ணீருக்கே
விலை பேசும்
உலகிடம்
காணொளிகளாய்
விற்கப்படும்
எம் துயரங்கள்

எமக்கான
சூரியனின்
அஸ்தமனத்தின் பின்
இப்போது
இங்கிருக்கும்
மின்மினிகளை
நம்பியபடி
ஒளிதேடித் தவிக்கிறது
எங்களின்
எதிர்காலம்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரோடு இணைந்து உரிமைகளை வென்றெடுப்பதே வடக்கு–கிழக்கு முஸ்லிம்கள் முன்னுள்ள பணி

## மருதூர்க்கொத்தன்

எந்தவிதமான "அடையாள அரசியலுக்குள்ளும்" அகப்படாத மருதூர்க்கொத்தனின் இக் கட்டுரை இன்றைய காலத்துக்கும் மிகப்பொறுத்தமாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழர்களின் தலைமைத்துவம் கேள்விக்குள்ளாக்கப்பட்ட நிலையில் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் தமது உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கு மீண்டும் பாராளுமன்றம், தேர்தல் என பழைய பல்லவியையே பாடவேண்டிய நிலையில் உள்ளது. இரு சிறுபான்மை சமூகங்களும் இணைந்து தான் தமது உரிமைகளை பெற்றுக்கொள்ள முடியும் என்பதை வெகு யதார்த்தமாக அன்றே சொல்லி விட்டார் மருதூர்க்கொத்தன். இதுதான் ஒரு படைப்பாளியின் தீர்க்கதரிசனம்

**- ஆசிரியர்**



மொழி முதலாக எல்லா அம்சங்களிலும் சமஉரிமை எல்லா இனங்க ளுக்கும் உத்தரவாதப்படுத்தப்பட்ட ஒன்றுபட்ட இலங்கைதான், முஸ்லிம்களைப் பொறுத்த மட்டில் மிகப் பொருத்தமுடையதாகும். இன்று அப்படியான ஒரு இலங்கையைத் தேடி எங்கே போவது?

சோஷலிச அமைப்பில் இனங்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக் கப்பட்டு, இன சமத்துவம் பேணப்பட்டிருக்கும், பொருளாதார சமத்துவம் என்னும் ஜோதியின் வரவால் இனவாதம் எங்கோ ஒளிந்திருக்கும் உண்மை தான். சோஷலிஸ சமுதாயம் மலர்விக்கப்பட்டதா? நம்பிக்கை நட்சத்திரங் களாகப் பளிச்சிட்ட இடது சாரித்தலைவர்கள். அரசியல் மதியூகத்தோடும், தீர்க்க தரிசனத்தோடும் நடந்து கொண்டார்களா? இனவாதச் சேற்றில் மூழ்கிய தேசிய முதாளித்துவத்துக்கும் தரகு முதலாளித்துவத்துக்கும் முண்டுகொடுக்கப் போய் தாங்களும் சீரழிந்து, நாட்டு மக்களின் வாழ்வையும் அல்லவா அழித்து விட்டார்கள்.

1953 ஆம் ஆண்டு ஹர்த்தாலின் பெறுபேற்றை "சிங்களம் மட்டும்" கோஷித்து நின்ற எம். ஈ. பி. 1956 இல் வாரிச்சுருட்ட வழியமைத்தவர்கள் இடது சாரிகள்தான். "பிலிப்பும்" "தகாவும்" எஸ்.எல்.எப்.பியுடன் சங்கமமாகி எம்.ஈ.பி. ஆனார்கள். சமசமாஜிகளும் கொம்யூனிஸ்ட்களும், போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் செய்து கொண்டு 1956 பொதுத் தேர்தலைச் சந்தித்தார்கள் இது வரலாறு.

தேசிய முதலாளிகள் ஓரணியிலும், தரகு முதலாளிகள் ஓரணியிலும், இடது சாரிகள் ஐக்கியப்பட்டு ஓரணியிலும் 56 தேர்தல்களத்தில் குதித்திருந் தால் நாட்டின் வரலாறு வேறுவிதமாக அமைந்திருக்கும். இடது சாரிகள் வென்றிருக்கலாம் அல்லது முதலாளித்துவ சக்திகள் ஆட்சியமைக்க முடியாது. அந்தரித்திருக்கலாம். அடுத்தடுத்த தேர்தல்களிலாவது கேராளா வில் நடந்தது இங்கும் நடந்திருக்கலாம்.

1972 குடியரசு யாப்பு வரைந்த வேலையில், ஏகாதி பத்திய சோல்புரி தந்த 29 ஆவது சலுகையை யாவது சிறுபான்மையினருக்கு வழங்குவோம் என வாதாடி, முடியாத நிலையில் பதவியைத்துறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியேறி இருந்தால், கடந்த ஜனதிபதித் தேர்தலில் கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா அவர்கள், சிறுபான்மை மக்களின் குறிப்பாகத் தமிழ் மக்களின் அத்தனை வாக்குகளையும் பெற்றிருக்கக்கூடும். ஜனதிபதியாகவும், வந்திருக்கக் கூடும். சிலியில் நடந்தது இங்கும் நடந்திருக்கலாம். (இடது சாரிகள் பாராளுமன்றப் பாதையை நிராகரித்திருக்க வேண்டும் என்பதுதான் தத்துவார்த்தம்)

இன உணர்வுக்கு அழுத்தம் கொடுப்பது அனர்த்தத்தையே விளைவிக்கும் என மதிப்புக்குரிய ஏ. ஏ. லத்தீப் அவர்கள் எழுதியது முற்றிலும் சரியானதே ஆனால், இன உணர்வை மூலதனமாகக் கொண்டதுதானே நமது நாட்டு அரசியல். எனவே பேரினவாத ஒடுக்கு முறைக்கு ஆளாக்கப்படுகின்ற சிறுபான்மையினம் என்ற வகையில், முஸ்லிம்களின் உரிமைக் குரலை, உலகளாவ ஒலிக்கச் செய்யும் ஆற்றலுடைய அரசியல் இயக்கம் ஒன்றைக் காண வேண்டியது இன்று வரலாற்றுத் தேவையாகிவிட்டது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் மகா நாட்டில் கலந்து கொண்ட பெரும்பாலான கட்சிகள் இன நலன் பேணும் கட்சிகள் என்ற கட்டுக்குள் அடங்கக் கூடியவையே. அம் மகாநாட்டில் முஸ்லிம்களின் சார்பாக பங்குபற்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்று இல்லாமற் போன குறையை முஸ்லிம் வெகு ஜனங்கள் இன்று உணரத் தொடங்கிவிட்டார்கள். முஸ்லிம் லீக், முஸ்லிம் கௌன்சில், முஸ்லிம் காங்கிரஸ் என்றெலாம் புழுதி புரட்டப்படுகிறது. இவற்றில் ஒன்றாவது அங்கீகாரம் பெறவில்லை. முன்னாள் இன்னாள் அமைச்சர்கள், செனற்றர்கள், எம்.பி.க்கள் சட்டத்தரணிகள் தான் இவற்றின் பிதாமகர்களாகச் செயல்படுகிறார்கள். இருந்தும் என்ன? இவர்கள் பேரின வாதக் கட்சிகளில் சங்கமமாகி, பதவிகளைச் சுவைத்தவர்கள். இவர்களின் புனர்ஜன்மத்தை எந்தளவுக்கு முஸ்லிம் வெகுஜனங்கள் நம்பலாம் என்பதும் கேள்விக்குரியது. தூர நோக்கும், தியாக உணர்வும், தூய்மையும் நிறைந்த ஒடுக்கு முறைகளுக்குள்ளாக்கி நிற்கும் சிறுபான்மை இனத்தின் விடிவுக்காகத் தனித்து நின்று செயற்படும் ஓர்மை மிக்கவர்களைக் கொண்ட அரசியல் இயக்கமே இன்று முஸ்லிம்களுக்குத் தேவை.

இப்படித்தான் இன்று முஸ்லிம்கள் சிந்திக்கிறார்கள். எந்தத் தத்துவத்தைச் சொல்லியும் இதைத் தடுக்க முன் வராதீர்கள். தத்துவமயப்படுத்த வேண்டியவர்கள் சிறுபான்மையினர் அல்லர். பெரும் பான்மையினர் தான் என்பதை 47 ஆம் ஆண்டில் பின் நிகழ்ந்தவை நிரூபித்து விட்டனவே!

**அதிகாரப் பரவலாக்கலும், முஸ்லிம்களும்**

சர்வகட்சி மாநாட்டின் போது மாகாணசபை யோசனையை முஸ்லிம் கௌன்சில் முன்வைத்தது. அதுவே, முஸ்லிம்களின் மறுபரிசீலலைக்கு அப்பாற்பட்ட கோரிக்கை என அடித்துச் சொல்லப்பட்டது. கிழக்கை மூன்றாக்கி அதில் ஒன்று முஸ்லிம்களுக்கு என்று முஸ்லிம் லீக் ஆலோசனை கூறியது.

“ அதிகாரப் பரவலாக்கல் செய்ய அரசு முன்வந்தது தமிழ்ப் போராளிகளின் ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும். என்ற நோக்கில்தான். இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தமிழ்த் தீவிரவாதிகளின் கைகளில் தான் தங்கியிருக்கிறது. தீவிரவாதிகளைத் திருப்தி செய்யும் தீர்வே இனப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் என்பதை புத்தியுள்ள எவரும் ஒப்புக்கொள்வர். அரசின் ஆலோசனையை எதிர்க்கும் எதிர்க்கட்சித்தலைவரும் தனது பிரசாரத்துக்கான எடுகோள்களில் ஒன்றாக இதையும் வலியுறுத்தி வருகிறார். ”

இன்று கிழக்கில் உள்ள முஸ்லிம் பெரும் பான்மைப் பிரதேசங்களை இணைத்து ஒரு மாகாண சபை என்று கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. வடக்கிலும், கிழக்கிலும் உள்ள முஸ்லிம் கிராமங்களை இணைப்பது என்றும் பேசப்பட்டது.

அதிகாரப் பரவலாக்கல் செய்ய அரசு முன்வந்தது தமிழ்ப் போராளிகளின் ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும். என்ற நோக்கில்தான். இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தமிழ்த் தீவிர வாதிகளின் கைகளில் தான் தங்கியிருக்கிறது. தீவிரவாதிகளைத் திருப்தி செய்யும் தீர்வே இனப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் என்பதை புத்தியுள்ள எவரும் ஒப்புக் கொள்வர். அரசின் ஆலோசனையை எதிர்க்கும் எதிர்க்கட்சித் தலைவரும் தனது பிரசாரத்துக்கான எடுகோள்களில் ஒன்றாக இதையும் வலியுறுத்தி வருகிறார்.

மொழிவாரி மாகாணத்தீர்வே, போராளிகளையும் திருப்தி செய்யும் என்ற தொனியில்தான் கூட்டணியினரும் அபிப்பிராயம் வெளியிடுகிறார்கள். இந்திய அரசும், தமிழ்க் குழுக்களின் மீது தனது தீர்வைத் திணிக்காது என்பதற்குரிய அறிவிப்புகளும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தெந்த நிலைகளால் தமிழ் மக்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டார்களோ: அந் தந்த நிலைமைகளால் முஸ்லிம்களும் அவ்வாறே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது தான் சர்வ நிச்சயமான உண்மை. இனப் பிரச்சினை என்பது தமிழர்களும், முஸ்லிம்களும் சம்பந்தப்பட்ட பிரச்சனையே. தமிழர்கள் பிரச்சனைகளை முகங்கொண்டு போராடினர்கள். தியாக வேள்வியில் இறங்கினார்கள், முஸ்லிம்கள். புலன்களற்ற முண்டங்கள் போல சலனமற்று இருந்தார்கள். தமிழர்களின் போராட்டங்களால் கிடைத்த அற்ப சொற்ப நன்மைகளையும் முஸ்லிம்களும்தான் பகிர்ந்து அனுபவிக்கிறார்கள்.

அரசாங்கத்தின் யோசனை மாகாண சபை தமிழ்க ளின் கோரிக்கை வடக்கும் - கிழக்கும் இணைந்த மொழிவாரி அமைப்பு. இந்த இடத்தில் முஸ்லிம்கள் குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்கள் ஒன்றைத் தீர்மானிக்க வேண்டும். நாங்கள் யார் பக்கம் ? அரசின் பக்கமா ? அல்லது பேரினவாதப் பரம்பலுக் கெதிராக எங்களுக்காகவும் போராடி வருகின்ற தமிழர் பக்கமா?

மொழிப் பிரச்சினை விவாதம் உச்சக் கட்டத்தில் இருந்த வேலையில், ஐ .தே. க. களனி மகா நாட்டில் சிங்களம் மட்டும் தீர்மானத்தை எடுத்த அருட்டுணர்வில் அல்லது தூண்டுதல் காரணமாக கொழும்பில் முஸ்லிம் இயக்கங்கள் கூடி "சிங்களம் மட்டும்" தீர்மானத்தை எடுத்தன. இது, இலங்கையின் பட்டிதொட்டிகளில் வாழும் முஸ்லிம் மக்களின் விருப்பத்துக்கு மாறாகவும், தீர்மானம் எடுத்தவர்கள் தங்களின் மனசாட்சிக்கு விரோதமாகவும், எடுத்த மாபெரும் தவறு. இத் தீர்மானம் மொழி, உரிமைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தியது. தமிழ் மக்களின் வெறுப்பை முஸ்லிம்களுக்கு வென்றெடுத்துத் தந்தது.

இப்பொழுது அதிகாரப் பரவலாக்கல் கட்டத்திலும், நாம், பேரின வாதிகளுக்குச் சாதகமாக பிரித்தாளும் ராஜ தந்திரத்துக்குப் பலியாகிச் செயல்பட முனைவதா? தென் இலங்கை முஸ்லிம்களுக்கு இது பாதுகாப்பாக ஒரு வேளை அமையலாம். ஆனால் பேசும் மொழி: வாழும் கிராமிய அமையம்: தொழில் ரீதியான வலைப் பின்னல் கலப்பு ஆகிய வற்றால் தமிழ் மக்களோடு, இணைந்திருக்கின்ற வடக்கு - கிழக்கு முஸ்லிம்களுக்கு இன்றைய எமது நிலைப்பாடு ஆபத்தாக அமைந்துள்ளது.

மொழிவாரி மாகாண அமைப்பில், தமிழர்களுக் குள்ளது. போன்ற உரிமைகள் முஸ்லிம்களுக்கு நூற்றுக்கு நூறு வீதம் உண்டு என்றுயாப்பெழுதப் பண்ணும் காரியத்தைச் சிந்திப்பதே தீர்க்கமான மதிநுட்பமான அணுகு முறையாகும். முஸ்லிம்களின் பாராளுமன்றப் பிரதி நிதித்துவம், மாகண சபைப் பிரதி நிதித்துவம் என்பன உறுதிப்படுத்தப்பட, முஸ்லிம்களின் இன விகிதாசாரத்தைப் பாதிக்காத குடிப்பரம்பலை உத்தரவாதம் செய்ய கல்வி, தொழில் வாய்ப்பு, காணிக் குடியேற்றங்களில் உரிய பங்குகனை நிச்சயமாக்கத்தக்கதான சட்டவரைவைச் செய்ய முயற்சிக்க வேண்டும்.

> **"மொழிவாரி மாநில அமைப்பில், முஸ்லிம்கள் உரிமைகளோடு, தமிழர்களோடு சமத்துவமாக வாழலாம் - வாழமுனைய வேண்டும் என்பதை எங்களால் சீரணிக்க முடியாத ஒரு உண்மையிருக்கிறது. இலங்கை முஸ்லிம்கள் தமிழத் தேசிய இனத்தின் ஓர் அங்கம் என்பது தான் அந்த உண்மை. இன்றும் தமிழர்களே எங்களைத் தனியொரு தேசிய இனமாக ஏற்கின்ற நிலைமை நிலை நாட்டப்பட்டிருக்கிறது. என்பது விதி விலக்கு எது எப்படி இருந்தபோதிலும், தமிழ் மொழி மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் தேசிய இனங்கள் இணைந்து வாழுகின்ற வழி முறைகளைப் பற்றித்தான் தமிழர்களும், முஸ்லிம்களும் சிந்திக்க வேண்டும்."**

மேலாக வடக்குக் - கிழக்கு மாகாணம், தமிழர்களினதும், முஸ்லிம்களினதும் தாயகம் என்ற கோட்பாடு ஏற்கவைக்கப்பட வேண்டும். தென்னிலங்கையில் வாழும் முஸ்லிம்கள், விரும்பினால், அல்லது நிர்ப்பந்தங் களுக்குள்ளானால், வடக்குக் - கிழக்கில் குடியமர அனுமதிக்கப்பட்ட வேண்டும். அட்டாளைச்சேனையில் சகல பீடங்களையும் உள் அடக்கிய முஸ்லிம் பல்கலைக கழகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். இத்தகைய கோரிக்கைகளை தமிழர்களோடு, இணைந்து வென்றெடுக்க முயற்சிப்பதுதான் இன்று வடக்குக் - கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் முன்னுள்ள ஒரேயொரு தேசியப் பணியாகும். தமிழர்களின் கோரிக்கை பலவீனப் படும் வகையில் மாற்று யோசனைகளை முன்வைத்துக் குட்டையைக் குழப்புவது மதியூகமான அணுகு முறையல்ல.

முஸ்லிம் மாகாண சபை அமைக்கும் முயற்சியைக் காரியமாக்கும் போது பல நடை முறைப் பிரச்சிளைகள் உருவாக இடமுண்டு. இழுபறி நீண்டு எதுவுமே ஆகாமல் போய்விடலாம். ஆகிவிட்டாலும் சங்கிலித் தொடரான பிரச்சினைகள் உருவாகி இனமோதல்கள் வரலாறாக மாறி விடலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்கள் வேறு நாடுகளிலேயே சிறுபான்மை யினராக இல்லையா? தமிழ் நாட்டில் இருக்கிறார்களே! எனவே, இங்கும் நாம் முக்கிய சிறுபான்மையினமாக இருப்போமே!

அரசு முன் வைக்கின்ற ஒன்பது மாகாண சபைகள் என்ற தீர்வை போராளிகளும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஏற்றுக் கொண்டால் எல்லாம் விரைவில் சுபமாகிவிடும். கிழக்கில் முஸ்லிம் முதலமைச்சர் என்ற கற்பனை உருவாகக் கூடாது. சிங்கள மக்களது வாக்குப் பலத்தையும் ஆதாயமாக்கி முஸ்லிம்கள் அரசு கட்டில் ஏறும் நிலைமை உருவாகலாம். அந் நிலையில் என்ன நடக்கும் என்பது வெளிப்படையானது. மத்திய அரசின் தந்திரோபாயங்களும், கொழும்பில் உள்ள முஸ்லிம் தலைமையின் செல்வாக்கும் மாகாண அரசில் ஆதிக்கம் செலுத்த முற்படலாம் அப்போது, தமிழ், முஸ்லிம் மக்களுக்கு விரோதமான செயல் முறையில் மாகாண அரசு ஈடுபட வழியுண்டாகும். தமிழ் மக்கள் செய்த தியாகம் கிழக்கில் வீணாகிப் போகும். இது தெரிந்து தான் தமிழர்கள் மொழிவாரி மாநிலத்தைக் கோரி நிற்கிறார்கள். ஏற்கனவே அல்லை கந்தளாயை அள்ளிக் கொடுத்த - பட்டிப்பளையைப் பறிகொடுத்த வீர வரலாறு படைத்தவர்கள் நம் முஸ்லிம் தலைவர்கள்.

அரசின் ஒன்பது மாகாணக் கோரிக்கை நிறைவேறும் பட்சத்தில், கிழக்கு மாகாண முஸ்லிம்களில் தமிழர்களோடு அணி சேரவேண்டும். இது தமிழர் கட்சியோடு இணைவதால் சாத்தியமாகலாம். திறமையும், நேர்மையும், தியாக உணர்வும் மிக்க முஸ்லிம் தலைவர்கள் தமிழர் இயக்கத்தில் அங்கம் பெற்றால், பாண்டிச்சேரியில் பாருக் மரைக்கார் முதல்வாரக இருப்பது போல, கிழக்கில் முஸ்லிம்களும், முதலமைச்சர் பதவி வகிக்கலாம். தமிழர் இயக்கங்கயோடு இணைய விரும்பாவிட்டால், தனி இயக்கங் கண்டு, தமிழர்களோடு இணைந்து ஆட்சி நடத்தும் உரிமைகளை வென்றெடுக்கும் நிலைப்பாட்டை மாத்திரமே முஸ்லிம்கள் எடுக்க வேண்டும்.

மொழிவாரி மாநில அமைப்பில், முஸ்லிம்கள் உரிமைகளோடு, தமிழர்களோடு சமத்துவமாக வாழலாம் - வாழமுனைய வேண்டும் என்பதை எங்களால் சீரணிக்க முடியாத ஒரு உண்மையிருக்கிறது. இலங்கை முஸ்லிம்கள் தமிழத் தேசிய இனத்தின் ஓர் அங்கம் என்பது தான் அந்த உண்மை. இன்றும் தமிழர்களே எங்களைத் தனியொரு தேசிய இனமாக ஏற்கின்ற நிலைமை நிலை நாட்டப்பட்டிருக்கிறது. என்பது விதி விலக்கு எது எப்படி இருந்த போதிலும், தமிழ் மொழி மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் தேசிய இனங்கள் இணைந்து வாழுகின்ற வழி முறைகளைப் பற்றித்தான் தமிழர்களும், முஸ்லிம்களும் சிந்திக்க வேண்டும். அதே போல தென்னிலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம்கள் சிங்கள மக்களோடு தான் சுமுக உறவைப் பேண வேண்டும்.

> “தமிழ், முஸ்லிம் மக்களுக்கு விரோதமான செயல் முறையில் மாகாண அரசு ஈடுபட வழியுண்டாகும். தமிழ் மக்கள் செய்த தியாகம் கிழக்கில் வீணாகிப் போகும். இது தெரிந்து தான் தமிழர்கள் மொழிவாரி மாநிலத்தைக் கோரி நிற்கிறார்கள்.”

ஒன்பது மாகாணங்களை விடுத்து மூன்று மாகாணங் களை ஏற்படுத்துவதே நாட்டுக்கு மிக ஆரோக்கியமாகும். வடக்கும், கிழக்கும் இணைந்த ஒரு மாகாணம் வட மத்திய, மத்திய ஊவா, சப்ரகமுவ மாகாணங்கள் இணைந்த மற்றொரு மாகாணம் - வடமேல், மேல், தென் மாகாணங்கள் இணைந்த மூன்றாவது மாகாணம் - என்று அமைக்கலாம். இதனால் மலைநாட்டுத் தமிழர்கள் பற்றிய பீதியிலிருந்த சிங்களவர் விடுபடலாம்.

மூன்று மாகாணங்களிலும், மத்திய அரசிலும், மும்மொழிக் கொள்கை பின் பற்றப்படவேண்டும். தமிழ் மொழி மாகாணத்தில் வாழும் சிங்கள மக்களுக்கும் மொழி உரிமை முதலாக சகல உரிமைகளும் வழங்கப் படவேண்டும். அவர்களது வழிபாட்டுத் தலங்களுக்கு மாகாண அரசின் பாதுகாப்பும் உத்தரவாதப் படுத்தப்பட வேண்டும். அதேபோல சிங்கள மாகாணங்களின் வாழும் முஸ்லிம், தமிழ் மக்களுக்கும், மொழியுரிமை முதலாகச் சகலவிடயங்களிலும், சம உரிமை வழங்கப்பட வேண்டும். அவர்களது வழிபாட்டுத் தலங்கள் மாகாண அரசுகளாலும் பாதுகாக்கும் உத்தரவாதம் வரையப்பட வேண்டும்.

வடக்குக், கிழக்கு இணைப்பை சிங்களவர் மறுப் பதற்குக் கடல் வளம் ஒரு காரணம். பாதுகாப்புப் படைகள் மத்திய அரசின் வசமே இருக்கும். நாட்டின் முழுக் கடற் பிரதேசமும், கடற்படையின் கட்டுப் பாட்டில் தானே இருக்கப் போகிறது. திருகோணமலைத் துறைமுகம் கடற்படைத்தளம் என்ற வகையில் சிறிலங்கா நேவியின் கைகளுக்குள்தான் இருக்கும். அதே போல சகல விமானப் படைத் தளங்களும் இலங்கை விமானப் படையின் கட்டுப் பாட்டில்தான் இருக்கும். இனப் பிரச்சினை தமிழர் திருப்தியுறும் வகையில் தீர்க்கப்பட்டால், இந்தியாவும், “சாக்” அமைப்பும் இலங்கையின் பாதுகாப்புக்கும், இறைமைக்கும் உத்தரவாதம் வழங்குவது தவிர்க்க முடியாதாகி விடும். அல்லவா ?

எனவே, துட்டகைமுனு யுகத்தையும், ராஜராஜ சோழன் யுகத்தையும் பற்றிய கற்பனைகளை விடுத்து, பரஸ்பரம் புரிந்துணர்வோடு, சிங்கள, தமிழ் மக்கள் பிரச்சினையை அணுக வேண்டும். முஸ்லிம்களும் மதியூகமாக நடக்க வேண்டும்.

**(வீரகேசரி -16-09-1986)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு.வ.அ. தமிழுக்களித்த 'பூவரசம் பூ'


திரு. வ.அ.இராசரத்தினம் இயற்கை எழில் கொஞ்சும் திருகோணமலை - மூதூரில் பிறந்த ஓர் கிறிஸ்தவ தமிழர். தமிழ் ஆசிரியராக வாழ்க்கையை ஆரம்பித்தவர். பாடசாலை அதிபராகப் பணியாற்றி கடந்த ஆண்டில் மரணம் எய்தியவர்.

தமிழிலிலும் ஆங்கிலத்திலும் புலமைவாய்ந்த திரு.வ.அ. இராசரத்தினம் மறுமலர்ச்சிக் கால இலக்கியச் சிற்பியாவார். மறுமலர்ச்சி, ஈழகேசரி, சுதந்திரன்-வீரகேசரி, தினகரன் முதலான இதழ்களையும், சஞ்சிகைகளையும்தனது சிறுகதைகள் மூலம் அலங்கரித்தவர். ஈழகேசரியில் பிரசுரமான "தோணி" என்ற இவரது சிறுகதை. தமிழகத் திலிருந்து விஷய கனம்மிக்க படைப்புக்களை மாத்திரமே தாங்கி வெளிவந்த "மஞ்சரி"யில் மறுபிரசுரமானது.

திரு.வ.அ. பிறந்து வளர்ந்து வாழ்ந்த மூதூர் நகரும், அவர் உலாவி மகிழ்ந்த திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனைப் பிரதேசங்களும் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயங்களான தமிழர்களும் முஸ்லிம்களும் பாலோடு தேன் கலந்த தென்னப் பழகி மகிழும்பாங்கு பெற்றவை. இதனால் திரு.வ.அ முஸ்லிம் மக்களோடு தனது மரண பரியந்தம் அன்புறவு கொண்டு வாழ்ந்தார். அண்ணல், எம்.ஏ.றகுமான் முதலாக முஸ்லிம் நண்பர்களோடு இதமாகவும், இறுக்கமாகவும் பழகி வந்தவர். திருக்குர்ஆன் முதலாக இஸ்லாமிய நூல் களிலும், இலக்கியங்களிலும் முஸ்லிம்களின் சமய சமூக பண்பாட்டுச் சங்கங்களிலும் பரிச்சயம் மிக்கவராக இருந்தார். மதபேதம், இனபேதம் கடந்து பழகுவதில் மங்கள செளந்தர்ய மனோலயம் கொண்டவர் அவர்.

ஐம்பதுகளில் சுதந்திரனில் "ஏகலைவன்" என்ற புனை பெயரில் "சுபைதா" என்றொரு சிறுகதையை எழுதினார். அது அவரது கதைத் தொகுப்பில் "தலாக்" என்ற பெயரில் இடம்பெற்றுள்ளது. இஸ்லாமியர்களின் மணவிலக்கு சார்ந்த கருவை வைத்து எழுதப்பட்ட கதை. ஏகலைவனின் "சுபைதா" என்ற கதையே நான் சிறுகதைகள் எழுதுவதற்கு தூண்டுகோலாயமைந்தது. இஸ்லாமிய வாழ்வியல் நெறிகள் சார்ந்த கருப்பொருளும், இஸ்லாமியப் பாத்திரங்களும் கொண்ட இன்னும் சில சிறுகதைகளையும் திரு.வ.அ.இராசரத்தினம் எழுதியுள்ளார்.

ஆகவே, திரு.வ.அ. மகாகவி அல்லாமா இக்பாலின் கவிதைகளில் நெஞ்சிழந்தது ஒன்றும் ஆச்சரியப் படத்தக்கதல்ல. "பூவரசம் பூ"வுக்கான தனது உரையில் திரு.வ.அ இராசரத்தினம் பின்வருமாறு கூறுகிறார்.



"மனிதர்கள் தங்களை மாற்றிக் கொள்ளாவிடில் நிச்சயமாக அல்லா அவர்களுக்கு புரிந்த அருளை மாற்றி விடுவதில்லை. என்று திருக்குர் ஆன் கூறுகிறது. (13ம் அதிகாரம் 11ம் வாக்)

இந்த அடிப்படையை வைத்துத் தான் இக்பால், ஜேர்மன் நாட்டுத் தத்துவஞானி கெதேயின் "மேற்கு நாட்டுத்திவான்" என்ற நூலுக்குப் பதில் கூறும் முகமாகத் தம் கீழ்நாட்டுச் செய்தியை எழுதினார். ஆயினும் காஷ்மீரப் பிராமண குலத்தினரான இக்பாலின் கீழ் நாட்டுச் செய்தியில் இந்தியத் தத்துவங்களும் அடங்கியிருப்பதாக எனக்குப் படுகின்றது. எப்படி இருப்பினும் அவர் கூறும் தத்துவம் நம் எல்லோருக்கும் பொதுவான சொத்து. அச்சொத்தின் பங்காளி என்ற எண்ணந்தான் எனக்கு. இந்நூலை மொழி பெயர்க்கும் தைரியத்தைக் கொடுத்தது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.வ.அவின் இந்த வரிகளைப் படிக்கின்ற போதெல்லாம் "அறியாமல் என்தெய்வம் உன்தெய்வம் என்பார்க்கும்

அவ்வகைக் காரணத்தை"

"மதபேதம் ஓதி மதி கெட்டவர்க் கெட்டாத
வான்கருணை வெள்ளமாகி" என்னும்

குணங்குடி, மஸ்தான் ஸாஹிபின் ஆசிரிய விருத்த அடிகள் என் ஞாபகத்துக்கு வரும்.

தமிழிலும் ஆங்கிலத்திலுமாக நிறைய இலக்கியத்தேடலை நடாத்தியவர். திரு.வ.அ. 1953ம் ஆண்டிலேயே, மகாகவி அல்லாமா இக்பாலின் பயாம்-இ-மஷ்ரிக்க என்ற நூலின் ஆங்கில மொழி பெயர்ப்பைப் படித்திருக்கிறார். இது பற்றி அவர் பின்வருமாறு கூறுகிறார். 1953ம் ஆண்டின் சித்திரை விடுமுறையில் மகாகவி அல்லாமா இக்பால் அவர்களின் தொகுதியொன்றைப் படிக்க நேர்ந்தது. இக்பாலை ஆங்கிலத்தில் படித்து அப்போது தான் எழுத்துலகப் பிரவேசம் செய்திருந்த என் நண்பர் கவிஞர். அண்ணலுக்கு மொழி பெயர்த்துச் சொல்லிக் கொண்டிருக்கையில். "இக்பாலுக்குத் தாங்கள் தமிழுருவம் தந்தால் என்ன? என்று கேட்டார் கவிஞர்.

நான் தயங்கினேன் நண்பர் வற்புறுத்தினார். அவ்வற்புறுத்தலினால் இந்நூலின் 21 ம் பாடலாய் வரும் பாடலை, முதன் முதலில் நான் பாடினேன். பெருமகிழ்வு கொண்ட கவிஞர் தொடர்ந்து தூர்ஜீனாவின் "பூவரசம் பூ" முழுவதையும் தமிழில் இசைக்கும்படி வற்புறுத்தினார். நானும் பாடினேன்.

"பூவரசம் பூ" பிறந்த ரிஷிமூலத்தை மிகுந்த நேர்மையோடு கூறுகிறார். வ.அ. பூவரசம் பூவை வசனத்தில் மொழிபெயர்க்க அண்ணல், அதைச் செய்யுள் வடிவாக்கினாரா என்று சிலர் ஐயுறக்கூடும். இருந்தும் என்னைத் தெரியும் எனக்கு என்ற அவரது ஓர்மையும் நேர்மையும் அவரது உரையில் வெளிப்படுகிறது. திரு.வ.அ. இராசரத்தினம் சங்க இலக்கியம் முதல் தற்கால நவீன தமிழிலக்கியம் வரை நன்கு அறிந்தவர், படித்தவர். அதன்பால் தமிழ்ச் செய்யுள் மரபு அவருக்கு வாலாயமானதே. அவர் விரும்பியிருந்தால் நிறையக் கவிதைகள் எழுதியிருக்கலாம். புதுமைப்பித்தன் சிதம்பர ரகுநாதன், கல்கி கிருஷ்ணமூர்த்தி போல இலங்கையிலும் அ.ந.கந்தசாமி முதலாக பல படைப்பாளர்கள் சிறுகதை, நாவல், நாடகம், கவிதையென்று பல்துறை படைப்பாற்றலை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அந்த வரிசையில் வ.அ.வையும் கொள்ள வேண்டும். எஸ்.பொன்னுத்துரை எழுதிய முதலாவது ஆக்கம்.

"ஆனா ஆவன்னா படிப்பேன் - நான்
ஆங்கிலப் பாடமும் படிப்பேன்
ஈனா ஈயன்னா படிப்பேன் - நான்
இங்கிலிஷ் பாடமும் படிப்பேன்" என்று தொடங்கும்

கவிதைதான்.

மகாகவி அல்லாமா இக்பாலை தமிழுக்கு முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் அறிஞர் ஆர்.பி.எம். கனி (பி.ஏ, பி.எல்) அவர்கள்தான். அவர் இக்பாலின் கவிதைகளை வசன கவிதையாகப் பெயர்த்தளித்தார். கவிஞர் அப்துல் காதர் லெப்பையவர்கள் இக்பாலின் தேர்ந்தெடுத்த கவிதைகளைச் செய்யுள் வடிவில் ஆக்கி "இக்பால் இதயம்" என்ற நூலாக வெளியிட்டார். "ஜாவீது நாமாவை"யும் தமிழ் செய்யுளாக ஆக்கினார். கவிஞர் அப்துல் காதர் லெப்பை அவர்களைத் தொடர்ந்து அல்லாமா இக்பாலின் கவிதையைத் தமிழ்ச் செய்யுள் வடிவில் விருத்தப்பாவடிவில் தந்தவர் திரு.வ.அ. இராசரத்தினம்.

ஜேர்மன் கவிஞரும் தத்துவஞானியுமான கெதே "வெஸ்ட் ஏஸ்ட்லிக்சர்திவான்" என்ற கவிதை நூலை 1820ம் ஆண்டுகளில் வெளியிட்டார். மேலை நாகரிகத்தினை விதந்தோதும் இந்நூலுக்குப் பதில் சொல்வது போல மகாகவி அல்லாமா இக்பால் "பயாம்.இ-மஷ்ரிக்" என்ற கவிதை நூலை எழுதினார். கீழை நாட்டின் தத்துவஞான அடி நாதத்தையும் - இஸ்லாமிய நாகரீகத்தின் மேம்பாட்டினையும், நெறிப்படுத்தும் கீழை நாட்டுச் செய்தியாக இது அமைந்தது.

"பயாம்-இ.மஷ்ரிக்" - கீழை நாட்டுச் செய்தி நூலில் முதலாம் பகுதி லா-லயே-தூரி-தூரி லசீனாவின் பூவரசம் பூ என்பதாகும். இந்த தூர் தூர் தூர்ஸீனாவின் பூவரசம் பூ 167 பாடல்களையும் திரு.வ.அ.இராசரத்தினம் 167 அறு சீர் விருத்தங்களாக தமிழாக்கம் செய்தார். அதில் 86 செய்யுட்களை மாத்திரம் கொண்டதாக "பூவரசம் பூ" என்ற நூலை 1977ல் வெளியிட்டார்.

அந்த நேரம் சிறிதளவிலான கையால் இயக்கும் அச்சுச் சாதன வசதியை திரு.வ.அ. சொந்தமாகக் கொண்டிருந்தார். தங்கம் பதிப்பகம் என்ற பெயரில் ஒரு பதிப்பகத்தையும் உருவாக்கினார். தங்கம் பதிப்பகத்தின் முதலாவது வெளியீடாக அண்ணலின் கவிதையை வெளியிட விரும்பினார். கவிதைகளைத் தேடியெடுப்பதில் ஏற்பட்ட காலதாமதம் கருதி, பூவரசம் பூவை தங்கம் பதிப்பகத்தின் முதலாவது வெளியீடாக வெளியிட்டார். தூர்ஸீனாவின் "பூவரசம் பூ" (லா-லயயே-தூரி)வில் உள்ள எல்லாக் கவிதைகளும் (167) இடம்பெறவில்லை. பிரசுர விற்பனை வசதிகளை முன்னிட்டு, அந்நூலின் முதல் எண்பத்தாறு பாடல்களே இந்நூலில் இடம் பெறுகின்றன. மீதிப்பாடல்களை விரைவில் வெளியிட எண்ணியுள்ளேன் என்று நூல் வெளியீடு சம்பந்தமாக வ.அ. நூலில் அவரது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

"பூவரசம் பூ" நூல் நியூஸ் பிரிண்ட் பேப்பரில் கவர்ச்சிகரம் அற்ற பதிப்பாகவே வெளிவந்தது. திரு.வ.அ குறைந்த பொருளாதார வளத்துடன் தனது சொந்தக்காலில் நின்று இந்த முயற்சியைச் செய்ததால் அந்த அளவுக்குத்தான்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



அவரால் செய்ய முடிந்தது. இந்த நூல் அதிகம் பிரபல்யமாகவுமில்லை. இலக்கிய கர்த்தாக்களில் மிகப் பலரைச் சென்றடையாமலும் இருக்கலாம். நாடறிந்த எழுத்தாள நண்பர்களுக்கு வ.அ நூலை அனுப்பித்தான் இருப்பார். அவர்கள் ஏனோ அந்த நூலைப் பெரிதாக லட்சியம் செய்யவில்லை .போலும் வ.அ. இராசரத்தினம் அச்சில் வெளியிட்ட பூவரசம் பூவை திருத்தமான மறுபதிப்புச் செய்வது இன்றைய சந்ததியின் தலையாய கடமையாகும். எஞ்சிய 101 கவிதைகளையும் கண்டெடுத்து நூலுருவாக்கவும் வேண்டும்.

இனி நூலுக்கு வருவோம்.

"காணிக்கை" என்ற சமர்ப்பணக் கவிதை அடிகள் திரு.வ.அ.இராசத்தினத்தின் கவித்துவத்துக்குக் கட்டியமாகவும் நூலுக்கான வரவேற்புத் தோரணமாகவும் அமைந்துள்ளன.

"அன்னக் கவலை மீதூர
ஆடி ஓடிப் பொருள் தேடி
சின்னக் கதைகள் பலபேசிச்
செத்து மடிந்து மண்ணாகும்
புன்மை வாழ்வு வாழாதே
பொதிகைத் தமிழின் வாழ்வுவரை
என்னை வாழச் செய்வதற்காய்
எரியும் நெருப்புத் திரியாகி

காசைக் கழஞ்சைக் கேட்காமல்
கழனி தோட்டம் துரத்தாமல்
காசில் கொற்றக் கம்பனொடும்
கதைஞன் புதுமைப் பித்தனொடும்
பேசும் படிக்கு எனைவிட்டுப்
பெருமை சேர்த்த லில்லிக்கு
ஆசை யாகச் சூட்டற்கே
அல்லா மாவைத் தமிழ் செய்தேன்"

லில்லி என்பது அவர் தன் மனைவியை அழைக்கும் செல்லப்பெயர். மனைவி அகால மரணத்தில் நெஞ்சிழந்து "ஒரு காவியம் நிறைவு பெறுகிறது" என்ற நெடுங்கதையை, எழுதித் தனது அன்பையும் ஆராமையையும் வெளிப் படுத்தியவர். ஓர் ஆணின் வளர்ச்சியின் பின்னால் ஒரு பெண் இருப்பாள் என்பதற்கு எடுத்துக் காட்டாக பொதிகைத் தமிழின் வாழ்வு வாழவும் காசில் கொற்றக் கம்பனொடும், கலைஞன் புதுமைப்பித்தனொடும், பேசி மகிழவும் தன் கணவனை விட்டுவிட்டுக் குடும்பப் பாரம் முழுவதையும் மனைவி லில்லி சுமந்த பாங்கை திரு.வ.அ இனிமையாகவும் அழுத்தமாகவும் இங்கு சொல்லியுள்ளார்.

"எல்லா உயிரும் இறைவன் தன்
இச்சை தனக்குப் பலியாமே
எல்லா ஜீவ ராசிகளும்
இறைவன் தேவை தமக்காமே
எல்லை யில்லா வான் வெளியில்
இளமைக் கதிரோன் எழும்போது
வல்லோன் தன்னை வணங்கி நெற்றி
வடுவை விட்டுச் சென்றிடுமே"

இது "பூவரசம் பூ"வின் முதலாவது செய்யுள் படைப்பின் நோக்கத்தையும் படைப்புக்கள் படைத்தவனை வணங்கி படைத்தவனுக்கு நன்றி செலுத்துவதைப் பொருளாகக் கொண்டது.

"உள்ளே எரியும் செந்தணலால்
உதிரம் கண்ணில் கொட்டுகையில்
கன்னம் இன்றி என்னிதயம்
கரிய இருளை நீக்கிவிடும்
உள்ளத் தெழுந்த காதல் தன்னை
உஉறல் என்போன் இகவாழ்வை
எள்ளல் தனையும் உணரவில்லை
இறைவன் தன்னை அறியவில்லை.

இது நூலின் இரண்டாவது கவிதை உள்ளத்தில் ஏறி கனன்றெழுந்தால், மாயை, அறியாமை, அச்சம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழைத்தனம் முதலான எல்லா இருள்களும் நீங்கிவிடும். சத்தியம், ஞானம், போரூக்கம், செயலூக்கம் எல்லாமே வெளிப்படும். காதல் இறைவனின் அருட்கொடை, சந்ததி விருத்திக்கு, அறிவு விருத்திக்கு, சமூக மலர்ச்சிக்கு, கலை இலக்கிய வளங்களும், மானுட மேம்பாட்டிற்கு, நாடுகளின், நாகரீகங்களின் மேம்பாட்டுக்கெல்லாம் அடிப் படையே மனித உள்ளத்தில் பூக்கும் காதல்தான் என்பதைக் கவிதை கூறுகிறது.

"வசந்தப் பூங்கா தனிலேயான்
வாச மழிந்து அலைகின்றேன்
இசைந்த எனது தேவைகள் தாம்
ஏதோ என்று அறிந்தில்லேன்
அசந்து போனேன் ஆனாலும்
ஆசை தனக்குப் பலியாக
இசைந்து நின்று எழுகின்றேன்
இச்சை பூத்தி யாகிடுமோ?"


இஸ்லாமிய நாகரிகமும், இஸ்லாமிய கீலபத்தும் இந்தியா உள்ளிட்ட கீழை தேசங்களின் சிறப்புகள் என்பவற்றின் குறியீடாகவே இங்கு வசந்தப் பூங்கா பேசப்படுகிறது. இந்த வசந்தப் பூங்காவின் மக்களோ வாசமிழந்து மேலைப் பண்பாடுகள் மோகத்தில் மூழ்கிச் சுயத்தை அழித்துக் கீழ்மையுற்றுக்கிடக்கிறார்கள் என்பதைக் கவிஞர் கவலைபடக் கூறுகிறார்.

"கதையைச் கொஞ்சம் நிறுத்தப்பா
காது புளித்துப் போயிற்று
சிதையில் விழுந்து போராடும்
சின்னஞ் சிறிய ஈயலையென்
இதயத் தேற்றிப் போற்றிடுவேன்
ஏனென் றேநீ கேட்பாயா?
வதையும் அந்தச் சிற்றுயிரின்
வன்போ ரின்பம் இறப்பின்பம்"

சிதையில் விழுந்த ஈசலும், அந்த இறுதிவேளையிலும் தன்னைக் காத்துக் கொள்ள வன்போராடுகிறது. அந்தப் போரில் அது அடையும் இறப்பும் இன்பமானது. தியாக வேள்வி யில், போராட்டக்களத்தில், ஏற்படுகின்ற இழப்புகள் வெற்றிக்கான விடுதலைக்கான விதைப்புகள் என்கிறது கவிதை.

"தூர்ஸீனாவின் பூவரசம் பூ நூலின் இறுதிக் கவிதை - 86வது பாட்டு இது.

அஞ்சும் நெஞ்சு இருந்திட்டால்
அரிமா தானும் ஆடாமே
பஞ்சைப் புல்வாய் இடத்தினிலே
பார்க்கும் அரிமா வாய்வெட்டை
மிஞ்சும் கடலும் அஞ்சாக்கால்
வெற்று மேடை யாய்த்தோன்றும்
நெஞ்சம் பதைத்தால் அலையெல்லாம்
நெறியும் வலிய சுறாமீனே
வானின் கிழக்கே வந்திட்ட
வளரும் அழகு விடிவெள்ளி



ஏனோ விரைவில் மறைந்திட்டால்
இன்னும் தூக்கம் என்றறிந்தோ
கானின் சென்றேன் கெல்வழியைக்
காணா திங்கு நிற்கின்றேன்
ஏனோ தூக்கம் எழுந்திடுக!
எழுந்து விழித்தே மறைந்திடுக.

கிழக்கு வானின் விடிவெள்ளியான இஸ்லாமியரின் பெருமையும், விரைவில் மேலை எஜமானர்களுக்கு அடிமைப்பட்ட செய்தியும், கீழை நாட்டு மக்கள், தம் நாகரிகம் மறந்து மேலை நாகரிகத்தில் மூழ்கிக் கிடக்கும் செய்தியைப் பாடல் கூறுகிறது.

"இந்த நிலத்தில் எஞ்ஞான்றும்
இலாபம் பிறக்கும் நட்டத்தில்
........................................................." தியாகம் இல்லாமல் மீட்சியில்லை என்பதை இவ்வரிகள் வற்புறுத்துகின்றன.

அச்சமும், அஞ்சாமையும் பற்றி இக்கவிதை கூறுகிறது. இது தரும் செய்தியென்ன? மேலை நாட்டின் நாகரிகத்திலும் ஆட்சியதிகாரத்திலும் அடிமைப் பட்டுக்கிடக்கும் கீழை நாடும், இஸ்லாமிய இலாபத்தும், இஸ்லாமிய உற்றதமும் மீளப் பெறப்பட வேண்டுமானால் அச்சம் ஒதுக்கி, அஞ்சாமை அணி தங்கி, விடுதலைப் போருக்கான தியாக வேள்வில் குதிக்க வேண்டும் என்பதுதான் அவர்களின் அச்செய்தி.

அல்லாமா இக்பாலின், பயாம் - மாடிரிக்கின், லா-லயே-தூர் கிழக்கின் செய்தியின் "தூர்ஸீனாவின் பூவரசம் பூ" திரு.வ.அ இராசரத்தினத்தின் தமிழாக்கத்தில், கவியாக்கத்தில் கவியாகிக் கவிதை நெஞ்சங்களைக் கவர்வதாகி நிற்பதை உணரலாம். உமர்கையாமை, கவிமணி தேசிய வினாயகம் பிள்ளை தமிழில் தந்த கவிதா ஆற்றொழுக்கை நிகர்த்ததாக வ.அ.வின் கவியாக்கம் அமைந்திருக்கிறது....

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.ச. பாய்வா

ஒவ்வொரு வாசகதளத்திலும் இலக்கியம் வேறுபடுகிறது. அர்த்தங்கொள்கிறது. எனின் விமர்சனம் அல்லது மதிப்பீடு என எழுதப்படுவனவும் ஒருவித அனுமானங்களே

"கலை கலைக்காக" என்கிற கோஷங்கள் செயலிழந்து போன ஒரு காலகட்டத்தில் அரைநூற்றாண்டைக் கடந்து மருதூர்க்கொத்தனின் சிறுகதைகளைப் பார்க்க வேண்டியுள் எது. கருத்து நிலையில் தனியாள் நிலைச்சிக்கற்பாட்டுக்குள் அகப்பட்டு விடக்கூடாதென்கிற நிலைப்பாட்டையும் தாண்டவேண்டியுள்ளது.

நெருக்கடிமிகுந்த புறச்சூழலை எதிர்கொள்வதற்காக மனிதன் தனக்குள் தன் ஆழ்மனத்திற்குள் பயணம் செய்கிறான். வாழ்வின் அர்த்தங்களைத் தேடுகிறான். ஆழ்மனதில் பயணம் செய்யும் போது சமூகத்தின் வரலாற்றின் உள்ளாழங்களைத் தேடுகிறான்.

காலந்தோறும் மனிதனுக்குள் தொடரும் வரலாற்று நீரோட்டத்திலிருந்து தனக்குள் பொங்கிவரும் இத்தகைய இலக்கியங்களே மொழியை மேம்படுத்தவும் உயிர்ப்பிக்கவும் வல்லன என்கிற உண்மைகளோடும், பார்வைகளோடும், அரைநூற்றாண்டு கடந்த இவ்வகை இலக்கியங்களை ஒப்பீடு செய்ய வேண்டிய தேவையும் நமக்குண்டு.

படைப்பொன்று எவ்வாறு உருவாகிறது?

## மருதூர்க்கொத்தனின் சிறுகதைகளை முன்வைத்து

# ரசித்ததும் ரசிக்காததும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது கேள்வி. ஓரளவு நிஜத்திலுள்ள மனிதர்களையும், ஓரளவு மனதில் படிந்துள்ள அதே நிஜமனிதர்களையும், செயற்பாடுகளையும், தனது அறிவுக்கொள்ளளவு அனுமதிக்கும் மனிதர்களையும், மொழியால் எவ்வளவுக்கெவ்வளவு முடியுமோ, அந்தளவு மனிதர்களையும் படைப்பாளி ஒவ்வொரு இணைவு விகிதத்தில் இணைத்துப் படைக்கிறான். என்பதே அதன் பதிலானால், இந்தச் சிறுகதைத் தொகுதியிலும் அது ஓரளவு நிறைவேறியதாய்க் கருதலாம்.

மொழியென்பது புறப்பொருள். மனம் அகப்பொருள் இந்த அகமும், புறமும் ஒன்று மற்றொன்றால் பெறும் அர்த்தம்தான் கதையும் மனமும் இணைகையில் ஏற்படும் அதைப்பு. இந்த அதைப்புத்தான் அமைப்பு. இவ்வகை அமைப்பானது அறிவையும் மனதையும் தாண்டி நின்று இத் தொகுப்பில் செயற்படுகிறதா? என்பதைக் கேள்வியாகவே விட்டுவிடுகிறேன்.

சிறுகதை உச்சங்களென்ற நான்கைந்து பெயர்களை வைத்து அம்மானையாடுவதற்கான வாய்ப்பையும் நவீன இலக்கிய தளம் இல்லாமலாக்கிய தருணத்தில் மருதூர்க் கொத்தனின் படைப்புலகை நோக்க வேண்டியுள்ளது. ஊர்க்கதைகள், வட்டாரக் கதைகள் என்கிற கோஷங்களோடு எழுந்த ஒரு கால கட்டக் கதைகளின் மீதான பார்வையை ஒழுங்கமைப் பதில் செலுத்தும் கவனங்களும் முக்கியம் பெறுகின்றன.

> “மொழியென்பது புறப்பொருள், மனம் அகப்பொருள் இந்த அகமும், புறமும் ஒன்று மற்றொன்றால் பெறும் அர்த்தம்தான் கதையும் மனமும் இணைகையில் ஏற்படும் அதைப்பு. இந்த அதைப்புத்தான் அமைப்பு. இவ்வகை அமைப்பானது அறிவையும் மனதையும் தாண்டி நின்று இத் தொகுப்பில் செயற்படுகிறதா? என்பதைக் கேள்வியாகவே விட்டுவிடுகிறேன்”

பொன்னகரம், மகாமசானம், கயிற்றரவு, கபாடபுரம் போன்ற புதுமைப்பித்தனின் ஜெமினி இலாகாக் கதைகளை வாசித்து விட்டு அவற்றின் மீது சிறுநீர் கழித்தேன் என்று சாருநிவேதிதா தனது வியாகுல சங்கீதம் கட்டுரையில் குறிப்பிடுகிறார். இதுவும் கவனிப்புக் குரியது.

இதற்குமப்பால் இத்தொகுப் பிலுள்ள கதைகளின் விளைநிலம், கதைமாந்தர் மொழி நடை என்பவற்றுக்கப்பால் வேறெதும் சிக்குமா என்று தேடவேண்டியுள்ளது.

மாறிவரும் காலத்தை உலகத்தை சூழலைப்பற்றிக் கூறப்படும் யாவுமே பூமியின், இயற்கையின், உயிர்களின், சலனங்களை அவதானித்துச் செல்வனவாகவும், சமூக இருப்பு, தனிமனித வாழ்வு போன்றவற்றின நிலை மாற்றத்தைப் பேசுபவனவாகவும், வேறு விதங்களில் கோலங்கொள்ளும் சித்திரங்கள்தாம்

வாழ்வைக் குறை சொல்லாமல் சமனப்படுகிற கதைகள் எல்லாமே சரிதான் எனவும், இருப்பவை வாழ்ந்து பார்த்த மனதின் குரல் எனவும் பொருள் கொள்ளலாம்.

அனுபவங்களைப் பதிவு செய்தலும் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதும் தான் இலக்கியம். அது மனம் சார்ந்ததல்ல, வெறுமனே புத்தியால் கட்டமைக்கப்படுவது என்பது போல அரை நூற்றாண்டுக்கு முன்னர் இவ்வாறு மொழிப் புலமையோடு மருதூர்க்கொத்தன் படைத்த சிறுகதைகளில் ஒருவித புகைப்படத்தன்மை, சிறுகதையென்கிற அமைப்பை மீறிய விவரணத் தன்மை, பத்திரிகைத்தனம் என்பனவும் காணக்கிடக்கின்றன.

இவரது சமகாலப் படைப்பாளிகளுக்கு ஈடுகொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் தன்னை ஆகுதியாக்கிக் கொண்டார். அல்லது சமுதாயத்தோடு முரண்படாதவாறு தன்னைக் தற்காத்துக்கொண்டார்.

நேரடியான கதைப்பின்னல்கள் என்கிற வடிவத்தினுள் நேற்றைய யதார்த்தவாதக் கதைகள் காணாமற் போய்க் கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில் மருதூர்க் கொத்தனை நோக்கவேண்டியுள்ளது.

ஏதோவொரு வகையில் இத்தொகுப்பு ஒரு ஆவணம்தான். வரலாற்றை, காலத்தை, அர்த்தத்தை, மொழியை, சூழலை, இதன் சுபாவீகமான மொழிநடை, படைப்பாளியின் எண்ணத்தை உணர்வை நம்மிடையே பகிர்ந்து கொள்ளப் பயன்பட்டிருக்கிறது.

தொகுப்பின் அறுபடாத் தொடர்ச்சியில் ஒருவித சாத்தியத் தன்மை விரவியிருப்பது மறுதலிக்க வியலாதது. விளிம்பு நிலை மக்களின் சிக்கல்கள் திரண்டு இயக்கமாக வடிவெடுக்கும் போதுதான் உன்னத இலக்கியங்கள் உருவாகின்றன. என்பதைச் சில கதைகள் உணர்த்துகின்றன.

ஆனால் தன்னிலை என்கிற மொழிவசப்பட்டமனதில் ஒரு குறிப்பிட்ட விசாரணை மரபுக்கு இத்தொகுப்பில் போதியளவு இடம் கிடைக்கவில்லை. ஆனால் தனது போக்கை எவ்வித ஆர்ப்பாட்டமோ கூச்சலோ இன்றி எளிமையோடு கூடிய நடையில் தருவதில் வெற்றி பெற்றுள்ளார்.

தன்னைச் சுற்றி அகத்திலும் புறத்திலும் நடப்பவை பற்றிப் பதிவு செய்து கொண்டேயிருக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை மொழி மருதூர்க்கொத்தனுக்கு ஏற்படுத்தியதன் விளைவே அவரது சிறுகதைகள் எனக் கருதலாம்.

இது இவ்வாறிருக்க, இந்தத் தொகுப்பு பற்றிய குறிப்புரைகள் ஒருவித கனவுத்தன்மையை இவரது படைப்பின் மீது படரச் செய்து விடாமல், மொழிக்கட்டுமானங்கள் படைப்பாளியின் மனதோடு கொள்ளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவைச் சொல்பவையாக இருப்பது நலம். கருத்துரை, நயவுரைகளை விட ஒரு நல்ல விமர்சனமே படைப்பாளியை, ஏன் நல்ல வாசகனையும் உருவாக்கவல்லது. ஒரு வேளை அதுவே ஏற்கனவேயிருந்த எளிமைகளை ஒதுக்கிவிட்டு அதிசிக்கல் வாய்ந்தவையாகவும் அமைந்துவிடுகிறது.

இவரது கதைகளுள் "மதியின் பிழையன்று," "சித்தம் அழகன்" போன்ற ஓரிரு கதைகளைத் தவிர்த்தால் ஒரு குறிப்பிட்ட சமூக அரசியல் பேசப்படுவது சலிப்பைத் தருகிறது.

கடவுளே! அடுத்த கதையாவது இதேவிதமாக அமைந்து விடக்கூடாது. என்று எண்ணிக் கொண்டே அடுத்த கதைக்கு நகரவேண்டியுள்ளது.

வாசித்ததில் மனதிற்பட்ட சில கதைகளைத் தொட்டுச் செல்கையில் முதலில் தட்டுப்படுவது "மரையாம் கொக்கு". தண்ணீரில் அடித்து மீனைக் கலக்கிப்பிடிக்கப் பயன்படும்மரத்தாலான ஒரு சாதாரண கருவி, ஹெலிகொப்ட ரிலிருந்து பார்க்கும் இராணுவத்துக்கு "லோஞ்சர்" போன்ற ஆயுதமாகத் தென்படுவதும், அதன்விளைவும் கதையின் சாரம். பாத்திரத்தை அறிமுகப்படுத்த அவர் கைக்கொள் ளும் வர்ணனைகள்,.... "சட்டியி லிருந்து தூக்கியதும் உலை முட்டியில் படிந்து சொட்டும் நீராவித் துளிபோல..." என்று வியர்வையைச் சொல்வதும் ரசனைக்குரியவை. ஆனால் கதை முடிவது ஒருவித பத்திரிகைத் தனத்தோடு

ஆனால் கதையின் முக்கிய நிகழ்வைத் தர்க்கரீதியாக எடுத்துக் கூறுமளவிற்கு இக்கதை ஏனோ இடந்தரவில்லை. ஏற்கனவே கதை யின் முடிவைத் தீர்மானித்த வாக்கில் எழுத வேண்டும் என்கிற பிடிவா தமோ என்னவோ.

ஈரா, வேலி ஆகியவை இத்தாவைப் பேசும் கதைகள், பாமர முஸ்லிம்களிடையே இன்றும் வேறு வேறு அர்த்தங்களைக் கொள்ளும் "இத்தா" என்கிற சொல்லுக்கு உண்மையான அர்த்தத்தைக் கொடுக்கும் பிரசாரவகைக் கதைகள்

"அப்படி இல்லாகாபுள்ள இரா இரிக்கத்தால ஆம்புளக்கி அங்குத்து வளியில ஒண்டுமில்ல அவர் மகுத்தாகிற அண்டைக்கும் ஊடு கூடியிருக்கலாம். அப்புடியெண்டா அந்தப் புள்ள அவருக்குத்தான் எண்டு ஆக்களுக்கு எம்பின காட்டத்தான் இத்தா இரிக்க. பொண்புடிக்கக் கூடிய மொதகாள ஆம்புளயளப் பாக்காம இரிக்கத்தான் இத்தா இரிக்க. புரிசனார் மகுத்தான அண்டக்கி வேற புரிசனுக்கு வாக்கப்படலாம் எண்டுதான் மம்மதியா மார்க்கம். மறு புரிசனுக்குவாண்டா பொறக்க புள்ள அவர்ரய இவர்ரய எண்டு தெரியாமப் போகும். இதுக்காகத்தான் இத்தா இரிக்க" என்று ஆசியத்து மூத்தமா என்கிற பெண் பாத்திரமூடாக இது சொல்லப்படுகிறது.

கதையின் ஈற்றில் ...." எனக்கி அவரோட (கணவன்) எரக்கத்தான். மையதீன் மச்சான் வந்து போனாத்தான் கல்வுக்கு குளுமை. மகுத்தாகிற மாசத்தில எண்ணம் நிறைவேறிச்சி. அவருக்கு இருமல் வருத்தமெண்டு புளியந்தீவு ஆசுவத்திரிக்கிக் கொண்டு போய்த்தாங்க. ஊட்டில நான் தனிய, முன்னடுக்காலம் ஒருவர் கண்டயிலயும் படாம வந்து போவார்.

எவ்வித வக்கிரமும் இல்லாமல் இத்தாவை இதை விட வேறெந்த விதமாகச் சொல்லமுடியுமோ தெரியாது. கணவன் மனைவி உடலுறவை " ஊடு கூடுதல்" என்கிற சொல் மேன்மைப் படுத்துகிறது.

> "எனக்கி அவரோட (கணவன்) எரக்கத்தான். மையதீன் மச்சான் வந்து போனாத்தான் கல்வுக்கு குளுமை மகுத்தாகிற மாசத்தில எண்ணம் நிலைவேறிச்சி. அவருக்கு இருமல் வருத்தமெண்டு புளியந்தீவு ஆசுவத்திரிக்கிக் கொண்டு போய்த்தாங்க. ஊட்டில நான் தனிய, முன்னடுக்காலம ஒருவர் கண்டயிலயும் படாம வந்து போவார்."

"எனக்கும் இருபது வயதாகிறது நான்தான் எங்கம்மாக்கு கடைசிப் பிள்ளை. இத்தா இரிக்கிற நோக்கந் தெரியுமா உங்களுக்கு? எனக் கெல்லாந் தெரியும் நீங்க வேலியப் பிரியுங்க" என்று மகன் சொன்னதில் "வேலி" சிறுகதை முடிகிறது.

இந்த இரண்டு கதைகளும் சிறுகதைக்குரிய பிரகரணங்களைக் கொண்டாலும், உணர்வைத் தொற்ற வைக்கும் சம்பவங்கள் பெரிதாக இன்மையால் கதையில் ஆழம் பாதிக்கப்படுகிறது. சம்பவங்கள் வலுவாக இல்லாவிடினும் இத்தா தொடர்பாகப் பிறர் கொண்டிருந்த மயக்கங்களைக் கதைகள் தீர்த்து வைக்கின்றன.

இராமாயணம் மனித சலனங்களை வாழ்வினூடே காணும் பார்வை கொண்டதாயினும், அதில் இலட்சியம் மனிதனிடம் தோற்றுப் போனதைத் தரிசிக்கலாம். "மதியின் பிழையன்று" என்கிற இராமயணத்தை அடிப்படை யாகக் கொண்ட கதை விதியின் பிழையன்று எனக் கூறுவதை மருதூர்க்கொத்தன் ஏற்றுக்கொண்டிருப்பது நெருடலாயிருக்கிறது

"குதிரைக்கொம்பு" என்கிற கதையில் இராமாயணக் கதைச் சுருக்கத்தை இராவணன் பார்வையில் அங்கதமாக வடித்திருக்கிறார் பாரதி

மருதூர்க்கொத்தனும் இராமாயணத்தை "அவ்வாறே" பொழிகிறார். அவ்வாறே புனைவதற்கு மருதூர்க்கொத்தர்கள் தேவையில்லை.

"ஜெய்.. மலையாள பகவதி! ஜீ' டிய... டிய.. என்றும், துக்ளக்கை பக்ளக் என்றும் அங்கதச்சுவையோடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



“சித்தம் அழகன்” சிறுகதை யாரை எவரை மனதில் வைத்துப் பின்னப்பட்டதோயாமறியோம்.

இரண்டு சமூகங்களுக்குள்ளும் ஊடுருவியிருந்த தெய்வ நம்பிக்கைகளை வெளிப்படுத்தும்“கழிப்பு” சிறுகதை, காளி தெய்வத்தை ஒரு சூனிய (கெட்ட) தெய்வமாகச் சித்தரிக்கிறது. துன்பமும் ஒரு எல்லைவரைதான். அந்த எல்லைகள் மீறப்படும் போதும் கடவுள்கள் யாவுமே ஒன்றாகிச் சங்கமிப்பது தவிர வேறு வழியில்லை என்பதைச் சொல்கிறது

உறவின் அடித்தளத்தில் நாடாவாக இயங்குகிறான்” என்று மருதமுனை நெசவோடு ஊடுபாவான சொல்லை உதிர்க்கிறார். சுபைதா இத்தாவுக்குத் தயாராகிறாள் குப்பை மூலையில் என்கிற ஆதங்கத் தொனியோடு கதை முடிவுறுகின்றது.

“தாட்டாந்தம்” சமூகத்தின் சிறுமையொன்றைத் துணிந்து சொல்லும் சாதாரணகதை “மாரீசச்சங்கமத்தில் கொஞ்சும் குதலைப்பருவத்துக் குளுமைப் பொலிவு” “சிரித்தவானுக்கு என்ன நேர்ந்து விட்டதோ சிணுங்க” (கானல்)

“கணவன் சொர்க்கத்தின் சப்பரமஞ்சத்தையோ, நரகத்தின் சீலம்பாயையோ நிரப்பச் சென்று விட்டதற்கான அடையாள விளம்பரமாக வெள்ளிமணி கட்டாத வெறுங்க ளுத்துக்காரி...” என்று அழகிய தமிழில் அனைத்துச் சமூகங்களையும் சாடுகிறார்.

ஒரு எலி எதிர்நோக்கும் பிரச்சனைகளை அபத்த சாயலாக வரும்படி புனையப்பட்ட அசோக மித்திரனின் “எலி” போன்ற கதைகளை இவரிடம் எதிர்பார்க்க முடியாதுதான்.

முற்றிலும் வாசகஊகத்துக்கு விடப்படாத படிமம், குறியீடு என்பன கவனத்தில் கொள்ளப்படாத ஒரு காலகட்டக் கதைகளாகவே தோற்றப்பெறுகின்றன.

கணிசமான ஈழத்துக்கதாசிரியர்கள் போல் ஒருவிடையைத் தேர்ந்தெடுத்து அதற்கேற்ப ஒரு கதைப் புலத்தை உருவகித்தலில் இவரும் நம்பிக்கை கொண்டிருக்கிறார்.

இலக்கிய உத்திகளும் இந்த அறிமுக வேலையில் உண்மையைக்காணும் முயற்சியின் பயன்பாட்டுக்கருவிகள் என்பதை மறந்துள்ளார்

இத்தொகுப்பு ஒரு வகையில் ஓர் ஆவணம், வரலாற்றை, காலத்தை, மொழியை, சூழலை கலாச்சாரத்தை (ஒரு கால கட்ட) அமைவுக்குட்படுத்துகிறது. இதன் சுபாவீகமான மொழி, படைப்பாளியின் எண்ணத்தை, உணர்வை, நம்மிடையே பகிர உதவுகிறது.

சில கதைகளில் அறுபடாத் தொடர்ச்சியில் ஒரு வித சாத்தியத் தன்மை பரவியிருப்பது அவதானிப்பு தன்னிலை என்கிற (மொழிவயப்பட்ட மனதில்)ஒரு குறிப்பிட்ட விசாரணை மரபுக்கு இத்தொகுப்பு வழிவிடவில்லை. ஆனால் தனது போக்கை எவ்வித ஆர்ப்பாட்டமோ, கூச்சலோ இன்றி எளிமையோடு கூடிய நடையில் தருவதில் வெற்றி பெறுகிறார்.

எங்கோ ஓரிடத்தில் எப்போதோ ஓர் சமயத்தில் மட்டும் பூக்கும் “உதும்பர” மலர்போல் ஏதாவது சிறுகதையொன்றை இவர் எழுதியிருக்க கூடும்.

ஒரு காலத்தின் பங்காளியாகவும், சாட்சியாகவும் மருதூர்க்கொத்தன் இயங்கியதற்கான அடையாளங்களை அவரது படைப்பாக்கத்தின் உயிர்க்கூறுகளில் சிலவாகக் கருதுகிறேன்.....

• • •


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொத்தன்
## தீர்க்க தரிசனம் கொண்ட ஒரு படைப்பாளி



"என்தந்தையின் மாணவரான அவர் நல்ல மரபுக் கவிஞராகவும் இருந்ததால், என் கவிதைகள் பற்றிய கருத்தறிய அக்கவிதைகளை அவரிடம் தந்தேன். அனைத்துக் கவிதைகளையும் படித்த அவர் ''இனிமேல் இப்படிக் கவிதை எழுத வேண்டாம்'' என்றார்."

1980ஆம் ஆண்டு கலாசார அமைச்சினால் திருக்குர்ஆன் 1400ஆம் ஆண்டு நினைவாக அகில இலங்கை ரீதியாய் ஒரு கவிதைப் போட்டியை நடாத்தியது. அப்போட்டியில் நான் இரண்டாம் பரிசில் பெற்றேன். முதல் பரிசு கவிஞர் அன்பு முகைதீன் அவர்களுக்கு வழங்கி இருந்தனர் (பின்னொரு காலத்தில் அவர் பிரபல மூத்த கவிஞர் என்பதால் அவருக்கு முதல் பரிசைத் தந்தோம் என போட்டியை நடாத்திய அறிஞர் ஏ.எம். சமீம் அவர்கள் என்னிடம் சொன்னார்) போட்டிக்கென்று நானெழுதிய முதற்கவிதையும் அதுதான். பத்துச் செய்யுள்களை எழுதி இருந்தேன். உவமைக்காக ஒன்று..

புளித்தபழம் தனைத்தனியே புசித்ததனைப் பிறர்புசித்தால்
புளிப்புணரப் பழிப்பருளும் பதைத்திடுமென் றஞ்சிமிகக்
களிப்பதுபோல் கனிவதனங் காட்டியதை யளித்தவளுங்
களிப்புறுதல் கண்டுமனங் கசிந்திட்ட பெருமானே.

என்பதது. இவ்வாறே கவிதைகள் அனைதும் பெருமானே என்ற இறுதிச்சீர் வர எழுதியிருந்தேன்.

எனது இளமைக்காலத்தில் பெருநாள் காலங்களில் எங்கள் மருதமுனைக் கிராமத்தில் நாங்கள் நாடகங்கள் நடத்துவோம். மருதூர் கொத்தன் எழுதி நெறியாள்கை செய்த,"ஏழை அழுத கண்ணீர்" "சுடர் விளக்கு" என்ற இரண்டு நாடகங்களில் நான் கதாநாயகனாக நடித்திருந்தேன். அந்த பழக்கம் அவரையோர் சிறந்த படைப்பாளி என்பதை மனங்கொள்ளச் செய்திருந்து.

என்தந்தையின் மாணவரான அவர் நல்ல மரபுக் கவிஞராகவும் இருந்ததால், என் கவிதைகள் பற்றிய கருத்தறிய அக்கவிதைகளை அவரிடம் தந்தேன். அனைத்துக் கவிதைகளையும் படித்த அவர் ''இனிமேல் இப்படிக் கவிதை எழுத வேண்டாம்'' என்றார்.

நான் வளர்ந்து வரும் காலமது. ஒரு மூத்த கவிஞரின் ஆசி பெறத்தான் என் கவிதைகளை அவரிடம் தந்தேன். குறைந்தது நூறு கவிதைகளாவது எழுதுவதென எண்ணி யிருந்த எனக்கு அவர் சொன்ன வார்த்தைகள் மிக்க மனச் சங்கடத்தைத் தந்தது.

தொடர்ந்தும் அவர் பேசினார். ''இந்தக் கவிதைகள் நன்றாக இருந்தாலும் உங்களை விடுத்து வேறொருவரை நினைவுபடுத்துகின்றது.'' என்றார். அவரது பேச்சில் உண்மை இருந்தது.

அக்காலத்தில் பேராசிரியர் கா.அப்துல்கபூர் அவர்களின் ''நாயகமே'' கவிதைகள் பிரபலமாகியிருந்தன. எல்லோர் வாயிலும் அவை இருந்தன. என் மனத்திலுந்தான்.

''அருளாளன் அன்புடையோன் அல்லாஹ்வின் கருணையதால்
பெருங்கொடையாய் வந்துதித்த பெருமானே நாயகமே''

என்பது அதிலொன்று. உண்மையில் அதை ஒட்டியே நானும் எனது கவிதைகளை எழுதியிருந்தேன். கவிஞர் மீண்டும் தொடர்ந்தார். ''மச்சினன் நாம் ஒரு படைப்பைப் படைத்தால் அது இன்னாரது என்பதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










வாசகன் திட்டவட்டமாக மதிப்பிடும் வகையில் தனித்துவம் பெறவேண்டும். புலவர்மணி ஷரிபுத்தீனின் வெண்பாக்களில் பரிச்சயமுள்ளவன் அவரது வெண்பாக்களை எளிதாக இனங்கண்டு கொள்வான். அது போன்றே மருதூர் கொத்தனின் சிறுகதைகளும்..

எனது சிறுகதைகளில் பரிச்சயமான வாசகன் எனது கதைகளையும் படித்துவிட்டு இது கொத்தனின் கதை என இனங்காண்பான். எனவே நீங்கள் உங்களுக்கான ஒரு வடிவத்தை வாலாயமாக்கிக் கொள்ளவேண்டும்" என முடித்தார். அதனை நான் மூத்தோர் வாக்காக மனம் பதித்துக்கொண்டேன். பின்பற்றவும் தொடங்கினேன்.

மரபு சார்ந்து நான் பத்துக் காவியங்களுட்பட பன்னீராயிரத்துக்கும் அதிகமான செய்யுள்களை எழுதி இருந்தாலும் விருத்தமே என்னைத் தனிமைப்படுத்தி அறியச் செய்கின்ற யாப்பு வடிவமாகும். இதனைப் பலர் என்னிடமே சொல்லியும் உள்ளனர்.

நான் பெரும்பாலும் சிந்தாமணி, தினபதி பத்திரிகைகளில் எழுதிய எனது கவிதைகளை இரண்டு தொகுதிகளாகத் தொகுத்து, ஒன்றுக்குச் சாற்றுக்கவி கேட்டதோடு அவற்றிற்குத் தலைப்பிடவும் கொத்தனிடம் கேட்டேன். மகிழ்ந்து சாற்றுக்கவி தந்ததோடு ஒன்றுக்கு "முத்து நகை" என்றும் மற்றையதற்கு "பாலையில் வசந்தம்" என்றும் பெயரிட்டார்.

மருதூர் கொத்தன் ஒரு தீர்க்க தரிசனம் மிக்க கவிஞர் என்பதற்கு என் வாழ்க்கையோடு நடந்த ஒரு நிகழ்வை "மகுடம்" அவரது நினைவு மலரில் இங்கு குறிப்பிடுதல் சாலப் பொருந்துமென எண்ணுகின்றேன்.

நான் மருதம் என்ற பெயரில் தொழிலாளர் காங்கிரஸ் பத்திரிகையில் மலையகம் சார்ந்த கவிதைகளை எழுதி வந்தேன். அதனைத் தொகுத்து அதற்கும் ஒரு பெயரிடும்படி கொத்தனிடம் கொடுத்தேன் படித்துவிட்டு அதற்கு "பனிமலையின் பூபாளம்" எனப் பெயரிட்டார்.

வெளியீட்டுவிழா பண்டாரவளையின் இந்துமாமன்றம் கவிஞர் கல்முனை பூபால் (நீலாபாலன்) அவர்களின் முயற்சியோடு அதன் தலைவர் நித்தியானந்தன் கோயில் மண்டபத்தில் நடத்தினார். பேராசிரியர் சொ.சந்திரசேகரம் பிரதம அதிதியாக, அண்ணன் நீலாவணனின் புதல்வர் எழில்வேந்தன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. என்ன ஆச்சரியம் திடீரென பக்கத்திலிருந்த தகரக் கொட்டகையில் கற்கள் கொட்டும் பேரொலி கேட்கத் தொடங்கியது. எல்லோரும் வெளியில் ஓடினோம். அப்போதுதான் தெரிந்தது கொட்டியது கற்களல்ல பனிக்கட்டிகளென்று. அதிசயம் என்னவென்றால் அந்தப் பிரதேசத்தில் அவ்வாறான ஒருமழை சுமார் இருபத்தைந்து ஆண்டுகளின் பின் அன்றுதான் பெய்ததாம். அதுவும் அந்தக் கோயிலைச் சுற்றி மட்டிலும். மறுநாள் பத்திரிகையிலும் அந்தச் செய்தி வெளிவந்திருந்தது.

விழா தொடங்கியதும் தலைமை வகித்த எழில் வேந்தன் மழைபற்றிக் கூறுகையில் "பனிமலையின் பூபாளம்" என்ற இந்த நூலுக்கு பனிமழையைப் பொழியவைத்து இறைவன் ஆரம்பத்திலேயே ஆசீர்வாதம் தந்துவிட்டான் என்றார். இப்படியோர் நிகழ்வு நடக்கும் என்று முன்கூட்டியே கொத்தனின் உள்மனம் கூறியதோ இப்பெயரை வைக்க என அன்று பலரும் அங்கலாய்த்தனர்.

• • •


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# படைப்பாளிச


## மருதூர்க்



நம் புதுமைப்பித்தனையே வெல்லுமுயர் பீடுநடை சத்திவரப் பெற்றவனே! கவிஞர் நீலாவணன் போர்க்களத்துச் சஞ்சயன்போல் ஒரு சமுதாயத்தின் வாழ்க்கையைத் தெளிவாக அறிந்து நிர்த்தாட்சண்யமாகச் சொல்லக்கூடிய ஒருவர் (மருதூர்க்கொத்தன்) வெளிவந்து விட்டார். அந்த ஒருவருக்கு நிச்சயமாக ஓர் இடமிருக்கிறது மலையாள இலக்கியத்தில் வைக்கம் முகம்மது பசீருக்கு உள்ளதைப்போல் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

**- எழுத்தாளர் அமரர் வ.அ. இராசரத்தினம்**

---



கவிவளமிகுந்த கிழக்கிலங்கை மண்ணைச் ஜீவத்துடிப்புடன் கதைகளில் படைக்கும் சிருஷ்டிகர்த்தா இவர். நாடகத்துறையில் மிகுந்த ஈடுபாடும் ஆர்வமும் மிக்க மருதூர்க் கொத்தன் சலசலப்பில்லாத அமைதியான படைப்பாளி.

**- எழுத்தாளர் அமரர் மல்லிகை டொமினிக்ஜீவா**

---



தமிழ் இலக்கியத்தின் பல்வேறு துறைகளில் தமது பங்களிப்பினை வழங்கியவர் மருதூர்க்கொத்தன். ஆயினும் அவர் சிறுகதை எழுத்தாளராகவே இலக்கிய உலகின் கணிப்பைப் பெற்றவர். அவரது சிறுகதைகள் தொகையில் குறைவானவைகளாக இருப்பினும் இலக்கியத்தரத்தில் நிறைவானவையென அனைவராலும் அங்கீகரிக்கப் பெற்றவை. கிழக்கிலங்கை முஸ்லீம் மக்களின் வாழ்வினைத் தாம் வாழ்ந்த மருதமுனையைக் களமாகக் கொண்டு அவர்கள் பண்பாடு, கலாசாரம், பேச்சுவழக்கு, சமூக ஊடாட்டம் என்பவற்றுக்கூடாகத் தெளிவாகப் பதிவு செய்துள்ளார். சாதி, இன, மத பேதங்கள் கடந்து அனைவரையும் நேசிக்கும் மனிதாபிமானம் மிக்க ஒருவராக விளங்கினார். மதத்துடன் (இஸ்லாம்) முரண்படாமல் மார்க்சீயத்தை எவ்வாறு பின்பற்றலாம் என்னும் புதுமையான வழித்தடத்தினைத் தேர்ந்தெடுத்து நடந்து காட்டிய உயர்ந்த சிந்தனையாளர். வெற்றுக் கோஷங்கள் சிறந்த கலைப்படைப்புகளாகா என்பதனைத் தெளிவாக விளங்கிக் கொண்டு மிகுந்த கலைநயத்துடன் சிறுகதை இலக்கியம் படைத்த மார்க்சீயவாதி,

“

கிழக்கிலங்கையின் முஸ்லிம்களின் வாழ்க்கை யதார்த்தத்தை, அதன் வெட்டுமுகத் தோற்றத்தை அற்புதமாகக் கலையாக்கியவர் அவர். அவ்வகையில் ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் அவருக்கு நிரந்தரமான ஓர் இடம் உண்டு.

**- எம்.ஏ.நுஃமான்**

”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள் பார்வையில்
## கொத்தன்

ஈழத்து நவீன தமிழ் இலக்கிய வரலாற்றில் என்றும் அழியாத ஓர் இடம் கொத்தனுக்கு நிலையாக உண்டு. இலங்கை முற்போக்கு இலக்கியத்துக்குக் கொத்தன் அளித்துள்ள பங்களிப்பு யாராலும் மறுதலிக்க இயலாதது. ஆனால் ஏதோ சில காரணங்களினால் அவருக்குரிய இடம் மூங்கையாக விடப்படுவது நியாயமான செயலன்று.

இலங்கைக் கலைக்கழகம், தமிழ் இலக்கியக்குழு, யாழ், பல்கலைக்கழகக் கைலாசபதி அரங்கில் நடாத்திய இலக்கியக் கருத்தரங்களில் 15.11.2002இல் மேடையில் கொத்தனைச் சந்தித்தேன். தான் யாழ்ப்பாணம் வருவதற்கு அப்பொழுது உடன்பட்டதன் நோக்கம் என்னையும் வேறு சில நண்பர்களையும், சந்தித்துப் போக வேண்டுமென விரும்பியது தான் என்று தனது மன ஆதங்கத்தை அன்று வெளியிட்டார்.

இனிய நண்பர் கொத்தனின் இறுதிச் சந்திப்பாக அது அமையப்போகிறது என்பதனை நான் அப்போது எப்படி அறிய முடியும்? ஆனால் அவர் விட்டுச் சென்றுள்ள படைப்புகள் என்றும் எம்முடன் பேசிக்கொண்டிருக்கும் என்பதே மனதுக்கு ஆறுதல் அளிக்கிறது.

**- தெணியான்.**

---



மருதூர்க் கொத்தனின் சிறுகதைகளை பத்திரிகை - சஞ்சிகைகளில் உதிரிகளாகப் படித்தபோதும் பின்னர் மருதூர் கொத்தன் கதைகள் என்ற அவரது சிறுகதைத் தொகுப்பு நூலைப் படித்தபோதும் அவரின் சிறுகதைகளில் மிகுந்த ஈர்ப்புக் கொண்டிருந்தேன். எமது சூழலில் நாங்களறியாத பாத்திரங்களையும், தளங்களையும் பழக்க வழக்க கலாசாரக் கூறுகளையும் அவர் உயிர்ப்புடன் சித்திரித்திருந்தார். என்னுடைய படைப்புகளிலும் ஈடுபாடு கொண்டிருந்த அவர், தான் கற்பித்த அல்மனார் மகாவித்தியாலயம், வெளியிட்ட “கலங்கரை” என்ற மலரில் என்னுடைய சிறுகதையொன்றையும் வேண்டிப் பிரசுரித்தார்.

நான் கல்முனை கல்வித் திணைக்களத்தில் பணிபுரிந்த 82-83ம் ஆண்டுகளில் அவருடன் கூடுதலாகப் பழகும் வாய்ப்புகள்

“

**கொத்தன் நினைத்திருந்தால் ஜனரஞ்சகமான படைப்புக்களைத் தன் இடதுகையால் வெகு சுலபமாக எழுதி ஏராளமான வாசகர்களையும், புகழையும் சம்பாதித்திருக்க முடியும். ஆனால் அவர் இலக்கியத்தைக் கேளிக்கைக்குரிய ஒரு வடிவமாகக் கருதியவரல்லர்.**

**- உமாவரதராஜன்**

”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டன. அப்போதுதான் கொத்தன் என்ற படைப்பாளிக்குமேல் கொத்தன் என்ற தீரம் மிக்க மனிதனை தெரிந்து கொண்டேன். மனித சமத்துவத்தை அவாவும் தீவிர இடதுசாரிப் போக்குடையவர், கொண்ட கொள்கையில் விடாப்பிடியான பற்றுறுதி உள்ளவர். மற்றவர்களுடன் பழகி புதியபுதிய விடயங்களை அறியவேண்டுமென்ற ஆவலுள்ளவர். பழகுவதற்கு மிகவும் இனிமையானவர். முக்கியமாக இந் நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்கள் எல்லோரும் ஒற்றுமையாக இயங்குவதன் மூலமே விடுதலை வாழ்வு வாழலாமென்று நம்பும் வெகுசிலரில் அவரும் ஒருவராக இருந்தார்.

இதனையும் இந்த இடத்தில் குறிப்பிடவேண்டும். மருதூர் கொத்தன், சண்முகம் சிவலிங்கம் முதலிய படைப்பாளிகளுடன் நேரில் பழகியபின் பாடப்புத்தகங்களில் இடம்பெற்றிருந்த அவர்களின் படைப்புக்களை நான் மாணவர்களுக்கு கற்பிக்க நேர்ந்தது. அப்போது அவர்களை நேரில் அறிந்தவன் என்ற வகையில் அப் படைப்புக்களின் "தரிசனங்களை" பல்வேறு விதங்களில் என்னால் உணரமுடிந்தது. மாணவர்களையும் அப்படைப்புக்களில் கூடிய ஈடுபாடு கொள்ளவைக்க முடிந்தது. மருதூர்க் கொத்தன் என்ற படைப்பாளி - மனிதாபிமானி என்றும் மக்கள் மனங்களில் நிலைத்திருப்பார்.

- குப்பிழான். ஐ. சண்முகன்

---



அவருடைய ஆற்றலுக்கு அவர் சாதித்திருக்கவேண்டியவை அதிகம். வாழ்க்கை நெருக்கடிகள் அவரை முடக்கிவிட்டன... கடந்த சுமார் நாற்பது வருடங்களில் ஒப்பீட்டளவில் கொத்தன் குறைவாகவே எழுதியுள்ளார். எனினும், அவரது எழுத்துக்கள் நிறைவானவை. மருதமுனையைக் களமாகக்கொண்டு கிழக்கிலங்கையின் முஸ்லிம்களின் வாழ்க்கை யதார்த்தத்தை, அதன் வெட்டுமுகத்தோற்றத்தை அற்புத மாகக் கலையாக்கியவர் அவர். அவ்வகையில் ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் அவருக்கு நிரந்தரமான ஓர் இடம் உண்டு. குறைவாக எழுதி நிலையான இடம் பெற்ற மிகச் சில எழுத்தாளர்களுள் கொத்தனும் ஒருவராக இருப்பார் என்பதில் ஐயமில்லை.

பேராசிரியர் எம்.ஏ.நுஃமான்

---



நாடகக் கலைமீது கொத்தன் கொண்டிருந்த ஈடுபாட்டின் காரணமாகவே பின்பு "ஆபிரகாம் லிங்கன்" "பாவம் நரிகள்" "நந்திக் கலம்பகம்" முதலிய நாடகங்களை எழுதி அரங்கேற்றி நாடகத்துறையிலும் அவரின் ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார். அதற்கு முன்னரும் மருதமுனை இளைஞர் கழகத்திற்காக "ஏழை அழுத கண்ணீர்', 'சுடர் விளக்கு' முதலிய நாடகங்களை எழுதி நெறிப்படுத்தி உள்ளதாக அறிகிறோம்.

பல மரபுக் கவிதைகளையும் இவர் எழுதியுள்ளார். மிக இறுக்கமானதும், செழுமைமிக்கதும், கற்பனை நயம் மிக்கதுமான அவர் கவிதைகள் வரவேற்கத்தக்கவையே. பல்கலை வல்லவரான மருதூர்க் கொத்தன் எப்போதும் குறுகிய எல்லைக் கூட்டுக்குள் நின்றதில்லை. மனிதாபிமானக் கண்கொண்டு ஆழ அகல நோக்கோடு, முற்போக்குச் சிந்தனைகளையும் உள்வாங்கிப் படைப்புக்களை ஆக்கிய சிருஷ்டியாளர். அவர் நம் மண்ணின் மைந்தர். சொந்த மண்ணை நேசித்து மண்வளத்தை நிலைநிறுத்திய சிறந்த எழுத்தாளர்.

- கவிஞர். மு. சடாட்சரன்

"

மொழிப் பிரயோகங்களும் வாழ்க்கைச் சித்தரிப்பும் புத்தனுபவத்தை நிச்சயமாய் எமக்குத் தருகின்றன. மலையாள இலக்கிய மொழிபெயர்ப்புகளில் பெறும் ஒருவித புத்தனுபவத்தை ஒத்ததென இதனைச் சொல்லலாம் மொழியின் இணைவினால் இவற்றுக்கு நாமும் சொந்தக்காரர்கள் என்பதில் தமிழர்களும் பெருமைப்படலாம் வியக்கத்தக்க மொழி ஆளுகையை மருதூர்க்கொத்தன் கொண்டுள்ளார்.

- அலை அ.யேசுராசா

"



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மருதூர்க் கொத்தன் அவர்கள் சற்றுக் குள்ளமானவர்தான் அவர் ஒரு குறுமுனியாகவே எப்போதும் காட்சி தருகிறார். "நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம் மலையிலும் மானப்பெரிது" என்பது வள்ளுவம். மலையிலும் மானப்பெரிதான அபாரசக்தியைத் தன்னுள் அடக்கிய அகத்தியர் போன்ற குறுமுனியின் படிமம் மருதூர்க் கொத்தனுக்கு சாலப் பொருந்தும்.

- எழுத்தாளர். அமரர் சண்முகம் சிவலிங்கம்

---



ஈழத்தின் நவீன தமிழ் இலக்கியத்தை மகிமைப்படுத்துபவர்களுள் நிச்சயமாய் (மருதூர்க்கொத்தன்) இவரும் ஒருவர் கல்முனைப் பிரதேச முஸ்லிம்களின் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களையும் பேச்சு மொழியினையும் உயிர்ப்புடன் தன் எழுத்துக்களில் அவர் சிறைப்பிடிக்கிறார். மறைந்து செல்லும் பண்பாட்டம்சங்களைக்கூட நுட்பமாய்ப் பதிவு செய்கிறார். மதத்துடன் பிணைந்த வாழ்வு - அதில் ஊடுவிருவியுள்ள போலித்தனங்கள், சென்றகால அல்லது தொலை தூரத்திலுள்ள இஸ்லாமிய நாகரிகப் பெருமைகளை வெட்டுமுகத் தோற்றத்தில் பார்த்தலினூடாய்க் குவிமையப் படுத்தும் இன்றையச் சீரழிந்த யதார்த்த வாழ்நிலை, வாழ்முறையுள் விரவிப் பரவியுள்ள சுரண்டல் என்பன வெல்லாம் இவரது படைப்புகளில் கலைத்துவத்துடன் வெளிப்பாடு காண்கின்றன. மொழிப் பிரயோகங்களும் வாழ்க்கைச் சித்தரிப்பும் புத்தனுபவத்தை நிச்சயமாய் எமக்குத் தருகின்றன. மலையாள இலக்கிய மொழிபெயர்ப்புகளில் பெறும் ஒருவித புத்தனுபவத்தை ஒத்ததென இதனைச் சொல்லலாம் மொழியின் இணைவினால் இவற்றுக்கு நாமும் சொந்தக்காரர்கள் என்பதில் தமிழர்களும் பெருமைப்படலாம் வியக்கத்தக்க மொழி ஆளுகையை மருதூர்க்கொத்தன் கொண்டுள்ளார்.

- அலை அ.யேசுராசா

---



மருதூர்க்கொத்தன் ஜனரஞ்சகமாக எழுதி சாதாரண வாசகர்களை ஈர்த்து விடுபவரல்லர். அவர் நினைக்கும் பாத்திரத்திற்கு கற்பனா உயிர்கொடுத்து சாசுவதமாக உலவவிடும் வடிவமைப்பாளர் அவருடைய தமிழ்நடையே தனித்துவமானது. அதில் அவர் செய்யும் நகாசு வேலைகள் அவர் எடுத்துக்கொண்ட கதைக் கருவுக்கு அழுத்தம் கொடுத்து நம்மை ஒன்றச் செய்து விடுகின்றன. இதனால் அவருடைய கதைகளைப் படித்தபின் ஒரு கவிதையைப் படித்த உணர்வும் திருப்தியும் ஏற்படுகின்றது.

- எழுத்தாளர். அமரர் அ.ஸ. அப்துஸ்ஸமது

---



கொத்தன் நினைத்திருந்தால் ஜனரஞ்சகமான படைப்புக்களைத் தன் இடதுகையால் வெகு சுலபமாக எழுதி ஏராளமான வாசகர்களையும், புகழையும் சம்பாதித்திருக்க முடியும். ஆனால் அவர் இலக்கியத்தைக் கேளிக்கைக்குரிய ஒரு வடிவமாகக் கருதியவரல்லர்.

எழுத்தாளர். உமாவரதராஜன்

"

சொற்பமாய் எழுதி விட்டு பெரிய மகுடங்களுடனும் ஒளிவட்டங்களுடனும் நடமாடுபவர்கள் மத்தியில் ஏராளமாய்ப் படைத்தும் மிகுந்த கவனப்படுத்தலுக்கு உட்படாததற்கும் புனைகதையாளராக மட்டுமே வாசக மற்றும் விமர்சன உலகில் உள்வாங்கப்பட்டதற்கும் கொத்தனது அனைத்துப் படைப்புகளும் உரிய காலத்தில் நூலுருப் பெறாததே காரணமாகும்.

- ஆகவே ஜபார்

"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குறிப்பாக மருதமுனை மக்களின் தொழில்முறை, பேச்சுவழக்கு என்பவற்றை அவரது பெரும்பாலான கதைகளில் வெளிப்படுத்தியுள்ளார். தமிழ் முஸ்லிம் மக்கள் இரண்டறக் கலந்து வாழ்கின்ற இப்பிரதேசத்தின் இம்மக்களின் பேச்சுவழக்கு வெவ்வேறானதே. முஸ்லிம்களுக்கு என்று தமிழ்ச் சமூகத்தில் இருந்து வேறுபட்ட தனியான பேச்சு வழக்கு ஒன்று வழக்கில் இருப்பதையும் கொத்தன் கதைகள் வெளிப்படுத்து கின்றன. மருதமுனை முஸ்லிம்களின் தனித்துவமான பேச்சு வழக்கு ரொம்ப அலாதியானது. அதனைக் கொத்தன் தனது கதைகளில் மிக நுட்பமாகப் பதிவு செய்கின்றார்.

**பேராசிரியர் றமீஸ் அப்துல்லா**



இலக்கியம் மக்களுக்காகப் படைக்கப்பட வேண்டுமென்ற லட்சிய வெறியுடன் சிருஷ்டித்துக்கொண்டிருக்கும் இவரை அட்டையில் வெளியிடுவதன் மூலம் மல்லிகை மிகுந்த மகிழ்ச்சி அடைகிறது. இலக்கியத்தை வெறும் பொழுதுபோக்காகவோ அல்லது பணம் பண்ணுவதற்கோ பயன்படுத்தாமல் சமூக மேம்பாட்டுக்காகவே இதனைப் பயன்படுத்த வேண்டும் ஆக்க இலக்கியம் சிருஷ்டிக்கும் ஒவ்வொரு எழுத்தாளனும் அதை ஒரு சமூகப் பணியாகக் கருதவேண்டும் என்ற கருத்தினை அவர் வலியுறுத்தியதை அவரது எழுத்தில் மட்டுமல்ல பேச்சிலும் மூச்சிலும் கண்டேன். காட்டு மிருகங்களைக் கதாபாத்திரங் களாக்கி அவைகளுக்கிடையே நடைபெறும் சம்பவம் ஒன்றைக் கருவாகக் கொண்டு அவர் உருவாக்கிய 'பாவம் நரிகள்' என்ற நாடகத்தின் மூலம் சமூக விரோதிகளின் முகமூடியை அவர் கிழித்தெறிந்ததை அன்றைய நாடகத்தில் கண்டுகொண்டேன். நாடகத்துறையில் அவருக்குள்ள தேர்ச்சியை எண்ணி உண்மையில் நான் பிரமிப்படைந்தேன்.

**எழுத்தாளர். நெல்லை க.நவம்**



"கூத்தும் குரைவையும் கோலாட்டம் சீனடியும்
பக்தி வளர்க்கும் பள்ளிகளும், கோயில்களும்
தேவாரம் பைபிள் திருக்குர்ஆன் ஆகமங்கள்
நாவார ஓதுமிசை நாற்றிசையும் தேன் பொழிய
இந்து கிறிஸ்தவ இஸ்லாமிய மக்கள்
சிந்துகள் பாடிச் செந்தமிழை வாழ்விக்கும்
மங்காப் புகழ் பூத்த மாதரசி கல்முனையாள்!"

யாப்பமைதி ஜொலிக்கும் இக்கவிதையில் விரவி நிற்கும் எதுகை மோனை, சந்தம், சீர் என்பவற்றினால் வரிக்குவரி ஒத்திசைப் பண்புகள் மேலோங்கி நிற்கின்றன. மேலும் அதன் நிழலாட்டம் இயல்பாகவே இங்கிதமான சங்கீத நாதத்தையும், ஓசை நளினங்களை யும், ராகபாவங்களையும் மனதில் நிலைகொள்ளச் செய்து விடுகின்றன. எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என்ற வேறுபட்ட நிலைகளினால் மேலும் மனதுக்கு சுருதி சேர்ப்பதோடு பரவசத்தையும் புதிய பரிணாமத்தையும் பிரவாகமாக்கி நயம் பெறுகின்றன

**- கவிஞர் புன்னகை வேந்தன்**

"

கொத்தன் என்ற படைப்பாளிக்குமேல் கொத்தன் என்ற தீரம் மிக்க மனிதனை தெரிந்து கொண்டேன். மனித சமத்துவத்தை அவாவும் தீவிர இடதுசாரிப் போக்குடையவர், கொண்ட கொள்கையில் விடாப்பிடியான பற்றுறுதி உள்ளவர். மற்றவர்களுடன் பழகி புதியபுதிய விடயங்களை அறியவேண்டுமென்ற ஆவலுள்ளவர். பழகுவதற்கு மிகவும் இனிமையானவர். முக்கியமாக இந் நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்கள் எல்லோரும் ஒற்றுமையாக இயங்குவதன் மூலமே விடுதலை வாழ்வு வாழலாமென்று நம்பும் வெகுசிலரில் அவரும் ஒருவராக இருந்தார்.

**- குப்பிழான். ஐ. சண்முகன்**

"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மருதூர்க்கொத்தன் இலக்கிய உலகில் ஒரு படிமமாய்க் கவிந்த மிக மதிப்பீடாய் உறைந்த ஒரு பிம்பம். *(Iconic and Legendary Image)* அதனால் அவரை என்னை வளர்த்து ஆளாக்கிய என் அன்புக்குரிய தந்தையாக, எனக்கும் கற்பித்த ஆசானாக, சிறுவயதில் என்னை ஒரு நாடக நடிகனாக்கிய நெறியாளராகப் பார்ப்பதை விட எனது வாசக உலகத்திற்குள் நுழைந்து இன்றளவும் உயிர்ப்புடன் இருக்கும் எனது அபிமானப் படைப்பாளியாகவே அதிகம் உணர்கிறேன்.

உலகத் தமிழிலக்கியப் பரப்பின் பொது வெளியில் அதீதமாய்க் கவனம் கொள்ளப்பட்டவர் கொத்தன். ஒற்றை வரியில் அல்லது இரட்டைச் சொல்லில் குறிப்பிடுவதாயின் அவர் ஒரு பன்முக ஆளுமை. கவிதை, நெடுங்கவிதை, காவியம், சிறுகதை, உருவகக்கதை, நாவல், இலக்கிய விமர்சனம் மற்றும் திறனாய்வு, நாடகம், இசைப்பாடல்கள் இன்ன பிற துறைகளில் மிளிர்ந்தவர்.

பல படைப்பாளிகளை உருவாக்க விரும்பியவர். உருவாக்கிக் காட்டியவர். 1950களின் தொடக்கத்தில் தனது முதல் கவிதையான நீல வான வீதயிலே! என்ற கவிதையுடன் இலக்கிய உலகினுள் பிரவேசம் செய்தவர். முதல் முயற்சியே கவிதை என்பதாலோ என்னவோ அவரின் முதல் நூலையும் கவிதை நூலாகத்தந்தவர். ஏராளமான கவிதைகள் எழுதியிருந்தாலும் அவை தொகுப்பாக வர முன்னமே எடுத்த எடுப்பில் ஒரு காவியத்தை நூலாக வழங்கியவர். அது 1977 இல் வெளிவந்த “காவியத்தலைவன்” காவியமாகும்.

ஏலவே மூன்று நூல்கள் பிரசுரமாகியுள்ளன! காவியத்தலைவன் என்ற காவியம் உள்ளிட்ட “மருதூர்க் கொத்தன் கதைகள்” எனும் சிறுகதைத் தொகுப்பும் அத்தொகுப்பில் இடம் பெற்ற பெறாத கதைகள் கதைகள் “ஏன்?” தலைப்பில் வெளிவந்த தொகுப்புமே அந்நூல்கள்.

சொற்பமாய் எழுதி விட்டு பெரிய மகுடங்களுடனும் ஒளிவட்டங் களுடனும் நடமாடுபவர்கள் மத்தியில் ஏராளமாய்ப் படைத்தும் மிகுந்த கவனப்படுத்தலுக்கு உட்படாததற்கும் புனைகதையாளராக மட்டுமே வாசக மற்றும் விமர்சன உலகில் உள்வாங்கப்பட்டதற்கும் கொத்தனது அனைத்துப் படைப்புகளும் உரிய காலத்தில் நூலுருப் பெறாததே காரணமாகும்.

பல படைப்பாளர்களைப் போல சுய பிரசுர முயற்சிகளில் கூட இறங்காது போனதற்கு நிதிவளமின்மையும் பிறிதொரு காரணமாகும்.

- ஆகவே ஜபார்.

“

மதத்துடன் (இஸ்லாம்) முரண்படாமல் மார்க்சீசியத்தை எவ்வாறு பின்பற்றலாம் என்னும் புதுமையான வழித்தடத்தினைத் தேர்ந்தெடுத்து நடந்து காட்டிய உயர்ந்த சிந்தனையாளர்.

- தெனியான்

”


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"ஏங்கா கிடுகச் சுறுக்கா எளயுங்களங்கா"

தங்கச்சிக்காரி அவசரப்படுத்துறா. இந்தப் பொண்டுகளக் கொண்டு கிடுகெழக்கதெண்டா லேசிபட்ட காரியமா? நாலு பொண்டுகள் ஒரு "களரி" யாக் கூடிக்கிட்டா ளுகளெண்டா வேலயா நடக்கப்போகுது? ஊர் அலாய் பலாயக் கழுகிக் குடிச்சிக் "கொத்துவா" ஒத இருந் திருவாளுகள். இந்த வாசாரியளுக்கு மையத்து ஊடும் ஒண்டுதான். கலியாண ஊடும் ஒண்டுதான்.

பச்ச ஓலதானே, லேசா எழக்கலம். என்ர கௌவழியச் சேந்த பொண்டுகப் புள்ளயளெல்லாம் மகுத்தாகவேணும், ஒன்னக் கட்டி உசிருக்குசிரா வெச்சிக் கிட்டிருக்கன். நீ "இத்தா" இருந்து எனக்கு அந்த ஒலகத்துல ஈடேத்தம் தேடித்தரப்படாத? இப்புடி என்னத் திருப்பிக் கேட்பார். ஆர்ர எண்ணம்தான் நெறவெறாட்டியும் அவர்ர எண்ணத்த ஆண்டவன் "கபுலாக்" கிப்போட்டான்.

"எழக்க கிடுகள எடுத்துக்கா பேரன்"

தம்பிக்காறன் வேல செய்ய எண்டு நிண்டா கச்சான் காத்துக்கு ஓலையாடுக மாதிரி துடுதுடுப்பாத்தான் நிப்பான். என்ர மகள்ள மகனத்தான் பேரன் எண்டு கூப்பிடுகான். எனக்கு "இத்தா" வேலி அடைக்க பேரப்புள்ளயளும்

# வேலி

என்ர "இத்தா"க் கடன நெறவேத்திப்போட்டுத்தான் நீ மகுத்தாகவேணும், ஒன்னக் கட்டி உசிருக்குசிரா வெச்சிக் கிட்டிருக்கன். நீ "இத்தா" இருந்து எனக்கு அந்த ஒலகத்துல ஈடேத்தம் தேடித்தரப்படாத? இப்புடி என்னத் திருப்பிக் கேட்பார். ஆர்ர எண்ணம்தான் நெறவெறாட்டியும் அவர்ர எண்ணத்த ஆண்டவன் "கபுலாக்" கிப்போட்டான்.



பொறத்திவாசல் மணலில் கூடிக்கிட்டிருந்து பச்சோலை பொழந்து கிடுகெழக்காளுகள்.

ம்... நாம நெனச்சாப்போல என்னதான் நடக்குது. அவரவர் தலையில அந்த வல்ல பெரிய றகுமான் எழுதின எழுத்து எப்புடியோ, அவியவியட கலாகதிர் எப்புடி முடியவேணும் எண்டிரிக்கோ அப்புடித்தான் நடக்கும். ஒங்கட தோளால என்ர "சந்தக்கு" ஆலயடிக்குப் போகவேணுமெண்டு எந்த நேரமும் சொல்லுவன். என்ர "இத்தா"க் கடன நெறவேத்திப்போட்டுத்தான் நீ வேல செய்யுதுகள் எவ்வளவு பெரிய பாக்கிசம் போன தலப்பொறக்கி முந்தின தலப்பொறயில, அதாவது "மீரா" கந்திரி மாசப் பொறப்பண்டுதான் பேத்தி மூத்தவளுக்குக் கலியாணம் சீர் செறப்பா முடிஞ்சிச்சீ, அதுகள்ற நலவெறட்டப் பாக்க என்ற "ஹயாத்த" நீடிக்கப்போடுகானோ என்னமோ? அவரில்லாத ஒலகத்தில நானிருந்து தான் என்ன? இல்லாட் டித்தான் என்ன? தலமசிரும் காத்துக்கு வெடிச்ச கமுகம் பாளமாதிரிப் போச்சி இந்த வயசுக்கம் எந்தச் சந்தோச காரியத்தையும் நானோ அவரோ தனியக் கொண்டாடினதில்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பிக்காறனும் என்ர மூத்தவனுந்தான் "இத்தா" வேலி அடைக்கானுகள். நடுவெளயவன் ஏழாங் கத்தத்துக்கறுக்க மாட்டுபொணயல் கொண்டாறத்துக்காக படுவாங்கரைக்குப் போயிருக்கான். இப்பதான் கொம்பு தள்ளின நாம்பன் பொணயல்தான் கொண்டருவான். வண்டற தீவில தான் மாட்டுவாடி, வண்டறதீவிலேயே எங்கட மாட்டுப் பட்டிதான் பெரிசாம்.

வாடியில இருந்து வந்த பொறகால எழும்பின வாயுவுதான். பத்து நாளா படுக்கையில போட்டுட்டு அந்த வாயுவு அத்தக்கத்த வாறதுதான். இடிச்சித்தின்னாத தூளுமில்ல லேகியமுமில்ல.

இவிய என்னத்த வேலி கட்டுறாங்க. அவர்ர கையால தான் வளவச்சுத்தி வளச்சிவர வேலி கட்டினார். ஆறுமாசத்துக்கெடயில எறந்து போச்சி? கட்டின வேலிக்கு மேலால பச்சக் கிடுகு சாத்துறாங்க எல்லா ஊரிலயும் பச்சக் கிடுகாலதான் ஈராவேலி கட்டுகினமோ? அதெல்லாம் எனக்கெப்படித் தெரியும். எங்கட ஊர் வழக்கம் இப்புடி பொறந்தாம் பொறப்புக்கும் ஊர உட்டு அடுத்த ஊருக்கும் போயறியன். பக்குவப்பட்டு பெரிய மனிசியானத்திலிருந்து அவருக்கு வாழ்க்கப்பட்ட மாமியாட ஊட்ட கால் மாறிப்போற வரக்கும் கடப்பக்கூட கடந்திருக்கமாட்டன். அந்த நேரத்தில எங்க உம்மாக்கு என்னிலதான் கண்ணும் கருத்தும்.

"ஆம்புளயளோட அவர் போனார். மகுத்தான காக்காக்காறன் அவருக்குக் கொடப்புடிச்சிப்போனார். உடுத்துக்குப்போன மகிழம்பூச் சாறனும், விசிறித்தலப்பாவும், குட்டான் பட்டுச் சாலுவையும் மடிச்சி, பொட்டுக் கறையான் தின்னாம தாழம்புப் பூ போட்டுப் பொட்டகத்துக்குள் பத்திரமா வெச்சிரிக்கி. உதுத்தி எடுத்த வம்மிப்பூ மாதிரி செம்பாணி தச்ச குதிரக்கால் மிருவடிய அவர் போட்டுக்கு நடக்கக்குள்ள ஒழுங்கையெல்லாம் அழகொழுகிச்சி."

கால்மாறிப்போன அண்டக்கி ஒரு பொடவர முகதலய எனக்கும் சமதலய அவருக்கும் உடுத்தாட்டி ஏழாந்தண்ணி வாத்தத்த நெனச்சா இண்டக்கிம் கல்புக்க சுர்ரெண்ணுது. அண்டு ராவு றோட்டெல்லாம் ஒரே கிடுகிடுப்பு ங்க.... றோட்டெண்டுட்டனாக்கும். அந்த நாளயில றோட்டேது. நான் இசாவாகி ஓதப்போயிருக்கிறவன் தரிச்சி, ஆறுமாசம் இருக்கக்குள்ளதானே ஒழுங்கக்கி றோட்டுப்போட்டு சனங்களுக்குத் தறுமவேல குடுத்த. அந்த வருசம் வானம் நல்லா ஏறக்கட்டிப்போட்டுது. செரியான கருக்குதலப் பஞ்சம்

ஆம்புளயளோட அவர் போனார். மகுத்தான காக்காக்காறன் அவருக்குக் கொடப்புடிச்சிப்போனார். உடுத்துக்குப்போன மகிழம்பூச் சாறனும், விசிறித்தலப்பாவும், குட்டான் பட்டுச் சாலுவையும் மடிச்சி, பொட்டுக் கறையான் தின்னாம தாழம்புப் பூ போட்டுப் பொட்டகத்துக்குள் பத்திரமா வெச்சிரிக்கி. உதுத்தி எடுத்த வம்மிப்பூ மாதிரி செம்பாணி தச்ச குதிரக்கால் மிருவடிய அவர் போட்டுக்கு நடக்கக்குள்ள ஒழுங்கையெல்லாம் அழகொழுகிச்சி. அந்த உடுமானமெல்லாம் இப்ப ஆரு உடுக்கிறா. பணத்துக்கு மூணு சள்ளல் கோருவ வித்த அந்தக் காலத்திலேயே சாரன்ர பெறுமதி ரெண்டரப் பவுண். இந்தக் காலத்து மாப்பிள்ளையள் கண்டறியாத வெள்ளைச் சாறனையும் சட்டயயும் கண்டுபிடிச்சிற்றாங்க. ஆக்களுக்கு எசக்க மிருந்தாத்தானே. இங்கிரிந்த வண்டறத்தீவுகு இருவதுகட்ட ஊட்டில மத்தியானச்சோறு திண்டுட்டு அரிசி, தேங்காய், கொச்சிக்காய், சரக்குச் சாமானையெல்லாம் சாக்கில கட்டி முன்னடப்ப பினடைப்ப போட்டு பொறப்பட்டா ரெண்டா மகரித்தொழுகைக்கு வாடிக்குப் போய்ச் சேர்ந்திருவார். இந்தக் காலத்து எளந்தாரிமாருக்கு கைமனக்கிப் போறதெண்டாலும் பைசிக்கல் வேணும். இல்லாட்டி வஸ் வேணும் எங்க பாப்பம் இவியட வஸ்ஸால காருலயெல்லாம் மாட்டுவண்டியப் போல காட்டுக்கையும் மேட்டுக்கையும் போகேலும்?

அவர் போடுக குண்டுவாரில ஆனப்பல்லுப் புடிபோட்ட வில்லுக் கத்தியும், தொறப்புக் கோருவையும் எவ்வளவு அலங்கிறுதமாக் கிலுங்கும்.

மூத்த மதினிய எனக்கு வெள்ளவிரிச்ச கொடபுடிச்சிக்கு வந்தா. என்னச் சுத்தி இருதெறத்தார்ர பொண்டுகளும் எங்களுக்கு முன் னாலபோன அவரோட ஆம்பளயள். அந்த நேரம் வெடிச்ச எறிவெடில் இப்ப எங்க இரிக்கி. இப்ப எல்லாம் வெடிஃகூட நெருப்புமல்லவா தேவைப் படுகுது? சண்டக் காலத்தில் எங்கட ஊர் கடல்ல போன கப்பல்களுக்கு சாப்பான் காறன் போட்ட குண்டுட சத்தம்மாதிரி குண்டு போட்ட வருசம் எளயதுகள் ஒண்டும் பொறக்கல்ல. புள்ளயள் மூணோடயும் உள்ளூட் டுக்க போய் சிக்கறாக் கதவப் பூட்டிக்கிட்டன். அவர் ஆக்களோட கடக்கரைக்குப் போய் புதினம் பார்த்தார். போகவேணாம் எண்டு சொன்னத்தக் கேட்டானத்தானே. என்ர ஈரல்ல, பல்லில தண்ணி இல்ல மக்காமடிய அடங்கியிருக்கிற பெரிய மகுலானா வாப்பாட துவா பறக்கத்தாலதான் குண்டு ஊரில்ல உளல்ல.

"எச்சி முள்ளும் சோறுந்தாறன் ஆலிமு மாமா வாறாரெண்டு தெத்திக்காட்டு காகம்..."

பேத்தி காகத்துக்கிட்ட வெசகளங்கேக்காள். விடிஞ்சதில இருந்து காகம் அரிசரிச்சுக் கத்துது. பயணக் காகந்தான் இப்புடிக்கத்தும். எளயவன நெனச்சாக் கண்ணால மாலமாலயாத் தண்ணி வருகுது. நெஞ்சுக்குள்ள பிலாக்காயப் போட்டமாதிரி தைக்குது. தகப்பன்ர மையத்துல முளிக்க ஆண்டவன் அவனுக்குக் கிருபை செய்யல்ல. "றோகு" போற நேரத்தில மக்களும் பேரப்புள்ளயளும் மொச்சிக்கிட்டிருந்து. கொழறிக்கொழறி இருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரப்புக்கேட்டிச்சிகள். இளையமகனார் வரல்லய வரல்லய வரல்லய என்றென்று கேட்டார். மகன்ர ஈறலால மல்லுக் கட்டித்தான் "மலக்குல்மகுத்து" "றோகெ"டுக்கவேண்டி இருந்திச்சி. தந்திக்கு மேல தந்தி அடிச்சும் அந்தத் தம்பி வராம உட்டுட்டான். வாப்பாட ஈறலத் தீக்க அவனுக்கு கல்பின இல்லாமப் போச்சி

அவன்தான் என்ன செய்வான். இந்தியாவில இருந்து வாறதெண்டா லேசுப்பட்ட காரியமா? கோச்சி ஏறிக்கப்பலேறி வரவேணும். அதுகும் இந்தத் துண்டுக்குள்ள தான் சோதினயாம். சோதின நேரத்தில அங்க இல்லாட்டி ஓதின ஓதலுக்கு ஒரு ஒப்பின இல்லாமப் போகும். சோதின பாஸ் பண்ணினாத்தானே ஆலிமுப் பட்டம் கெடக்கிம். என்ர புள்ள அச்சுட்டாப் போல பாஸ் பண்ணுவான்.

மகனார் ஓதிக்கிட்டு வந்து மொதல் வெள்ளிக்கிழம அண்டக்கிப் பள்ளிவாசல்ல எழும்பி ஹதீது சொல்லுகத்தக் காதால கேட்டுத்தான் மகத்தாவன் எண்டு ராத்திரி பகலா சொல்லிக்கிட்டே இருந்தார். ஹதீது செல்லிமுடியக் கொத்துவாக்குப்போன சனமெல்லாம் பைத்துப் புடிச்சி ஊட்ட கூட்டிக் கந்து உடுவாங்க கூட்டிக்காறவியளுக்கு எல்லாருஞ் செய்யிறாப் போல வெறுந் தேத்தண்ணியக் குடுத்துடாம மாடறுத்துக் கந்திரி கொடுத்துப் பசியாறத் துறதாக கல்பில நாட்டம் பூண்டிருந்தார்.

லீவில வந்திருக்கக்குள்ள வாப்பாவும் மகனும் கூடினாங்களென்டா காதுகன்னம் வெச்சிருக்கேலாது. கொம்பல் சத்தத்தில அல்லசல் காரரும் வந்திருவாங்க. எடுத்த விசயத்திலெல்லாம் சண்ட. அவருக்கும் சின்ன மகனோடதான் உசிர். அவன் பொறந்த முழுத்தந்தானே பெரிய மரைக்கார் வேல கெடச்சது. அடியடி வாழையா வந்த மொறதலைகளையும் கட்டுமட்டுகளயும் மாத்த எணங்கமாட்டார். மகன் ஏட்டிக்குப் போட்டி. மகண்ட சுறுளித் தலக்கி கிறுதா நல்ல சோக்கா இருந்திச்சி. ஓதப்போன ரெண்டாவது ஆண்டில தம்பி "கிறுதா" வெச்சத்தக் கண்டதும் கொல்லு கழுத்தறு எண்டுக்கு நிண்டிட்டார் மனு'ன். சாணகத்த கரைச்சி மகன்ர தலையில தப்ப வெரட்டித்திரிஞசார். பொடியன் இவர்ர ஓட்டத்துக்கெல்லாம் உட்டுக்கொடுத்தாதானே நாயகமவங்களும் கிறுதா வச்சிருந்ததாக ஆலிமுமாரெல்லாருஞ் செல்லுகாங்க. அவங்க தலைக்கி அத்தர்தான் தடவுறதாம். ஏலாதமட்டில வாப்பாக்காரன் சவுத்திற்றார். அடுத்த லீவுல வரக்குள்ள கிறுதாவ மாத்தி சேக்கெல்லவவெட்டிக்கந்திச்சித் தம்பி அவரக் கேக்கவேணும். அவன் சேக்கெறக் காட்டி சோறு தின்னமாட்டான். என்று குல்லுசெனில நிண்டிட்டார் மனுஷன். பரிதாபம் பாக்கேலாம கொட்டியாரத்துக்குப் போய் அவனோட ஓதுற கூட்டாளிர ஊட்டில நிண்டுட்டான் பொடியன். என்ன இருந்தாலும் போட்டியில மகனுக்குத்தான் வெத்தி. ஒரு வழியுமில்லாம அவர்போய் மகனக் கூட்டிக்கி வந்தார். அவர்ர புடிவாதத்தாலதானே எண்ட புள்ளயள்ள ஒண்டையாச்சிம் இங்கிலிசு படிப்பிக்கேலாமப் போச்சி.

"லெக்கா மச்சிஇந்த நகநட்டையெல்லாம் தைலாப் பொட்டிக்க வெக்கங்கா"

தம்பி பொண்டி நகநட்யெல்லாம் சவுக்காரம் போட்டுக் கழுகித் தொறச்சி தைலாப் பொட்டிக்க அடுகிறா வாண்டதில இருந்து சறுவாங்கத்தில பூணாரம் இல்லாம இருந்ததில்ல. அல்லாகுத்தாலா வெறுங்கழுத்தோட இரிக்கப்பன்னியாக்கிப் போட்டான். மகுத்த ஆராலதான் தட்ட ஏலும்? குஞ்சி கொழந்தையில தாலியறுத்தவளுகள நெனச்சா ஆறுதலாத்தான் இரிக்கி. எனக்குப் பல்லும் அரவாசியில்ல. நகைகளுக்குப் பொட்டி காணுதில்ல. தம்பி பொண்டி அமத்தி அமத்தித் திணிக்கிறா. நானென்ன இந்தக் காலத்து அல்லாமத்துக் காறியளப் போல கழுத்தில ஒரு சங்கிலியும் தூக்கணமில்லாத மின்னியும் ஈக்கில் காப்பும் போட்டவள? அஞ்சி வெரலாலயும் அப்பிப் புடிச்சாப்போலக் கோடப்பூக் கொண்டகுத்தி. அல்லுக்குத்தும் சிமிக்கி வாளியும் போட்ட காது. ஓட்டயெல்லாம் அறுந்து போச்சி. பட்டுக்கணக்கான மணிக்கோர்வையள் காணாம அட்டியல்களும் செஞ்சி தந்தார். என்ர காலத்தவளுகள் பூனக்குட்டி கையில போட்ட தாவத்துக் கொடியிர நாத்தமே இப்ப கெடையாதே முகப்பணியன் காப்பு கட்டு வளையல். கைக்கு மோதிரம் காலுக்கு மோதிரம், தண்ட கறண ஒண்டில ஒண்ட கொறச்சலில்லாம சிமிக்கா வாங்கித்தந்தார். பூணாரத்தையெல்லாம் தூக்க இந்த நாளையப் பிலுக்குக் காறியளுக்கு எசக்கமிருந்தாத் தானே. நெல்லுக்குத்தி, கொள்ளிகொத்தி, அம்மி இழுத்துக் கொச்சிக்காயரைச்சி வேல செஞ்சாத்தானே ஒடம்பில பெலனூறும். சோறாக்கிறத்துக்கும் மிசின் இடுப்பில எசக்கமில்லாததால நிண்டு கூட்ட வாருகள் தேவையாயிருக்கி. இந்த ஆம்புள்ளயளும், அவளுகன்ர போக்குக்கெல்லாம் உட்டுறுகானுகள். கொச்சிக்காய மை போல அரைச்சி ஆணங்காச்சாட்டி அவருக்குச் சோறும் எறங்காது. பூணாரத் தையெல்லாம் அவர்ர கண்ணோடதானே போட முடிஞ்சிச்சி பொண்டுகளக்குப் புருசன் தான் பூணாரம் எண்டது மெய்தான். பூணாரம் போட்டுப் புருசனுக்குத்தானே அழுகு காட்ட வேணும்.

என்ர வகுத்தில காச்ச ஆணடிகளுஞ்செரி, பொண்ணடிகளுஞ்செரி ஒத்தும உள்ளதுகள். நான் பெத்துவளத்த புள்ளயள் வேற எப்புடி இருக்குங்கள். அதுகளச் "சாலிஹான" குணசாலிகளாக வளக்க அடிச் சடிச்சிப் புத்தி சொல்லித் தந்தார். வேற எடத்துல எண்டா இந்தப் பூணாரத்துக்காக நான் முந்தி , நீமுந்தி எண்டு "பித்தி"னாப் படுகுங்கள். அதுகளுக்குத்தான் என்ன கொறய வெச்சார். அந்த றகுமான் வெச்ச குடியாக பறக்கத்தோட குடிவாகஞ் செலுத்துதுகள்.

"அந்த நாய வெரசுங்ககா"

"மூத்த மகள்ள கொரல். இத்தா வளவுக்கு நாய் பூனவராமக் காவல் கட்டா இருக்கவேணும். பொழுது மொகத்தையும் பார்க்கமாட்டாது. ராவலதான் தண்ணிவாக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம்புளயளெண்டு, மக்களும் ஒரு கொடல்ல கெடந்த அண்ணன் தம்பிமாரும், அவியட மக்களும் வரலாம். வாப்பாவும் வரலாம். என்ர வாப்பாதான் இல்லயே பொண் பொரசிகள் வரலாம். அவியள்ளயும் புள்ளத்தாச்சிமார் வரப்படாது. வகுத்தில இருக்கிறதுகள் ஆண் கிணாட்டை களாக இருந்திற்றா? நாலுமாசம் பத்து நாளக்கி தலையில எண்ணவெக்கவும் ஏலாது வாந்து கட்டவும் ஏலாது. தாழம்பூ எண்ணதான் நான் வளக்கமாகத் தலக்கிவெக்கனான். வெயில்ல காயப்போட்ட சோமன் கம்பாயங்களை எல்லாம் எளயமகள் மடிச்சி அடுக்குறாள். வண்ணமான பொடவை யெல்லாம் வாங்கித்தந்தார். பொடவயள அவளால் தூக்கவும் ஏலுதில்ல. கனங்கூடின பொடவையள். உடுத்தாலும் ஒடம்பெல்லாம் நெறஞ்சமாதிரி இரிக்கும். இப்ப உள்ள தொளுப்புறிகளெல்லாம் வண்டப்பத்த வெட்டல காட்டற அரிதட்டுப் புடவையெல்லாம் உடுக்காளுகள் சட்டதைக் கிறதுக்கு ஒண்ணயகால் யார்தான் வாங்குவார் சட்டரகை மணிக்கட்டு வரக்கிம் இருக்கிம். இப்ப எல்லாம முக்காமொளம் கொச்சிக்காய கொரக்கன அரச்சி, நெல்லுக்குத்தி, கொள்ளி கொத்தினா நெஞ்சி பெருக்கும். சட்டப் பொடவயும் கொள்ளயாத் தேவப்படும். அவளுகள் எப்புடியும் போகட்டும். நாலு மாசமும், பத்தரப்பொழுதையும் எண்ணெண்டுதான் கழிக்கதோ? தெரியாது ம்.. செறமாதிரித்தான் செற இருந்தாத்தானே அவருக்கும் அங்குத்து வழியில ஈடேத்தம் கெடக்கும். நாலு கையாலயும் நெறப்பமா இருக்கிற நான் செற யெண்டு நெனச்சா... அஸ்தகு பிறுல்லாகில் அலியுல்லழீம், "அல்லா" என்ர பொளயப் பொறுத்துக்கு அண்டக்கித் தின்னவும் வழி இல்லா தவளுகளும் இத்தா இரிக்காளுகள் தானே

"அந்தக் காலத்தில அறபு நாட்டில் ஒரு விதமான தொண இல்லாததுகளெல்லாம் கண்ணுக்கு மாத்திரம் பொத்தலவச்சி ஒடம்பப் போத்திக்கிட்டு எரங்கின் சீதேவிகளுக்கிட்டப்போய் வாங்கிக் "கணாயத்"த உட்டுக் கிட்டும் "இத்தா" இரிப்பாங்களாம். பள்ளியில "புகாரி" ஓதி "ஹதீது"செல்லக்குள்ள இப்புடி ஒரு ஆலிம்சா ஹதீது சென்னது எனக்கு நெனப்பு."

அந்தக் காலத்தில அறபு நாட்டில் ஒரு விதமான தொண இல்லாததுகளெல்லாம் கண்ணுக்கு மாத்திரம் பொத்தலவச்சி ஒடம்பப் போத்திக்கிட்டு எரங்கின் சீதேவிகளுக்கிட்டப்போய் வாங்கிக் "கணாயத்"த உட்டுக் கிட்டும் "இத்தா" இரிப்பாங்களாம். பள்ளியில "புகாரி" ஓதி "ஹதீது"செல்லக்குள்ள இப்புடி ஒரு ஆலிம்சா ஹதீது சென்னது எனக்கு நெனப்பு. வயசுபோன கௌடுகெட்டயள் இத்தா இரிக்கத்தேவல்ல எண்டு ஆலிமு மகன் எந்த நேரமும் கதப்பான். எனக்கும் ஊட்டுக்குத் தூரப்பட்டு பதினஞ்சி வருசத்துக்கு மேலாச்சிது. நாசமத்த நெனப்பெல்லாம் நமக்கென்னத்துக்கு நம்மட கடம இருக்க வேண்டியது.

"மாமா வாறாங்க.ஆலிமு மாமா வாறாங்க"

"ஏகே...ஏகே... எங்கட மாமா வாறாங்க"

"ஓண்டோவ், ஆலிமுச் சாச்சா வர்றாங்கடோவ்"

"மாமா முட்டாசி கொண்டாறாங்க கடிச்சி"

காகங்கத்தினது செரிதான். எளயமகனார் வாறான். புள்ளயளெல்லாம் துள்ளிக் குதிக்குதுகள். கொழந்தயளுக்கு துக்கம் சலிப்பெல்லாம் என்ன தெரியும்.

வந்த புள்ளயச் சந்தோசமா வரவேற்காம, கொளறுகாளுகள். அவளுகள்தான கொளறாம என்ன செய்வாளுகள். குடும்பத்துக்குத் தலையாரியான மலையான மலசிங்கன் மகுத்தானா ஆராலதான் சிரிக்க முடியும். எனக்கே சலிப்ப அடக்கேலுதில்ல. மகனார் எனக்கிட்டதான் ஓடியாறான்.

"உம்மா"

"வாப்பாட காதுக்கு காமத்துச் செல்லி ஊத வராம உட்டுட்டியே மகனே"

"நடந்ததப்பேசி ஒண்டும் ஆகப்போறதில்ல... அழாதங்கம்மா"

மகன்ர கண்ணும முறிசெடுத்த ஆமணக்கந்தலப்பு மாதிரித் துமும்புது. எல்லார்ர கொளறுவயயும் அடக்குறான். புள்ளயளும் கொளறு கத்தச் சாடமாடயா உடுகுதுகள். வேதத்தச் செமந்த புள்ளயெலவ? அவன்ர பேச்ச ஒரு புள்ளயளும் தட்டுறதில்ல. மகன் சட்ட தொப்பிய எல்லாம் களத்தி வெறக்குக் கட்டயில போடுகான். கெணத்தடியில போய் கால் மொகத்தயெல்லாம் கழுகிக் கிட்டு வாறான். எளய மகள்காறி தேத்தண்ணி கொண்டந்து குடுக்காள். "மாமாவையும் காக்காவையும் கூப்பிடுங்க"

ஆலிமு மகன்தான் தேத்தணியக் குடிச்சுப்போட்டு பேசுறான். புள்ளயளும் கூப்புடுதுகள். தம்பியும் மூத்தவனும் வாறானுகள்

"மாமா அதுதான் புதுவேலியாச்சே... அதுக்கு மேலால என்னத்துக்குக் கிடுகு சாத்துறயள்?" இந்தத் தம்பிக்கென்ன பயித்தியமா? "இத்தா" வேலியப் பிரிக்கச் செல்லுகான். புள்ளகுட்டிகளெல்லாம் பேயறைஞ்சது போல முளிக்குதுகள்

"என்ன தம்பி நீங்க கேக்க கத? ஒங்கும்மாக்கு இத்தா வேலிகட்டுறம்""எனக்கும் இருபது வயதாகுது. நான்தான் எங்கம்மாக்குக் கடைசிப்பிள்ளை. இத்தா இருக்கிற நோக்கந் தெரியுமா உங்களுக்கு?

"நீதான் ஓதிப் படிச்சவன். ஒன்ன உட எங்களுக்கென்ன தெரியும். ஒலக வழக்கத்தச் செய்யுறம்"

"எனக்கெல்லாம் தெரியும் நீங்க வேலியப் பிரியுங்க"

" நீயாச்சி ... வேலியாச்சி நாங்க வாறம்"

" என்ரல்லாவேய்! தம்பிக்காறன் கோவிச்சிக்கிப் பேறான்.

(யாவும் கற்பனை) 1962



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போர்க்களத்துச் சஞ்சயன்போல் ஒரு சமுதாயத்தின் வாழ்க்கையை தெளிவாக அறிந்து நிர்த்தாட்சண்யமாக சொல்லக்கூடிய ஒருவர் வெளிவந்து விட்டார். அந்த ஒருவருக்கு நிச்சயமாக ஓர் இடம் இருக்கிறது மலையாள இலக்கியத்தில் வைகம் முகம்மது தனித்துவமானது. அதில் அவர் செய்யும் நகாசு வேலைகள் அவர் எடுத்துக் கொண்ட கதைக் கருவுக்கு அழுத்தம் கொடுத்து நம்மை ஒன்றச் செய்து விடுகின்றன. இதனால் அவருடைய கதைகளை படித்த பின் ஒரு கவிதையை படித்த உணர்வும் திருப்தியும் ஏற்படுகின்றது" என்று



# மருதூர்க்கொத்தனின் வேலியும் இத்தாவும்

## ஒரு பகுத்தறிவுப் பார்வை

பீருக்குள்ளதைப்போல என்பதில் எனக்குச் சந்தேகமில்லை" என்று பிரபல சிறுகதையாளர் வ.அ. இராசரெத்தினத்தால் விதந்துரைக்கப் பட்டவர் மருதூர் கொத்தன். "மட்டக்களப்பின் சிறுகதைத் துறைக்குப் பெருமை சேர்த்தவர்களுள் பித்தன் ஷாவுக்குப் பிறகு மருதூர்க் கொத்தனே முக்கியமானவர்" என்று எஸ்.பொ.வினாலும். "கவிவளம் மிக்க கிழக்கிலங்கை மண்ணை ஜீவத்துடிப்புடன் கதைகளில் படைக்கும் சிருஷ்டிகர்த்தா இவர். நாடகத்துறையில் மிகுந்த ஈடுபாடும் ஆர்வமும் மிக்க மருதூர்கொத்தன் இலக்கியம் மக்களுக்காக படைக்கப்படவேண்டும் என்ற இலட்சிய வெறியுடன் சிருஷ்டித்துக் கொண்டிருப்பவர்" என்று டொமினிக் ஜீவாவினாலும், "மருதூர்கொத்தனின் தமிழ்நடையே அஸ. அப்துஸ் ஸமதுவினாலும் அடையாளப்படுத்தப்பட்டவர் மருதூர்க்கொத்தன்.

மருதூர்க்கொத்தன் 1962 ஆம் ஆண்டு தினகரன் 'பரிசோதனைக் களத்தில் எழுதிய 'வேலி' எனும் சிறுகதையை 1967ஆம் ஆண்டுதான் எனக்கு வாசிக்க முடிந்தது. 'வேலி' கதையை வாசிக்கும் போது எனக்கு 'கொத்த'னைப் பற்றி எதுவுமே தெரியாது.

அப்பொழுதெல்லாம் எங்கள் ஊரில் வாசிகசாலை யுமில்லை பத்திரிகை விற்பனை செய்யும் முகவர்களும் இல்லை. சுமார் நாலு மைல்களுக்கு அப்பால் அக்கரைப் பற்றிலிருந்துதான் ஒரு பையன் துவிச்சக்கர வண்டியில் (பாலமுனைக்கு) பத்திரிகை கொண்டு வருவான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலர் மாத்திரம்தான் எங்களூரில் பத்திரிகை வாங்குவார்கள். அதில் முக்கியமான ஒருவர் 'சின்னத்தம்பி' என்று அழைக்கப்படுகின்ற சலூன் கடை உரிமையாளர். என் போன்றவர்களுக்கு அவரது சலூன்கடைதான் வாசிகசாலை.

வழமையைப்போல் ஒருநாள் பத்திரிகை வாசிப்பதற்கு சலூன் கடைக்குப் போனேன். சின்னத்தம்பி அண்ணர் கடையை புரட்டி வைத்திருந்தார். கடையில் ஒட்டடை அடித்து சுத்தப்படுத்தி, முன்னர் இருந்த அமைப்பை வேறோர் அமைப்பாக்கி அண்ணன் படு 'பிஸி'யாக இருந்தார். கடைக் கண்ணாடியெல்லாம் பளிச்சென்று தெரிந்தது. சரோஜா தேவியை சிவாஜி'கணேசன் கட்டிப்பிடித்து 'டுயட்'பாடும் காட்சிப்'பிரேம்' வடிவாக துப்பரவு செய்யப்பட்டு கண்ணைக் கவர்ந்தது.

சின்னத்தம்பி அண்ணன் ஒரு சிவாஜி ரசிகர் பராசக்தி, பாசமலர், வீரபாண்டிய கட்ட பொம்மன், காத்தவராயன் போன்ற படங்களைப் பற்றி எனக்கு அவர் கதை கதையாக சொல்லுவார். நான் அதை வாயைப் பிளந்து கேட்டு ரசித்த காலங்கள் பொன்னானவை. எம்.ஜி. ஆரை கொள்கை அளவில்தான் அவருக்கு பிடிக்கும். நடிப்புக்கு நடிகர் திலகம் தான் என்று அவர் என்னிடம் அடித்துப் பேசுவதுண்டு ஜெமினிக்கணேசன் நடித்த 'கல்யாணப்பரிசு' படத்தை 07 தடவைக்குமேல் அவர் பார்த்து இரசித்ததாகச் சொன்ன கதை இன்னும் எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது.

கடையை அழகுபடுத்திக் கொண்டிருந்த சின்னத்தம்பி அண்ணன் என்னைக் கண்டதும் பழைய பேப்பர் கட்டிலிருந்து ஒரு பக்கப் பேப்பரை உருவி எடுத்து என்னிடம் தந்தார். அது ஒரு சிறுகதை பிரசுரப் பக்கம்.

"இந்த பேப்பரில வெளிவந்திருக்கும் சிறுகதையை உமக்கு வாசிக்க தரவேண்டும் என்று கனகாலம் 'கட்' பண்ணி வைத்தது அதுக்குரிய சந்தர்ப்பம் இன்றுதான் வாய்த்திருக்கின்றது. நீர் இந்த சிறுகதையை வாசிக்க வேண்டும் எனக்கும் இக்கதை பற்றிய விளக்கம் தேவைப் படுகிறது" என்றார் அவர்.

பேப்பரை விரித்தேன். 'வேலி' என்ற பெயரில் ஒரு சிறுகதை பிரசுரமாகி இருந்தது அன்றுதான் முதன் முதலில் 'வேலி' கதையை வாசித்தேன் அந்தக் கதை அப்போது எனக்குள் சில அதிர்வுகளையும் கேள்விகளையும் ஞானங்களையும் எழுப்பி நின்றது.

அப்போது நான் பத்தாம் வகுப்பு மாணவன். 'சாந்திமார்க்கம்' எனும் ஒரு புத்தகம்தான் பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு சமய பாடப்புத்தகம். இஸ்லாம் மார்க்கத்தை முற்று முழுதாக அறிந்து தெளிந்து கொள்வதற்கு அந்த புத்தகம் போதுமானது. சாந்தி மார்க்க அறிவோடு மாத்திரம் புழங்கிய காலம் அது.

கணவரை இழந்த பெண்கள் (விதவை) பிரிவுத் துயரை அனுஷ்டிப்பதற்காக தனிமையில் இருந்து துக்கம் அனுபவிப்பதுதான் 'இத்தா' என்று சொல்லப்படுகின்ற இருப்பு என்பதுதான் எனக்கு அப்போது இத்தா பற்றி தெரிந்திருந்த விளக்கம். அதற்குள் உள்ளீடாக மறைந்திருக்கும் இரகசியத்தை என்போன்றவர்கள் தெரிந்து தெளிவு காண்பதற்கான தேடலை தேடித் தந்த கதையாகவே 'வேலி' கதை அமைக்கப்பட்டிருந்ததை நான் அப்போது படித்து ஆச்சரியமும் அறிவும் அடைந்தேன்.

கணவனை இழந்த விதவைப் பெண் கணவன் காலமான நாளிலிருந்து 04 மாதமும் 10 நாட்களும் கட்டாயம் 'இத்தா' இருக்க வேண்டும் என்பது மார்க்க விதி. அந்த நாள் கட்டுப்பாடு ஏன் என்பதுதான் கேள்வி? ஒரு பிள்ளைக் கரு விந்தாகி, விளைவாகி, பிள்ளையாகி உருவாகுவதற்கு போதுமான நாட்கள்தான் அந்த 04 மாதமும் 10 நாட்களும். அதற்குள்ளேதான் 'இத்தா' இருப்பின் உள்ளீடும் இருக்கின்றது.

'இத்தா'க் காலத்து சடங்குகளும் சம்பிரதாயங்களும் எவ்வளவு போலியானவை அர்த்தமற்றவை என்பதை எல்லாம் தோலுரித்துக் காட்டுகின்றது வேலி சிறுகதை. இத்தா வீட்டைச் சுற்றி மிக இறுக்கமான கட்டமைப்புகள், பச்சைவேலிகள், வேடங்கள் பற்றி எல்லாம் அக்கதை விபரமாக விபரிக்கின்றது. ஒரு ஆண் நாய்கூட அந்தப்பக்கம் வரக் கூடாது கற்பிணிப் பெண்கள்கூட இத்தா இருக்கும் பெண்ணை பார்க்கத் தடை. அப்பெண்ணின் வயிற்றில் இருக்கும் பிள்ளை ஆணாக இருந்தால் அது பெரிய பாவம். இப்படியான மூட பழக்க வழக்கங்களையெல்லாம் சாடி நிற்கின்றது வேலி சிறுகதை.

"வயது போன கிழடு கட்டைகள் இத்தா இருக்க தேவல்ல எண்டு ஆலிமு மகன் எந்த நேரமும் கதைப்பாரு எனக்கிம் ஊட்டுக்கு தூரப்பட்டு பதினைந்து வருடத்துக்கு மேலாகிறது" என்று கதையின் நாயகி ஓர் இடத்தில் சொல்வதும், "எனக்கும் இருபது வயதாகுது நான்தான் எங்கு உம்மாவுக்கு கடைசிப் பிள்ளை. இத்தா இருக்கிற நோக்கம் தெரியுமே உங்களுக்கு?" என்று அக்கதையில் வரும் இன்னும் ஒரு முக்கிய பாத்திரமான ஆலிமு மகன் கேட்பதும்தான் வேலி கதையின் உயிர்.

கதையில் வரும் 'வீட்டுக்குத்தூரம்' என்பது பெண்களுக்கு மாதாந்தம் ஏற்படும் *(Manses)* மாதவிடாய். மாதவிடாய் வராவிட்டால் பெண்கள் கற்பம் தரிக்க வாய்ப்பில்லை அதிகமாக ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லாமற் போவதுண்டு. கற்பத்தரிப்பு இல்லையாயின் 'இத்தா' இருப்பும் தேவையில்லை. 'இத்தா' இருப்பு இல்லையாயின் வேலியும் காவலும் அரணும் தேவையில்லை என்பதுதான் வேலி கதையின் தாலி.

அண்மையில் பத்திரிகையில் வாசித்த ஒரு செய்தி எழுபது வயதுக்கு மேற்பட்ட பாட்டி ஒருவர் மீண்டும் அம்மாவானது. இப்படி ஆயிரத்தில் ஒரு பாட்டிக்கு மாதவிடாய் ஏற்படாமல் பிள்ளை பிரசவம் ஏற்படுவதுமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்காக பாட்டி இத்தா அனுஷ்டிக்காமல் இருக்க முடியாது. கதையின் "இத்தா இருக்கின்ற நோக்கம் தெரியுமா உங்களுக்கு?" என்று ஒரு கதாபாத்திரத்தின் மூலம் கதாசிரியர் கேள்வி கேட்கும் ஞானத்தை நாம் சீர்தூக்கி பார்க்க வேண்டி இருக்கின்றது. 'இத்தா'வின் முழுநோக்கமும் கர்ப்பத்தைக் கண்டுபிடிப்பதுதான். கணவனை இழந்த பெண் குறித்துறைக்கப்பட்ட நாட்கள் முழுவதும் 'இத்தா' இருக்க வேண்டும். அதன் மூலம்தான் அவள் கர்ப்பமா? இல்லையா? என்பதை கண்டு கொள்ள முடியும்.

குறித்த பெண் இளவயதினராக இருந்தால் அப்பெண்ணுக்கு உடனடியாக மறுமணம் செய்து வைக்கப் பட்டால் ஏற்கனவே மரணித்த கணவன் மூலம் உருவான கர்ப்பம் அவருடைய பெயரை பதிவிடாமல் புதிய கணவரது பெயரில் பதிவு செய்யப்படும் வாய்ப்பு இருக்கின்றது. ஒருவரின் பிள்ளைக்கு இன்னொருவர் பதிவு வைக்கும் இந்த மாறுபாட்டை விலக்குவதற்கு இத்தாவின் அவசியம் அவசியப்படுகின்றது. முதல் கணவர் வசதி படைத்த ஒருவராக இருந்தால் அவரது சொத்து சுகங்களை அவரது வாரிசு பெறக்கூடிய வாய்ப்பு அதன் மூலம் ஏற்படுகின்றது. மாறாக இரண்டாவது கணவர் செல்வந்தர் அல்லாமல் இருக்கும் பட்சத்தில் முதல் கணவருடைய பிள்ளை இரண்டாவது கணவரின் பெயரில் பதிவாகி தனக்குரிய சொத்துரிமையை அப்பிள்ளை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இவைகளிலெல்லாம் இருந்து விடுபடுவதற்கு முன்னெச்சரிக்கையான ஒரு ஏற்பாடுதான் இந்த இத்தா இருக்கும் முறை இதையெல்லாம் 'யாரும் சொத்துடமை வாதம்' என்று சொல்லவந்தாலும் "இத்தா இருக்கிற நோக்கம் தெரியுமா உங்களுக்கு?" என்ற ஒரு கேள்வியின் மூலம் பல விளக்கங்களை வேலி கதை மூலம் வெளிக் கொணர்ந்துள்ளார் மருதூர்கொத்தன் என்பதுதான் உண்மை.

1967-1969 களில் நானும் ஓரளவு தெளிந்த வாசகனாகவும் 'தத்தக்கா பித்தக்கா' எழுத்தாளனாகவும் வளர்ந்திருந்தேன். அப்போதுதான் மருதூர்க்கொத்தனின் 'ஆற்றுப்படை' என்னும் சிறுகதை தினகரனில் (1967) பிரசுரமாகி இருந்தது அந்தக் கதையின் உருவமும் உள்ளடக்கமும் யதார்த்தமானது. கடலில் வலை இழுக்கும் கூலிமீனவர்களது பிரச்சினைகளை அக்கதை பேசுகிறது. அக்கதையில் வரும் 'கள்ள எலி'ப் பாத்திரம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. கேட்டுப் பெறுவது இல்லையேல் தட்டிப்பறிப்பது என்னும் கள்ள எலியின் கொள்கையோடு எனக்கும் உடன்பாடு இருக்கிறது.

மருதூர்கொத்தனின் அறிமுகத்துக்கு முன் மருதூர் கனியின் அறிமுகம் எனக்கு கிடைத்தது அதற்கு காரணம்? கனியின் தந்தையின் பிறப்பிடம் பாலமுனையாக இருந்தது தான். தமது தந்தைவழி சொந்தங்களை பார்ப்பதற்கு மருதூர்கனி பாலமுனைக்கு வருவதுண்டு அப்பொழு தெல்லாம் பாலமுனையில் அடிக்கடி நாடகங்கள் மேடை ஏற்றப்படும். அந்த நாடகங்களை எழுதி இயக்கி நடித்தும் வந்தவன் நான். அந்த நாடகங்களை பார்க்கும் வாய்ப்பு மருதூர்கனிக்கு கிடைத்திருந்தது. ஒருநாள் மாலைநேரம் என்வீட்டு முற்றத்தில் வந்து நின்றார் மருதூர்க்கனி. இப்படி அவர் பாலமுனைக்கு வரும் போதெல்லாம் நானும் அவரும் சந்தித்து அளவளாவிக் கொள்வோம் (அது தனியாக எழுதவேண்டிய விசயம்) எங்களது பேச்சில் மருதூர்க்கொத்தன் வந்து போவார். என்னை மருதமுனைக்கு அழைத்து சென்று மருதூர்க்கொத்தனுக்கு அறிமுகம் செய்து வைத்ததும் மருதூர்க்கனிதான்.

மருதமுனையில் மசூர்மௌலானா வீதியில் கொத்தனின் 'மருதம்' வீடு இருந்தது. அந்த வீதியில்தான் மருதூர்க்கனியின் உம்மாவின் வீடும் இருந்தது. நாவலா சிரியர் சுபையிர் இளங்கீரன் வாடகைக்கு வீடு பெற்றிருந் ததும் அந்த வீதியில்தான் மருதூர்வாணனின் வீடும் அதேவீதியின் குறுக்குப் பாதையில் இருந்ததாக ஞாபகம். புன்னகைவேந்தன் பாறூக்கும் மசூர்மௌலானா வீதியில் தான் இருந்தார். மருதமுனைக்கு போகும் போதெல்லாம் இந்த கூட்டு இலக்கியவாதிகளை நான் சந்திப்பதுண்டு.

ஒவ்வொரு விடுமுறை நாட்களிலும் நான் மருதமுனையில் இருப்பேன். சில சமயங்களில் என்கூடவே பாலமுனைபாறூக்கும் இருப்பார். மட்டக்களப்பிலிருந்து அக்கரைப்பற்றுக்கு புறப்படும் இரவு நேர பஸ் ஒன்று சரியாக இரவு 11 மணிக்கு மருதமுனைக்கு வரும். அந்த கடைசி பஸ்ஸில்தான் நான், கொத்தன் கனி இருவருக்கும் 'டாட்டா' காட்டி விட்டு ஊருக்கு திரும்புவதுண்டு.

சுபைர்இளங்கீரன் மருதமுனையில் வசித்த காலத்தில் காலை 07மணிக்கே பாலமுனையிலிருந்து மருதமுனைக்கு வந்து விடுவேன் நான். அப்போது இளங்கீரன் முற்றம் பெருக்கிக் கொண்டு நிற்பார். அப்படி நான் அவரை சந்தித்த சந்தர்ப்பங்கள் அதிகம். கீரனது பாரியார். கீரனுக்கு தயார்படுத்தும் காலைத்தேனீரின் பங்காளியாக நான் பங்குகொண்ட சந்தர்ப்பங்கள் அதிகம்.

1999 ஜுலை 'கவிஞன்' இதழ் 02ல் கொத்தன் "எங்கள் கந்தோர் சிற்றுண்டிச்சாலையில்" என்றொரு கவிதை எழுதி இருந்தார்.

எங்கள் கந்தோர் சிற்றுண்டிச்சாலை
கதவுகள் விரிய திறந்தே உள்ளன
கதவுகள் விரிய திறந்தே இருப்பது
வருகை தருபவர் வசதிக்காகவே

அவரது கவிதையைப் போலவே அவரது 'மருதம்' வீட்டுக் கதவுகளும் திறந்தே இருந்தன என் போன்றவர் களுக்கு.

மருதூர்கொத்தன் ஆமையைப் போல அடக்க மானவர். ஆனாலும் முயலைப் போல வேகமானவர். பொறாமை அவருக்கு பிடிபடுவதே இல்லை. எழுத்தாளர் களை அவருக்கு மிகவும் பிடிக்கும். வயதுக் கட்டுப்பாடு புதுசு பழசு பார்க்காமல் எல்லோரிடத்திலும் சமமாக பழகுவார். சிரித்தால் குழி விழும் கன்னம், இமை மடிந்த கண்கள், அழகு தரும் புருவங்கள். அகன்ற நெற்றி. பின்னிறங்க வாரப்பட்ட தலைமுடி, அரும்பு மீசை, குறும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Public Library
Jaffna

பார்வை, வட்டமுகத்தோடு வடிவாகத் தெரிவார் மருதூர் கொத்தன்.

'காளாவி' என்ற ஊரில் 1936ல் பிறந்தவர் வீ.எம்.இஸ்மாயில் எனும் இயற்பெயர் கொண்ட மருதூர் கொத்தன். அவரது தாய் பிறந்த ஊர் சம்மாந்துறை, தகப்பன் வாப்பு மரைக்கார் திருகோணமலையில் பிறந்தார். கொத்தன் சிறு பையனாக இருக்கும் போதே தாய் காலமாகி விட்டார். தகப்பனின் இரண்டாவது தாரம் மருதமுனையை சேர்ந்தவர். அதனால் கொத்தன் மருத முனைக்காரராகி, பின்னர் மருதூர்கொத்தனானதெல்லாம் பழைய கதை.

1970க்கு பிறகு நானும் கொத்தனும் நல்ல உறவுக்காரராகி விட்டோம் "அன்பின் நண்பர் கவிஞர் அன்புடீன் அவர்களுக்கு" என்று அவரது முதலாவது புத்தகத்தில் எழுதி கையொப்பமிட்டு தரும் அளவிற்கு எமது நட்பு விசால விருட்சமாகி விட்டது.

சோஷலிச, கம்யூனிச, பொதுவுடமை தத்துவங்களை நான் கற்று தேர்ந்த கலாசாலை மருதமுனை. அங்கே இளங்கீரனும் வந்து சேர்ந்தால் 'பழம் நழுவி பாலில் விழுந்த கதை'யாக எமது கதை இருந்ததை சொல்லவும் வேண்டுமா?

மருதமுனைக் கடற்கரையில் கீரன், கொத்தன், கனி, ஆனந்தன், நான் உட்பட இன்னும் பல சோஷலிச வாதிகள் கரைவலை இழுத்த நாட்கள் மறக்க முடியாதவை.

கொத்தனின் "ஆற்றுப்படை" கதையில் வரும்...

ஏலே....லா...வல

ஓவே...லா...வல

"அம்பா" பாட்டை என்னால் அங்கே கேட்கவும் பாடவும் முடிந்தது.

கொத்தனது கதைகளோடும் கவிதைகளோடும் நான் எப்படி பின்னிப் பிணைந்து ஒன்றிணைந்து இருந்தேனோ, அப்படித்தான் என் எழுத்துக்களோடு கொத்தனும் பின்னிப்பிணைந்து இருந்தார். அதனால் அவர் ஓர் இடத்தில் என்னைப் பற்றி குறிப்பெழுதும் போது.

"பொருள் நயத்தாலும் ஓசை வடிவத்தாலும் புதுக்கவிதையை மகிமைப்படுத்தி வருபவர் அன்புடீன். பளுவான பொருளை சுளுவான மொழியில் கதை சொல்லும் பாணியில் கலைமைப்படுத்துவதும் சோஷலிச யதார்த்தத்துக்கு அழுத்தம் கொடுப்பதும் இவரது கவிதா தர்மமாகும்" என்று எழுதியுள்ளார்.

"நான் நிரந்தரமானவன் அழிவதில்லை, எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை" என்று தனக்குத் தானே பாடினாரே கண்ணதாசன், அப்பாடலுக்கு முற்று முழுதாக பொருத்தப்பாடுடையவர்களுள் மருதூர்க்கொத்தனும் ஒருவர் என்பது பொய்யில்லை

● ● ●

**கவிதை**


## திருடர்கள் புகுந்த அறையின் குறிப்பு

எனது அறையினுள் திருடர்கள் புகுந்திருப்பது பற்றி
இன்று காலைதான் தெரியவந்தது
அவசர அவசரமாக எல்லாவற்றையும் தேடினேன்
உடைகள், புத்தகம் எல்லாம் பத்திரமாக இருந்தது

மீண்டும் எனக்கு முக்கியமானதாக கருதும்
எல்லாவற்றையும் பார்த்தேன்
மனதின் ஒரு பயம் இருக்கத்தான் செய்தது

செக்கன் முள்ளின் அதிர்வுகள்
கடைசியாக மனதை ஓர் அமைதிக்கு கொண்டுவந்து
இயல்பான வாழ்க்கைக்கு வருகின்றேன்

எழுதிய கவிதைகள் பிரசுரத்துக்காக
அனுப்பி புத்தகம் படித்தேன்
இரு வாரங்களுக்கு பிறகு
எனது கவிதை பத்திரிக்கையில் வெளிவந்தது
அப்போதுதான் புரிந்தது திருடவந்தவன் என் சொற்களை
அல்லவா திருடி போய் இருக்கான் என்பது புரிந்தது



## கிணறு

### வரைந்தவன் கைது

கடதாசியை எடுத்து அதில் கிணற்றை வரைந்து
அதில் குதித்து தற்கொலை செய்கிறான் ஒருவன்

இன்னொருவன் வரையப்பட்ட கிணற்றினுள்
தனது வீட்டு பாத்திரங்களை தேடுகிறான்

தனது வீட்டு கிணற்றில் நீர் இல்லாததால்
குடிக்க நீர் தேடுகிறான் வேறு ஒருவன்

கிணற்றை தூர்வாரி புதுப்பிக்க செலவு விபரத்தை
திட்டமிடுகிறான் மற்றொருவன்

அரசாங்கம் தங்களிடம் அனுமதிபெறாமல்
வரையப்பட்ட கிணறு என்று
வரைந்தவனை கைது செய்கின்றது

**எஸ்.பி.பாலமுருகன் இரு கவிதைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராகம் : கல்யாணி**

**தாளம் : ஆதி**

(1)

**பல்லவி**

வாழ்வில் வசந்தம் பொலியட்டுமே - இன்பம்
வளநதி போலவே பெருகட்டுமே - நம்
வாழ்வில் வசந்தம் பொலியட்டுமே. //

(2)

**அனுபல்லவி**

சிங்களர் தமிழர்கள் சோனகர் பறங்கியர்
செப்பிடும் நாலினம் சேர்ந்தவர் யாவரும் //
சூழ்ந்திடும் அன்பினில் தாய்த்திரு நாட்டின் கண்
சேய்களெல்லாம் மூழ்கித் திளைத்திடுவே

மங்களம் பொங்கிடும் இலங்கை நன் நாட்டினில் //
மக்கள் எனும் உயர் மாண்பு சிறக்கவே.

(வாழ்வில்)

(3)

காடு களைந்தவர் கழனி விளைந்தவர்
கலை வளம் செய்தவர் தொழில் வளம் கண்டவர் //
நாடுகள் விளைத்தெழில் நகரங்கள் படைத்தவர் //
நான்கின மக்களும் தானதனாலவர்

(வாழ்வில்)

(4)

வாழ்ந்திடு சோதரர் வாழ வழி விடு
வானவர் ஆக நீ வாழ்வில் சிறந்திடு //
சூழ்ந்திடும் மேன்மைகள் எல்லோரும் வாழ்ந்திட
சிந்தையில் இருத்தியே வாழ்வோமே சிறந்திட

(வாழ்வில்)

**பல்லவி**

மக்கம் தவறின் மருதமுனை - அதன்
மாண்பினுக் குலகினில் இல்லை இணை.

(மக்கம்)

**அனுபல்லவி**

தக்கார் எவரும் புகழ்ந்துரைக்க புகழ்
மிக்காள் ஆக்கும் மேதினி திகழ்

(மக்கம்)

**சரணங்கள்**

வங்கக் கடல் அலைகள்
கொஞ்ச உடல் சிலிர்த்து
விஞ்சும் எழில் படைத்து
நெஞ்சம் மகிளு முயர்

(மக்கம்)

மேற்கில் உவர் களப்பில்
மிதக்கும் இளை தென்றல்
தாக்க உடல் பசலை
தாங்கி நிமிரு முயர்

(மக்கம்)

செந்நெல் விளை நிலத்துச்
செல்வம் இலா இடத்தும்
எண்ணிப் பல தொழில்கள்
இயற்றித் தலை நிமிரும்

(மக்கம்)

கல்வி வளம் பெருக்கிக்
கலைகள் மிக வளர்த்து
நல்ல குண நலன்கள்
நகையாய் அணியும் உயர்

(மக்கம்)

அண்டை அயலி லொரு
மொழியால் இணையு தமிழ்
நண்பர் உடன் உறவு
நாட்டி உலகில் உயர்

(மக்கம்)

# மருதூர்க்கொத்தனின் மெல்லிசைப்பாடல்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டு

நிலையான இன்ப கீதமே வா... வா...
நிலமீது அன்பு பூக்கவா //

பகை வந்து ஆட்டும் நாவில்
படு பாவம் வாட்டும் போதில் //
மண்ணில் ரத்தம் பொங்கிப் பாயும்
புன்மை தாளம் தட்டிப் பாடும் -
(நிலையான இன்ப கீதமே வா... வா...)

குழல் கொண்ட பிட்டில் தேங்காய்ப்பூத் தூவி
மா சேர்ந்த மேனிலை நாமும் கூடினோம் //
தாய் பெற்ற மக்கள் போல மகிழ்ந்தாடினோம் //
இன்றே அவ்வாழ்வை எண்ணி
நெஞ்சம் தினம் ஏங்கினோம்
(நிலையான இன்ப கீதமே வா... வா...)

பிரித்தாளும் சூழ்ச்சி பொறிபட்ட மான்கள்
கட்டமாய் நாமின்று ஏங்கி வாழ்கிறோம் //
மதியோடு வந்த சாப நிலை நீக்குவோம் //
பாழும் பகைமை நோய் நீங்க
அன்பு நிலை நாட்டுவோம்
(நிலையான இன்ப கீதமே வா... வா...)

(ஒற்றுமை )

வெண்ணிலாவே வெண்ணிலாவே
வெண்ணிலாவே விண்ணெழுவாய்....

குடைவிரி விசும்பின் பொய்கையிலே
இடையிடை தாழ்ந்தெழும் மாமதியே
மடையுடைந்தொழுகும் தேனினைப் போல்- நீ
பரவசம் தருவாயே

(வெண்ணிலாவே)

பாரினி லெங்கும் பால்பொழிந்து
கார்முகில் முன்னே நீதவழ்ந்து
பாரினி லெங்கும் சேரிருள் நீக்கிப்
பரவசம் தருவாயே

(வெண்ணிலாவே)

விட்டுவிட்டு மின்னும் தாரகையின்
வட்டவடி வான நாயகியே
பட்டப்பக லோனின் காதலியே நீ
பரவசம் தருவாயே

(வெண்ணிலாவே)

எட்டிஎட்டி உன்னை ஆசையுடன்
தொட்டு அணைத்திடவே ஓடிவந்தால்
பட்டமென வேதான் ஓடுகிறயென்
பாங்கினில் வாராயோ....

(வெண்ணிலாவே)

தாளம் - ஆதி

பல்லவி

உலகத்தில் இணையற்ற எழிலானவள் - எம்மை
ஈன்றிட்ட இலங்கைநற் தாயானவள்.

அனுபல்லவி

அலையேற்றும் கடலுடுத்த நகை சூடி உலகோரின்
அகமெல்லாம் பெருநிகறில் நோய்சேர்த்தவள்.

(உலகத்தில்)

சரணங்கள்

பூரித்து மயலூட்டும் எழில்கொள்கை யான
பசும்போர்வை மலைநாட்டில் பாலோடை யென்ன
தேரோட்டம் பயில்கின்ற நீரோடு கங்கை
திருவாலே வளம் நாளும் சேர்கின்ற மங்கை.

(உலகத்தில்)

மாணிக்கப் பரல்பூத்துச் சுடர்வீசும் மேணி.
மலரோடு மயில்கூடி நடமாடும் கானில்
மானோடிக் கலைசெய்யத் திளைத்தாடும் யானை
மலராடிக் கருவண்டு இசை செய்யும் வானில்

(உலகத்தில்)

கதிர்முற்றித் தலைசாய்த்துச் சதிராடும் செந்நெல்
கனிவுற்று இறுமாந்து காற்றாடும் கன்னல்
குதிகொண்டு கயல்பாயும் குளமெங்கும் அன்னம்
குலை வாழை முதலாய் நற் கனிசிந்தும் மண்ணில்.

(உலகத்தில்)

இளந்தென்றல் தலைவார இசைபாடும் தெங்கும்
இளமாதர் கரம்பட்டுச் சுவையேறும் கொஞ்சம்
பழனங்கள் தமைச்சூழ பசுமேயும் காவும்
பார்மீது நிகரெங்கும் இலையென்றே கூறும்.

(உலகத்தில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "போர்க்கால சூழலில் புதிய படைப்புக்கள் வெளிவரவேண்டும்"

## பிரபல எழுத்தாளர் மருதூர்க்கொத்தனுடன்

## ஓர் நேர்காணல்



2000ம் ஆண்டு மட்டக்களப்பில் இருந்து வெளிவந்த தினக்கதிர் வாரமலரின் பிரம ஆசிரியராக நான் பணியாற்றிய போது மாணவப் பத்திரிகையாளராக இருந்த திரு. ச. மயூரவதனனின் மூலம் பிரபல எழுத்தாளர் மருதூர்க் கொத்தனை பேட்டி கண்டு தினக்கதிரில் பிரசுரித்திருந்தேன். அந்த நேர்காணல் நன்றியுடன் மீள் பிரசுரமாகின்றது .

ஆ+ர்

**உங்கள் ஆரம்ப கல்வியினை எங்கு பெற்றுக் கொண்டீர்கள்?**

மருதமுனை அல் - மனார் மத்திய கல்லூரியில் கற்று பின்னர் அட்டாளைச்சேனை பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் ஆசிரியர் பயிற்சி பெற்று 1956ல் ஆசிரிய சேவையில் பிரவேசித்து 1964ல் அதிபராக கடமையாற்றி 1995ல் ஓய்வு பெற்றுள்ளேன்.

உங்களுக்கு எழுத்துத் துறையில் எப்படி ஆற்றல் வந்தது அது வளர்ந்த விதத்தைப் பற்றி வாசகர்ளோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.

இத்துறைக்கு வந்தது இயற்கையான உந்து தலேயாகும். நான் படிக்கும் போது வாசிக்கும் பழக்கம் இருந்தது. மேலும் அழகாக சித்திரங்கள் வரைவேன் நாடகம் பேச்சு மொத்தத்தில் கலை இலக்கிய உணர்வு அந்தக் காலத்தில் வளர்ச்சியடைந்தது.

எனது முதலாவது ஆக்கம் பாடசாலைச் சஞ்சிகையில் "நிலவு" பற்றிய கவிதையாகும். அதன் பின்னர் 1953 - 1960 வரை சுதந்திரன் பத்திரிகையில் கட்டுரை, சிறுகதை, நாட்டாரியல் சார்ந்த ஆக்கங்கள் எழுதினேன். பின்பு 1930ல் இருந்து மருதூர் கொத்தன் என்ற பெயரில் சிறுகதை கவிதை. உருவகக் கதைகள் எழுதி வருகின்றேன். மேலும் நாடகத்துறையில் நாடகப் பிரதியாக்கம் நெறியாக்கம் போன்றவையும் செய்கின்றேன்.

**உங்கள் வெளியீடுகளை பற்றி சொல்லுங்கள்**

1977ல் காவியத் தலைவன் என்ற காவியம் நூலாக வெளி வந்தது. அதன் பின்னர் "மருதூர் கொத்தன் கதைகள்" என்ற நூலும் வெளிவந்துள்ளது.

**உங்களுக்கு கிடைத்த விருதுகள் பற்றி?**

1993ம் ஆண்டு முஸ்லீம் விவகார இராஜங்க அமைச்சர்களால் வழங்கப்பட்ட "வாழ்வோரை வாழ்த்துவோம்" என்ற நிகழ்வில் பட்டமும் "இலக்கிய வேந்தன்" என்ற விருதும் கிடைத்தது.

1992 மே மாதம் புத்த சாசன கலாசார விவகார அமைச்சால் கலாபூசணம் விருதும் கிடைத்தது.

1999.10.17ல் வட கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சினால் "ஆளுனரின் விருது" கலை இலக்கியப் பணிக்காக கிடைத்துள்ளது மகிழ்ச்சியாகும்.

**பழைய, புதிய எழுத்தாளர்களைப் பற்றி உங்களது கருத்து?**

எனக்கு அவர்களில், வித்தியாசம் தெரியவில்லை இலங்கையின் மூத்த எழுத்தாளர்கள் சிறுகதை, நாவல், கவிதையில் நிறைந்த பங்களிப்பு செய்துள்ளார்கள்.

பழைய எழுத்தாளர்கள் மரபுக் கவிதைகளை எழுதினார்கள். அவர்களில் சிலர் புதுக்கவிதைகளையும் எழுதுகின்றார்கள். ஆனால் புதிய கவிஞர்கள் முற்று முழுதாக புதுக் கவிதைகளையே எழுதுகின்றனர்.

பழைய எழுத்தாளர் பழமையினை அறிந்து புதுமை படைக்க வேண்டும் என்ற பணியில் ஈடுபட்டார்கள். ஆனால் புதிய எழுத்தாளர்கள் பழமையினை அறிய வேண்டும் என்ற ஆர்வம் இல்லாத நிலையில் பண்டைய தமிழ் இலக்கியப் பெருமையினை அறியாத நிலையில் புதுமை செய்து கொண்டு இருக்கின்றார்கள். இப்போது எழுதப்படும் கவிதைகளும் சிறுகதைகளும், நாவலும் தமிழிலே சிறுபகுதியில் அடங்கும் இவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாவிட்டால் கூட தமிழ் மொழியானது நிலைத்து வாழும் அந்தளவிற்கு காத்திரமான இலக்கிய இலக்கண நூல்களை தமிழ் மொழி கொண்டிருக்கிறது. பண்டைத் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் தமிழின் ஆழத்தினை அறிந்திருக்க வேண்டியது. இலக்கிய கர்த்தாக்களுக்கு மிக முக்கியமான தாகும்.

**சம காலத்தில் பத்திரிகைகளில் பெரிய அளவிலும் சிறிய அளவிலும் சிறுகதைகள் வருகின்றது. அதைப் பற்றிய உங்களது கருத்து.**

இந்திய சுந்தர ராமசாமி கூட ஒரு பக்கக் கதைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு சிறு கதை என்பது காலம், களம், எழுத்துக் கொண்டகரு அது வெளிப்படுத்தும் தொனி இவற்றை கால பூரணமாக சித்தரிக்கும் போதுதான் இவை இலக்கியமாக மாறுகின்றது. ஆகவே இந்தச் சின்னஞ்சிறு கதைகளுக்குள் இவைகளைச் சொல்லலாமா என்பது கேள்விக் குறியான விடயமாகும்.

ஆனால் ஆற்றலுள்ளவர்களால் அதையும் கலைத் திறமையாக செய்ய முடியும். மேலும் அதிகளவில் இளம் எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் நோக்கில் தான் சில பத்திரிகைகள் உருவத்தில் சிறிய சிறுகதைகளைப் பிரசுரிக்கின்றன என நினைக்கின்றேன்.

ஆரம்ப காலத்தில் பல தேசியப் பத்திரிகைகளால் புதுக் கவிதையாளர்கள் இப்படி ஊக்குவிக்கப்பட்டார்கள். இதனால் சிறுமையைக் கொண்டு தரம் இல்லை என்று கூறமுடியாது.

உதாரணத்திற்று திருக்குறள் - 2 அடி
ஆத்திசூடி - ஒரு வரி
ஹைக்கூ கவிதைகள் - 3 அடி

ஜப்பானிய ஜென் கவிதைகள் உருவத்தில் சிறிதாக இருந்தாலும் ஆழமான கருத்துக்களை கொண்ட துடன் உலக புகழ்பெற்றுள்ளது. மேலும் உலக புகழ்பெற்ற மிகச்சிறிய கதையாக பேய் கதை உள்ளது.

கவிதை என்பது வரிகளின் எண்ணிக்கையைக் கொண்டல்ல. அதன் கலைத்துறைச் செறிவினைக் கொண்டு காணப்பட வேண்டும். அதுவே ஒரு நல்ல கவிதையாக இனங்காட்டிக் கொள்ள முடியும் என்பதே எனது கருத்து.

**தற்கால எழுத்தாளர்களுக்கு நீங்கள் கூறும் கருத்து!**

இப்போது படைக்கும் எழுத்துக்களில் தரம் பற்றி ஆய்வாளர்கள் குறைவான கருத்துக்களையே வெளியிடு கின்றனர். இதற்கான காரணம் நல்ல இலக்கியப்பரீட்சையம் குறைவேயாகும். எழுத்தாளர்கள் நிறைய வாசிக்க வேண்டும் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் உள்ள எழுத்தாளர்களின் படைப்புக்களை வாசிக்க வேண்டும்.

மேலும் ஆசிரியர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் வாசிப்பு மிக முக்கியமானது இதன் மூலம் தான் தரமான படைப்புக்களுக்கு தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்ள முடியும்.

"அடிப்படை மனிதனுக்கு பசி தாகம் நித்திரை போன்ற முக்கிய தேவைதான் மனிதனுக்கு "இரசனை ஞானமும்" இதை பூர்த்தி செய்யவே உணவு பசியையும் நீர் தாகத்தையும் தீர்ப்பது போல கலை இலக்கியங்கள்தான் இரச ஞானத்தைத் தீர்க்கின்றன."

**இளைஞர்களுக்கு நீங்கள் கூறும் கருத்துக்கள் என்ன...?**

சிங்கள தமிழ் இளைஞர்கள் போர்ச் சூழலில் எதிர்காலத்தைப் பற்றிய விரக்தி நிலையில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். இந்த ஆரோக்கியமற்ற சூழ்நிலையில் வாழும் இளம் சமுதாயம் கலை இலக்கியத் துறையில் ஆர்வம் காட்ட முடியாது. ஆனாலும் சோதனைகளும் பிரச்சினைகளும் தான் இலக்கியவாதியின் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் இதை உணர்ந்து இளைஞர்கள் செயல்படுவார்களானால் இந்த போர்ச் சூழலைக் கருவாகக் கொண்டு காத்திரமான இலக்கியப் படைப்புக்களைப் படைக்க முடியும்.

இளைஞர்கள் காலையிலிருந்து படுக்கைக்குப் போகும் வரையும் பாடசாலை படிப்பு டியூசன் என்றே தங்கள் காலத்தைக் கழிக்கின்றார்கள். இதற்கு மத்தியிலும் அவர்கள் ஆர்வம் காட்டும் விளையாட்டுத் துறை குறிப்பாக கிரிக்கட் இதற்கு அப்பால் அவர்கள் பார்ப்பதும் கேட்பதும் தொலைக்காட்சி வானொலி, நாடகம் சினிமா பாடல்கள் படங்கள் என்று தான் அவர்களின் வாழ்க்கை வட்டம் சுழன்று கொண்டு இருக்கிறது. இவற்றுக்கப்பால் கலை இலக்கியம் என்ற உணர்வோடு அது சார்ந்த விஷயங்களைப் படிக்கவும் ஆக்கங்களைப் படைக்கவும் முற்படும் இளைஞர்கள் மிக சொற்பமாகத் தான் இருக்கிறார்கள்.

இலக்கியம் படைக்கும் இளைஞர்கள் கூட தன்னுடைய படைப்பு முயற்சிக்கு எருவாக (பசளையாக) அமையக் கூடிய நூல்களையும் ஏடுகளையும் படிக்க அவர்கள் முயற்சிப்பதுமில்லை. அதற்கு அவகாசமுமில்லை. ஒவ்வொரு மனிதனும் இசைஞானம் ஆன்மீகத்திற்கு முக்கியமானது. அடிப்படை மனிதனுக்கு பசி தாகம் நித்திரை போன்ற முக்கிய தேவைதான் மனிதனுக்கு "இரசணை ஞானமும்" இதை பூர்த்தி செய்யவே உணவு பசியையும் நீர் தாகத்தையும் தீர்ப்பது போல கலை இலக்கியங்கள்தான் இரச ஞானத்தைத் தீர்க்கின்றன. இவையே நல்ல கலை இலக்கியங்கள் மனிதனுடைய ஆத்மாவை பண்படுத்தி மனச்சாந்தியளிக்கும் ஏன் அவை நோய்க்கும் கூட மருந்தாக அமையும் கலை இலக்கியம் மனித வாழ்வின் முக்கியமான அம்சங்களில் ஒன்றாகும் என்பதே எனது கருத்தாகும்.

- பேட்டி கண்டார் - ச. மயூர வதனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடைசி நாள்

## கொத்தன் நினைவாக

- உமா வரதராஜன்

மருதூர்க் கொத்தன் தன் கடைசி நிமிடங்களில் சந்திக்க விரும்பிய நபர்களில் நானும் ஒருவன். நான் சென்ற போது காற்றின் குமிழிகள் தொண்டையில் பொங்க, கண்களின் சுடர்கள் காற்றுடன் போராட கட்டிலில் ஒடுங்கிக்கிடந்தார். ஏதோ சொல்ல முயன்றார். புரியவில்லை. எழுதிக்காட்ட முயன்றார். தாளில் பதிந்ததெல்லாம் வெறும் கோடுகள்.

சரிவுப் பாதையில் கால்கள் சறுக்கிச் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவருடைய அந்திம காலத் தூவானத்தின் இறுதிச் சொட்டுகளையும், கடல் வாய் வீழும் சூரியனின் செந்நிறக் குழம்பையும் கண்டேன். விரிந்த பூவிதழ்களின் வழியே மரண வாசனை காற்று வெளியெங்கும் பரவுவதை நுகர்ந்தேன். ஒரு பறவைக்குப் பாரமாகிப் போன சிறகுகள் மெல்ல மெல்ல ஓய்வதைப் பார்த்த படியிருந்தேன்.

கால நதியில் மூழ்கும் தலையைப் பார்த்து, செய்வதறியாது கரையில் நின்று கலங்கிக் கொண்டிருந்தேன். எவ்வளவு காலத்துப் பழக்கம் அது. “கட்டிடங்களின் காடாக மருதமுனை ஆகாதிருந்த அந்த நாட்களில், வெயிலின் நிறமெதுவென்றே அறியாத சில ஒழுங்கைகள் வழியாக நடையால் சில “டானாக்கள்” போட்டால் என் வீட்டிலிருந்து பத்துப் பதினைந்து நிமிடங்களுக்குள் கொத்தனின் வீட்டுக்குப் போய் விடலாம்.

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் படைப்பிலக்கியம் நோக்கியதாக என் நாட்டங்கள் திரும்பிய போது மருதூர்க் கொத்தன் என்ற பெயர் எனக்கு அறிமுகமாயிற்று. மீலாத் கீரனும் நானும் சேர்ந்து 1974 ல் வெளிக் கொணர்ந்த காலரதம் சிற்றிதழில் முன்னிலை எழுத்தாளர்கள் பலரின் படைப்புகளுடன் கொத்தனின் “பாவம் நரிகள்” சிறுவர் நாடகப் பிரதியும் பிரசுரமாகியிருந்தது. அதே இதழில் வெளியான என்னுடைய “அந்தப் பார்வை அப்படித்தான் இருக்கும்” என்ற சிறுகதை தன் கவனத்தை ஈர்த்ததாகக் கொத்தன் கூறிய போது இளம் எழுத்தாளர்களுக்கு உரிய குதூகலம் என்னை சூழ்ந்து கொண்டது.

1977ல் மருதமுனை அல்-மனார் வித்தியாலயத்தில் அவர் பணியாற்றிய போது வெளியிட்ட “கலங்கரை” ஆண்டுமலரில் என்னுடைய “வெயிலும் வெறுமையும்” கதையைப் பிரசுரித்தார் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தனைப் போன்றவர்கள் இத்தகைய உற்சாகத்தைத் தந்திருக்கா விட்டால் ஒரு வேளை நான் இன்றைக்கு "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" போன்ற நீதிக்கதைகளை எழுதிக் கொண்டிருக்கக் கூடும்.

கொத்தன் ஏனோ என் முதல் நினைப்பில் ஓர் எழுத்தாளராக உருவம் கொள்வதில்லை. என் மானஸீக வகுப்பறையில் அவர் ஓர் ஆசிரியராகவே நுழைகின்றார். கையில் பிரம்புடன், சிடுசிடுத்த முகத்துடன், பாதணிகளின் அட்டகாசமான சரசரப்புடன் "அந்த வகுப்பறைக்குள்" அவர் நுழைவதில்லை. அகன்ற முகப்பரப்பும், குறுஞ்சிரிப்பின் போது கூடவே தோன்றும் மூக்குச் சுளிப்பும் கொண்ட அந்தக் குள்ளமான ஆசிரியரின் பணிவான மாணவன் நான்.

என்னைப் போலவே பள்ளிக்கூட எல்லைகளைத் தாண்டிய பல மாணவர்கள் அவருக்குண்டு, தேநீர்க் கடைகளின் வாங்குகளில், கடற்கரையில், அவருடைய வீட்டின் கூடத்தில் நாங்கள் அவரிடம் கேள்வி மேல் கேள்வியாய்க் கேட்டுக் கொண்டேயிருப்போம்.

"அணி சேரா நாடுகள் "என்றால் என்ன என்ற கேள்விக்கு சரியான பதிலளிக்க முடியாமல் என்னுடைய வகுப்பாசிரியர் ஒருவர் மூன்று நாட்களாகத் திணறியதுண்டு. கடைசியாகக் கொத்தனை சந்தித்து விளக்கம் கேட்ட போது முப்பதே நிமிடங்களில் அதைத் தெளிவு படுத்தி விட்டு, அடுத்த வேலையைக் கவனிக்கப் போய் விட்டார்.

*********

தன் வாழ்நாளின் போதும் மறைவுக்குப் பின்னரும் கொத்தன் அவருடைய "எழுத்துகளு"க்காகப் பேசப்பட்ட ஒருவர். அவருடைய படைப்புகளில் தென் படும் மொழியழகையும், சமூக அக்கறையையும், நிலக்காட்சி விவரணைகளையும், உயிர்ப்பான பாத்திரங்களையும் பற்றி பலரும் சிலாகித்துக் கூறியுள்ளனர். கொத்தனுடைய எழுத்துகள் மீது ஒரு வாசகன் என்ற வகையில் எனக்கு விமர்சனங்கள் உண்டு. அவருடைய கதைகள் சற்று உரத்துப் பேசுவன போலிருக்கும். பெரிய கட்டியத்துடன் மஹா வாக்கியங்களுடன் கதையைக் கட்டியெழுப்ப முனைவது போல் தோன்றும். நுட்பங்களுக்கு முக்கியத்துவமளிக்காமல் வெறும் விவரணை, சம்பாஷணைகளுடன் மாத்திரம் கதையை நகர்த்தி விடலாம் என்ற மனப்பாங்கு புலப்படும். இத்தகைய விமர்சனங்கள் இருந்த போதிலும் என் மதிப்பில் அவர் என்றும் தாழ்ந்து போனதில்லை. அவருடைய அனுபவப் பிராந்தியம் குறைத்து மதிப்பிடக் கூடியதல்ல. கொத்தன் தன் அனுபவங்களைப் பேச முனைந்த ஒரு கலைஞன்.கொத்தன் ஒரு முழு நேரப் படைப்பாளியாக இருந்திருந்தால், வாழ்வின் நிமித்தம் அவர் பிணைத்துக் கொண்ட கைவிலங்குகள், காற்கட்டுகளை உதறித் தள்ளியிருப்பாரே யானால் வைக்கம் முகம்மது பஷீர்.கி.ராஜநாராயணன் போன்ற மண் மணக்கும் படைப்பாளிகளின் வரிசைக்கு வந்து சேர்ந்திருப்பார். ஆனால் அவருடைய பயணம் மத்தியதர வர்க்கப்

"இந்த உலகத்தில் கொத்தனால் நிரந்தரமாக நிலைத்திருக்கவோ, வாழவோ முடிந்ததில்லை. மாறாகக் "காண்டாமிருகத்தின் கொம்புகளென வளவில் முளைக்கும் பள்ளிக்கூடக் கட்டிடங்கள் "குறித்தும் அங்கு தான் புரிந்த சாதனைகள் பற்றியும் பெருமிதம் அடைகின்றார். "எதுவும் நிரந்தரமல்ல" என்ற ஞானத்தை அடைவதற்குப் பதிலாக அற்ப மாயைகளில் திருப்தியுறும் ஒரு முரண் நிலை இது."

பிரதிநிதியின் இரண்டுங் கெட்டான் நிலையுடன், லௌகீகம் சார்ந்த கனவுகளுடன் திருப்தி யடைந்து போனது.

அவருடைய "சிரேஷ்டமான பகிடி வதை" என்ற சிறுகதையையே இதற்கு உதாரணமாகவும் குறிப்பிடலாம். அந்தக் கதையின் சில வரிகள் இவை : ".....கரிய, பெரிய பாம்பாகக் கிடந்த இந்த வீதிக்கு என்ன நேர்ந்தது ? எந்த ராமனின் பாதங்கள் படிந்து இந்த அகலிகை தன் முந்தைய வடிவத்தைப் பெற்றாள்? அழகிய இளம் குமரியின் அடர்ந்த கூந்தலிடை ஓடும் உச்சி நடு வகிடு, பொன்னிற நெற்றியை முத்தமிடுவது போல வீதி கடற்கரை மணலைத் தொட்டு செம்மையாகிக் கிடக்கிறது.

எப்பவோ சுவடுகளற்று மறைந்து போன ஒற்றைப் பனை ஓங்கி உயர்ந்து நிற்கின்றது. பூநொச்சிப் புதர் பனையைச் சுற்றிப் படர்ந்து கிடக்கின்றது. சற்றுத் தொலைவில் செழிப்பான தாழைச் சிறு காடு கூட அலங்கிருதமாகிக் கிடக்கின்றது. தாழையில் பூ மடல்கள், கனத்த பழங்கள் மயக்கும் வாசனையைப் பீய்ச்சியடிக்கின்றன. நன்றாக மடல் விரிந்து சிரிக்கும் இரு தாழம்பூக்களில் பூவுக் கொன்றாய் இரு கரிய நாகங்கள் தேன் குடிக்கின்றன. விழுதுகள் தாங்க நெடுங்கிடையாய்க் கிடக்கும் தாழங் குற்றியில் வெண்கொக்குகள் சில குந்தியிருக்கின்றன. தேன் குடித்துக் குடல் நிமிர்ந்த பூ நாகமிரண்டுக்கும் மதுக் கிறக்கம். போதையில் அவை பிதற்றுகின்றன.

இதுதான் கொத்தன் தன்னை ஒரு கலைஞனாகக் "கரைத்துக்" கொள்ள விரும்பிய உலகமாக இருந்திருக்கும். ஆனால் இந்த உலகத்தில் கொத்தனால் நிரந்தரமாக நிலைத்திருக்கவோ, வாழவோ முடிந்ததில்லை.மாறாகக் "காண்டாமிருகத்தின் கொம்புகளென வளவில் முளைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்கூடக் கட்டிடங்கள் "குறித்தும் அங்கு தான் புரிந்த சாதனைகள் பற்றியும் பெருமிதம் அடைகின்றார். "எதுவும் நிரந்தரமல்ல" என்ற ஞானத்தை அடைவதற்குப் பதிலாக அற்ப மாயைகளில் திருப்தியுறும் ஒரு முரண் நிலை இது.

இதே போன்று என்னுடைய எழுத்துப் போக்குகள், நோக்கு நிலை குறித்து அவருக்கும் விமர்சனங்கள் இருந்திருக்கின்றன. ஆனால் இந்தக் கருத்து முரண்பாடுகள், ரசனை வேறுபாடுகள் எல்லாவற்றையும் இரண்டாம் பட்சமாக்கி பரஸ்பரம் நாங்கள் அன்பும், மதிப்பும் வைத்திருந்தோம்.

அவரிடம் உரிமையுடன் நான் கேட்டு அவர் நிறைவேற்றித் தந்த வேண்டுகோள்கள் பலவுண்டு. நான் ஏற்பாடு செய்த இலக்கியக் கூட்டங்கள் பலவற்றில் அவர் முக்கியமான பேச்சாளராக இருந்திருக்கிறார் ."அன்ரனி பால்ராஜ்" என்ற பெயரில் நான் சிறப்பாசிரியராக இருந்த "களம்" இதழுக்காக என் வேண்டுகோளின் பெயரில் "மரையாம் மொக்கு" என்ற நீண்ட கதையை அவர் எழுதித் தந்திருக்கிறார். என் வீட்டில் நிகழ்ந்த விசேஷங்களின் போது அவர் முக்கிய விருந்தினராக கலந்து சிறப்பித்திருக்கிறார் .


பதிலுக்கு மருதூர்க் கொத்தனும் தன் பங்குக்கு எனக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். தன்னை வந்து பார்த்துச் செல்லும் படி, கொத்தன் தன் கடைசி நாளில் விடுத்த அழைப்பு அது!

• • •

# மனிதன்

## ஒரு விசித்திரப் பிராணி

**இ. ஜீவகாருண்யன்**



அவன் கல்லாய் இந்திருந்தானால்
அவனுக்கு எந்தப் பிரச்சினையும் இருந்திருக்காது
உயிராய் உணர்வுகளின் தவிப்பாய் ஆனபோது
விலங்காய்
இயற்கையை எதிர்கொண்டு
வாழப்பழகிக் கொண்டான்
இயற்கைக்கு எந்தத் தீங்குமில்லை
இயற்கை தரும் சாதக, பாதகங்களை எதிர்கொள்வதே
வாழ்வாக இருந்தது:
மனமானபோதுதான் பிரச்சினைகளே தொடங்கின.
தன்னைத் தனியாக இனங்காண
சுயநலமும் ஆணவமும்
மனத்தை ஆக்கிரமித்தன
இயற்கையை மதிக்க மறந்தான்
சகஜீவராசிகளை மதிக்க மறந்தான்
தனக்கு நன்மை செய்கிறதாக எண்ணிக்கொண்டு
இயற்கையையும் சகஜீவராசிகளையும் (மனிதன் உட்பட)
அழித்துக்கொண்டும்
அவைகள் அழியும் போது
தானும் அழிவான் என உணராது
இலக்கற்ற பயணத்தை மேற்கொண்டுள்ளான்

மனிதன் தன்னை உணர்ந்து,
மனம் தன்னை உணர்ந்து ஓர்மனமாகிறபோது
இயற்கை தழுவிய உயிராய்
முழு ஜீவராசிகளையும் தழுவிய மனமாய்
தனியாகவும். முழுமையாகவும்
விடுதலையாய்,
ஆனந்தமாய்
விரிந்து கிடப்பான்.
இன்றைய மனிதன்
தனக்கும் இயற்கைக்கும்
சகஜீவராசிகளுக்கும்
சிறிது நன்மைகளும்
பெரிய தீமைகளும்
செய்துகொண்டு வாழும்
விசித்திர பிராணி.

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணனாக வேடமிட்டு மேடையில் நடித்த மருதூர்க்கொத்தன் எனும்

# வாப்பு மரைக்கார் இஸ்மாயில்

## நினைவுகளைப் பதிந்து வைப்போம் அவை நம் சந்ததிக்கு உதவும்

-பேரா.சி. மௌனகுரு



மருதூர்க்கொத்தன் என புனை பெயர் கொண்ட வாப்பு மரைக்கார் இஸ்மாயில் கல்முனைப் பிரதேசத்திலுள்ள மருதமுனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் வீ. எம். மாஸ்டர் என ஆசிரிய சமூகத்தால் அழைக்கப்பட்டவர் சிறுகதை, கவிதை, நாடகம்,கட்டுரை எனப் பல துறைக ளிலும் எழுதியவர். மருதமுனைக்கு அருகில் இருக்கும் தமிழ்க் கிராமம்தான் நீலாவணை.

அங்கு வாழ்ந்த நீலாவணனுடன் நெருக்கமான பரிச்சயமுடையவர் நீலாவணன் தயாரித்த மழைக்கை எனும் பா நாடகத்தில் 1963களில் கண்ணன் வேடம் தங்கி கண்ணனுக்கு ஒப்பனைபோட்டு நடித்தவர்.

அதில் கர்ணனுக்கு நீலாவணனும், குந்திக்கு கவிஞர் சடாச்சரனும், கிழவன் வேடத்தில்ல் வேதியனாக வரும் இந்திரனுக்கு நுஹ்மானும் வேடம் தாங்கி நடித்தனர் என அறிகிறோம்.

தமிழ் இலக்கியம், தமிழர் பண்பாடு என்பனவற்றில் ஈடுபாடும் புலமையும் மிக்கவர் மருதூர்க்கொத்தன் பாட்சாலைக் கல்வியில் சகல பாடங்களையும் கற்பிக்கும் வல்லமை கொண்டிருந்தார். முக்கியமாக தமிழ் தமிழ் இலக்கியம் தமிழ் இலக்கணம், சமூகக் கல்வி கற்பிப்பதில் மிகுந்த கெட்டிக்காரராயிருந்தார்.

மருதூர்க் கொத்தன் கதைகள் எனும் நூலில் அவரது மாணவன் ஒருவன் தனது அனுபவங்களைக் கீழ் வருமாறு பகிர்ந்துள்ளான்

"1978-1985 காலப்பகுதியில் க.பொ.த.(சாதாரண) வகுப்புகளுக்குத் தமிழ் மொழிப்பாடத்திட்டத்தில் "அ" பாடத்திட்டம் "ஆ" பாடத்திட்டம் என இரு பாடத்திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தன

"அ" பாடத்திட்டத்தில் கம்பராமாயணம், பாரதச் சுருக்கம் எனும் பாட நூல்களும், "ஆ" பாடத்திட்டத்தில் சீறாப்புராணம், புது குசாம் எனும் பாட நூல்களும் பாட விதான அபிவிருத்திக் குழுவினால் சிபார்சு செய்யப் பட்டிருந்தன.

பெரும்பாலும் முஸ்லிம் மஹாவித்தியாலயங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயின்றுகொண்டிருந்த முஸ்லிம் மாணவ சமூகத்திற்கு தமிழ் கற்பித்த முஸ்லிம் ஆசான்கள் "ஆ" பாடத்திட்டத்திற் கேற்ப கற்பித்தல் வழிகாட்டலை வழங்கிக்கொண்டிருந்த அதே வேளை அக்காலப்பகுதியில் மருதமுனை சம்ஸ் மத்திய கல்லூரியில் பயின்றுகொண்டிருந்த என் போன்ற க.பொ.த. (சாதாரண) மாணவர்களுக்கு தமிழ் மாணவர்களும் ஆசிரியர்களும் விரும்பித் தெரிவு செய்யும் "அ" பாடத் திட்டத்தை வீ.எம்.ஆசான் (மருதூர்க்கொத்தன்) எமது தெரிவுக்கு விட்டபோது அத்றகான காரணத்தை வகுப்பு மாணவர் சார்பாக நான் வினவினேன் அதற்கு அவர் அளித்த பதில் எம்மை வெகுவாகச் சிந்திக்க வைத்தது.

"எம்மோடு இணைந்து வாழும் தமிழ் சமூகத்தின் கல்வி,கலாசார,விழுமியங்களை முஸிம்களாகிய நாம் அறிந்திருப்பதோடு எம்மை நாம் தனிப்படுத்தி வாழக்கூடாது" ஆசானின் இந்தப்பதில் அவர் ஓர் விசால மனோபவமுடைய மானிடத்தை நேசிக்கும் ஆதர்ச ஆசான் என்பதை 24 வருடங்களுக்கு முன் எங்கள் பிஞ்சு மனங்களில் பசுமரத்தாணிபோல பதிய வைத்தது.

இது அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட மானிடவியல் வழி காட்டல் என்பதை அவரது மாணவனாகிய நான் பெருமையோடு நினைவுகூருகிறேன்" இது ஓர் முக்கிய குறிப்பு என நான் கருதுகிறேன் தமிழ் முஸ்லீம் மாணவர் களை இலக்கிய ரீதியாக கல்வி அமச்சின் கீழியங்கும் பாட விதானம் பிரித்தபோது அதற்கு எதிர் வழியிற் சென்றவராக மருதூர்கொத்தன் எனக்குத் தெரிகிறார் தமிழ் மாணவர்கள் இஸ்லாமிய இலக்கியங்களைக் கற்க வேண்டும் இஸ்லாமிய மாணவர்கள் தமிழ் இலக்கியங்களைக் கற்கவேண்டும் என விரும்புவோர் நம்மிடையே மிக அருந்தலாகவே காணப்படுகிறார்கள்

தமிழ் மாணவர்களும் இஸ்லாமிய பண்பாட்டையும், இலக்கியங்களையும் அறிய வேண்டும் நான் "இஸ்லாமும் தமிழும்" என்ற தலைப்பில் எழுதிய ஒரு கட்டுரையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளேன்

"தமிழ் மாணவன் ஒருவன், சீறாப்புராணம் எமது இலக்கியம் என்றும் முஸ்லிம் மாணவன் ஒருவன் கம்பராமாயணம் எமது இலக்கியமென்றும் கூறும் சூழல் கல்வியுலகிலாவது உருவாக்கப்படவேண்டும்" இன்றோ நிலைமைகள் நாம் எதிர்பாராத அளவு மிக வேகமாக மாறி விட்டன.

இரு பிரிவினரையும் இரு துருவ நிலைகளுக்குக் கொண்டு வந்து விட்டன. ஆனால் இற்றைக்கு 38 வருடங்களுக்கு முன்னர் மருதூர்க்கொத்தன் அதனைத் தனது பாடசாலையில்நடைமுறைப்படுத்திக்காட்டியுள்ளார் இதனாலேயே அவர் நீலாவணனுடன் இணைந்து மஹாபாரதத்தின் ஒரு பகுதியான கர்ணன் கடைசி நாட்கள் நாடகத்தில் நடித்துள்ளார்

அவர் தாங்கிய வேடம் மஹாபாரதத்தின் மிக முக்கிய சூத்திரதாரி பாத்திரமான கண்ணன் வேடம் இம்மருதூர்க்கொத்தன் எழுதிய நாடகங்கள் சில அவரது கையெழுத்தில் எனக்குக் கிடைத்தன. இவற்றை எனக்குத் தந்தவர் அவரது மகனாவர்

அவர் பெயர் ஆரிப் இஸ்மாயில்.அவுஸ்திரேலியா வில் எஞ்சினியராகப் பணிபுரியும் இவர் நேற்று என்னைத் தேடி வந்து மருதூர்க்கொத்தன் எழுதிய மேடை நாடகங்கள், வானொலி நாடகங்கள் என பத்து நாடகங்களைத் தந்து சென்றார்

"எனக்குக் கிடைத்த புது வருடப்பரிசு மிகப்பெரிய பரிசு" என நன்றியுடன் கூறி அவற்றை வாங்கிக்கொண்டேன் அவை பின்வருமாறு

மேடை நாடகங்கள்

1. போடிமகன் போடி
2. தந்திக்கலம்பகம்
3. அழகிய முன்மாதிரி
4. களைகள்
5. வலை
6. பாவம் நரிகள் (நாட்டிய நாடகம்)
7. ஆபிரகாம் லிங்கன்

வானொலி நாடகங்கள்

1. இடியோடு கூடிய மழை
2. இழுமென் துயராய்
3. வாழையடி வாழையாய் வந்த உறவு

இப்போது நான் அந்நாடகங்களை வாசித்துக் கொண்டிருக்கிறேன்

மருதமுனை மண்வாசனை மணக்கும் நாடகங்கள் சில மருதமுனையில் அவர்காலத்தில் வாழ்ந்த பாத்திரங்கள் எப்படிப் பேசினார்கள் அவர்களின் உறவு முறைகள் எவ்வாறு இருந்தன என்பவற்றை அறிய சில நாடகங்கள் உதவுகின்றன

மருதமுனை பேச்சு வழக்கு மணக்கிறது தமிழர் முஸ்லிம்களுக்கிடையே இருந்த அன்றைய உறவுகளை சில நாடகங்கள் பேசுகின்றன

காட்டில் உழைக்காமல் வாழ்ந்த ஒரு சிங்கத்திற் கெதிராக ஒற்றுமைப்பட்டுக் கிளம்பும் ஏனைய மிருகங்களைக் காட்டும் சிறுவர் நாடகம் (இது தாள லயத்தில் அமைந்திருக் கிறது. இதனை அவர் நாட்டிய நாடகம் என நாமகரணம் சூட்டியுள்ளார்) பா நாடகம் (இதனைக் கொத்தன் கவிதை நாடகம் என அழைகின்றார் நந்திக்கலம்பகம் எனும் நகைச்சுவை நாடகம் (இதில் முதல் மூன்று பக்கங்களையும் காணவில்லை) ஆற அமர இருந்து வாசித்த பின் அந்நாட கங்கள் பற்றி எனது அபிப்பிராயங்களைப் பதியவுள்ளேன் அத்தோடு அவர் எழுதிய 17 கட்டுரைகளும் கிடைத்துள்ளன.

அவை பல்வேறு விடயங்கள் பற்றிப் பேசுபவை அரசியல், இலக்கியம், இன ஒற்றுமை, நாட்டரியல், கல்வி ஆகியன பற்றிப் பேசுகின்றன

அவை அவரது கருத்துலகை அறிய நமக்கு உதவுகின்றன மருதூர்க்கொத்தனை நான் முதன் முதலில் 1966 இல் சந்திக்கிறேன். கல்முனை சாஹிராக்கல்லூரிக்கு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆசிரியராக நியமனம் பெற்றுச் சென்ற வருடம் அது. அப்போதுதான் எனக்கு நீலாவணன், சண்முகம் சிவலிங்கம், நுஹ்மான், சடாட்சரம், மருதூர்க்கொத்தன், மருதூர்க்கனி, மருதமுனை நாடகக்காரரான சக்காப் மௌலானா, மருதூர் மஜீட். அன்புமுகைதீன், ஆனந்தன்,

பாண்டியூரான், போன்ற கல்முனை, மருதமுனை சாய்ந்தமருது, பாண்டிருப்பு போன்ற கல்முனையையொட்டிய கிராமங்களில் வழ்ந்த பல எழுத்தாளர்கள் அறிமுகமா கின்றார்கள் சிலகாலம் நான் பாண்டிருப்பிலும்,கல்முனையிலும் வதிகின்றேன் அவர்கள் அனைவரோடும் நெருக்கமான உறவுகள் ஏற்படுகின்றன.

1960 களின் பிற்பகுதியில் ஈழத்தின் பிரபல நாவலசிரியரான சுபைர் இளங்கீரன் மருதமுனைக்குத் தனது குடும்பத்தோடு வந்து செட்டில் பண்ணுகிறார் இவர்கள் உறவு குடும்ப உறவாக விரிந்தமை இன்னுமோர் அற்புதம் ஒரு நாள் மருதூர்க்கனி, மருதூர்க் கொத்தன், இளங்கீரன் ஆகியோர் தத்தம் மனைவிமாருடனும் பிள்ளைகளுடனும் எனது கிராமத்திலிருந்த வீட்டுக்கு வந்து விடுகிறார்கள். அப்போது எனக்குத் திருமணமாகியிருக் கவில்லை. தாய் தந்தையர் சகோதரிகளுடன் வசித்தேன் எமது வீடு வந்த இக்குடும்பங்கள் ஒரு முழு நாள் எமது வீட்டில் தங்கினார்கள்

இளங்கீரனும், மருதூர்க்கனியும் கொத்தனும் அவர்களது மனைவிமாரும் எனது அம்மா கொடுத்த வெற்றிலை வட்டாவில் இருந்த பாக்கு வெட்டியால் பாக்கு வெட்டி, அதிலிருந்த தளிர் வெற்றிலையை எடுதுச் சுண்ணம்பு பூசி கைப்பும் அதனோடு இணைத்து ரசித்து ரசித்துச் சாப்பிட்டது இப்போதும் மனதில் பதிந்து விட்ட ஓவியங்கள் நான் திருமணமான பின் யாழ்ப்பாணம் சென்று விடுகிறேன். மருதூர்க்கனிக்கு யாழ்ப்பாணத்தில் உறவுண்டு, அவர் அங்குவருகையில் மருதூர்க்கொத்தனும் யாழ் வருவார் எம்மோடு தங்குவார்.

குசினிவரை வந்து குந்தியிருந்து உணவு சமைக்க என் மனைவியாருக்கு உதவுவார். சித்திரலேகாவை அவர் "புள்ள" என்றுதான் அழைப்பார் பிள்ளையைப் புள்ள என அழைத்தல் மருதமுனை மரபும் கூட அந்தப் புள்ளை என்ற அழைப்பில் காணப்படும் உரிமை, நெருக்கம், வாத்சல்யம் என்பன எழுதி விளக்க முடியாதவை

மருதூர்க்கனியின் ஒரு சிறுகதைத் தொகுதிக்கு சித்திராவே முன்னுரை எழுத வேண்டும் என்பதில் கனி மிக உறுதியாக இருந்தார், சித்திராவும் எழுதிக்கொடுத்தார் மருதூர்க்கனி என அழைக்கப்படும் ஹனிபாவுடனும்,கொத்தன் என அழக்கப்படும் இஸ்மாயிலுடனும், நுஹ்மானுடனும் மற்றும் நீலாவணன் சண்முகம் சிவலிங்கம், சடாட்சரனுடனும் கல்முனைக்கடற்கரையில் நிலவொளியில் அமந்திருந்து உரையாடிய அக்காலப்பொழுதுகள் (1960 களின் நடுப்பகுதி) ஞாபகம் வருகின்றன

இவர்களுள் பலர் இப்போது உயிருடன் இல்லை பழைய இனிய நினைவுகளைச் சுமந்து கொண்டு நம்மில் சிலரே எஞ்சியுள்ளோம். நம்மோடு அந்நினைவுகளும் அழிந்து விடும் நினைவுகளைப் பதிந்து வைப்போம் அவை நம் சந்ததிக்கு உதவும்

• • •

## காட்சி தருவாய் நீ!

மகுடமே வளர்கின்றாய்,
மகத்தான நல்வளர்ச்சி!
அகமும் மகிழ்கிறது,
ஆவலும் பெருகிறது!

மக்கள் நினைவோடும்,
மாத்தமிழின் கூட்டோடும்
தக்கவழிச் செல்வாய்,
தலைக்கே மகுடமலோ?

ஆசிரியர் கொலின் தாயாய்
பத்தாம் அகவை யெனப்
பேசிடவே வளர்கின்றாய்
பெருவாழ்த்துக்குரியோன் நீ!

இன்றும் வளர்ந்திட நீ,
எதிர்பார்த்திருக்கின்றோம்!
'கண்ணூறு'க் கிடமின்றிக்
காட்சி தருவாய் நீ!

## வாழியவே!

'கீறல்களா'ல் ஒரு பரிசளிப்பாய்,
கிடைத்தது தொண்ணூற்றிரண்டினிலாம்!
ஊறல்கள் ஐம்பதும் தமிழ் ஊறல்,
உண்மையில் 'தாக'மும் உயர்ஏடே!

'பொன்னக மீட்பு'ம் பரிசு தரும்,
போற்றிடலாம் நாம் 'மகுட'மதை!
பொன்னின் மறுபெயர் 'ஈழ' மதாம்,
போற்றுதல் பிழையென யாருரைப்பார்!

இரண்டாசிரியரும் மைக்கல் கொலின்,
இருபத்தைந்தாண்டிடைவெளியாம்!
வரண்ட சூழலும் வனம் தருமாம்
வான் மழை கண்டே வளர்பயிர் போல்!

'தொட்டது துலங்கும்' என்பார்கள், ஈ
தொட்டார் மைக்கல் துலங்கியதாம்!
பட்டத்தின் மேலாம் பட்டறிவு,
பயன்படு மைக்கல் வாழியவே!

**தாமரைத்தீவான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மருதூர்க்கொத்தன் கவிதைகள்

## கொண்டாடுவோம் சமத்துவ வழி பற்றுவோம்

இருள் சூழ்ந்து சிறைப்பட்டு உலகம் காடாய்
இழிவுற்று நலிவுற்று இருந்த தன்று.
வெறிகொண்டு தனுப்போட்டு வேங்கைக் கூட்டம்
வேட்டைக்கும் மேலாக வேட்டை யாடித்
தறிகெட்டு அலைந்தமளி செய்த காலை
தகவுரைத்து வாழ்த்திற்று கூகைக் கூட்டம்
பொருளற்ற துயர்வாழ்விற் பிணைந்த மான்கள்
புலராதோ பொழுதென்று பொருமி ஏங்கும்

கீழ்மையிலே வாழ்ந்துழன்ற அவற்றின் நெஞ்சக்
கிளர்வுகளின் கட்டியமாய் கவிந்து நின்ற
கீழ்மைகளைத் துடைத்தெறியும் பேரார்வத்தின்
கீற்றுகளாய்ப் போர்முரசாய் கனவின் ஊற்றாய்

ஏழ்மைகளைத் தகர்ப்பதற்கோர் ஏவு கணையாய்
எத்தர்களைத் தீய்த்தளிக்கும் எரி வெந் தணலாய்
கீழ்வானிற் செஞ்சுடரின் கற்றை, தோன்றிக்
கும்மிருட்டை உலுப்பித்து ஒரு நாட் காலை.

அன்றந்தப் பாலையிலே உதித்த ஜோதி
அஞ்சாது துஞ்சாது ஆர்த்தெழுந்து
சென்றோடி மூலையெலாம் துலாவிப் பார்த்துச்
செறியிருளின் படையழித்துச் சினந்த வேங்கைக்
குன்றுகளைத் துகள்செய்து குமைந்த மான்கள்
கொத்தடிமை விலங்கொடித்துக் குறைகள் தீர்த்த
பொன்ருத பெருங்கருணை முகம்மத் என்னும்
புகழ்ப்பெயரைக் கேட்டுலகம் புளகிற் றன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளின் குழந்தை

இருளின் குழந்தையென
உலகில் பிறந்தவன் நான்
இருளையே போர்வையெனப்
போர்த்துழன்ற பெற்றோரின்
அருமைக் குழந்தையென
அவதாரம் செய்தவன் நான்

இருள் கவிந்த சந்தில் - இன்னும்
இருள் நிறைந்த குச்சிலில்
கருவாகி அன்னை கருவறையின் இருட்டுக்குள்
உறைந்து இருள் சூழ்ந்த
ஓரூரில் பிறந்தவன் நான்.

தத்தித் தவழ்ந்த தரையெல்லாம் இருள்மயமே!
எற்றி விளையாடி மகிழ்ந்ததுவும் இருள்புலமே
பற்றி ஒரு சிறுமி குருங்குவளைக் கையிரண்டை
ஒற்றி முகத்தில் ஒளித்து விளையாடியதும்
சிற்றில் அமைத்துச் சோறாக்கி அவளூட்ட
கிட்ட இருந்து கிளுகிளுத்துக் களித்ததுவும்

நட்ட நடுநசிக்கு நிகரான இருட்போதே!
இருளின் உலகத்தை ஓர்மையுடன் முகங்கொண்ட
திருவான அன்னை கண் திறக்க மறுத்ததுவும்
ஊரவர்கள் கூடி உயிரற்ற அவளுடலை
தூரக் கிடந்த சிறுகாட்டில் கொண்டுபோய்
ஆழப் புதைக்க அவள் அயர்ந்துதவும் இருள் மனையே!

தந்தையென்ற இருளின் தனயன் கரம்பற்றி
உந்தி நடந்த தடமும் இருட்தடமே!
வந்து உறைந்த சேரியும் சிறு குடிலும்
பந்தமாய் இருளோடு பழகிய பாழ்வெளியே
இருள்நிறைந்த அந்தக் குடிசையின் நாயகியாய்
அருளொழுக மடியில் இருத்தி அரவணைத்து
அன்பு மழைபொழிந்த மறுதாயும் இருள் மகளே!

இருளின் குழந்தையென
உலகில் பிறந்தவன் நான்
இருளையே போர்வையெனப் போர்த்துழன்ற
பெற்றோரின் அருமைக் குழந்தையென
அவதாரம் செய்தவன் நான்.

# பயணம்

பாதையில் கற்கள்
நெருக்கென்று பாய்ந்துடலை வாதைக் கிழுக்கின்ற
வம்புநிறை ஒற்றையடிப்
பாதையிலே எங்கள் பயணந் தொடர்கிறது.

சாணை பிடித்த ஊசிகளாய்
முள்ளடர்ந்த கானகந்தான்
சிறாய்ப்பெடுக்கும் கவலை சிறிதுமின்றி
எங்களது கால்களை எட்டியெட்டிப் போடுகிறோம்

வேங்கைகள் சிங்கங்கள் யானைகள்
குளுக்கடாக்கள்
ஆங்காரங் கொண்டு அலைகின்ற காட்டுவழி
நாங்கள் துணிந்து நடையாய் நடக்கின்றோம்

நீங்கள் எமைப்பார்த்து ஏனையா சிரிக்கிறீர்?
எங்களில் கழிவிரக்கம்
உள்ளவர்போல் நடிக்கின்றீர்!
பயணம் நடப்பதிலே என்னபிழை?

உங்கள் தொடைகள் உதறல் எடுப்பதையும்
உங்கள் இதயங்கள் ஓங்கி அடிப்பதையும்
எங்களால் காண இயல்கிறது
அதற்காக
நாங்கள் பயந்து நடைதளரப் போவதில்லை!
எங்களுக்கு முன்னே
எத்தனையோ பேர் போனார்?
தங்கள் இரத்தம் தரை நனைக்கும்
படி சென்றார்
போனதுந்தான் போனார்கள்!
போனவழி தென்பட்ட
பூங்காவில் தங்கிப் புளகித்து
சங்கீத நாற்காலி
மாற்றும் விளையாட்டில் மாட்டி விழித்தார்கள்
மாட்டி விழித்த மேதைகளை
யான்றோ நீர் காட்டி
எமைப்பார்த்துக் கலகலத்துச் சிரிக்கின்றீர்
நாங்கள் அதையும் நன்கறிவோம்
நண்பர்களே
நாங்கள் நகலையும் நன்கறிந்த பின்னேதான்


காட்டு இருளிடையே
கண் சிமிட்டும் மின்மியின்
கூட்டு வெளிச்சத்தில்
குறிபார்த்து குதிகொண்டு

நீட்டு மரங்கள் நெருங்கி
இடர் செய்யும் காட்டுவழியே
கால்கடுக்க நடக்கின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு வண்ணப் பூச்சிகள்



பட்டம் பூச்சிக் கூட்டம் நாம்
பறந்து திரிவோம் பாட்டமாய்
சுற்றி மொய்ப்போம் பூக்களில்
சுவைத்துத் தேனும் அருந்துவோம்


சின்னஞ்சிறிய பிள்ளைகள்
சிந்தை கவரும் நாங்களோ
வண்ண வண்ணச் சிறகுகள்
வாய்ந்து கண்ணைக் கவருவோம்

அழகு குலுங்கும் சோலைகள்
அனைத்தும் எங்கள் வீடுகள்
மலர்கள் எல்லாம் மஞ்சங்கள்
மகிழ்வு வாழ்வில் தினம்கொஞ்சும்.

வானப் பரப்பில் நாம்போகும்
வடிவைப் பார்த்துச் சிறுவர்கள்
கானம் பாடி மகிழ்வார்கள்
காட்சி கண்டு பூரிப்போம்.

பூக்கும் பூக்கள் காய்க்கவும்
புவியோர் உண்டு மகிழவும்
ஆக்கம் புரியும் நாங்களே
அழகு வண்ணப் பூச்சிகள்!

எங்கள் சேவை போலவே
உலக மாந்தர் வாழவே
பொங்கும் தொண்டு யாவரும்
புரிக என்றே நாடுவோம்....!




# நான் தமிழன்

நானொரு பச்சைத் தமிழன் - இதை
உலகம் ஒலிக்க உரைத்து மகிழ்வேன்
சீனத்துக் கவிதைகள் செய்வேன் - அவை
செய்யும் விதிகளை செப்பி மகிழ்வேன்
ஹைகூவை அழகாய் அமைப்பேன் - அதன்
ஆழம் அகலம் ஆய்ந்தும் உரைப்பேன்
விமரிக்கை நன்றே படைப்பேன் - அதன்
விமரிசை யாவும் மெத்த உரைப்பேன்
புதிது படைப்பது காலத்தின் ஆணை - அதிலென்
பங்கை நிறைவுடன் செய்து நிமிர்வேன்
பண்டைய முன்னோர்கள் கனம்மிகவாக - செய்த
கதைகளை காதினால் கேட்டதும் உண்டு
மண்டையைப் போட்டதில்
ஏன்மாய வேண்டும்? - சாடை
மாடையாய் மினக்கெடல் வீண்பொழுதாகும்.
ஏனெனில் நான்பச்சைத் தமிழன் - இதை
என்றும் உரைத்து இன்பம் நுகர்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணங்கள்



கல்லடித்து முள் கிழித்துக்
கட்டைகளில் பட்டிடறி
கால்களிலே ஒன்றிரண்டா
காயம் நடக்காவாம் தரும்
இடைஞ்சல்

தொட்டு வழி காணத்
தோதான கைகளையும்
பட்டதெல்லாம் புண்ணாகிப்
பாழ்படுத்தி விட்டனவே.
ஊர்தல், தவழ்தல்,
அரைதல் உடல் முற்றாய்ச்
சோர்தல் தொல்லைகளோ
சொல்லி முடியாது!

எங்கோ தொலைவில்
அடர்ந்த பெரும் கானகத்தில்
கங்குல் குலவும்
சுரங்கத்துள் பொந்துகளில்
கன்னங் கரியனவாய்ப்
பூனைகள் உள்ளனவாம்
எண்ணிப் பிடிக்கின்ற
எத்தனத்தின் புத்திரர்நாம்
பிடிக்க முயல்வோர் நாம்

பேயாப் பெருமழையும்
கொல் விலங்கும் கும்மிருட்டும்
பேயார் உலாவும்
இரவில், வழி போகின்றோம்

பார்வைப் புலனும்
பறிபோன காரணத்தால்
பார்த்து வழி காணுகின்ற
பாக்கியமும் நாமிழந்தோம்

மோதி இடியோசை
மூர்க்கத் தனம் புரியக்
காதும் பிளந்ததனால்
கேட்காச் செவிடானோம்


பூனை எதற்கா?
புரியவில்லை மட்டிகள்நீர்!
பூனையில் கொள்ளை
மயிர்கள் புரிகிறதா?
பூனை இறைச்சிப்
புரியாணி தின்றீரேல்
கூனல் நிமிரும்!
குதிரும் இழந்தவையும்!

என்னே பிசத்தல் இது?
என்றெண்ண வேண்டாம்! வீண்
விண்ணாயம் பேசாதீர்!
வீணாகும் நேரங்கள்!
இற்றை யதார்த்தத்தின்
அச்கொட்டாம் வார்ப்புகளின்
வண்ணங்கள் தாம் நாங்கள்!
வாய்க்குள் ஏன் சிரிக்கின்றீர்?


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிங்கள இலக்கியத்தின் விடிவெள்ளி
# மார்டின் விக்கிரமசிங்ஹ





"புத்தபிரான் பற்றி இந்தநூல் எழுதவேண்டுமென்ற எண்ணம் நாற்பது வருடங்களுக்கு முன் தன்னுள் எழுந்ததாக அவர் குறிப்பிடுகின்றார். ஆனால் இந்த நூலின் விளைவை அவர் அறிந்திருந்ததனால் எழுத்தாளர் சிந்தனையாளர் என்ற மட்டத்தில் தனக்கென மறுக்கமுடியாத ஒரு ஸ்தானத்தைப் பெற்ற பின்பு இந்த நூலை வெளியிட முடிவெடுத்தார்."

"தாங்கள் 'பவத்தரணயவில்' சித்தார்த்த குமாரரைப்பற்றிக் கூறியுள்ளவற்றை நான் மிகவும் விரும்புகிறேன். தர்மோபதேச நூல்கள் சித்தார்த்த குமாரர் சின்ராகுல குமாரரை அள்ளி அணைக்கவாவது செய்யவில்லை என்றே கூறுகின்றன. யாரும் அறியாமலே போய்விட்டாராம். இதைக் கேட்கும் போது எனக்கு மிகவும் துக்கம் ஏற்பட்டது. சின்னக்குமாரர் பால் கொஞ்சமும் அன்பு காட்டவில்லையே என ஆத்திரமும் வந்தது. அள்ளி அணைத்தார். யசோதராவிடம் விடைபெற்றே சென்றார் என்று தாங்கள் கூறுகிறீர்கள். அப்படித்தான் அவர் போயிருப்பார். பவத்தரணய கூறுவது போல் நினைத்துப்பார்க்கவே நான் விரும்புகிறேன். நான் முன்பெல்லாம் புத்த பெருமானை மிக உயரேயிருந்து தர்மோபதேசம் செய்வது போலவே எண்ணியிருந்தேன். ஆனால் நானிப்போது அவரை எங்களிலேயே ஒருவராக ஒரு நல்ல தந்தையாக, மன ஆசைகளை மிகுந்த உறுதி யுடன் அடக்கியாண்டு உயர் நிலை எய்திய உத்தமராக மதிக்கிறேன். இவ்வாறு நினைக்கும் போது புத்தபிரான் எனது இதயத்தில் மிக அந்நியோந்நியம் பெறுகிறார். சித்தார்த்தரைப் பற்றி எவருமே நோக்காத வகையில் தாங்கள் சிந்தித்துப் பார்த்தது மிகவும் போற்றத்தக்கது. தங்களில் எனக்கு மிகுந்த ஈடுபாடு ஏற்படுகின்றமைக்கு இதுவே காரணமாக இருக்கவும் கூடும்"

ஐந்தாம்தரம் படித்துக் கொண்டிருந்த ஒரு சிறுமி புகழ் பூத்த முதுபெரும் எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புத்தபெருமானின் வாழ்க்கையை ஒரு புதிய கண்ணோட்டத்தில் அதாவது இதுவரை யாரும் தரிசிக்காத கோணத்தில் சித்தரிப்பதான இந்த நாவலின் விஷேடம். அந்த நாவல் பௌத்தர்கள் மத்தியில் பெரும் புயலைக் கிளப்பிவிட்டதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்ட ஒரு பகுதியே மேலே தரப்பட்டுள்ளது. பழம்பெரும் சமயத்தின் தாபகர், மகா சிரேஷ்டமான வழிகாட்டி என்ற வகையில் கடவுள் ஸ்தானத்தில் வைத்து மக்களால் பூஜிக்கப்படுகின்ற கௌதம புத்தரைக் கதாநாயக பாத்திரமாக வைத்துப் புனையப்பட்ட “பவத்தரணய” (ஞானோதயம்) என்ற நவீனத்தைப்படித்துவிட்டு, அதில் நெஞ்சிழந்த நிலையில் அவள் எழுதியிருக்கிறாள். குறைந்த கல்வி வயதில் உயர்ந்த மனோவயதினளான இந்தக்கலாரசிகை கேகாலையைச் சேர்ந்த தீபிகா சேனாநாயக்க என்பவளே.

புத்தபெருமானின் வாழ்க்கையை ஒரு புதிய கண்ணோட்டத்தில் அதாவது இதுவரை யாரும் தரிசிக்காத கோணத்தில் சித்தரிப்பதான இந்த நாவலின் விஷேடம். அந்த நாவல் பௌத்தர்கள் மத்தியில் பெரும் புயலைக் கிளப்பிவிட்டதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. படைப்பி லக்கிய கர்த்தாக்கள், விமர்சகர்கள், சமய வாதிகள் என்போர் மத்தியில் இந்நாவல் பெரும் சர்ச்சைகளையும், நெருப்புக்கண் விமர்சனங்களையும், கண்டனங்களையும் உருவாக்கிவிட்டது. நூலைத் தடைசெய்ய வேண்டுமென்ற கோரிக்கைகளும் விடுக்கப்பட்டன.

காலங்காலமாக மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கைகளுக்கு மாறாக இத்தகைய எதிர்நீச்சல் போடும் திராணி சாதாரணமக எல்லார்க்கும் வந்துவிடாது. அசாதாரண ஆற்றலும், மக்கள் மத்தியில் வெகுவான செல்வாக்கும் வாய்ந்த துணிச்சல் மிக்க படைப்பாளன் ஒருவனாலேதான் இத்தகைய பரிசோதனை முயற்சியில் இறங்க முடியும். எல்லா விதமான கண்டனங்களுக்கும் ஈடு கொடுத்து பெரும் அக்கினிப்பரீட்சையில் தேறிய அந்த மேதை வேறு யாருமல்லர், புகழ் பூத்த சிங்கள எழுத்தாளர் கலாநிதி மார்டின் விக்ரமசிங்ஹ அவர்களேதான்.

திரு. மார்டின் விக்ரமசிங்ஹ ‘பவத்தரணய’ நாவலை எழுதி வெளியிடும் எண்ணத்தை நாற்பது வருடங்களுக்கு முன்பே கொண்டிருந்திருக்கிறார். இருந்தும் தமது எண்பத்தி நாலாம் வயதில் 1975ம் ஆண்டிலேதான் அந்த எண்ணத்தை நிறைவு செய்திருக்கிறார். ஆற்றலும் செல்வாக்கும் மிக்க படைப்பாளியும், தெளிந்த தீர்க்கமான சிந்தனையாளனும், துணிச்சல் மிக்கவருமான திரு. மார்டின் விக்ரமசிங்க அவர்களை நாற்பது வருடங்கள் காத்திருக்கச் செய்த காரணந்தான் என்ன? “ஞாலங்கருதினும் கைகூடும் காலம் கருதி இடத்தாற்செயின்” என்ற அறுதியுடன் உரிய காலங்கனியும் வரையும் காத்திருந்தாரா? அப்படித்தான் ஜனப். எச்.எம்.பி.முகிதீன் ஒரு சந்தர்ப்பத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

“புத்தபிரான் பற்றி இந்தநூல் எழுதவேண்டுமென்ற எண்ணம் நாற்பது வருடங்களுக்கு முன் தன்னுள் எழுந்ததாக அவர் குறிப்பிடுகின்றார். ஆனால் இந்த நூ லின் விளைவை அவர் அறிந்திருந்ததனால் எழுத்தாளர் சிந்தனையாளர் என்ற மட்டத்தில் தனக்கென மறுக்கமுடியாத ஒரு ஸ்தானத்தைப் பெற்ற பின்பு இந்த நூலை வெளியிட முடிவெடுத்தார்.”

“பவத்தரணய” 1974இல் வெளிவந்தது. முதல் வெளியீட்டில் அச்சிட்ட பத்தாயிரம் பிரதிகளும் வெளிவந்த முதல் மாதத்திலேயே விற்பனையாகி அடுத்த மாதமே (1974 மார்ச்) இரண்டாம் பதிப்புக்கான அச்சு வேலைகள் ஆரம்பமாயின என்றால் “பவத்தரணய” சிங்கள வாசகர் மத்தியில் எவ்வளவு தூரம் சென்றடைந்திருக்கிறது என்பது புலனாகும். எதிர்ப்புகள் எவ்வளவுக்குக் கிளம்பினவோ அவ்வளவுக்கு ஆதரவையும் பெற்றது. ஆதரவுக்கு சரியான ஒரு எடுத்துக்காட்டாக சிறுமி தீபிகா சேனாநாயக் காவின் கடிதத்தைக் கொள்ளலாம்.

சமகாலச்சிங்கள இலக்கியம் குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சியை ஈட்டியிருக்கிறது. காலத்தின் போக்கை அனுசரித்து, வரலாற்றின் மாற்ற முடியாத நிகழ்ச்சிகளையும் தன்னகத்தே தழுவிக்கொண்டு நவீனமயப்படுவதில் சிங்கள இலக்கியம் வேறு எந்த மொழி இலக்கியத்திற்கும் பின் நிற்கவில்லை. தமிழகத்துப் பாதிப்பு ஈழத்து தமிழ்க்கலை இலக்கியங்களுக்கு இருந்தது போன்ற ஒரு நிலை மொழி ரீதியாக இல்லாதது சிங்களக் கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்களுக்கு ஆரோக்கியமாய் அமைந்தது. ஆனதால் சிங்கள இலக்கியம் தனக்கே உரிய தனித்துவத்தோடு வளர்ந்து வந்துள்ளது. மேலை நாட்டு அரசியல், மொழி, கலாச்சார ரீதியான ஆக்கிரமிப்புக்களின் பின் விளைவாக தேசிய இலக்கியத்தில் புதிய போக்குகள் தலைவைப்பது தவிர்க்கமுடியாததே. இந்த ஆக்கிரமிப்புக்களின் அறுவடையான நவீன இலக்கியத்தின் தோற்றப்பாடு கீழை நாடுகளில் நிகழ்ந்தது. அதே மாதிரியான வரலாற்றுப் பாதிப்பு இங்கும் நிகழ்ந்ததால் சிங்களத்திலும் நவீன இலக்கியம் தோன்றி வளர்ந்தது.

நவீன சிங்கள இலக்கியத்தின் தோற்றுவாயாகவும், சாலையின் திருப்புமுனையாகவும் அமைந்து: நேர்த்தியாகவும் பின்வந்தோருக்கு ஆதர்சமாகவும் வழிநடத்திச் சென்ற பெருமைக்குரியவர் தான் திரு.மார்டின் விக்ரமசிங்ஹ, ரஷ்ய இலக்கியத்தில் மகாகவி புஷ்கின் வகித்த பாத்திரம் எதுவோ, அதுவே சிங்கள இலக்கிய்தில் திரு. மார்டின் விக்ரமசிங்ஹவினுடைய ஸ்தானமுமாகும்.

தெளிந்த சிந்தனையோடும் தீர்க்கமான பார்வையோடும் உயர்ந்த கலானுபவத்தோடும் கற்பனை வளங்கனிந்து சொற்சிலம்பாடிய இவரது படைப்புக்கள் வாழ்க்கையின் கன பரிமாணங்களையும் எதார்த்தமாகச் சித்தரித்தன. சிங்களக் கிராமியச் சமூகத்தின் உணர்வுகளையும், உயிர்ப்புகளையும், இருண்ட பகுதிகளையும் இலக்கியமாக்கிக் காட்டிய இவரது படைப்புக்கள் அதே கிராமங்களிலுள்ள சாதாரண மக்களையுஞ் சென்றடைந்தன. அந்த மக்களின் ரசனையை வளப்படுத்தின. படைப்பாற்றலென்னும் ஊற்றுக் கண்களைத் திறந்து விட்டன. மாறிவரும் பிரபஞ்ச நியதி என்னும் கண்ணாடி வில்லைகளினூடாக மாற்றமடைந்து வரும் இலங்கையின் தேசிய வாழ்க்கையைச் சித்தரிப்பதில் இவரடைந்த வெற்றி மகத்தானது. "கம்பெரலிய" (கிராமப்பிறழ்வு) என்னும் நாவல் இதற்குச் சிறந்ததொரு வகைமாதிரியாகும்.

திரு.விக்ரமசிங்ஹ கை வைத்து வெற்றி பெறாத எந்த இலக்கியப்பிரிவும் இல்லை எனலாம். தலைசிறந்த, சிறுகதை, நாவலாசிரியராக திகழ்ந்த அதேவேளையில் சிறந்த கவிஞராகவும் மிளிர்ந்தார். சிறந்த படைப்பாளி ஒருவனே சிறந்த ரசிகனாகவும் உயர்ந்த விமர்சகனாகவும் இருக்கமுடியும் என்பதை நிரூபிக்கும் வகையில் தரமான விமர்சன எழுத்தாளராகவும் விளங்கினார். தத்துவம், வரலாறு, விஞ்ஞானம், சமயம் போன்ற சகல துறைகளிலும் ஈடுபாடு கொண்டு நூல்களை யாத்தார்.

இத்துறைகளில் ஐம்பதுக்கும் அதிகமான நூல்களை எழுதிய இவர் ஒன்றும் உயர்ந்த கல்விமானுமல்லர், பல்கலைக்கழகப்பட்டதாரியுமல்லார். நுண்மான் நுழைபுலம் வாய்ந்த சான்றோர்க்கு வாழ்க்கையை விடச் சிறந்த பல்கலைக்கழகம் வேண்டியதில்லை. ஆரம்பக் கல்வியாகக் கிராமத்தில் ஏட்டுக்கல்வி கற்றார். பின்னர் காலிஉவைட்டுவன பொன்விஸ்டாக் கல்லூரியில் ஆங்கிலம் கற்றார். அவ்வளவு தான் தென் மாகாணத்திலுள்ள கொக்கலை என்ற சிற்றூரே இம்மா பெரும் மேதையைப் பெறும் பேறுபெற்றது.

1890 மே 29 ம் நாள் பிறந்த திரு.மார்டின் விக்ரமசிங்ஹ தமது 89 வது வயதில் 1976 ஜுலை மாதத்தில் மரணமானார்.

உலக முற்போக்கு இயக்கத்தோடு தன்னை இணைத்துக் கொண்டு இவர் ஏகாதிபத்தியம், காலனித்துவம், நவகாலனித்துவம் என்பவற்றிற்கு எதிராகப் போராடினார். மனித உரிமைகளுக்கான போராட்டத்தில் முன் நின்றுழைத்தார். ஆசிய ஆபிரிக்க எழுத்தாளர் நலனுக்காகவும் பாடுபட்டார். மக்களை அதிகமதிகம் நேசித்த இந்தப்படைப்பாளி சகலவிதமான ஒடுக்கு முறைக்கும் சுரண்டலுக்கும் எதிராக போராடினார். பாட்டாளி மக்களின் விடுதலைக்கு இலக்கியம் ஒரு சக்தி வாய்ந்த ஆயுதமென நம்பினார். பரிணாமக்கொள்கையையும் பொருள் முதல் வாதத்தையும் ஏற்றுக் கொண்டார். மாக்ஸிய சித்தாந்தத்திலும் மனித சமுதாயத்தின் சகல பிரச்சினைகளுக்கும் அதன் மூலமே தீர்வு காணலாம் என்பதிலும் நம்பிக்கை வைத்திருந்தார்.

1915இல் இவரது முதலாவது நாவல் வெளிவந்தது. "பவத்தரண" இவரது கடைசி நாவல் எனலாம். "கம்பெரலிய", "கலியுகய", யுகாந்தம் என்பன இவரது முப்பெரும் நாவல்களாகும். "மடோல்தூவ", உடான்தா சிட்ட "அபேகம", "விராகய'முதலான புகழ்பெற்ற நாவல்களையும் எழுதியுள்ளார். இவரது நாவல்கள் பல, ரஷ்ய, செக் மொழிகள் முதலான பிறமொழிகளிலும் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவரது நாவல்களுக்குச் சர்வதேச பரிசுகளும் கிடைத்துள்ளன. இவரது நூல்களைப்பற்றி ஏராளமான விமர்சன நூல்களும் வெளிவந்துள்ளன. பாராட்டுக்களையும் கண்டனங்களையும் இவரது நூல்கள் பெற்றுள்ளன. என்பது இவரது பெருமைக்குச் சான்றாகும்.

இவரது இலக்கியப்பணியையும் அறிவாற்றலையும் மதிப்பீடு செய்த வித்தியாலங்கார பல்கலைக்கழகம் இவருக்குக் கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது. இலக்கியகாரர் அனைவரும் பூரிப்படைய வேண்டிய விஷயமாகும். இலங்கை ஜனாதிபதியின் கௌரவப் பரிசுகூட இவருக்குக்கிடைத்துள்ளது.

சிங்களமொழி என்ற ஊடகத்தினூடாக இவர் படைத்ததெல்லாம் ஈழத்துத் தேசிய இலக்கியமே. அந்தவகையில் கலாநிதி மார்டின் விக்ரமசிங்ஹ அவர்கள் நம் அனைவரினதும் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய ஒருவர் என்பதில் சந்தேகமில்லை.

உலகு தழுவிய தத்துவார்த்தக் கோட்பாடுகளின் நிழலில் தன்னை ஆரோக்கியப் படுத்திக் கொண்டு, மனித குலத்துக்குப் பொதுமையான உணர்வுகள், இயைபுகள், முரண்பாடுகள் என்பனவற்றை அறிவு பூர்வமாக ஜீரணித்துக் கொண்டு தனக்கென்று முத்திரை பதித்த கலையாக்க நெறி முறையை வரித்துக் கொண்டு இவர் படைத்த இலக்கியப் படைப்புகள்: உலக இலக்கியப் பரப்பின் பிரிக்கமுடியாத ஒரங்கமாக அமைந்து விட்டன என்பதும் சர்வ நிச்சயமான உண்மையாகும்.

- 1977 நவம்பர்.

● ● ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.சட்டநாதன்



# அவரவர் பார்வை

இயல்பான ஒரு முரட்டுத்தனமும் அதற்கு முரணான இசைந்து போகும் குணமும் விசாகனிடம் இருந்தது. அவனிடம் இருந்த முன்கோபமும் முரட்டுத்தனமும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியபோதும் குறிப்பாக அந்த முரட்டுத்தனம் பாடசாலையில் விளையாட்டுத்துறையில் அவனைச் சாதனையாளனாக்கியது. பத்தாம் வகுப்புப் படித்தாலும் கல்லூரியின் கிரிக்கெட் அணியிலும் கால்பந்தாட்ட அணியிலும் விதந்து சொல்லக்கூடிய வீரனாக அவன் இருந்தான். இதைத் தவிர இல்ல விளையாட்டுப்போட்டிகளிலும் அவன் சாதனையாளனே. நூறு மீற்றர், இரு நூறு மீற்றர் ஓட்டப் பந்தயங்களிலும் உயரம் பாய்தலிலும் வெற்றி இலக்குகள் எப்பொழுதும் அவன் காலடியிலே கிடந்தன.

அவன் பத்தாம் வகுப்பில் இருந்த போதுதான் அவள், விஜிதா என்ற விஜி அவனது பாடசாலைக்கு வந்தாள். நண்பன் ரகுவரன் அவளைப் பற்றி, விளங்கிக் கொள்ளுகிறமாதிரிச் சொன்னான்.

"கொழும்புப் பெட்டையாம். இஞ்ச நிரந்தரமாக வந்திட்டாலாம். பேத்தியாரோட இருபாலையில இருக்கிறா! ஏதோ வீதி விபத்தில அவளது அப்பா இறந்து போக, பின்னர் அம்மாவும் மாரடைப்பால் போய்விட்டாவாம்."

விஜிதாவைப் பார்த்ததும் அவன் அதிர்ந்து போனான். அவளது ஒளி உமிழும் அகன்ற கண்கள் அவனை நிலைகுலைய வைத்தன. புற்களின் நுனியில் உள்ள பளிச்சிடும் பனித்துளி அவளது இளஞ்சிரிப்பை எப்பொழுதும் ஞாபகப்படுத்தியது. அவனது வகுப்பிலேயே வந்து சேர்ந்து கொண்ட அவள் அவனுக்கு இடதுபக்கமாக இரண்ட வாங்கு வரிசைக்கு முன்பாக இருந்து கொண்டாள். எதேச்சையாகப் பார்ப்பது போல அவளை அவன் பார்த்தான். அவள் எதுவித கூச்சமோ தயக்கமோ இல்லாமல் அவளது குத்துங் கண்களால் இவனை வைத்த கண் அகற்றாமல் பார்த்தாள். அவளது கண்கள் இவனைப் பார்த்து: "என்ன வேணும்?" என்று கேட்பது போலிருந்தது. இந்த மௌனநாடகம் அவள் பாடசாலைக்கு வந்ததில் இருந்து ஒரு கிழமைக்கு மேலாக நடந்து வருகிறது.

அன்றைய தினம் பதினொரு மணியளவில் தேநீர் இடைவேளைக்கு அவன் கன்ரீன் பக்கம் போகாமல் விளையாட்டு மைதானத்துக்குப் போனான். அவனது வகுப்பு மாணவர்கள் கிரிக்கெட் ஆடிக் கொண்டிருப்பதைக் கண்டு துடுப்பை ரகுவரனிடம் இருந்து பெற்றுக் கொண்டான். ஈசன் பந்து போட்டான். இவன் பந்தை அடித்து அடித்து நான்கு திசைகளுக்கும் அனுப்பிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தான். அவன் Third Man திசையில் அடித்த Late eut அங்கு நின்றவர்களைக் குதூகலம் கொள்ள வைத்தது. மைதானத் துக்கு வெளியே புன்னை மரநிழலில் நின்ற விஜி தன்னை மறந்தவளாய் "வெல்டன்" என்று கூவினாள். திரும்பிப் பார்த்தவன் "விஜிதாவா இந்தக் கத்துக் கத்துறாள்" என நினைத்துக் கொண்டு, அவளுக்குக் கிட்டவாக வந்தான்:

"உங்களுக்குக் கிரிக்கெட் பிடிக்குமா?" இவன் கேட்க, அவள் தனது விழிகளை அகலவிரித்தபடி " ம்..... நிரம்ப!" என்று சொன்னாள். தொடர்ந்தவள் "கால்பந்து, தடகளம் எண்டு எதிலையும் நீங்க சம்பியன் பிளேயராமே... சாந்தி சொன்னவ...." "அப்படியா..?" சிரித்தபடி அவன் வகுப்பறையை நோக்கி நடந்தான். அவனை அடியொற்றி அவளும் நகர்ந்தாள்.

சேர்ட் கொலருக்கு உள்ளாக, கழுத்தைச் சுற்றி செருகியிருந்த கைக்குட்டையை யாரோ திடீரென உருவி எடுத்தது போலிருந்தது. திரும்பிப் பார்த்தான். விஜியின் கரங்களில் அவனது லேஞ்சி...!

"கொடுங்க .. வியர்வை மணக்கும்.." வினயமாகக் கேட்டபடி அவளைப் பார்த்தான்.

"உன்ரை வியர்வை மணம் எனக்குப் பிடிக்குமடா! உன்னையும் பிடிக்கும்!" மனதில் கிளர்ந்த நினைவுகளாய்ப் பொங்கிப் பொங்கிச் சிரித்தாள். பின்தொடர்ந்தவள்:

"இதென்ன பட்டிக்காட்டுத்தனமா... கொலருக்கு உள்ள லேஞ்சி வைக்கிறது. ஸ்ரொப்திஸ் நான்ஸென்ஸ்."

"நான் கிராமத்துப்பயல் பட்டிக்காட்டான் தான். ஸொரி இனிமேல் இப்படியெல்லாம் செய்யமாட்டன்."

"கட்டுப்படுத்த முடியாத முரட்டுக்காளை நீ....! உன்னை வளைய வைத்து வழிக்கு கொண்டு வாறது இனி நான் தான்!

"திமில் முற்றாத இந்த நாம்பனை எனக்கு நிரம்பப் பிடிக்கிறதே...! இனி இவனுக்காகத்தான் எல்லாம். எல்லாமே இவனுக்குத் தான்!

அவனைப்பற்றிய அந்தச் சரசமான நினைவுகள் அவளுக் குப் பிடித்திருந்தன.

, அப்போது அவர்களுக்கு ஆங்கிலப்பாடம் ஆசிரியர் எமகண்டன். இவனைப் பார்த்து "விசாகா, ஸிம்பில் பாஸ்ட் ரென்ஸ் இரண்டு சொல்லு பாப்பம்" என்றார்.

"
"திமில் முற்றாத இந்த நாம்பனை எனக்கு நிரம்பப் பிடிக்கிறதே...! இனி இவனுக்காகத்தான் எல்லாம். எல்லாமே இவனுக்குத் தான்! அவனைப்பற்றிய அந்தச் சரசமான நினைவுகள் அவளுக்குப் பிடித்திருந்தன.
"



"அவன் உடல் தளர்ந்து தடுமாறியதைக் கண்ட விஜி அவனது உதவிக்கு வந்தாள். அழகிய வசனங்களை அவள் உதிர்ந்தாள். "வெரிகுட்.." என்ற ஆசிரியர் அவளைப் பாராட்டிய படி இவனைப் பார்த்தார் இவனும் அவள் கூறிய வசனங்களை அடிஒற்றி ஓரிரு வசனங்களைச் சொன்னான்.

"ம்...சரி" என்று அவனைப் பார்த்துத் தலையசைத்தவர், அவளைப் பார்த்துக் கேட்டார்: " உன்ரை பேர் என்னம்மா...? "

"விஜி... விஜிதா...! " என்று அவன் பதில் தந்தான். ஆசிரியர் இவனையும் அவளையும் மாறி மாறிப்பார்த்துப் புன்னகைத்தார்

வகுப்பு முழுவதும் கொல்லென்று சிரித்தது. சிறிது வெட்கப்பட்டவனது முகம் குப்பென்று வியர்த்தது. ஆனால் அவளோ அவனைப் பார்த்து, மென்மையாக முறுவலித்தாள். அதில் ஆயிரம் பூக்களின் வாசனை தழைந்தது.

பத்தாம் வகுப்புப் படித்தபோது, அவர்களிருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துப் பழகுவதோடு மட்டும் திருப்திப்பட்டுக் கொண்டார்கள். ஓரளவு நெருக்கம் கொண்டு ஒருவர் சுவாசத்தை ஒருவர் உள்ளித்து மலர்ந்த தென்னவோ அவர்கள் க.பொ.த சாதாரண தரத்தில் படித்த போதுதான்.

தவணைப்பரீட்சைகளில் அவள் பொது விஞ்ஞானத் திலும் கணிதத்திலும் தொண்ணூறு புள்ளிகளுக்கு மேலாக எடுத்தாள். அவளுக்கு தமிழிலும் வர்த்தகத்திலும் அதிக கவனம் தேவைப்பட்டது. ஒரு சமயம் அவனுக்கு அருகாக வந்தவள் அவனைப் பார்த்துக் கேட்டாள்

" வீட்டுப் பக்கம் வாவன்ரா.. உனக்குக் கணிதமும் விஞ்ஞானமும் சொல்லித்தாறன், எனக்கு நீ தமிழும் வர்த்தகமும் சொல்லித்தா! நீ அந்தப் பாடங்களில் விண்ணன் எல்லா...?"

கதைக்கும் போது அவனது கரங்களை அவள் ஸ்பரிசித்த படியே கதைத்தாள்.

"தொட்டுப் பேசினால்தான் உனக்கு என்னோடை கதைக்க வருமா?"

"ம்..ம்.." எனக்கூறியவள், கலகலவெனச்சிரிக்கவும் செய்தாள். அச்சிரிப்பில் ஜலதரங்கத்தின் சடைவும் இனிமையும் கலந்திருந்தது. அவளது விருப்பத்தைப் பூர்த்தி செய்வது போல அன்று மாலையே அவளது வீட்டுக்கு அவன் போனான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய வீடு. இரண்டு அறை. கிச்சின் அற்றாச்பாத் என்று எல்லாம் இருந்தன. வீடு கனகச்சிதமாக இருந்தது. சன்னல்களிலும், கதவுகளிலும் திரைச்சேலைகள், இளநீல வண்ணத்தில் அசைந்தன. உடசுவர்கள் இளமஞ்சள் நிறத்தில் டிஸ்ரெம்பர் அடிக்கபட்டு தூய்மையாக ஒளிர்ந்தன.

உள்ளே சென்றவன் அவளது அம்மம்மாவைக் கண்டான். அவள் தளர்ந்துபோய் நரை திரையுடன் காணப்பட்டாள். அவனது வருகை அவளுக்கு மிகுந்த அருசை உணர்வை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

விஜியை உள்ளாக அழைத்துச் சென்ற அம்மம்மா கேட்டாள்.

"ஆர் உந்தப் பொடியன்.. உன்ரை ஆத்தை ஆடினது போல நீயும் ஆடப்போறையா..? அவனின்ரை அமர் அடங்க அந்தப் பல்டாக்குத்தன் சோமு இருந்தான். உனக்கு... உனக்கு இந்தக் கருவாய்த்தடியனா!"

சற்று உரப்பாகவே கேட்டாள்.

"கிழவி உனக்குச் சரியான விசர். நல்லா அறளை தட்டீற்று. எனக்கு தமிழும் வர்த்தகமும் படிக்க வேணும். அததான் விசாகன் எனக்குச் சொல்லித் தாறத்துக்கு இஞ்ச வந்தவன். அசட்டுப் பிசட்டென்று கண்டதையெல்லாம் கதையாதை..."

அம்மம்மாவின் அதட்டலில் இருந்த உண்மை அவளுக்கு மனதில் தைத்தபோதும் அதனைப் பெரிது படுத்தாமல் வெளியே வந்தாள்.

"அம்மா நான் பார்த்திருக்க அந்தப் பல்டாக்குத்தர் அங்கிளோடை அடுகிடை படுகிடையாகப் படுத்தெழும் பினதும் அப்பாவை ஒருபொண்ணையனாய் பார்த்ததும்... இச்சைகள் அடங்காத நிலையில் தனிக்கட்டையான அங்கிள் வீடு வரை சென்று, அவருடன் தங்கிவிட்டு வந்ததும்... ஓரளவு அத்து மீறல்கள்தான்..! அப்பாவின் போதாமைகள் இப்படி அவளை விரட்டோ விரட்டென்று விரட்டியிருக்குமோ" அடங்காத காமம் அவளை இப்படிப் பாடாய்ப் படுத்தியிருக்க வேணும்...!"

மனதில் விரவிப் படர்ந்த நினைவுகளுடன் வெளியே வந்த விஜியை ஏறிட்டுப் பார்த்த அவன் கேட்டான்:

"அம்மம்மா என்னவாம்..? பயப் படுறாபோல..!

"அவ கிடக்கிறா. நாம படிப்பம்"

"ம்..."

அன்று விசாகன் அவளுக்கு வர்த்தக பாடத்தில் புரியாத பகுதிகளைத் தொட்டுக்காட்டினான். அவன் பாடம் சொல்லித்தந்த விதம் அவளுக்குப் பிடித்திருந்தது.

அவள் விஞ்ஞான பாடத்தை படிப்பியாது ஓ.எல் வினாத்தாள்களில் இருந்து சில கேள்விகளுக்கு விடை எழுதும் முறையை அவனுக்குக் கற்றுத் தந்தாள்.

பாடம் ஆனதும்- அவள் நன்றி தெரிவித்தபடி அவனது கரங்களைப் பற்றினாள்.

"யாருக்கு யார் நன்றி சொல்வது...! " என்று அவன் சிரித்தான். அவனது கரங்களை எடுத்த அவள் நீண்ட நேரம் விடாமலேயே தனது கைகளுக்குள் அவற்றைப் பொதித்து வைத்திருந்தாள். அது அவனுக்குச் சிறிது கூச்சமாக இருந்தது. அதே நேரத்தில் அதில் ஒரு திருப்தியும் புளகமும் அவனுக்கு இருந்தது.

"இதென்ன உன்ரை கைகள் இப்படிச் சொர சொரப்பா இருக்கு, நகக்கண்களிலும் கொஞ்சம் ஊத்தை இருக்கு. புறங்கை மயிரெல்லாம் புலுண்டிக் கிடக்கு. முகத்திலும் கருமை படர்ந்தபடி..."

"கமத்தில வேலை செய்தால் இதெல்லாம் இருக்கத்தானே செய்யும்"

" இல்ல... நீ இன்னும் கொஞ்சம் சுத்தமா இருக்க வேணும் உனக்கு வஸ்லினும் ஃபயர் அன்ட் ஹாண்ட்ஸமும் வாங்கித்தாறன்.போடு"

"சில்லி.. இது கொஞ்சம் அதிகம்"

"ம்..."

"விஜி! உன்னாலை அன்பாகக் கதைக்க முடியுது. அதே நேரத்தில முரட்டுத்தனமாய்ப் பகிடி பண்ணிற மாதிரியும்.."

"ஸொரி நீ *Tobust* ரா உரமானவனா இருக்கிறை.. அதோட ஆரோக்கியமா வடிவா இருக்கப்படாதா...?"

"சரி..சரி முயற்சி செய்றன்."

"உன்ரைட்றெஸ் ஸென்ஸும் மோசம். லைற்கலர் உடுப்புகள் உனக்கு நல்ல வடிவு. முழுக்கை சேர்ட் போடாதை. கட்டைக் கை புஷ்சேர்ட் போடு..."

"பட்டிக்காட்டானுக்கு இதெல்லாம் எதுக்கு..., நான் என்ன உன்னைக் கட்டிக்க வா போறன்."

"கட்டிக்கொண்டால்தானா... சும்மா பழகிறதுக்கும் நட்பா, நெருக்கமா இருக்கிறதுக்கும் இதெல்லாம் வேணும்."

"நெருக்கமெல்லாம் வேண்டாம். கொஞ்சம் தூர மாகவே நாம இருக்கிறது நல்லம்"

"போடா கிறுக்கா...!" என்று கூறியவள் - "உன்னாலை என்னைத் தடுக்க முடியுமா..? முடியாது. என்று கூறிய படி அவனை நெருங்கி வந்து அவனது கழுத்தில் தனது கரங்களைத் தவழவிட்டாள். அத்துடன் அவனது முகத்தைத் தனது முகத்துக்கு நேராக இழுத்து வைத்துக்கொள்ளவும் செய்தாள் "

"..................."

அவளது செயல்கள் அவனை மௌனியாக்கியது. லேசான மூச்செறிதல் மட்டுமே அவனிடம் இருந்தது.

"பயப்பிடாத உன்னை ஒண்டும் செய்யமாட்டன்"

"அட இவளது விரல்கள் பட்டுப்போல... பூப்போல இவ்வளவு மெது மெது எண்டு..."மனம் கிளர்ச்சியுற முனகினான்.

அவனது மன உணர்வுகளைப் புரிந்துகொண்டவள் அவளும் "உன்ரை கைகள் என்ரை மாதிரி இல்ல... முரட்டுத்தனமா இருக்கு.. கமம் செய்யிறதாலதான் இவ் வளவு உரம் பெற்றிருக்கு. உன்ரை கைகளாலை என்னை அப்படியே இறுக்க மாக் கட்டிப்பிடிச்சு பிழிஞ் செடன்ரா...!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்பவே யா... வேண்டாம்" என்றவன் அவளைக் கண்கள் பூத்துப் போகுமளவு பார்த்தபடி இருந் தான். அவளது முகத்தின் மஞ்சள் கலவையிட்ட வெண்மை யான பளபளப்பு அவனை ஈர்த்தது.

அவளது பிடித்துப் பிடித்து வைத்தது போன்ற மூக்கு திரண்ட ஈரலிப்பான உதடுகள், மேலுதட்டின் மேலாக பொன்னி மையாய் மின்னும் பூனை மயிர்கள். குலைந்த நிலையில் பிருஷடம் வரை தழை யும் கூந்தல், சின்ன மார்பகங்கள் என்று எல்லாமே அவனைத் தூக்கித் தூக்கிப் போட்டன. உணர்ச்சி வசப்பட்டவன் அவளது அந்த அழகிய மார்பகங்களையும் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தான்.

"என்ன.. என்னடா? என்னைப்பிடிச்சிருக்கா?"

"பிடிச்சிருக்கு அதுக்காக...! இப்ப படிப்பம். ஓ.எல் பாஸ்பண்ணி பின்னாலை ஏ.எல் பாஸாகி ஏதாவது பட்டப் படிப்புப் படிக்க வேணும்.."

"அது தன்பாட்டில நடக்கும் அதுக்கும் இதுக்கும் ஏன்ரா முடிச்சுப் போடிற..." என்றவள், இன்னும் அவனுக்கு நெருக்கமாக வந்தாள். அவளது நெருக்கம் அவனிடம் சிறிது பதட்டத்தை ஏற்படுத்தியது. திடீரென எழுந்து கொண்டவன், கூச்சத்துடன் "உன்ரை அம்மம்மா பார்க்கப் போறா..." என்றான்.

"துடை நடங்கி பயப் படாத. பயந்து போய் நாளைக்குப் படிக்க வராமல் விட்டிடாத...?"

"ம். ஆனா எல்லை மீறிற விஷயமெல்லாம் இப்பவேண்டாம்"

"சரி சரி... நான் வம்புப் பெட்டைதான். அப்படி வளர்ந்திட்டன். கண்டிப்பு இல்லாத வளர்ப்பு, அதனாலதான் இந்தத் தறுதலைத் தனமெல்லாம் தானாவந்திட்டுது."

"நாளைக்குப் படிக்க வரமாட்டன். நாளை மறு தினம் வாறன்." கூறியவன், படி இறங்கினான்.

அவன் போவதையே, முகமகற்றாது அவள் பார்த்தபடி இருந்தாள்.....

...

"மூன்று வருஷங்கள்" அவனும் அவளும் கோப்பாயிலுள்ள அந்தக் கல்லூரியில்தான் தொடர்ந்து படித்தார்கள். அக்காலத்தில் அவர்களது உறவு, பிரிவு ஏதுமில்லாது இறுக்கமாகவே இருந்தது.

ஏ.எல்.லில் நல்ல பெறு பேறுகளைப் பெற்ற இருவரும் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானார்கள். அவன் முகா மைத்துவ பாடநெறியை தெரிவு செய்து யாழ்பல் கலைக் கழகத்தில் தனது கல்வியைத் தொடர்ந்தான். விஜி பௌதீக விஞ்ஞானத்தைக் கற்கை நெறியாகத் தேர்ந்தெடுத்துக் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் கற்றாள்.

விஜி இறுதி வருடத்தில் இருந்த போது அவளது அம்மம்மா காலமானார். தனித்துவிடப்பட்ட அவளுக்கு விசாகனே ஓரளவு துணையானான். அவளது வங்கிக் கணக்கில் பண மிருந்ததால் அவள் சிரமம் ஏதும் இல்லாமல் படிக்க முடிந்தது. எல்லாமே அப்பா வினது ஈபி. எவ். வும் அம்மாவின் ஓய்வூதிய முன் பணமும்தான்.

விஜி யாழ்ப்பாணம் வருவது அபூர்வமாகவே ஆகிவிட்ட நிலையில் விசாகன் கொழும்பு செல்லும் சந்தர்ப்பங்களில் எல்லாம் அவளை வீடு தேடிச் சென்று சந்தித்தான். ஒரு சமயம் அவன் அவளிடம் போன போது திடகாத்திரமும் பொலிவும் அழகும் மிகுந்த இளைஞனொருவனைக் கண்டான். அவன் விஜியிடத்தில் மிகுந்த வாரப்பாடுடையவனாகக் காணப்பட்டான்.

"இவர் புவன்குமார் என்ரை பள்ளிக்கூடத்தில என்னோட படிப்பிக்கிறார்" என விஜி அறிமுகம் செய்த போது அவன் இவனுக்குக் கைலாகு கொடுத்தான்.


"அவனது துரு துரு விழிகளும் கூரிய பார்வையும், இவன்.. இந்தப் பயல் உனக்கு... உனக்கு எப்படி விஜி சிநேகித மானான்." என்று விசாகனைப் பற்றிக் கேட்பது போல இருந்தது.

அதை உள்ளுணர்வில் உணர்ந்து கொண்ட விஜி "இவர் என்ரை கல்லூரி நண்பர். நாங்கள் கோப்பாயில் ஒரே பள்ளிக்கூடத்தில படிச்சனாங்கள். அப்ப தொடங்கின நட்பு இப்பையும் தொடருது. நெகிழ்ச்சியான இந்தச் சிநேகிதம் எனக்கு ஒரு வகையில பெருங்கொடை"

அதைக் கேட்டதும் புவனது கண்களில் கசிந்த பொறாமை உணர்வு விசாகனை நடுங்க வைத்தது.

"பார்.. பார்டா, *He is Jealous*, ஏதோ என்னைக் கட்டிக் கொண்ட புருஷன் மாதிரி ஒரு நினைப்பு இவனுக்கு. இவனைத்தான் - இந்த அரைகுறையைத்தான் நான் சடங்கு செய்யப்போறன். அதுக்கு முன்னமே இவன் என்னைத் தன்ரை அடிமையா, உடமைப்பொருளாப் பார்க்கிறதைப் பார் சகிக்கமுடியேல்லை.

"அது தன்பாட்டில நடக்கும் அதுக்கும் இதுக்கும் ஏன்ரா முடிச்சுப் போடிற..." என்றவள், இன்னும் அவனுக்கு நெருக்கமாக வந்தாள். அவளது நெருக்கம் அவனிடம் சிறிது பதட்டத்தை ஏற்படுத்தியது. திடீரென எழுந்து கொண்டவன், கூச்சத்துடன் "உன்ரை அம்மம்மா பார்க்கப் போறா..." என்றான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது அந்தப்பேச்சு புவனுக்கு எரிச்சலூட்டி யிருக்க வேண்டும். அவனது முகம் திடீரென விகார மடைந்தது. உடல் உதற அவளைப் பார்த்து இங்கிதம் ஏதுமில்லாது உறுமினான்.

“இவன்... இந்த அனாமதேயம் மட்டும்தானா... இன்னும் எத்தனை பேரோட உனக்குத் தொடுப்பு..”

“ முட்டாள்! எதைப் பேசிறது... எதை விடுறது எண்ட விவஸ்தை கூட உனக்கு இல்லையா?.. உன்னாலை எப்படி இந்த மாதிரி நாக்கு வளைக்க முடியுது... ” எனக் கூறியவள் எழுந்து அவனது மார்பின் மீது தனது கரங்களை அழுத்தமாய் பதித்து, தனது பலங்கொண்ட மட்டும் அவனைப் பிடித்துத் தள்ளினாள். அலக்கமலக்க விளப்போன புவன் அவளைப் பார்த்து கூறினான் “ இவன்......” இந்த விசாகன் இனி இஞ்ச வரப்படாது. வந்தால் கொலைதான் விழும்” கூறியவன் அடுத்த கணங்களில் வேகமாக வெளியேறினான். வெளி வாசலைக் கடந்த நிலையிலும் அழுத்தமாக அவனது காலடி ஓசை அவர்களுக்குக் கேட்கவே செய்தது.

“இவனையா இந்தக் கோணங்கியையா நீ சடங்கு செய்யப்போற? உன்னைப் புரிஞ்சு கொண்டு, அநுசரிப் போடு தாங்கிக்கொள்ள இவனாலை முடியுமா..? எனக்குத் தெரியேல்லை. முசுடு சரியான முசுடு உன்னுடனான என்ரை உடனிருப்பையே இவனாலை பொறுத்துக்கொள்ள முடியேல்லை. கொச்சையாகப் பார்க்கிறான். காய் நல்லாக் குழம்பிப் போய்க் கிடக்குது. இவன்உன்னைக் கொலை செய்யவும் அஞ்சமாட்டான் போல..”கூறியவன் உதடுகளைச் சுழித்து நளினமாகச் சிரித்தான்.

“நீ சொல்லிறது உண்மைதானடா..! அவனில இருந்த கவர்ச்சியில , ஈர்ப்பில அவனுக்கு வாக்குத் தந்திட்டன். இப்பையும் ஒண்டும் கெட்டுப் போகேல்லை. அவனை விட்டிட்டு உன்னையே”

“இல்லை வேண்டாம். உன்ரை மனசிலை அவன் விழுந்த பிறகு நான் எதுக்கு..?”

“அப்படி எல்லாம் இல்லை. உன்னிலையும் எனக்கு ஆசை இருக்கு. நெகு நெகு எண்ட உன்ரை வளர்த்தியும் வைரம் பாய்ந்த உடம்பும் முரட்டுத்தனமும் தெளிவாயும் இயல்பாயும் பேசும் உன்ரை பேச்சும் எனக்குப் பிடிக்கும்”

பேசிய படி விஜி விசாகனுக்கு அருகா வந்தாள். வந்தவள், சற்று உணர்ச்சி வசப்பட்டு அவனது காதுகளைக் கவ்வுவது போல ஏதேதோ ரகசியம் பேசினாள்.

“இப்பவேயா..... இங்கேயா? வேண்டாம் பெட்டை... மனசு படியாமல் எதுவும் வேண்டாம்.” கூறியவன் எழுந்து கொண்டான். அவன் விடை பெற்றபோது அவனுக்குக் கிட்டவாக வந்த அவள் அவனது குளிர்ச்சியான காதுச் சோணைகளைத் தடவியபடி அவனது உதடுகளில் லேசாக முத்தமிட்டாள். அவளது உதடுகளின் வெடில் அவனுக்குப் பிடித்திருந்தது. அவனும் அவளை இறுக்கமாக அணைத்து கண்களிலும் உதட்டோரங்களிலும் முத்தமிட்டான்.

“நன்றி விசாகா..!”

“எதுக்கு இந்த நன்றி” என்று கேட்டபடி அவன் வெளியே நடந்தான். அவன் தூரப்படும் வரை அவனையே வாஞ்சையுடன் அவள் பார்த்தபடி இருந்தாள்.

விசாகனுக்கு அவள் காதோடு காதாய்ச் சொன்னவை எல்லாமே மந்திரச் சொல்லாய் மனத்திரையில் விழுந்து படிந்தன.

அவள் பேசியது கேட்டு மனக்கிலேசப்பட்ட அவனது உடல் சிலிர்த்துக் கொண்டது. லேசாக வியர்க்கவும் செய்தான். குற்ற உணர்வின் அழுத்தங்களுடன் மனங்குழம்பிய அவன் அவளை விட்டு விரைந்து விலகினான். அப்பொழுது ஒரு வகை ஏக்கமும் எக்களிப்பும் தானாகவே அவனிடம் வந்து சேர்ந்து கொண்டன.

விஜி தனது விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொள்ள முதன்முதலில் விசாகனைச் சந்தித்தது கொழும்பில்தான். புவன் ஏதோ உள்ளகப்பயிற்சிக்கென இரண்டு வாரம் மட்டக் களப்பிற்குப் போயிருந்தான். அந்த வெளியை விசாகனும் விஜியும் முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டார்கள். விசாகன் பாடசாலைக்கு லீவு போட்டுவிட்டு யாழில் இருந்து கொழும்புக்கு வருகை தந்திருந்தான் .

அன்று அதிக சாரலுடன் மழை பெய்து கொண்டிருந்தது. கூதல் காற்று வேறு. இரவுச் சாப்பா டானதும் அவனை அணைத் தபடி வழி நடத்தி வந்த அவள் அவனைத் தனது படுக்கை அறைக்கு அழைத்துச் சென்றாள். அவளது உடலின் ஸ்பரிசமும் உரசலும் அவனுக்குச் சொர்க்க வாசலை நோக்கி நடப் பதான பிரமையை ஏற்படுத்தியது.

“ இது தவறு ... தவறு!” என அவனது உள் மனம் அலறிய போதும் அவள் மீதான மையலும் அவளது உடல் மீதான அதீத தாபமும் அவனை வெற்றி கொண்டன.

அறையில் பரவியிருந்த மெல்லிய ஒளி அவனைப் பெரிதும் வசீகரித்தது. கட்டிலில் ஏறிச்சரிந்த அவளை இளஞ்சிவப்பு இரவுடையில் ஒரு பெரும் பூக்குவியலாகவே பார்த்தான். அவன் அந்தப் பூக்குவியலின் மேலாகப் படர்ந்து புதைந்தான். அவளது உடல் அவனை இசைவாக உள் இழுத்துக் கொண்டது. மயக்க முதிர்ச்சியில் உச்சம் தொட்டு, தளர்ச்சி அடைந்த அவன் புரண்டு படுத்தான். அதுவரை ஒரு வார்த்தை தானும் பேசாமல் கிடந்த அவள் வாய் மலர்ந்தாள்.

“இண்டைக்கு மட்டுமில்ல எண்டைக்கும் இது எனக்கு வேணும் தொடர்ச்சியாய்... *Yor are really voluptuous and nice..*

“என்ன பேச்சையே காணம்....”

“இல்ல இது சதுப்பு... சதுப்பு நிலம். தப்பும் தவறுமா என்னென்னவோ எல்லாம் எங்களுக்கிடையில நடக்குது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"dont be silly ..." அவளது முனகல். அந்தத் தப்பும் தவறும் ஒரு ஆறு மாத காலம் அவனது விருப்பமும் உடன்படுத லும் இல்லாமலே அவர்களிடையே நடந்தது. அவர்கள் கொழும் பிலும் யாழிலும் மாறி மாறிச் சந்தித்துக் கொண்டார்கள்.

கைத் தொலைபேசியில் வந்திருந்த குறுஞ்செய்தி விசாகனை நடுங்க வைத்தது. "எனது இடது கை எலும்பு முறிந்து விட்டது போல இருக்கு. இடது காலிலும் நடக்க முடியாத அளவுக்குக் காயம் இழுத்து இழுத்துத் தான் கிடக்கிறன். புவன் இப்பொழுதெல்லாம் மோசமான மிருகமாகவே மாறி விட்டான். அவனது நடத்தை சகிக்க முடியாத அளவு ஆகி விட்டது. அவனது மூர்க்கத்தனத்தை உன்னாலை மட்டும்தான் கட்டுப்படுத்த முடியும் என நினைக்கிறேன். அந்த வல்லமை உன்னிடம் தான் இருக்கிறது. அவனை எனது மனதில் ஏந்தி உணர்ச்சி வசப்பட்டதென்னவோ உண்மை. அது அந்தப் பிரீதி இப்பொழுது அர்த்தமிளந்து போயுள்ளது. உனது வருகை மிக மிக முக்கியம். ஒரு கொலை வெறியனிடமிருந்து ஒரு ரட்சகனாக என்னைக் காப்பாற்ற உன்னால் தான் முடியும். நீ வருவாயா விசாகா!..

"
உள்ளே வந்த அவனை ஆரத்தழுவியவள் பொங்கிப் பொங்கி அழுதாள். அவளது முதுகை ஆதரவாகத் தடவிய அவன் அவளது உணர்ச்சிக் கொந்தளிப்பு குறையும் எனும் நினைப்புடன் அவளை வாரியணைத்து கண்ணீர் கரிக்கக் கரிக்க ஒரு வெறியுடன் முத்தமிட்டான்..
"



அந்தக் குறுஞ்செய்தியைப் படித்த விசாகன் அன்று மாலையே கொழும்பு புறப்பட்டான். அவன் விஜியினது வீடு சேர்வதற்கு முன்னரே எது எது நடக்கக் கூடாது என அவன் விரும்பினானோ அவை அனைத்துமே அங்கு நடந்து முடிந்திருந்தன.

மறுநாள் அதிகாலை விஜியின் வீட்டையடைந்த விசாகன் அங்கு கண்ட காட்சியினால் உறைந்து போனான். வேதனைப் படுவதைத்தவிர அவனுக்கு வேறுவழி எதுவும் தெரியவில்லை

வீட்டுக்கு முன்பக்க ஜன்னல்கண்ணாடிகள் உடைபட்டுக்கிடந்தன. உள்ளக வரவேற்புக்ஹோலில் கிடந்த கதிரைகள், செற்றிசெற் சாய்மனக்கதிரை, மற்றும் அலங்காரப்பொருட்கள் என்று எல்லாமே சிதறுண்டு இறைந்து கிடந்தன. வீடு அதிக அளவு சேதப்படவில்லை. கொலை வெறி கொண்ட புவனால் விஜிக்கு பாரிய காயங்கள் ஏதாவது ஏற்பட்டிருக்குமோ... அந்த நினைப்பால் துவண்ட விசாகனுக்கு முள்ளந்தண்டு வழியாக குளிர் ஜிவ்வென்று ஏறியது போலிருந்தது. பதட்டமும் நடுக்கமும் ஒன்று சேர்ந்து உலுக்க அவன் அதிக கலவரமடைந்தான். கதவு வரை சென்றவன் அழைப்பு மணியை அழுத்தினான். மணி ஒலிக்கவில்லை. குழம்பியவன் கதவை மெதுவாகத் தட்டினான்.

உள்ளே ஆள் அரவம் "ஆரது..? " மிகவும் சன்னமான குரல். அது விஜியுடையது தான்! காலை விந்தி விந்தி நடந்து வந்த விஜியைக் கண்ட இவன் உடைந்திருந்த ஜன்னல் பக்கமாக வந்து அவளைப் பார்த்தான். தூரத்தில் பாதுகாப்பாக நின்றபடி அவள் விசாகனைப் பார்த்துக் கேட்டாள். "வந்திட்டையா..? உன்ரை விஜி இஞ்ச அனாதரவாச் செத்துப் பிழைச்சுக் கிடக்கறாளடா..! அவளை... அவளை உன்னாலை தான் இனிக் காப்பாத்தேலும் மீளவும் அவன் அந்தப் பிணம் கொத்தி புவன்தான் வந்திட்டானோ எண்டு நான் பயந்திட்டன்"

குரலில் அதிக நடுக்கம் இருந்தது. குரலை உயர்த்தாமலே அவள் பேசினாள். வந்து கதவைத் திறந்தவள், விசாகன் உள்ளே வந்ததும் - அவசரமாக அதை மூடிப் பூட்டினாள். உள்ளே வந்த அவனை ஆரத்தழு வியவள் பொங்கிப் பொங்கி அழுதாள். அவளது முதுகை ஆதரவாகத் தடவிய அவன் அவளது உணர்ச்சிக் கொந் தளிப்பு குறையும் எனும் நினைப்புடன் அவளை வாரியணைத்து கண்ணீர் கரிக்கக் கரிக்க ஒரு வெறியுடன் முத்தமிட்டான்..

"திடீரென இந்த வாஞ்சை இவளிடம் எப்படி.. எப்படிப் பொத்துக்கொண்டு வந்தது. இவளது சுதந்திரமான சிந்தனைகள் சுலபமான செக்ஸ்க்கு எனக்கு வழிவிட்டது என்பது உண்மை. அது ஓரளவு குற்ற உணர்வை எனக்குத் தந்த போதும் அதனை எந்த நிலையிலும் சுரண்டலாக எனது மனம் ஒப்பவில்லையே... சுமுகமான உறவாகத் தானே நான் கருதினேன்.. எல்லாமே படீரெனத் தெளிவு கொள்வது போலிருந்தது அவனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புவன் மீதான இவளது மையல் கரைந்து விட்ட நிலையில் ஆதரவு ஏதுமில்லாத இவளுக்கு நான் நான் தானே இனி எல்லாமுமாக முடியும்

உணர்ச்சி வசப்பட்ட சிந்தனைகளுடன் அவளது உச்சி குளிர முகமலர்ந்தவன் கன்னங்களை உதடுகளால் உரசியபடி அவள் ஆறுதல் அடையும் வகையில் கதைத்தான்.

"நீ இடமாற்றம் எடுத்து யாழ்ப்பாணம் வந்திடு விஜி நீ அங்க படிப்பிக்கலாம்."

" சரி வாறன்... இந்த இடமாற்றம் படிப்பிக்க மட்டுமா இல்ல உன்னை... உன்னை! இந்தக் கழிசடையை நீ ஏற்றுக் கொள்ளு வையா...? ஏற்றுக்கொள்ள வேணும்!"

"என்ரை தங்கக் கோபுரக் கனவுகள், கூச்ச நாச்சமில்லாத இந்த நாத்தல் பிழைப்பு எல்லாமே தகர்ந்து போச்சடா...! யதார்த்தமாக நீ விரும் பிறது போல இனி மேல் என்னாலை இருக்கேலும்"

"ம்... புலம்பாத ... முதலிலை டெல்மனிலோ இல்ல வேற மருத்துவ மனையிலையோ உன்ரை காயங் களுக்கு மருந்தெடுக்கவேணும் கைமுறிவு இருந்தால் *Plaster of paris* போடலாம். பிறகு இன்றோ இல்லை நாளையோ யாழ்ப்பாணம் போவம்."

"அதெல்லாம் வேண்டாம். நான் பயணத்தைச் சமாளிப்பன். இன்டைக்கே யாழ்ப்பாணம் போவம். அங்க போய் மருந்து மாயம் எல்லாம் பார்த்துக்கொள்ளலாம். அந்தக் கழுகிடம் இருந்து நான் தூரப்பட்டாலே போதும்.!"

"அப்பிக் கொண்டிருக்கிற பாரமெல்லாம் குறைய வேணுமென்டால் மனம் விட்டுக் கதைக்க வேணும் பெட்டை! "என்னத்தைக் கதைக்கிறது என்னத்தைவிடுறது... விசாகா எல்லாமே கெட்ட கனவு மாதிரித்தான் இருக்குது. நேற்று இரவு ஒன்பது மணியளவில் புவன் வீட்டுக்கு வந்தான். வந்தவனை உள்ளே வரவிட்டது என்ரை பிழை வந்ததும் வராததுமாய்த் திடீரென எனது இடுப்பில் உதைத்தான். விழப்போன நான் சமாளித்துக் கொண்டு கைகளை ஊன்றிய போது என்ரை வலது மணிக்கட்டு மடங்கியது.. கையில் நெரு நெரு என்று ஒரு சத்தம் - எழும்பு முறிந்திருக்குமோ தெரியேல்லை, கையைத் தூக்க முடியேல்லை. தவித்த நிலையில் விழுந்து கிடந்த என்னை ஏறி நின்று கால்களால் அவன் மிதிக்கத் தொடங்கினான். இடை இடை மிதிப்பதை நிறுத்திவிட்டு எனது கழுத்தை நெரிக்கவும் செய்தான். அப்பொழுது அவன் பொல பொல என உதிர்த்த தூசன வார்த்தைகள் எந்தப் பெண் ஜென்மமும் தனது வாழ்நாளில் எந்த நிலையிலும் கேட்கக் கூடாதவை

"பெட்டை நாய் போல நீ எத்தனை பேரோட படுத்தனி. செய்யிறதையெல்லாம் செய்து போட்டு என்னைச் சடங்கு செய்யிறதுக்கான உன்ரை வக்கணையான முயற்சியும் மூதலிப்பும்.. பரத்தை, துர்த்தை, புறம் போக்கு... உனக்கு விதம் விதமாக மாப்பிளைமாரின்ரை ருசி தேவைப் படுகுது. நீ உயிரோட உலாவிறதே பாவம்?"

கூறியவாறே அவன் தனது கரங்களை எனது கழுத்தில் இறக்கி இறுக்கினான். அவனது உள் நோக்கத் தைப் புரிந்து கொண்ட நான் அவனது வலது கரத்தை எனது பற்களால் பதம் பார்த்தேன். உயிர் தப்ப வேணு மென்ற ஆவலாதியில் வேறு எதுவும் எனக்குத் தோன்ற வில்லை. அவனது கரங்கள் லேசாக நழுவினதும் அவனை உதறித் தள்ளிய நான் பாத்ரூம் பக்கமாக ஓடிச் சென்று அதன் கதவை உட்பக்கமாக அடைத்துக் கொண்டேன்.

பாத்ரூம் கதவை பட பட என எட்டி உதைத்தவன் மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்க இரையைத் தவறவிட்ட விலங்கின் பதகளிப்புடன் மேலும் கீழும் நடந்தான். கதவு நீக்கலால் அவனது அவஸ்தைகளைக் கவனித்தேன். ஒரு சில நிமிடங்களில் அவன் வெளியேறிவிட்டான் என்பதை உறுதி செய்து கொண்டு வெளியே வந்த நான் முன் கதவைப் பாதுகாப்புக் கருதி அடித்து மூடிக் கொண்டேன். அந்தக் கனத்திலிருந்து நீ இங்கு வந்து குரல் கொடுக்கிறவரைக்கும் வீட்டை விட்டு நான் வெளியால நகரவேல்லை. இது ஒரு வகையில எனக்கான ஒரு வீட்டுக்காவல்தான்."

"ம்... நீ இதையெல்லாம் மறக்கவேணும். உன்ரை விருப்பம் போல இண்டைக்கே நாம யாழ்ப்பாணம் புறப்படுவம்"

"நன்றி விசாகா என்றவள் நெருக்கமாக வந்து மிகுந்த வாஞ்சையுடன் அவனது கரங்களை - தனது காயப்படாத கையால் எடுத்து தனது அடி வயிற்றில் வைத்துக் கொண்டாள்.

" நான்.. நான் மூண்டு மாதத்துக்கு மேலாகத் தீட்டுப்படாமல் இருக்கிறன். நான் விரும்பினது போல உன்ரை... உன்ரை கரு என்ரை வயித்தில... ஆனா உன்ரை பிள்ளையைச் சுமந்தாலும் தறுதலைத்தனமான புவனையும் சடங்கு செய்ய தடுமாறினதும் கொஞ்சம் பரத்தைத்தனம்தான். சுதந்திரம் அது இதென்டெல்லாம் இருக்கேலாதுதான். நாலுபேர் மத்தியில அது உனக்குத் தலைக்குனிவு. எனக்கும்தான்!

"எல்லாமே உனக்கு விளங்குது... விளங்கினால் சரி பெட்டை..."

" ம்... ம்..." என்ற முனகியபடி தலையசைத்தவள் அவனை இன்னும் இறுக்கமாக அணைத்துக்கொண்டாள். அந்த அணைப்பு அவளுக்குப் பெரும் நம்பிக்கையையும் எதிர்காலம் பற்றிய பயம் இல்லாத உணர்வையும் அதிக அளவில் தந்தது..........

● ● ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உடுவில் அரவிந்தனின் பாழ்வெளி

## "மிருதுவாய் தூண்டும் மொழியின்வழி பின்னைப் போர்க்காலப் பிரதிபலிப்புக்கள்"




ஈழத்துத் தமிழ்ச்சூழலில் தொண்ணூறுகளில் எழுதத்தொடங்கிய படைப்பாளிகளில் பலர் இன்று தம்மைத் தாம்சார்ந்த படைப்பாக்கத் துறைகளில் தங்கள் படைப்பாற்றலால் அடையாளப்படுத்தியுள்ளனர். யாழ்ப்பாணத்தில் அப்போது உதயன்-சஞ்சீவி, ஈழநாதம், முரசொலி முதலிய பத்திரிகைகளும் வெளிச்சம், நங்கூரம், தூண்டி, தாயகம் முதலிய பல சஞ்சிகைகளும் முகிழ்நிலைப் படைப்பாளிகளின் படைப்புக்களை பிரசுரித்து ஊக்குவித்திருந்தன. இவற்றில் வாராவாரம் வெளியிடப்பட்ட உதயன்-சஞ்சீவியின் பங்கு முக்கியமானது. இயல்வாணன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகுலராகவன், தாட்சாயினி, சாரங்கா, சிவாணி, ச..குமுதினி, இரவீந்திரன், த.ஜெயசீலன், ச.முகுந்தன், சி.கதிர்காமநாதன், ச.இராகவன், இராஜேஸ்கண்ணன் எனத்தொடரும் ஒரு பட்டியலில் வரும் இன்னும் பலரை அக்காலகட்டத்தில் பொதுநிலை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியிருந்தது. இந்தப் பட்டியலில்வரும் தவிர்க்கமுடியாத முதன்மையான ஒரு சிறுகதைப் படைப்பாளி உடுவில் அரவிந்தன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளராக செங்கை ஆழியான் பணிபுரிந்தபோது பல்கலைக்கழகத்தில் மாணவர்களாக இருந்துகொண்டு எழுதியவர்களின் சிறுகதைகளைத் தொகுத்து 'மண்ணின் மலர்கள்'(சிவாணி- தொ.ஆ,2001) எனும் சிறுகதைத் தொகுதியை மல்லிகைப் பந்தல் வெளியீடாக வெளியிட உதவினார். அத்தொகுதியில் அரவிந்தனின் 'விடிவு' என்ற சிறுகதை இடம்பெற்றது. பின்னர் பன்னிரு முகிழ்நிலை சிறுகதை எழுத்தாளர்களின் தொகுப்பாக நண்பர்கள் வெளியீடாக குப்பிழான் ஐ.சண்முகனது முன்னுரையுடன் வெளிவந்த 'இங்கிருந்து'- தொகுதி-1(2001) எனும் தொகுப்பிலும் இவரது 'உறவுப் பாலம்' எனும் சிறுகதை இடம் பெற்றது. இது எழுதஆரம்பித்த காலத்திலேயே அடையாளப்படுத்தப்பட்ட படைப்பாளியாக அரவிந்தன் விளங்கியிருந்தார் என்பதைக் காட்டுகின்றது.

உடுவில் அரவிந்தன் "உணர்வுகள்"(1999) என்ற பதினான்கு சிறுகதைகள் உள்ளடங்கிய தொகுதியை முன்னர் வெளியிட்டிருந்தார். பதினேழு வருடங்களின் பின்னர், இப்போது பதினைந்து சிறுகதைகளை உள்ளடக்கிய "பாழ்வெளி" என்ற தொகுப்பை வெளியிட்டுள்ளார். போர்க்காலத்தின் சிதைவுற்ற வாழ்வையும், போரின் நீட்சியாகப் போரின் பின்னான காலத்தில் தொடரும் 'மெல்லவோ முழுங்கவோ' முடியாத வாழ்வின் சஞ்சலங் களையும் இந்தச் சிறுகதைத் தொகுதியின் கதைகளின் பிரதான பொருளாகக் காணலாம். ஆயினும், போரையும் போரின் விளைவுகளையும் கடந்தும் தன் சமூக அக்கறை யையும் வெளிப்படுத்தியுள்ளார். அச்சம் கவிந்த காலத்தில் பகிரங்கமாக வெளிப்படுத்த முடியாத பொருள்களை பூடகமாகவும், குறியீட்டுப் பண்புடனும் 'விக்கினமின்றி' வெளிப்படுத்த படைப்பாளிகளுக்கு உள்ளொழிந்து வெளிப்படுத்தும் மொழியும், படைப்பின் தக்கவடிவமும் அவசியமானது. உடுவில் அரவிந்தனின் இந்தச் சிறுகதை களின் படைப்பு மொழியும் படைப்பாக்க உத்திகளும் அத்தன்மையானவை. காலம் மொழியை தீர்மானிக்கும். போர்க்காலத்துப் படைப்பு மொழியும் போர் ஓய்ந்து விட்டகாலத்துப் படைப்புமொழியும் ஒன்றாயிருக்க முடியாது என்பதை அரவிந்தனின் சிறுகதைகள் உணர்த்துகின்றன.

பாழ்வெளியில் சேகரமாகியுள்ள அரவிந்தனின் சிறுகதைகள் பொதுவான வாசக அனுபவமாகத் தருகின்ற விடயங்களை பின்வருமாறு பட்டியலிடலாம்:

சிறுகதைகள் அனைத்தினதும் பலமாக கருதத்தக்க களச்சித்திரிப்பு மற்றும் நிழ்வுகளின் சித்திரிப்பு கதைப் பொருளை பூடகமாக வெளிப்படுத்தக் கையாழும் உத்தி முறையில் பெரும்பாலான கதைகளில் வரும் அங்கதம், உருவகம், குறியீடு மற்றும் தற்குறிப்பேற்றம் முதலானவை சிறுகதைகளுக்கான பொருளுக்கேற்ப தீர்மானமான சரியானதும் நேர்த்தியானதுமான அளவு சிறுகதைகளில் முதன்மைப்படுத்தப்பட்டுள்ள உணர்வு மேலீடும் அகவயமான அனுபவங்களும் சிறுகதைகளில் ஆங்காங்கே காணப்படும் எள்ளல்களும் சமூக விமரிசனங்களும் அரவிந்தனின் இந்தத் தொகுப்பில் உள்ளடங்கும் சிறுகதைகளில் களச்சித்திரிப்பு கச்சிதமாக அமைந்துள்ளது. இது சிறுகதையின் 'படக் காட்சிப்படுத்தல்' பண்பை அதிகரித்துள்ளது. இந்தக் காட்சிப்படுத்தல் பண்பு அரவிந்தனின் கதைகளுக்குத் தனித்துவத்தைத் தருகின்றது. எடுத்துக் காட்டாக "கருமையாகப் பளபளக்கின்ற வீதியில் கனரகவாகனங்களின் அழுத்தமான தடங்கள் இடையிடையே காடுகளை நோக்கி முறிந்தன. விமுங்குவதற்காகக் காத்திருக்கும் மலைப் பாம்புகளின் திறந்த வாய்களைப்போல எனக்கு அவை தென்பட்டன" என்ற வரிகள் வன்னிப்பிரதேசத்து பாதைகளைத் தெரிந்தவர்களுக்கு பல அர்த்தங்களை விரிக்கும் சித்திரிப்பாகின்றது. வாசகனின் ஊகஇடைவெளிக்கு வாய்ப்பளித்து, சொல்லாத செய்திகளை வாசிக்கும் சமநேரத்தில் மூளையில் தன்னிச்சையாய் பதிவாக்கும் இத்தகைய சித்திரிப்புக்கள் பின்னைப்போர்க்கால இலக்கி யங்களின் தனிப்பண்பாகியுள்ளது. கூடு, இருப்பு, சுடலைக் குருவி, நிலா ஆகிய கதைகளின் உத்தி சிறப்பாயமைந்துள்ளது. இந்தக் கதைகள் தனித்துவமானவை.

> "அச்சம் கவிந்த காலத்தில் பகிரங்கமாக வெளிப்படுத்த முடியாத பொருள்களை பூடகமாகவும், குறியீட்டுப் பண்புடனும் 'விக்கினமின்றி' வெளிப்படுத்த படைப்பாளிகளுக்கு உள்ளொழிந்து வெளிப்படுத்தும் மொழியும், படைப்பின் தக்கவடிவமும் அவசியமானது. உடுவில் அரவிந்தனின் இந்தச் சிறுகதைகளின் படைப்பு மொழியும் படைப்பாக்க உத்திகளும் அத்தன்மையானவை."

மீப்புனைவியல் பண்புடன் கூடிய கதைகள்கூட போர்க்கால வாழ்வை சித்திரிப்பதற்கான 'பாதுகாப்பான' வடிவங்களாக பயன்பட்டுள்ளன. அம்ரிதா ஏயெம், மலர்ச்செல்வன், திசேரா, இராகவன், இ.சு.முரளீதரன் போன்றவர்களின் சிறுகதைகளில் இவை அதிகம். அவர்களின் வீச்சுக்கு இல்லாவிட்டாலும் அரவிந்தனின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இருப்பு' எனும் சிறுகதையில் ஓரளவு மீப்புனைவியல் அம்சங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. புத்தரின் சாட்சியமாக அமையும் அந்தக்கதை யதார்த்தமான பல சம்பவங்களின் பதிவாயினும் புத்தரை வாய்திறந்து பேசவைத்ததால் ஓரளவு மீப்புனைவியல் பண்பைப் பெறுகின்றது.

போர்க்கால மற்றும் பின்னைப்போர்க்காலப் படைப்புக்களில் படைப்பாளியின் உள்நோக்கத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற ஏற்ற வழிமுறையாகப் பொதுவாக ஒருவகைப் பூடகம் அல்லது அங்கதம் பயன்பட்டுள்ளது. ஆசிரியர் கருத்துச்சொல்லி பொறியில் அகப்பட்டுக் கொள்ளாது குறியீடுகள், உருவகங்களால் தப்பித்துக்கொள்ள இது ஓர் உபாயமாகின்றது. 'இரை' எனும் கதையில் வரும் இரைதேடும் காகம், 'கூடு' என்ற கதையில் குறிப்பிடப்படும் தாக்கவல்ல குளவிகளைக் கொண்ட குளவிக்கூடு, 'கல்லறைப்பூக்கள்' கதையில் காட்டப்படும் எருக்கலை, 'ஈச்சம்பழம்' எனும் கதையில் காட்டப்படும் யாரும் பறிக்கத்தக்க ஈச்சம்பழம், 'சுடலைக் குருவி' என்ற கதையில் பயத்தின் குறியீடாய் வரும் சுடலைக்குருவி முதலியனவும், மீசை மாமாக்கள், பெருநகர வணிகர்களின் பொம்மை வியாபாரம், பேயோட்டிகள் என ஆங்காங்கே வரும் குறியீட்டுச் சொற்களும் கவனிக்கத் தக்கவை. இவை யாவும் இந்தக் கதைகளின் பூடகத்தை அதிகரித்துள்ளன. இந்தப் பூடகம் பின்னைப் போர்க்காலக் படைப்புக்களில் தவிர்க்கமுடியாத அம்சமாகியுள்ளது.

இலக்கியத்தின் அடிநாதமே மொழிதான். மொழியின் செழிப்பையும் வாளிப்பையும் தன்னுள் தாங்கிவரும் படைப்புக்கள் கலையழகு பெறுகின்றன. முதன்மையான இலக்கியங்களைப் படைத்த படைப்பாளிகளின் மொழியாளுமைதான் அப்படைப்பு வெளிவரும் மொழியின் வளமாகின்றது. சங்க இலக்கியங்களின் சிறப்பு சங்கப் புலவர்களின் மொழியின் சிறப்பே. திருவாசகத்தின் தித்திப்பு மணிவாசகரின் மொழியின் சுவையே. கம்பன் கவிச்சிறப்பு கம்பனுள் குவிந்துகிடக்கும் மொழியின் வளமே. நவீன உரை இலக்கியங்களுக்கும் இது பொருத்தமான கருத்தே. இன்று புற்றீசல்களாய் புத்தகமாக் கப்படும் சிறுகதைகள், நாவல்களின் வாயிலாகத் தேட்டமாகும் மொழிபற்றிய பொதுநிலையான தேடலின் விளைவு அதிருப்திநிலையில் முடிகின்றது. திறனாய்வாளர் களும்கூட படைப்பாக்க வடிவம், உத்திமுறைகள், கருப்பொருள் என வாய்ப்பாட்டுத்தனமான பாடங்கற்பித் தலுக்கு முக்கியம் கொடுக்கின்றனரேயொழிய படைப்பின் மொழி தொடர்பிலான ஆழ்ந்த விவாதங்களை முடுக்கிவிடு வதில்லை. தேர்ந்த சிற்பியின் கையிலுள்ள உளி தன்பாட்டில் கிடக்கும் மரத்தைச் கலையழகுச் சிரத்தையுடன் செதுக்கும் போதுதான் வெறும் மரத்திலிருந்து கலையம்சமான சிற்பம் பிறக்கின்றது. தன்பாட்டில் நமக்குள் இயங்கியபடியிருக்கும் மொழியை கலையம்சமாக ஆக்கும் படைப்பாளி மொழியை காலங்கடந்து வாழவைக்கின்றான். தமிழில் சிறுகதைகளைப் படைத்த பெயர்பொறித்த படைப்பாளிகள் பலர் இந்தவகையினர். அண்மையில் வெளியான உடுவில் அரவிந்தனின் "பாழ்வெளி" எனும் சிறுகதைத் தொகுதியின் குறிப்பிடத்தக்க பயனாக முனைப்பாகத் தெரிவது உள்ளு ணர்வை மிருதுவாகத் தூண்டும் அவரின் மொழியாளுமையே. கடினமான வாழ்வின் பிரதிபலிப்புக்களை மிருதுவான மொழியில் வெளிப்படுத்தும் கதைகளிவை.

அரவிந்தனிடத்தில் 'கவிதைத்தனம்' தோய்ந்த ஒருவித மொழியாட்சி உள்ளது. இந்தச் சிறுகதைகளில் அதிகம் இதனைக் காணமுடிகின்றது. "இறுக்காமான மௌனம் மொய்த்திருந்தது", "தலைகளற்ற தென்னை மரங்கள் நடுகற்களைப்போல வரிசையாக நின்றன", "வெண்ணிறப் பூக்கள் உதிர்ந்து நிலமெங்கும் நட்சத்திரங்களாகப் பரவியிருந்தன", "பார்வையிலே வறண்ட புழுதி கலந்திருந்தது" என்று அவர் கையாழும் தொடர்கள் பல கவனிக்கத்தக்கவை.

சமூகவிமர்சனம் படைப்பாளிகளின் பொதுக்குணம். அரவிந்தன் அரசியல் மற்றும் பண்பாட்டுத் தளங்களில் கூர்ந்து கவனிக்கப்படவேண்டிய சில விடயங்களை தனது சிறுகதைகளில் விமரிசனம் செய்கின்றார். "போரின் எச்சங்களை மிகவிரைவாக அகற்றவேண்டும் என்ற தீவிர முனைப்புடன் கிளிநொச்சிநகரம் பிரமாண்டமாகப் புனரமைக் கப்பட்டுள்ளதாக எனக்குத் தோன்றியது. நகர்ப்புறங்களையும் பிரதான தெருக்களையும் பிரகாசமாக்கி, ஏனைய இடங்களை அப்படியே கைவிடுகின்ற அரசியல் சித்துவிளை யாட்டுக்கள் முடிவின்றி நீண்டு செல்கின்றன. இத்தகைய பாரம்பரிய நடனங்களுக்குப் பக்கவாத்தியம் வாசிப்பதற்கு இங்கு கடுமையான போட்டி நிலவுவது எமது தலைவிதி யென்றுதான் சொல்லவேண்டும்" என்று வருவது சமகாலத்து அரசியல் நிலைபற்றிய விமரிசனமாகின்றது. "அவர்களுடைய கரங்களில் நவீனரகமான தொலைபேசிகள் மின்னுகின்றன. சமீபத்தில் வெளியான திரைப்படத்தில் நடித்த அறுபது வயதுக் கதாநாயகனின் அதிமானுட வீரசாகசங்கள் குறித்து அவர்கள் தீவிரமாக விவாதிக்கிறார்கள்" என்பது எங்கள் பண்பாட்டு ஆர்வம் பற்றிய எள்ளல்கலந்த விமரிசனமாகிறது.

உடுவில் அரவிந்தனின் உணர்வுகள் எனும் முதலாவது சிறுகதை நூலுக்கான முன்னுரையில் செங்கை ஆழியான் "உடுவில் அரவிந்தனின் சிறுகதைகளில் பாத்திரவார்ப்பும் நிகழ்ச்சிச் சித்திரிப்பும் அவர் எழுத்தின் முதிர்ச்சியைக் காட்டுகின்றன. கருத்துநிலைகள் அவரின் முதிரா இளமையைச் சுட்டி நிற்கின்றன. எழுத்தில் நிஜத்தன்மை பொதிந்திருப்பது உடுவில் அரவிந்தனின் படைப்பாற்றலுக்குக் கிடைத்திருக்கின்ற கொடை. யாழ்ப்பாணச் சமூகத்தின் பல்வேறு கோணங்களை அவர் தன் எழுத்தக்களில் படைப்பாக்கியுள்ளார் அவரின் பேனாவில் இருந்து எதிர்காலத்தில் உத்திச்சிறப்பும் உருவ அமைதியும் கொண்ட சிறப்பான உன்னத சிறுகதைகள் தமிழுக்குக் கிடைக்கும்..." என்று குறிப்பிட்டிருந்தார். இந்த எதிர்பார்ப்பினை அரவிந்தன் பாழ்வெளியில் நிறைவேற்றி யுள்ளார். பாழ்வெளி முதிர்ந்த கருத்துநிலையுடனும் படைப்பாக்க நேர்த்தியுடனும் தீவிரமான மொழிக் கரிசனையு டனும் வெளிவந்துள்ளது. இன்று நிகழ்போக்கிலுள்ள சிறுகதைப் போக்கில் தனித்து இனங்காட்டக்கூடிய சிறுகதைகளாக இவை இடம்பிடித்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி.செல்வமனோகரன்

# அல்வாய்ச் சண்டியன்




## யதார்த்தத் தளத்தில் முகிழ்தெழும் படைப்பு

ஈழத்தின் தமிழ் இலக்கியச் சூழலில் பன்முக அடையாளங்களைப் பதித்துள்ளவர் க.பரணிதரன். அச்செல்நெறியில் 'அல்வாய்ச் சண்டியன்' எனும் இச்சிறு கதைத் தொகுப்பு இணைந்து கொள்கிறது. 112 பக்கங்களில் 10 சிறுகதைகளை உள்ளடக்கிய இத்தொகுப்பின் பின்னட்டையில் பரணிதரன் பற்றிய குறிப்பை மூத்த எழுத்தாளர் கே.ஆர்.டேவிட் வழங்கியுள்ளார். ஜீவநதியின் 90ஆவது வெளியீடான இந்நூல், இவரது இரண்டாவது சிறுகதைத் தொகுப்பாகும்.

நிகழ் சம்பவங்களின் கதைகளை இனங்கண்டு பிரித்துப் புனைவுகளாகத் தந்துள்ளார். ஆதலால் யதார்த்த வாதத் தளத்தில் இக்கதைகள் அமைந்திருப்பதை நாம் அவதானிக்க முடிகின்றது. இக்கதைகளில் யுத்தத்தின் விளைவுகளையும் வலிகளையும் அதிகம் தரிசிக்க முடிகின்றது. படமுடியாத துயரம், மீளப் பிறந்தவர்கள், எழுதிச் செல்லும் விதியின் கை, வேர்கொண்ட உறவுகள் முதலான கதைகளில் இவற்றை அவதானிக்கலாம். போரின் பின்பான வாழ்வின் சில பகுதிகளை இவை அடையாளப்படுத்துகின்றன. வெட்டியான், மானுடம் வென்றதம்மா எனும் இரு கதைகளும் விபத்தின் பின்னணியில் பின்னப்படுகின்றன. பெயர்தலின் துயரை ஏக்கம், வேர்கொண்ட உறவுகள் என்பவற்றின் வழி அறியமுடிகின்றது. சிறுவர் சார்ந்த கதைகளாக இடமாற்றம், அல்வாய்ச் சண்டியன் போன்றவை திகழ்கின்றன. மேலும் போராளி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் போன்ற பாத்திரங்கள், சிறுவயது மனவெளிப்பாடு, யுத்தம் போன்றன இச்சிறுகதைத் தொகுதியில் அதிக இடத்தைப் பிடித்துள்ளன. இத்தொகுப்பின் மைய இழையாக உளவியல் அமைந்திருக்கின்றது.

யுத்தம் முடிந்த பின்பும் முடிவுறாத துயரத்தின் இசையை, கையறு நிலையை முடியாது இனித்துயரம், மீளப் பிறத்தல்கள், வேர்கொண்ட உறவுகள் எனும் கதைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. அதிலும் படமுடியாது இனித் துயரம் எனும் கதை கணவனைப் பிரிந்து, ஒரு மகனை இழந்து ஒரு மகளைப் போராளியாகப் பிரிந்து, துயரினைத் தாங்கியபடி வாழும் பெண்ணின் கதையாகும். 'விறுமம் பிடித்தவள்' எனக் கூறப்படும் கதைசொல்லியான ரீச்சர், பிரிந்த மகளை உயிருடன் காணும்போது அழும் அழுகை வாசகனையும் தொற்றிக் கொள்கின்றது. யுத்தம் எத்தனை மனங்களைக் கல்லாக்கியிருக்கிறதுளூ உருக்கி உருக்குலைத்திருக்கிறது.

அதேபோல விடுதலைப் போராளியாய், அரசியற்துறைப் பொறுப்பாளராய், சுதந்திர வேட்கைமிகு மனதோடும், யுத்தத்தின்பின் 'முழங்கைக்குக் கீழ் வெட்டுப்பட்ட வலது கையும் இடது கையில் குடும்ப அட்டையும், ஐசியும் குடும்பப் பெண்ணாய் ஏதிலியாய்த் தன்னடையாளமிழந்து போன ஜீவனாய் எவ்வித சமூக மரியாதையுமற்று வாழ்தலை 'மீளப் பிறந்தவர்கள்' புனைவினூடு வெளிப்படுத்துகிறார். யதார்த்தம் வாசகரின் நெற்றிப் பொட்டில் அறைகிறது. வேர்கொண்ட உறவுகள் கதை. புலம்பெயர் நாட்டில் இருந்து வரும் ஒருவன் தன்னுடன் படித்த கெட்டிக்காரனான சிவகுமார் யுத்தத்தில் குடும்பத்தையும் காலையும் இழந்து பிச்சைக்காரனாக இருப்பதைக் காணும் அவலத்தைக் கருப்பொருளாகக் கொண்டுள்ளது.

இராணுவ ஆளுகைக்குட்பட்ட யுத்தகால வாழ்வு - தினசரி மரணமே வாழ்வாகிப்போன தமிழர் பிரதேசத்தில் உரப்பைப் பிணங்களை – அதன் வழி துயருறும் மனிதர்களின் மனங்களை 'எழுதிச் செல்லும் விதியின் கை' பதிவிடுகிறது. யுத்தத்தின் வலியையும் தன்னிஷ்டப்படி சுதந்திரமாக வாழமுடியாத வறுமையின் வலியையும் வெட்டியான் பதிவிடுகிறது. அத்தோடு மனிதர்கள் ஏற்படுத்தும் வீதி விபத்துக்கள், இறந்தவரின் விதியையே கேள்விக்குள்ளாக்குவதை இக்கதையும் மானுடம் வென்றதம்மா கதையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. இக்கதையானது பொருளடக்கத்தில் 'மானுடன் வென்றதம்மா' என்றும் உரிய கதைப் பக்கத்தில் (ப.71) மானுடம் வெல்லும் எனவும் பதிவிடப்பட்டுள்ளது. இக்கதை முதியவர் ஒருவரின் இளமைக் காலத்துக் காதலை மையமாகக் கொண்டமைந்துள்ளது.

பெயர்தலின் துயரை 'வேர்கொண்ட உறவுகள்', 'ஏக்கம்' என்பன புலப்படுத்தி நிற்கின்றன. அதிலும் ஏக்கம் சிறுகதை அமெரிக்காவில் சிறப்புடன் வாழ்கின்ற ஊரில் தன் உறவுகளின் மேம்பாட்டுக்கு-வசதியான வாழ்வுக்கு வழி செய்த தம்பி எனும் பாத்திரம் தன் தாய் நிலத்தில் உறவுகளுடன் வாழும் வாழ்க்கை ஏங்கி நிற்பதை நுட்பமாக அழகியலுடன் புலப்படுத்தி நிற்கிறது.

இடமாற்றம், அல்வாய்ச் சண்டியன் எனும் இரு சிறுகதைகளிலும் ஆசிரிய மாணவ உறவின் இரு பக்கங்களும் இருவேறு கோணங்களில் உளவியலை ஆதார சுருதியாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளன. இடமாற்றம் சிறுகதையில் வரும் ஆசிரியருக்கு இடமாற்றம் வழங்கப்படுகிறது. அவர் அதனை விரும்பவில்லை. இதனால் உளநெருக்கீட்டுக்கு உள்ளாகும் அவர் அதன் வெளிப்பாடாக மாணவர்கள் மீது தேவையற்று எரிச்சறப்படுகிறார்ளூ ஏசுகிறார்ளூ தண்டிக்கிறார் இதற்குச் சமாந்தரமாகத் தண்டனைக்குள்ளாகும் சிறுவன் உளநெருக்கீட்டுக்குள்ளாகி அதன் வெளிப்பாடாக செய்யாத, செய்யத்தகாத செயல்களைச் செய்கின்றான். நியூட்டனின் தாக்கம் - மறுதாக்கம் எனும் கருத்தியல் இப்புனைவின் மையப் புள்ளியாகின்றது.

இதற்கு மாறாக துடுக்குத்தனம் உடையவனான, ஒழுங்கு பேணமுற்பட்டு ஒழுங்கற்றவனாகத் தண்டனைக்குள்ளாகும் துர்பாக்கியம் உள்ள சிறுவனைப் புரிந்து கொண்டு அவன்வழி சென்று அவனை மீட்டெடுத்து நல்வாழ்வளிக்கும் ஆசிரியரின் நடத்தையை அல்வாய்ச் சண்டியன் புலப்படுத்தி நிற்கின்றது. இவ்விரு கதைகளும் சிறுவர் உளவியல் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

இத்தொகுப்பு முழுவதும் நிலம் - நிலத்துக்கான போராட்டம், யுத்தம் - அது தரும் துயர், வலி, வறுமை, பெண்கள், அவர்களின் துயரங்கள், சிறுவர்கள் அவர்களது மனப்பாங்குகள் என்பன விரவிக் கிடக்கின்றன. ரீச்சர் (கதைசொல்லி – பட முடியாது இனித் துயரம்) மாலதி அக்கா (மீளப் பிறந்தவர்கள்) அக்காச்சி (எழுதிச்செல்லும் விதியின் கை) போன்ற பெண் பாத்திரங்கள் பெண்களின் பல முகங்களை வெளிப்படுத்துகின்றன. பல்வேறு தளங்களில் சமூகத்தில் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை முன்னிறுத்துகின்றன. ரீச்சரின் அழுகையைக் கண்டு சகிக்காது தாமும் அழுகின்ற, அவரின் துயரை நீக்க முற்படுகின்ற பிள்ளைகள் (படமுடியாது இனித் துயரம்) தன் வாழ்வை மாற்றியமைத்த ஆசிரியரை முன் மாதிரியாகக் கொள்ளும் சிறுவன் (அல்வாய்ச் சாண்டியன்), தான்படும் அவஸ்தையால் நெருக்கீட்டுக்குள்ளாகும் சிறுவன் (இடமாற்றம்) என்பன இதற்கு உதாரணங்கள். யுத்தம், யுத்தத்தின் பின்னான வாழ்வு, இடப் பெயர்வு என்பவற்றை வெளிப்படுத்தும் அனைத்துக் கதைகளும் நிலத்தின் மீதான பற்றைப் பறைசாற்றுகின்றன.

இப்புனைவுகள் யதார்த்தத் தளத்திலமைந்தன வாயினும் ஆயிறும் அது புனைவாக மாறும்போது அதற்கான தர்க்கத்தையும், அழகியலையும் கொண்டிருக்க வேண்டும். படமுடியாது இனித்துயரத்தில் வரும் மேரியின் அம்மாவான ரீச்சர், மீளப்பிறத்தவர்கள் மாலதி அக்கா, இடமாற்றத்தில் வரும் ஆசிரியர் - மாணவர், ஏக்கத்தில் வரும் அமெரிக்காவில் வாழும் தம்பி - ஆசிரியரான அண்ணா போன்றவை சிறந்த பாத்திர வார்ப்புகளுக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சித்திரிப்புகளுக்கும் உதாரணங்களாகின்றன. இடமாற்றம் கதையில் வருகின்ற ஆசிரியர் மற்றும் சிறுவனின் நடத்தை மாற்றம் - அதில் செல்வாக்குச் செலுத்தும் உள நெருக்கீடு என்பன புனைவுத் தர்க்கத்துக்கும் பாத்திர உருவாக்கத்துக்கும் சிறந்த எடுத்துக் காட்டுக்களாகின்றன. 'நினைத்ததுமற்று நினையாமையுமற்று' ஈழத்தின் அறிவியல் சார் புனைவுகளில் ஒன்றாக அமைகின்ற அதேவேளை சுஜாதாவின் சிறுகதை களை ஞாபகப்படுத்துகின்றது.

மானுடம் வென்றதம்மா, வேர் கொண்ட உறவுகள் போன்ற சிறுகதைகள் இலட்சிய வாதச் சாயலுடையனவாக உள்ளன. அல்வாய் சாண்டியன் கதையில் வரும் பின்பகுதி புனைவுத் தர்க்கமற்று சற்றே விவரணமாகி விடுகிறது. உரப்பையுள் வெட்டியனுப்பப்பட்ட உடல் (எழுதிச் செல்லும் விதியின் கை) பற்றிய விபரிப்பு சினிமாத் தனத்தை ஒத்ததாயினும் அது நம் தேசத்தின் கதை என்பதை யாரேனும் மறுக்கவியலாது.

இக்கதைகள் ஒரே மூச்சில் வாசிக்கத்தக்கவை குறித்த கதையை வாசிக்கத் தொடங்கியவர் அதனை வாசித்து முடித்தே நூலைக் கீழே வைப்பார். இதற்கு மொழி வீச்சு, கதை நகர்த்தப்படும் விதம், எளிமை என்பன காரணமாகின்றன. அதேவேளை பேச்சு மொழிகளுக்கிடையில் எழுத்து மொழியும் கலந்துவிடுகிறது. அதனைத் தவிர்த்தல் நலம். இக்கதைகளெங்கும் பரணி தென்படுகிறார். அதுவே இப்புனைகதைகளின் பலமும் பலவீனமுமாகிறது. அல்வாய்ச் சண்டியன் எனும் தலைப்பு அதிரடியானதாகவும் புறநடத்தையின் வெளிப்பாடாகவும் அமைந்திருக்க அத்தலைப்பிடப்பட்ட கதையோ அகநடத்தை சார்ந்த உளவியல் வெளிப்பாடாக அமைந்திருப்பது சுவையாகவே உள்ளது. எல்லா மனிதர்களுள்ளும் இருக்கும் அகவுலக 'நாயக' பாவ சஞ்சரிப்பை, அதன் வெளிப்பாட்டை உளவியல் அடிப்படையில் அட்டைப்படம் வெளிப்படுத்தி நிற்பது அழகியல் மற்றும் கருத்தியல் அடிப்படையிலானதாகிறது.

ஒட்டு மொத்தத்தில் க.பரணீதரனின் அல்வாய்ச் சண்டியன் சமகால வாழ்வில் சில முகங்களை கண்ணாடி யாய் எமக்குக் காட்டுகிறது. இக்கதைகள் உளவியல் அடிப்படையில் நிலம், யுத்தம், வலிகள், பெண்கள், சிறுவர்கள் எனும் சமூகத்தின் பல் தளங்களில் கட்டமைக்கப் பட்டுள்ளன. பரணியின் ஆக்க விலக்கியத் திறனின் ஒரு மைற்கல்லாக இத்தொகுதி அமைந்துள்ளது.

• • •



# மரணத்தின் நிழல்

உக்கிரக் குண்டெறிகள் ஓய்ந்திருக்கும்
வெளிகளுக்கப்பால் திரளும் அவர்கள்
இன்னும் கால்கள் கடுக்க காத்திருக்கிறார்கள்
...
தங்கள் நிலத்தில்,
தங்கள் இருப்பிடத்தில்,
தங்கள் வாழ்வகத்தில்
அகற்றாமல் குவிந்து கிடக்கும்
முட் கம்பிகளுக்கு முன்னால்..
துப்பாக்கிச் சுடுகுழல்
நீண்டு நெஞ்சை குறி பார்க்கின்றன.?
...
வெடியோசைகள் மட்டும்
அடங்கி போரற்றிருக்கும்
எங்கள் சமூகம் - இப்பொழுதும்
போரின் வலி தோய்ந்த நினைவலைகளுள்
போர்க் கால மூச்செரிந்த வடுக்களால் அலறுகின்றனர்.?
...
தடை விழுந்திருக்கும்
எங்கள் நிலம்
வண்டல் மண் வளத்தை
ஈரம் நனைத்து பயிர்ச் செய்கை அனுமதி கோரல்
இராணுவக் காவலறணில்
வரிசையாய் நீளும் நலிவூற்ற தேகங்கள்
பகல் பொழுது ஒவ்வொன்றிலும்
மெழுகுதிரிச் சுடராய் உருகி நிற்கின்றனர்.?
...
பண்டாநாயக்க ஆட்சியும்,
ஜெயவர்த்தன ஆட்சியும்,
சந்திரிக்கா ஆட்சியும்,
ரணில் ஆட்சியும்,
மகிந்த ஆட்சியும்,
மைத்திரி ஆட்சியும்
மரணத்தின் நிழல் ஆட்சிகளை...


- கோ.நாதன் - பிரான்ஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாதுமாகி

## நண்பர்களின் கதை -3

- ச. இராகவன்



**1991** காலப்பகுதியில் நான் ஒன்பதாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். அது புதுமுக வகுப்புகள் தொடங்கியிருந்த ஜனவரி மாதம். வகுப்புக்களை மாணவர்கள் எண்ணிக்கைக்கேற்ப *A,B,C,D* என நான்காகப் பிரித்து வைத்திருந்தார்கள். நான் ஊ வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். அந்த வருடம் தொடங்கியதும் ஒரு புதுக்குழப்பம் தோன்றியது. என்னையும் ஏனைய பிரிவுகளைச் சேர்ந்த சில மாணவர்களையும் (எல்லாமாகப் பத்துப் பேரென ஞாபகம்) பாடசாலை நிர்வாகம் "*C*" பிரிவு என்ற புதுப் பிரிவை உருவாக்கி அதற்குள் கொண்டுபோய் அடைத்து வைத்தது. கொலைக் குற்றவாளிகளை விசேட செல்லுக்குள் அடைத்து வைப்பதைப் போல் அது இருந்தது. (இன்றுவரை அந்த அடைத்து வைப்புக்குரிய காரணம் யாதென நானறியேன்) எங்களுக்குப் பிரம்படியில் தேர்ச்சி பெற்றிருந்த ஆசிரியர் குழாமையே கற்பித்தலுக்கு நியமித்தனர். இந்தக் கூத்து ஒரு கிழமை வரையில் நீடித்தது. அடுத்தகிழமை முதற்பாடவேளை தொடங்கியதும் அதற்குரிய ஆசிரியர் வந்து "நீங்கள் இந்த வகுப்பிற்கு வருவதற்கு முன்பு எந்தெந்தப் பிரிவுகளிலிருந்தீர்களோ அப்பிரிவுகளுக்கே சென்று பழையபடி கற்கலாம். இனி இந்தப்பிரிவு வகுப்பு இருக்காது" என்று சொல்லிவிட்டுப் போனார். தொட்டியிலிருந்த மீன்களைக் கொண்டு போய்க் கடலில் விட்டால் அந்த மீன்களுக்கு எப்படியிருக்குமோ அதே குதூகலத்தோடு எங்களது புத்தகப் பைகளை எடுத்துக் கொண்டு பழைய வகுப்புகளுக்கு ஓடினோம். அங்கே எமது முன்னைய வகுப்பில் கற்பித்த அதே ஆசிரியரே இந்த வருடத்தில் கற்பிப்பதற்கு நியமிக்கப்பட்டிருந்தார். அவரது பெயர் செ. யோகராசா என சக மாணவர்கள் சொன்னார்கள். நான் அவரைப் பற்றி ஏற்கனவே கேள்விப்பட்டிருந்தேன். அவர் கருணையோகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற புனைப்பெயரில் நெல்லியடிக் கூட்டுறவுப் பெருமன்றம் வெளியிட்டிருந்த உயிர்ப்புகள் சிறுகதைத் தொகுப்பில் எழுதியிருந்த "அகதிகள்" என்ற சிறுகதையை வாசித்திருந்தேன். அவரது மனைவி அவரிடம் சேலை வாங்கி வரும்படி கொடுத்த பணத்தில் சேலை வாங்காமல் புத்தகம் வாங்கிக் கொண்டு வீடு திரும்பியவர் என்ற தகவலையும் அவரிடம் உயர்தர வகுப்பில் தமிழ்படித்த எனது அயல்வீட்டு அக்காமூலம் அறிந்திருந்தேன். இந்நிலையில் அவர்தான் தமிழாசிரியர் என்பதையறிந்ததும் இனம்புரியாத மகிழ்வுக்குள்ளானேன். சக வகுப்பு மாணவர்களிடம் அவர் முதற்கிழமை என்ன கற்பித்துள்ளார் என அறிந்து கொள்ளப் பாடக் குறிப்புகளைக் கேட்டு வாங்கிப்பார்த்தேன். கம்பராமாயணக் காட்சிகளில் அவையடக்கப் பாடல்கள் நான்கினைக் கற்பித்துப் பொழிப்புரையும் கொடுத்திருந்தார். அதை உடனடியாகப் பிரதிபண்ணிக் கொண்டேன். அடுத்தவகுப்பில் கற்பித்த பகுதியில் பரீட்சை வைப்பேன் என அவர் சொன்னதாகவும் சகமாணவர்கள் கூறினர்.

நான் அவர் கொடுத்த குறிப்புகளை கவனமாகப் படித்தேன். அவரும் வந்தார். பரீட்சை வைத்தார். அப் பரீட்சையில் எதிர்பாராத விதமாக நான் முழுப் புள்ளியும் பெற்றேன். அன்றிலிருந்து அவரது கவனம் என்மீது குவிந்தது. என்னையொரு மகா கெட்டிக் காரனாகக் கருதினார். எதற்கெடுத்தாலும் என் பெயரையே உச்சரிப்பவராக இருந்தார். அது எனக்கு ஒரு புறம் மகிழ்ச்சியைத் தந்தாலும் மறுபுறம் பயமாகவும் இருந்தது. அந்தக்காலம் யாழ்குடா நாடு முழுமையாகப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தமையால் மௌன அஞ்சலி என்ற பதம் வெகு பிரபல்யமாகியிருந்தது. அவர் எமது வகுப்பறையில் பாடம் நடத்திக் கொண்டிருக்கும் போது யாராவது ஒரு மாணவனைக் கேள்வி கேட்பார். அந்தமாணவன் எழுந்து பதிலளிக்காமல் மௌனம் சாதித்தால் அவனருகே சென்று "தோழர் மௌன அஞ்சலி செலுத்து வதற்கு இரண்டு நிமிடங்கள் மட்டும் தான். அதற்குமேல் மௌன அஞ்சலி செலுத்த முடியாது" என்பார். மொத்த வகுப்பறையுமே சிரிப்பிழந்து அடங்கச் சிறிது நேரமாகும். இதைத்தவிர ஒவ்வொரு கிழமையும் தமிழில் வழுவாக எழுதப்பட்டுவரும் சொற்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு சொல்வதெழுதுதல் தேர்வை நடத்திச் செவ்வை பார்ப்பார். வாசிப்பில் தேர்ந்த மாணவர்கள் சிலரைத்தவிர ஏனையோர் சைபர் எடுத்திருப்பர். அவர்களை அழைத்து வரிசையாக நிறுத்தி வகுப்புத் தலைவனைப் பார்த்து "தம்பி சைவர் மாணவர்களுக்கான சாத்துப்படியை எடுத்துவா" என்பார். அவனும் பிரம்பைக் கொண்டுவந்து கொடுக்கச் சாத்துப் படி வழங்கப்படும். இதன் மூலம் தன்து மாணவர்களை வழுவின்றித் தழிழை எழுதக்கூடியவர்களாக மாற்றியிருந்தார். எண்பதுகளின் பிற்பகுதியில் எமது பாடசாலையான யா/ விக்னேஸ்வரக் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றப் பொறுப்பாசிரியராக இருந்த செ. யோவின் ஆக்கப் பூர்வமான சிந்தனை வடிவமே "ஏணி" எனும் பெயரில் உயர்தரமாணவர் மன்றச் சஞ்சிகையாகும். இவ்விதழ் இப்போதும் வெளியிடப்பட்டு வருகிறது எனினும் முன்பிருந்த கனதியும் பொலிவுமில்லையென்பது வருந்துதற்குரியது.

அவர்
எமது வகுப்பறையில்
பாடம் நடத்திக் கொண்டிருக்கும் போது
யாராவது ஒரு மாணவனைக்
கேள்வி கேட்பார்.
அந்தமாணவன் எழுந்து பதிலளிக்காமல் மௌனம்
சாதித்தால் அவனருகே சென்று
"தோழர் மௌன அஞ்சலி செலுத்துவதற்கு
இரண்டு நிமிடங்கள் மட்டும் தான்.
அதற்குமேல் மௌன அஞ்சலி
செலுத்த முடியாது" என்பார்

நான் எப்போதும் தட கள விளையாட்டுக்களுக்கு எட்டாத தூரத்திலிருப்பவன். செ. யோ. எனது வகுப்பின் தமிழாசிரியராக இருந்தபோது எனது இல்லப் பொறுப்பாசிரியராகவுமிருந்தார். முன்னைய வருடங்களில் விளையாட்டு நிகழ்வுகள் தொடங்கியதும் நான் ஒழித்துத் திரிவது வழக்கம். அந்த வருடம் ஒழித்துத்திரிய முடியவில்லை. தற்செயலாகச் செ.யோ இல்லப் பொறுப்பாசிரியராக விருந்த கிருஷ்ண பிள்ளை இல்லத்தைச் சேர்ந்த மாணவன் நான் என்பதையறிந்து கொண்டதும் அவர் உற்சாகம் மேலிட என்னை இல்லத் தலைவன் சிவதில கிருஷ்ணனிடம் அழைத்துச் சென்று "தம்பி சிவதிலகன்! இந்த பையன் கெட்டிக்காரன். இவனையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். அதன்பின்னர் என்னால் தம்பித்துக் கொள்ளமுடியவில்லை. குண்டெறிதல், தட்டெறிதல், ஈட்டி எறிதல் ஆகிய மூன்று நிகழ்வுகளிலும் பங்கு பற்றினேன். இடமேதும் கிடைக்காது என்பது எனக்கு முன்னரே தெரிந்ததுதான். ஆனால் இல்லத்திற்குப் புள்ளிகள் கிடைத்தது. இவ்வாறாக விளையாட்டுக்களிலிருந்து ஒதுங்கிய மாணவர் பலரையும் செ. யோ இல்லப்பொறுப்பாசிரியராக இருந்த காலத்தில் விளையாட்டுக்களில் ஈடுபடவைத்தார். இதன் விளைவாக இல்லத்திற்கான புள்ளிகள் உயர்ந்தன. இதுவரை கடைசி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையிலிருந்த கிருஷ்ணபிள்ளை இல்லம் செ. யோ இல்லப் பொறுப்பாசிரியரான ஆண்டில் முதலாவது வந்தது. இன்றும் இந்நிலை தொடர்கிறது.

செ. யோ எங்கள் வகுப்பிற்குக் கம்பராமாயணக் காட்சிகளில் குலம் சுரக்கும் ஒழுக்கத்தைக் கற்பித்துக் கொண்டிருந்த போது மாயமானார். அவர் கிழக் கிலங்கைப் பல்கலைக்கழகத்திற்கு விரிவுரையாளராகச் சென்றுவிட்டதாகத் தகவல் கிடைத்தது. அது என்னைத் துயரத்திற்குள்ளாக்கியது. அவரது இடத்திற்கு வேறு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டாலும் அவரைப் போல் நயமாகவும் ஐயம், திரிபு, மயக்கமெழாமலும் தமிழ் கற்பிக்கக்கூடிய வேறு ஆசிரியரை நான் கண்டதேயில்லை.

அவர் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்திற்கு விரிவுரையாளராகச் சென்றது என்னை மட்டுமல்ல. வடமராட்சிக் கல்விச் சமூகத்தையே வெகுவாகப் பாதித்த தொரு சம்பவமாகிவிட்டிருந்தது. செ. யோ தமிழை மட்டுமன்றி இந்து சமயத்தையும் ஐயம், திரிபு, மயக்கமின்றித் தெள்ளத் தெளிவாகக் கற்பிக்கும் தாடனம் கைவரப் பெற்றவராயிருந்தார். இந்நிலையில் அவர் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்திற்கு விரிவுரை யாளராகச் சென்றதால் அவ்விரு பாடங்களையும் கற்பிப் பதற்கு இன்று வரை ஒரு தகுதியான நபர் தோன்ற வில்லை. அவர் விட்டுச்சென்ற இடம் இன்றளவிலும் வெற்றிடமாகவேயிருக்கிறது. ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூக்களைப் போல நவீன இலக்கியப் பரிச்சயமற்ற சிலரும், நவீன இலக்கியத்தில் நாங்கள் வின்னர் எனப்பாவனை செய்யும் சில கற்றுக்குட்டிகளும் குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டிக் கொண்டிருக் கிறார்கள். கமலரூபன் நம்பிக்கையளிப்பவராக மேற் கிளம்பினார். அவரது அகாலமரணம் அந் நம்பிக்கையை வேரோடு கருக்கிவிட்டது.

எனக்குப் பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது. கற்கை நெறியில் ஈடுபட்டிருந்த காலப்பகுதியில் ஒருநாள் பேருந்தில் சென்று கொண்டிருக்கும் போது செ. யோவும் அப்பேருந்தில் இருந்தார். நான் அவரருகே சென்று கதைத்தபோது அவர் என்னை முற்றிலும் மறந்து விட்டிருந்தார். என்னால் அதை நம்பமுடியவில்லை. எனினும் அவரைப் போன்றதொரு நல்லாசான் என்னைப் போன்ற எத்தனை மாணவர்களைச் சந்தித்திருப்பார். அத்தனை பேரையும் ஞாபகத்தில் வைத்திருப்பது சாத்தியமில்லைத்தானேயென மனதைத் தேற்றிக் கொண்டேன்.

இதன் பின்னர் செ. யோவை நான் ஒரு நண்பராகச் சந்தித்துக் கொண்டது 21.10.2002 யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற "மானுடத்தின் தமிழ்க் கூடல்" நிகழ்வில்தான். அந்நிகழ்விற்கு செ.யோ நண்பர் குப்பிழான் ஐ. சண்முகனுடன்சேர்ந்து வந்திருந் தார். சண்முகன் என்னைப் பற்றிச் செ. யோவிடம் சொல்லியிருந்திருக்க வேண்டும். அதனால் என்னைக் கண்டதும் சிநேக பூர்வமாகப் புன்னகைத்து "கதைகள் எழுதுவதாகக் கேள்விப்பட்டேன். சந்தோசம், தொடர்ந்து எழுத வாழ்த்துக்கள்" என்று சொன்னார். அவ்வாழ்த்தினால் உளம் பூரித்தது. அன்றையதினம் சினிமா குறித்த அரங்காக மானுடத்தின் தமிழ்க்கூடல் ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது. தமிழகத்திலிருந்து பா. செயப்பிரகாசம், ஓவியர் ட்ரஸ்கி மருது, திரைப்பட இயக்குனர் புகழேந்தி தங்கராஜ், அரசியல்வாதி தொல். திருமாவளன் ஆகியோர் அவ்வரங்கிற்கு வருகை தந்திருந்தனர். அக்காலப்பகுதியில் புகழேந்தி தங்கராஜ். காற்றுக் கென்னவேலி என்ற திரைப்படத்தை இயக்கியிருந்தார். அத்திரைப்படத்தை புலிகளுக்கு ஆதரவான படம் எனக்கூறி தமிழக அரசு வெளியீட்டுக்குத்தடை விதித்திருந்தது. அவர் உண்ணா விரதப் போராட்டம் நடத்தி அத்திரைப்படத்தின் மீதான தடையை நீக்கச் செய்து வெற்றி பெற்றார். அன்றைய அரங்கில் புகழேந்தி தங்கராஜ் தனது திரைப்படம் உருவானதிலிருந்து தடை நீங்கப்பட்டது வரை பேசிக் கொண்டேயிருந்தார். பார்வையாளர் சிலர் கொட்டாவி விட்டனர். சிலர் தூங்கி வழிந்தனர். செ. யோ எனக்கருகி லிருந்தபடியே புகழேந்தி தங்கராஜ் பேசுவதைத் தீவிர முகபாவத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார். எனக்குச் சலிப்பு ஏற்பட்டது. நான் "என்னப்பா இந்தாள் ஒரு லிமிற் இல்லாமல் பேசிக் கொண்டிருக்குது" என முணு முணுத்தேன். அது செ. யோவுக்கு கேட்டு விட்டது. அதற்கு செ. யோ "காற்றுக்கென்னவேலி" என்றார். செ.யோவுக்கு மறுபுறமிருந்த கவிஞர் சு. வில்வரத்தினம் தன்னை மறந்து சிரித்து விட்டார். எனக்கு அருகேயிருந்த நடை வழியில் புதுவை இரத்தினதுரை ஓர் உளவுத் துறை அதிகாரியைப் போல் குறுக்கும் மறுக்குமாக நடந்து கொண்டிருந்ததால் என்னால் சிரிக்க முடியவில்லை. அன்றைய தினம் கவிஞர் சு. வில்வரெத்தினம் அளித்தி ருந்த நகைச்சுவை விருந்தும் மறக்கமுடியாததொன்று. இது பற்றி வேறொரு சந்தர்ப்பத்தில் பார்க்கலாம்.

2003காலப்பகுதியல் தூண்டி இலக்கிய வட்டம் நடாத்திய சிறுகதை அரங்கிற்கு ஒரு பேச்சாளராகச் செ. யோவும் வந்திருந்தார். அன்றைய தினம் ஈழத்தின் முக்கிய சிறுகதைத் தொகுப்புக்களைப் பற்றியெல்லாம் செ. யோ. தமதுரையில் விரிவாகப் பேசினார். (எழுத்தில் பதிவு செய்ய வேண்டி ஒரு பேச்சு அது. வெறுங்காற்றோடு போய்விட்டது) பேச்சு முடித்து மதியபோசன இடை வேளையின் போது நான் குப்பிழான் ஐ. சண்முகன், செ.யோ, உமாகாந்தன் ஆகிய நால்வரும் ஒன்றாக அமர்ந்து உணவருந்தச் சந்தர்ப்பம் கிட்டியது. நாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது எனக்கு இரண்டு வருடங்களுக்கு முன்பு பல்கலைக்கழகத்தில் கற்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நெறியினைத் தொடரும் போது பல்கலைக்கழகச் சூழலிலுள்ள சைவ உணவகங்களின் மதியபோசனத்தை சாப்பிடுவது போன்ற உணர்வு ஏற்பட்டது. அதை என்னோடு உணவருந்தியவர்களிடம் சொன்னேன். உடனே செ. யோ "தம்பி" மாற்றம் ஒன்றுதான் மாறாததொன்று என்று சொல்வதை மாற்றிக் கொள்ளுங்கள். சைவ உணவகங்களின் மதியபோசனமும் மாறாத தொன்றுதான் என்றார். சொல்ல மறந்துவிட்டேன். அன்றைய சிறுகதை அரங்கும் யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் தான் நடைபெற்றது.

30.11.2002அன்று நடைபெற்ற பாடசாலைப் பரிசளிப்பு தின விழாவிற்கு செ.யோ. பிரதம விருந்தினராக வந்திருந்தார். வழமையாகவே யாழ்/விக்னேஸ்வரக் கல்லூரி நிகழ்வுகளுக்கு ஒரு பழைய மாணவனாக இருந்துங்கூட அழைப்பிதழ் தரப்படாமல் புறக்கணிக்கப் படுமொருவனாகவே நான் இன்று வரையிலும் இருந்து வருகிறேன். வழமை போல் இந்நிகழ்வுக்கும் எனக்கு அழைப்பிதழ் தரப்படவில்லை. ஒரு நாள் நெல்லியடிக் கூட்டுறவுச் சங்க நூலகத்தில் என்னைக் கண்ட செ. யோ அப்பரிசளிப்பு விழாவுக்கு வருமாறு நட்பு ரீதியாகக் கேட்டுக் கொண்டார். அந் நட்புக்காக மட்டுமே அவ்விழா விற்குப் போனேன். அவரது பிரதம விருந்தினர் உரை மிகச் சிறப்பாகவிருந்தது. விழா முடிந்ததும் செ. யோவை மதியபோசனத்திற்கு அழைத்து சென்றனர். அவர் என்னையும் விடாப் பிடியாக அழைத்தார். அவருடன் கூடப் போவது போலச் சென்று நழுவி வந்துவிட்டேன். அது இன்றளவும் எனக்கு வருத்தந்தான். என்ன செய்வது? பாடசாலை சமூகம் என்னைப் புறக்கணித்து வருவதற்கான காரணத்தைச் சொன்னால் நகைக்கத் தோன்றும். அதை எனது உடன்பிறவா அண்ணன் திருக்கோவில் கவியுவனைப் பற்றி எழுதும் போது குறிப்பிடுவதுதான் பொருத்தமாக விருக்குமென்பதால் இப்போது தவிர்த்து விடுகிறேன்.

செ.யோ தொடர்ந்து பங்குபற்றும் நவீன இலக்கியக் கருத்தரங்குகளிலும், புத்தக வெளியீடு மற்றும் விமர்சனக் கூட்டங்களிலும் தன்னால் எழுதப்படும் சிறுகதைதொடர்பான ஆய்வுக்கட்டுரைகளிலும் மறக்காமல் எனது பெயரைக் குறிப்பிட்டு வருகிறார். ஒரு போதும் நான் எவரும் எனது பெயரைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென எதிர்ப்பார்ப்பவனல்ல. செ.யோவின் தேடல் மற்றும் இலக்கிய நேர்மைக்கு ஓர் எடுத்து காட்டாகவே இதைக் குறிப்பிட விரும்பினேன்.

மகுடம் மூன்றாவது இதழில் வந்த எனது நேர் காணலின் இரண்டாவது பகுதி பலருக்கும் உவப்பளிக்க வில்லை. முதலாவது பகுதியைப் பாராட்டிய பலரும் இரண்டாவது பகுதி குறித்துக் கள்ள மௌனம் சாதித்தனர். ஆனால் மகுடம் வெளிவந்து ஒருசில நாட்களிலேயே அந்த இரண்டாவது பகுதிகுறித்து எனக்கு அழைப்பெடுத்து மனம் நெகிழ்ந்த பாராட்டைத் தெரிவித்தவர் செ. யோ மட்டும் தான். நான் செ. யோவைப் பற்றி எழுதுவதற்கு இரண்டு பிரதான காரணங்களுண்டு. ஒன்று செ.யோ மலையகத்தின் மருமகன். அடுத்தது அவர் தற்போது கிழக்கு மாகாணத்தை வசிப்பிடமாகவும் கொண்டவர் அதாவது அவரது புகுந்த இடம் மலையகம். அடுத்தது இதுவரை அறியப்படாதிருந்த மலையக வாய்மொழிப் பாடல் இலக்கியத்தின் முக்கிய ஆளுமையான கபாலிச் செல்வனைப் பற்றிய ஆய்வினைச் செய்து சிறப்பான கட்டுரையொன்றை மகுடத்தில் எழுதியதின் மூலம் கபாலிச்செல்வனைச் சிறப்பாகச் செ.யோ வெளி உலகிற்கு அடையாளங்காட்டியிருந்தார். அக்கட்டுரை வெளிவந்து சில நாட்களின் பின் கபாலிச் செல்லன் காலமாகிவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

• • •

மகுடம் 14வது இதழ்

## செ. கணேசலிங்கன் சிறப்பிதழ்

ஈழத்தின் பிரபல நாவலாசிரியர் செ. கணேசலிங்கன் சிறப்பிதழாக மலரவுள்ளது

நாவல், சிறுகதை, கட்டுரை, சிறுவர் இலக்கியம், சஞ்சிகை ஆசிரியர், வெளியீட்டாளர் என்னும் பல தளங்களில் இயங்கியவர். ரஷ்ய, மலையாளம், சிங்களம், ஆங்கிலம் என பல மொழிகளில் இவரது படைப்புக்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இதுவரை என்பதுக்கு மேற்பட்ட நூல்களை ஆக்கியுள்ள செ.க. தொடர்ச்சியாக பத்து வருடங்களுக்கு மேலாக "குமரன்" என்ற இலக்கிய இதழை நாடாத்தி வந்தவர் இனியென்ன இவரைப்பற்றி எழுதுவோமே... நினைவுகளைப் பதிவோமே...

கட்டுரைகள் வந்து சேரவேண்டிய இறுதி நாள் 15-05-2021




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஏமாற்றுகின்ற எளிமை

- அ. ச. பாய்வா




படைப்பாளியைவிட படைப்பு தான் பேசவேண்டும். ஈழத்து இலக்கியத்தில் இது சாத்தியமா? பிரச்சாரம், பாசாங்கு என எழுத்தாளன் தன்னை முன்னிலைப் படுத்தச் செய்யும் காரியங்கள், ஈழத்து இலக்கியத்தின் மீதிருந்த பிடிமானங்களை மெல்ல மெல்ல இல்லாமல் செய்வது போலொரு உணர்வு.

அதே வேளை, ஒரு படைப்பாளியை இன்னொரு படைப்பாளி விமர்சிப்பதில் எந்தளவு நியாயமிருக்கிறது? என்கிற கேள்வியுடன் இந்தச் சிறுகதைத் தொகுப்பை அணுகுகிறேன். சகல வகையிலும் பிரச்சார வாடை மிகுந்த எழுத்துக்கள், வாசிப்பின் மீதான விருப்பங்களையும் தகர்த்துவிடுகின்றன.

குறிப்பாக மதரீதியான சிறு குழுக்கள் தம் மதம் சார்ந்த படைப்பாளிகளை உலக இலக்கியக்காரர்களாகவும், அவர்களது இலக்கியங்களை உலகத்தரம் வாய்ந்தவையாகவும், ஈழத்தின் உச்சங்கள் என்று பிரகடனப்படுத்துவதில் காட்டும் தீவிரங்களும், மனோவியாதிக்காரரான இவர்கள் தங்களைத் தாங்களே விகாரப்படுத்திக் கொள்கிறார்கள் என்று தான் சொல்ல வேண்டியுள்ளது. அச்சிலே வெளிவந்த பக்கங்களை எண்ணிப் பார்த்து எழுத்து வீரியத்தினை எடைபோடும் பாமரத்தனம் என்று எஸ்.பொ. பாணியிலும் சொல்லலாம்.

எது எழுத்து? மனதில் தோன்றும். அனைத்துமா? இல்லை. மனதில் அன்றாடம் குறுக்கிடும் அனுபவங்களில் பல, சில்லறை வெளிப்பாடுகளால் திருப்தி கண்டு அடங்கி விடுகின்றன. எஞ்சியவை பிரச்சனையின் பொருளாகி முடிவுதேடித் தொக்கி நிற்கின்றன. பீறிட்டு வெளியேறிச் செல்வதற்காய் பொருத் தமான ஒரு வழிக்காகக் காத்துநிற்கின்ற இந்தச் செயலைப் புரிவதுதான் எழுத்து. இதனை சொல்லத்தான் எழுத்து. ஏனையவை சும்..மா, சிறுகதையின் பிறப்பு ரகசியத்தைப் புரிந்து கொண்ட, உணர்வு பூர்வமான கலை யின் சடப்பிரசன்னம் தான் சேனாதிராஜாவின் கதைகள் என்கின்ற சமாதானத்தையும் இவரது படைப்புக்கள் மீது கொள்ளலாம்.

உள்மனதின் சூலத்தில் சேமிக்கப் பட்டவையாக உறங்கும் உறுத்தல் உணர்வுகள் மீது இவரது கருணை அளப்பரியது. சிறுகதையின் ஸ்த்திரமேம்பாடும் விகிதாச்சார அழகும் கறுப்பு வெள்ளையாய் பிரதியில் கோலங் கொள்கின்றன.

மலையகத்தின் அறியப்படாத மூலை முடுக்குகளை சேனாதியின் பேனா துளாவியிருக்கிறது. மலையகம் சாராதவர்களால் நம்பவே முடியாத பல நிகழ்வுகளைக் கருவாய்ச் சுமக்கின்றன கதைகள்.

அவை வெறும் எழுத்துக்களா? இல்லை மலையகம் தொடர்பான ஒரு ஆவணம். தன்னையும் தன்னைச் சூழவுள்ள மண்ணையும், மக்களையும் அவர்களின் அவலங்களையும் ஒவ்வொரு கதையிலும் பதிவு செய்கிறார். மண்ணையும் மண்சார்ந்த மனிதர்களையும், அவர்களின் வாழ்வியலையும் பேசும் கதைகள். ஒற்றைப் பரிமாண மென்கிற தளத்தில் கதைகள் இயங்கினாலும், வாசிப்பவன் மனது கதையுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தும் வகையில் அமைந் திருப்பது ஒன்றும் விபத்தல்ல.

கதையின் கட்டுக் கோப்பிலும், உருவகத்திலும் எந்தளவுக்கு அக்கறையெடுத்துள்ளார். என்பதற்கு உதாரணமான பல கதைகள் தொகுப்பிலுள்ளன.

கலையம்சத்தை விட கதாம்சத்திற்கு சேனாதிராசா முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார். செக்கோவ் போன்ற படைப் பாளிகளின் கதைகளைப் போல, தனிமனித குணச்சித்திரங்களை சமுதாயப் படப்பிடிப்பு துணை செய்ய சித்தரிக்கிறார்.

சூழ்நிலை அமைப்பு, விறுவிறுப்பு கட்டுக்கோப்பு, இறுக்கம், கவிப்பூச்சான மொழிவளம் போன்ற உருவப் பண்புகள் இவரது கதைகளில் செவ்வனே அமைந்துள்ளன. அதே வேளை பிரதேசப்பண்பு, யதார்த்த நயம், சமூகச் சித்தரிப்பு என்பன இக்கதைகளில் பொதிந்து கிடக்கும் பொதுப் பண்புகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதும் வித்துடையவனுக்கு மனக்கூர்மை மிக அதிகந்தான். அறிவதன் கூர்மை உணர்வுகளின் மேன்மையைச் சாடிக்காட்டுவதில் முடிந்துவிடுகிறது. உணர்வுவாதியான சமத்தர்கள் வாழ்வின் ஒரு அரும்மிதப்பையும், மூழ்கலையும் ஆழமாய்ப் பலவழிகளால் புரிந்து கொள்கிறான். அதையே அவன் திருப்தியெனும் பொருளாகவோ, உயர்வாகவோ, எதிர்வாகவோ, தன்னைப் பேசச் செய்யும் பொருளாகவோ ஆக்கிக் கொள்கிறான். கலைத்தன்மைக் குறைவற்று இருக்கும் வரை, எந்தவொரு கருவைச் சுற்றி வரையப்பட்ட சிறுகதையும் நல்ல இலக்கியமே.

நெருக்கடி மிக்க புறச்சூழலை எதிர்கொள்வதற்காக இந்தப் படைப்பாளி தனக்குள், தன் ஆழ்மனதுள் பயணிக்கிறான். அப்பயணத்தில் சமூக வரலாற்றின் உள்ளாளங்களைத் தேடுகிறான். அதன் நீட்சியாகப் பிறந்த இச்சிறுகதைகள் மலையகத்தின், அதன் இலக்கியத்தின் மீதான ஒரு நெருக்கத்தை ஏற்படுத்துவதில் வெற்றிகண்டுள்ளது.

**உயிருதிர் காலத்தின் இசை**

சேனாதிராசா தானொரு மனோரதவாதியோ, கற்பனாலய வாதியோ அல்ல என்பதை உணர்த்துகிறார். உருவமைப்பை விட உள்ளடக்கத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஒரு கூத்துக் கலைஞனின் இழப்பை, சொல்ல வேண்டிய இடத்தில், சொல்ல வேண்டிய விதத்தில் ஒருவர் மூலம் சொல்ல வைக்கிறார். பாசாங்கு இல்லாத கதை, கதையை வாசித்ததன் பின் இதயத்தில் இனப்புரியாத ஒருவகை வலி உண்டான உணர்வு.

**எட்டு மணி நேரம்**

மனிதாபிமானங்கொண்ட சட்டஉரைஞர் ஒருவர் பற்றியது. சட்ட உரைஞர்களிலும் இவ்வாறானவர்கள் உள்ளார்களா என ஆச்சரியப்பட வைக்கும் கதை. மலையகத்தின் ஒரு மிகச் சாதாரண மனிதனின் வேதனையைத் தன்வேதனையாய்ச் சுமந்தவொரு மகா மனிதனாக சட்ட உரைஞர் தோற்றம் பெறுகிறார். கதையில் சிடுக்குகளில்லை. எல்லாவற்றையும் சொல்லி விட வேண்டுமென்கிற அவசரமும் அவரிடம் இல்லை. தன்னியல்பாக நகரும் இக்கதையில் ஒருவித பத்திரிகைத் தனமும் தொனிப்பது அவதானிப்பு.

**புதுசா ஒரு தொர**

நவீன ஐரோப்பிய கதைகளையொத்த ஒருகதை. அவர்கள் நாடகத்தைப் போல கதையை நட்ட நடுவில் தொடங்குவது போல இக்கதையும் தொடங்குகிறது. போகப் போக கதையின் நாயகனின் பூர்வ விருத்தங்கள் தெரிந்து கொண்டே வருகின்றது. கதாநாயகனை பேசவைத்தவாறே கதாசிரியர் ஒரு விவரன ஆசிரியராக மாறி, கதையை முடித்து வைக்கிறார். கதையின் நாயகன் அடைந்த அதே பாதுகாப்பு உணர்வு வாசகனையும் தொற்றிக் கொள்கிறது.

**பணியலயத்துப் பார்வதி**

".......தலைவருவை நா பிளேட் போட்டா, மத்தவன் எல்லாம் போடுவான். பெறகு எப்பிடி என்னோட பேச்சுக்கு தலைகுனிஞ்சி நிப்பான்?" நல்லையா தலைவர் பேசுமிந்த வசனம், பார்வதிக்குள் ஒருவித சலிப்பை அவளுள் விதைத்து விட்டதை உணர்கிறாள். கேள்விப் பொருளாக விளங்கும். இந்த வையகமும், வாழ்வும், மனக்கிளர்ச்சி பெறும் பார்வதிபோன்ற தனிமனித உணர்ச்சிகளால் எவ்விதம் தோற்றம் பெறுகின்றன என்பது உணர்த்தப்படும். ஒரு சாதாரண கதை சொல்லும் முறை, கதைக்கான உருவம் கதாசிரியருக்கு லலிதமாக வளைந்து கொடுக்கிறது. பார்வதியைத் தன் மனைவியென்று பார்க்காவிட்டாலும், பெண்ணென்கிற ரீதியில் நோக்கினாலே போதும் என்கிற உணர்வை இழந்த கணவனாக நல்லையா பாத்திரம் சித்தரிக்கப்பட்டமையான மலையகத்து வாழ்வியலின் இன்னொரு அம்சம்.

**பூசாரிக்காம்பறா**

சிறுகதைக்குரிய கதைப்பொருளும், உணர்ச்சி மயப்படுத்தி வாசிக்கத்தூண்டும் உத்தியும் கதாசிரியரால் கையாளப்பட்ட ஒரு கதை. சிறிது சினிமாத் தனமும், பத்திரிகைத் தனமும் ஆங்காங்கு தட்டுப்பட்டாலும், இதனை ஒருவித பிரக்ஞைஒட்ட உத்தியென்றும் சொல்ல முடியவில்லை. நல்லகரு மலையகத்தைப் படம் பிடிக்கும் கமராத் தன்மையையும் தன்னுள் இழையோடவைத்து அமைத்த கதை. ஒரு மலையகக் கதைக்கான மண் வாசனையுடன் எழுதப்பட்ட, வாசகமனதைத்தூண்டிவிடும் சூழலியல்அமைப்புக்களால் மனதைத் தொட்ட கதையாகிறது. விறுவிறுப்புடன் நகர்ந்து, பட்டென்று பத்திரிகை ரகக்கதை போல் முடித்திருப்பது கொஞ்சம் செயற்கைத் தனமாகப்படுகிறது.

**அடையாள அட்டை**

தமிழர்களின் பிரச்சனை அம்சமொன்றை உள்ளடக்கிய சுமாரான கதை. நைத்துபோன பிரகரணந்தான் ஆனாலும் உருவ அளவில் ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறது. சிறுகதையா அமைய வேண்டிய கதை, துரதிஷ்டவசமாக பத்திரிகைச் செய்தியைப்போல் அமைந்து விட்டது. கதாநாயகியின் துன்பங்களுக்கெல்லாம் காரணம் அறியாமை தான் என்பதை இன்னும் ஆழமாக, கலையுணர்வோடு சொல்லியிருக்கலாம்.

**திரை**

வாசித்ததும் மனதில் ஒட்டிய கதை. இதில் கதையம்சம் என்று குறிப்பிடத்தக்களவு ஏதும் இல்லா விட்டாலும், சிறுகதைக்குரிய வடிவத்தைப் பெறுவதில் வெற்றி கண்டுள்ளது. நிகழ்ச்சிச் சித்தரிப்பும், பாத்திர வடிவமைப்பும், ஒரே சீரான நேர்கோட்டில் பயணிப்பதால், இயற்கையை நேசிக்கும் எந்தவொரு வாசகனையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சிறுகதை கட்டிப் போட்டுவிடும். நிகழ்வுச் சித்திரங்களில் ஒருவித வளர்ச்சிப் பாங்கும், யதார்த்த பூர்வமான சூழல் விபரிப்பும் இச்சிறுகதையின் பலம்.

**மாயக்கண்ணாடி.**

பீலிகளும் இல்லாமற் போகும் அளவிற்கு காலநிலை மாற்றங்கள் கொண்ட பதுளை போன்ற இடங்களை இலவசமாகத் தரிசிக்கச் செய்யும் இன்னொரு நேர்த்தியான கதை.. "...ஒண்ணக் கவனிச்சிங்களா.... பீலிச் சுதத்தக் காணோம்" என்ற ஒரு வசனம் சொல்லும் ஓராயிரம் சம்பவங்கள் மனதை விட்டகலாதன. கலை மெருகு, கட்டுக்கோப்பு, அகவுணர்வுச் சித்தரிப்பு, யதார்த்தப் படபிடிப்பு, பாத்திரத்தின் தன்மைக்கேற்ப நிகழ்ச்சிகளை வளர்ச்சிக்கிரமமாகத் தொகுத்தல் போன்ற உருவ அக்கறைகளில் ஆசிரியரின் கவனம் கணிப்புக்குரியது. கவனிப்புக்குரிய கதை.

**அவன் அவர்கள் அது**

ஊரோடு ஒத்துப் போதல் என்கிற கருவைச் சுமந்த கதை. "நீலத்தாளில் தவறிக் கொட்டிய தேயிலைச் சாயத்தைப் போல் மேற்கு வானம்" எனும் வர்ணனையும், "ஸ்கொலஷிப் பரீட்சையில் முதல் நிலைபெற்றுச் சித்திய டைந்த வேலுச் சாமியின் மகனைப்போல் கம்பீரமாக நின்றிரிந்த நமுனுகுலமலை.." போன்ற விவரணமும் மலையகத்தின் போக்கிலேயே சொல்லப்பட்டிருப்பது கவனிப்புக்குரியது. அது ஆசிரியரின் சுயத்தன்மையைக் காட்டும் ஒரு சித்திரம்.

சாமி, பூமராங், 19ம் நூற்றாண்டு மனிதர், இரண்டாம் தீர்ப்பு, தொடுகை வர்ணங்களில் நெய்யும் இழைகள் போன்றவை பத்திரிகைத் தனமான, வழமையான கதையோட்டம் கொண்ட, தென்னிந்திய பாணிக்கதைகளை யொத்த செயற்கைத் தன்மைக்கொண்ட, ரிஷிகர்ப்பம் இராத்தங்காது போன்றதை யொத்தவையாக அமைந்து விடுகின்றன.

இறுதிக்கதையான ஆதிமரமொன்றின் வேர்கள், புதுமைப்பித்தனின் மனக்குகையோவியங்கள் வகையைச் சார்ந்தாலும், வாசகனைக் கட்டிப்போட்டு விடுகின்றன. கற்பனை சார்ந்த வரலாற்றுக் கதைகள் போல புனையப் பட்டிருக்கிறது. ஒருவேளை மலையகத்துக்கு அது அவசிய மானதான சம்பவத்திரட்டாக ஆசிரியர் கருதியிருக்கலாம்.

ஆனால், அவரது ஏனைய பதினைந்து சிறுகதை களில் காணக்கிடைக்காத கதைசொல்லும் முறைமைக்கும், இந்தக் கதைக்குமிடையே பாரிய வேறுபாடு தென்படுவது அவதானிப்பு, பதினைந்து கதைகளையும் சேனாதிராசா எழுத, இறுதிக் கதையை வேறு எவரோ ஒருவர் எழுதிய தோற்றப்பாட்டை அது உணர்த்துகிறது ஏனோ.

சிறுகதையென்கிற ஊடகத்தினூடாக சமுதாயச் சமவெளிளைக் கடக்கும் அல்லது ஊடறுக்கும் ஒருவராக இனங்காணலாம் இவரை.



பதுளை சேனாதிராஜா

எளிய மனிதர்களின் எளிய வாழ்வைப் பேசும் மொழி, இயல்பாகவே எதார்த்ததளத்திலேயே இயங்க முடியும் என்பதை நிருபிக்கிறார்.

எதார்த்த தளத்தில் கதை அமைந்தால் சுவாரஸ்யப் படாது. சுவாரஸ்யமாக இருந்தால் தான் ஜனங்கள் கேட்பார்கள் என்பதை மறுதலிக்கிறார்.

உணர்வுகளைத் தன்மையாகச் சொல்வதே உயர்வானது. வண்ணங்களைக் காட்டியும், வார்த்தைகளில் பாவனைகள் காட்டியும், வெளிப்படுத்துவது இவரது சங்கல்ப்பம்.

எதார்த்தக் கதைகளின் முதல் முன்னோடியுமாவனும் புதுமைப்பித்தனின் கயிற்றரவு, சிற்பியின் நகரம், அன்றிரவு, மனக்குகை ஓவியங்கள் போன்ற கதைகளின் பண்புகளையும் இவரது கதைகளில் தரிசிக்கலாம்.

அனுபவங்களைப் பதிவு செய்து, உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளும் சேனாதிராசாவின் எழுத்துக்கள் புத்தியால் செய்யப்படாது மனத்தால் நிகழ்வன. ஏமாற்றுகின்ற எளிமையென்று சொல்வார்களே அந்த வகை எழுத்துக்களின் சொந்தக்காரராக சேனாதிராசாவை இனங்காணலாம்.

மலையகத்துமக்களின் வாழ்வை வாழ்வாகப் பார்த்தாரேயொழிய அவர்களை தோட்டத்து மனிதர்களாக எண்ணவில்லை.


தன்னகத்தேயுள்ள விடிவுதேடும் உணர்வுகளை இலட்சிய உணர்வின் வெளிப்பாடுகளாக்குகிறார்.

இது தவிர இவர் எழுத்தின் மீது எந்தவித ஆதிக்கத்தையும் செலுத்தும் எவ்வித தார்மீக உரிமையும் எனக்கில்லை என்பதே முடிவு.


• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Quality Rooms with
Reasonable Prices
A/C & Non A/C Rooms,
Reception Hall

# Sun Shine
## HOTEL & HALL

# 45, Green Road, Trincomalee | Tel. : +94 (0) 26 222 0288 +94 (0) 26 222 8018
| E-mail : sunshinehotel45@gmail.com

Wanasinghe Printers, Batticaloa. 065 222 7170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org